தினமணி வெளியீடு—15

330

இந்தியாவின் பொருளாதார
அபிவிருத்திக்கான

# காந்தியத் திட்டம்

ஆசிரியர்
**ஸ்ரீமந் நாராயண அகர்வால்**
ஸேக்ஸரியா வர்த்தகக் கல்லூரியின் பிரதான ஆசிரியர்
வர்தா

மகாத்மா காந்தி
எழுதிய முன்னுரையுடன்

*

தமிழ்ப்படுத்தியவர்
ப. ராமஸ்வாமி

*

தினமணி காரியாலயம்
சென்னை

பதிப்பாசிரியர்—டி. ஸ்ரீ

விலை

முதற் பதிப்பு 1945

காப்பிரைட்

ந்தியன் எக்ஸ்பிரஸ் பிராஞ்ச் பிரெஸ்
-டு ரோடு : : சென்னை

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | இந்த மொழிபெயர்ப்பு | ... | 3 |
| | மகாத்மா காந்தியின் முன்னுரை | ... | 5 |
| | **[ பாகம் I ]** | | |
| I | முகவுரை | ... | 7 |
| II | திட்டம் வகுக்கும் நியமங்கள் | ... | 12 |
| III | காந்தீயத் திட்டம் எதற்கு? | ... | 18 |
| IV | காந்தீயப் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சங்கள் | ... | 36 |
| V | கிராமப் பொதுவுடைமை | ... | 64 |
| | **[ பாகம் II ]** | | |
| VI | பொருளாதாரத் திட்டம் | ... | 111 |
| VII | விவசாயம் | ... | 125 |
| VIII | விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்கள் | ... | 141 |
| IX | குடிசைத் தொழில்கள் | ... | 147 |
| X | மூலாதாரத் தொழில்கள் | ... | 157 |
| XI | பொது நன்மைக்கான சௌகரியங்கள் | ... | 162 |
| XII | வர்த்தகமும் வினியோகமும் | ... | 183 |
| XIII | உழைப்பாளர் நலன்கள் | ... | 192 |
| XIV | ஜனத்தொகைப் பிரச்னை | ... | 193 |
| XV | நிதி நிர்வாகம், வரி விதித்தல், நாணயச் செலாவணி | ... | 196 |
| XVI | ஆட்சி முறை | ... | 202 |
| XVII | வரவு செலவுத் திட்டம் | ... | 203 |
| XVIII | முடிவுரை | ... | 222 |

## ஸ்ரீ. ஸ்ரீ. அகர்வால் இயற்றிய
## இதர நூல்கள்

— ஆங்கிலத்தில் —

**போதனைக் கருவியான பாஷை**

[ தாய்மொழி மூலமே கல்வி போதிக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கும் நூல் ]

மகாத்மா காந்தியின் முன்னுரையுடன்

*

**இந்தியர்கள் பார்க்கும் இங்கிலாந்து**

*

**ஜீவனின் ஊற்று**

[ ரவீந்திரநாத டாகுர், ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் சிறப்புரையுடன் ]

*

— ஹிந்தியில் —

**சேவாகிராமத்துப் பெரியார்**

*

**ரொட்டியின் ராஜ்யம்**

**மானவன்**

# இந்த
# மொழிபெயர்ப்பு

இந்தியா முழுவதும் பொதுவாகப் பரவவேண்டிய பல அறிவு விஷயங்களைப் பற்றிப் பெரிய ஆசிரியர்கள் ஆங்கிலத்திலே நூல்களை எழுதுகிறார்கள். சில நூல்களை ஹிந்தியிலும் எழுதுகிறார்கள். இவைகளை மாகாண பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டால்தான் பொதுஜனங்கள் யாவருக்கும் பயன்படும்.

ஆங்கிலத்தைத் தமிழாக்குவதில் இரண்டு கஷ்டங்கள்: ஒன்று கருத்துக்களின் செறிவு குன்றாமலும், மிகைபடுத்தல் மிதப்படுத்தல் இன்றியும் வெளியிடுவது, மற்றது ஆங்கில பாஷையின் போக்கிலே அமைந்த வாசகங்களைத் தமிழுக்கு ஏற்றபடி மாற்றி அமைப்பது. கூடியவரை நம் ஜனங்களுக்குப் புரியும்படியாக விளக்கி எழுதுவதன் மூலம் முதல் கஷ்டத்தை நீக்கி விடலாம். இரண்டாவது கஷ்டத்தை நிவர்த்திப்பது எளிதன்று. இதை நீக்காவிட்டால், எழுதுவது தமிழாக இராது, ஆங்கிலமாயும் இராது — 'இங்கிலீஷ் – தமிழாக' இருக்கும்.

இந்த நூலைத் தமிழாக்குவதில், மேலே குறித்த இரண்டு கஷ்டங்களையும் கடந்து ஓரளவு வெற்றி பெறுவதற்கு, 'தினமணி' ஆசிரியர் ஸ்ரீ. சிவராமன் மிகவும் உதவி செய்தார். நான் எழுதியதையெல்லாம், ஆங்கிலப் பிரதியோடு ஒப்பிட்டு, பக்கம் பக்கமாக, வரி வரியாகச் சரி பார்த்துக் கொடுத்தார். மேலும், இந்நூல் பொருளாதாரத் திட்டத்தைப் பற்றிய தாகையால், பல வருஷங்களாகப் பொருளாதாரப் பிரச்னைகளைப் பற்றிப் படித்தும், ஆராய்ந்தும், பிரசாரம் செய்தும் அனுபவம் பெற்றிருக்கும் அவருடைய ஆலோசனைகளும், விளக்கங்களும் பெரிதும் உதவியாக இருந்தன.

'தினமணி' வெளியீடுகளின் பதிப்பாசிரியரான அன்பர் பி. ஸ்ரீ. நூல் முழுவதையும் படித்துப் பார்த்து, ஆலோசனைகள் சொல்லித் திருத்தம் செய்து உதவியுள்ளார். சொல் - அமைப்பு, இலக்கணம் முதலியவை சம்பந்தமாக, என் போக்கை அனுசரித்து, அவர் கூறிய ஆலோசனைகள் மிக்க மதிப்புள்ளவை.

இவ்விரு நண்பர்களுடைய உதவியும் வெளிப்படையாகத் தெரியாமல் நூல் முழுவதிலும் விரவியிருக்கிறது. இருவருக்கும் எனது நன்றி.

ஆசிரியர் மூல நூலில் அடிக் குறிப்புகள் மட்டுமே கொடுத்துள்ளார். அவற்றுடன், தமிழ் வாசகர்களுக்காக ஆங்காங்கே பல விளக்கக் குறிப்புகளையும் நான் சேர்த்திருக்கிறேன். பொருளாதார சாஸ்திரத்திலும், ஆங்கில மொழியிலும் தேர்ச்சி யில்லாதவர்களுக்கு இவை பயன்படும் என்று நம்புகிறேன்.

ப. ரா.

# முன்னுரை

செல்வச் சிறப்பும், அதோடு பிராபல்யமும்கூட வாய்த்திருக்கக்கூடிய வாழ்க்கை முறையைத் தாய்நாட்டின் சேவைக்காகத் தியாகம் செய்த இளைஞர்களில் ஆசாரிய ஸ்ரீமந் நாராயண அகர்வால் ஒருவர். மேலும், நான் அவலம்பிக்கும் வாழ்க்கை முறையிலும் அவருக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அம்முறையை நவீன அரசியல் கோட்பாடுகளின்படி விளக்கிக் கூறும் முயற்சியே இச்சிறு நூல். இவ்விஷயத்தைப் பற்றிய நவீன நூல்களை ஆசாரிய அகர்வால் மிகுந்த சிரத்தையுடன் பயின்றிருப்பதாகத் தெரிகிறது. இந்நூலை எவ்வளவு கவனமாகப் படிக்கவேண்டுமோ அப்படி நான் செய்யவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆயினும், என் அபிப்பிராயங்களைப்-பற்றி ஆசிரியர் எந்த இடத்திலும் தவறாகக் கூறவில்லை என்று சொல்வதற்குப் போதிய அளவு நான் இதைப் படித்திருக்கிறேன். சர்க்காவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத் தத்துவங்களை எல்லாம் இந்நூல் சம்பூரணமாக எடுத்துரைத்தாய் விட்டது என்பதில்லை. அஹிம்ஸையை ஆதாரமாகக் கொண்ட சர்க்கா—பொருளாதாரத்தையும், பலாத்காரத்தை ஆதாரமாகக் கொள்ளும் யந்திரப் பொருளாதாரத்தையும் ஒப்பிட்டு விவரிக்கும் ஆராய்ச்சியே இந்நூல். யந்திரப் பொருளாதாரம் ஸர்பகரமாக இருக்க வேண்டுமானால் ஹிம்ஸையைத்தான் ஆதாரமாகக் கொள்ள முடியும் — அதாவது, யந்திரத் தொழில்கள் பெருகாத மற்ற நாடுகளின் செல்வத்தைச் சுரண்டுவதாகும். ஆசிரியருடைய வாதங்களை நான் முன்கூட்டிச் சொல்லிவிடக் கூடாது. தற்போது தேசத்தில் ஏற்பட்டுள்ள பரிதபிக்கத்தக்க நிலைமையைப் பரிசீலனை செய்யும் ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவரும் இந்நூலைக் கவனமாகப் படிக்கும்படி சிபார்சு செய்கிறேன்.

சேவாக்கிராமம்
16—10—44

மோ. க. காந்தி

# காந்தியத் திட்டம்

[ பாகம் 1 ]

## முன்னுரை

தனி நபர்களின் தொழில் வளர்ச்சி முதலியவற்றில் அரசாங்கங்கள் தலையிடலாகாது என்ற சித்தாந்தம் கைவிடப்பட்ட பிறகு, எல்லா நாடுகளிலும் பொருளாதாரத் துறையில் திட்டம் வகுப்பது விசேஷ முக்கியத்துவம் அடைந்திருக்கிறது. சென்ற மகாயுத்தத்திற்கு முன், தொழிலாளர் நலம், குடியிருப்பு வசதி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சில அம்சங்கள் மட்டுமே திட்டம் வகுப்பதில் கவனிக்கப்பட்டன. ஆனால் அந்த யுத்தத்திற்குப் பின்னால், திட்டத்தோடு கூடிய பொருளாதார அமைப்பு மிகவும் விரிவடைந்து, அநேகமாகத் தேசிய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு விட்டது. ஸோவியத் ரஷ்யாவின் ஐந்துவருஷத் திட்டமே இந்தத் துறையில் முதன் முதலாக ஏற்பட்டது. உலகம் முழுவதிலும் திட்டம் வகுக்கும் வழக்கத்திற்கு அதுவே வழிகாட்டியாயிற்று. உலகப் பொருளாதார மந்தம் ஏற்பட்ட பொழுது (1929–32-ல்), அதன் விளைவுகளைச் சமாளிப்பதற்காக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அமெரிக்காவில் புதிய பொருளாதார ஏற்பாடு ஒன்றை (New Deal) ஆரம்பித்து வைத்தார். தற்போதைய உலக யுத்தத்திற்கு ஜெர்மனியைத் தயாரிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஹிட்லர் தம்முடைய நான்கு வருஷத் திட்டத்தை ஆரம்பித்தார். முதல் ஐந்துவருஷத் திட்டம் அதிசயிக்கத் தகுந்த வெற்றியாக முடிந்த பிறகு, ஸோவியத் ரஷ்யா முன்னிலும் பெரிய நோக்கங்களையும் ஆவல்களையும் கொண்டு மற்றொரு திட்டத்தையும் தயாரித்தது. இந்தத் துறையில் இங்கிலாந்து காலங் கடந்து

காண முடியாது. அதிலும், அவசரமாகவும், அரைகுறையாகவும் திட்டம் தயாரிப்பதிலேயே அது ஈடுபட்டிருந்தது. சமூக நன்மைக்காகச் சமீபத்தில் ஏற்பட்ட பெவரிட்ஜ் திட்டம் மட்டுமே இந்த வழியில் முறையாகச் செய்யப்பெற்ற முயற்சியாகும்.

மேலைநாட்டு முறையில் பொருளாதாரத் திட்டம் வகுக்கும் வேலையில், இந்தியாவில் முதலாவதாக ஈடுபட்டவர் அனேகமாக ஸர் எம். விச்வேச்வரையர்வாக இருக்கலாம். ஆயினும், இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்காக விவர நுணுக்கங்களுடன் சர்வ வியாபகமான ஓர் அறிக்கையைத் தயாரிப்பதற்கு முயன்றது தேசியத் திட்டக் கமிட்டியேயாகும். இது இந்திய தேசிய காங்கிரஸால் நியமிக்கப் பெற்றது. துரதிர்ஷ்ட வசமாக அதன் வேலை தடைப்பட்டு விட்டது. எத்தகைய நிலைமைகளால் தடைப்பட்டது என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயந்தான். இப்பொழுதுள்ள ஆழ்ந்த வெறுப்பும் ஏமாற்றமும் நிறைந்த நிலைமையிலிருந்து பொதுஜனங்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்காக, இந்தியாவின் எதிர்காலத்திற்குத் திட்டம் வகுக்கும்படி இந்திய அரசாங்கம் யுத்தப் பிற்காலப் புனருத்தாரணக் கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிறது. சர்க்கார் நியமிக்கும் இத்தகைய கமிட்டிகளைப் பற்றி அதிகம் சொல்லாமல் இருப்பதே நலம். மேலும், டெல்லி இவ்வளவு அவசரமாகத் திட்டம் வகுப்பது இந்தியாவுக்காக அல்ல, பிரிட்டனுக்காகத்தான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. சமீபத்தில் காமன்ஸ் சபையில் இந்தியா பற்றி நடந்த விவாதத்திற்குப் பின்னால், இந்திய அரசாங்கத்தின் இத்தகைய பொருளாதாரத் திட்டங்கள், மூலாதாரமான பிரச்னையாகிய இந்திய சுதந்திரத்தைத் தட்டிக் கழித்து, வேறு பிரச்னைகளைக் கிளப்புவதற்காகத் தான் ஏற்படுத்தப்படுகின்றன என்பது உறுதியாகி விட்டது. தேசிய அபிலாஷைகளை வெளியிட்டுச் சொல்ல முடியாதபடி அடக்கி நசுக்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், பிரபல தொழில் பிரமுகர்கள் எட்டுப் பேர், பொருளாதார

முன்னேற்றத்திற்காகப் பம்பாய்த் திட்டம் என்று பொது வாகச் சொல்லப்படும் பதினைந்து வருஷத் திட்டத்தை வெளியிட்டதன் மூலம் தேச நன்மைக்கு உருப்படியான சேவை புரிந்திருக்கிறார்கள். திறமை மிகுந்த இந்தத் தொழில் பிரமுகர்களின் அந்தரங்க சுத்தியையோ தேச பக்தியையோ நாம் சந்தேகிக்க முடியாது. இருந்த போதிலும், இது முக்கியமாக மேலைநாட்டு முறையில் அமைந்த முதலாளித் திட்டமாகவே யிருக்கிறது என்ற விஷயத்தை நாம் மறப்பதற்கில்லை. எம். என். ராயும் பொதுஜனத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை வெளியிட் டிருக்கிறார். பம்பாய்த் திட்டத்தைவிட அதிகமாகச் சாதித்துவிடும் ஆசையுடன் அது தயாரிக்கப்பட்டிருக் கிறது: ஏனெனில், அதன்படி பத்து வருஷத்தில் பதினையாயிரம் கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப் படுகிறது.

ஆனால், நம் பொருளாதாரத் திட்டம் அடிப்படை யாகக்கொள்ள வேண்டிய தனியான 'இந்தியக் கலைப்பண் பையும் சமூக அமைப்பு முறைகளையும் இந்தத் திட் டங்கள் கவனிக்கவில்லை. முதலாளித்துவ முறையிலோ, அபேதவாத முறையிலோ உள்ள மேலைநாட்டுத் திட் டங்களை அப்படியே காப்பியடிப்பதில் பயனில்லை. இந்திய மண்ணில் உறுதியாக வேரூன்றிய சுதேசித் திட்டம் ஒன்றை நாம் தோற்றுவிக்க வேண்டும். சரித்திரத் திற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே, தக்க முறையில் அமைக்கப்பெற்ற சக்திவாய்ந்த கிராம சமுதாயங்கள் இந்தியாவின் விசேஷச் சிறப்பாக விளங்கி வந்திருக் கின்றன. இந்தச் சமுதாயங்கள் இந்நாட்டில் வளர்த்து வந்த சமூகப் பொருளாதார முறை உலக சரித்தி ரத்திலேயே விசேஷமானது. அந்த முறை குடிசைத் தொழிலை அடிப்படையாக்க் கொண்டது. குடிசைத் தொழில் மக்களின் நலன்களை வளர்ப்பதாயும், சமத் துவம், நீதி, சாந்தி, கூட்டுறவு முதலிய பண்புகள் நிறைந்த தாயும் இருந்தது. ஆதலால், இந்தியா தயாரிக்கும் பொருளாதாரத் திட்டம் அதன் சொந்த இயல்புக்கு

ஏற்றதாக இருக்க வேண்டும்; அது மேலைநாட்டுப் போலிச் சரக்காக இருந்தால் போதாது. அத்திட்டம் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டுவதாகவும் இருக்கக்கூடும். கடைசியில் உலகத்திலேயே ஒரு புதிய சமூக அமைப்பை ஏற்படுத்தவும் அது உதவியாகலாம். சென்ற இருபது வருஷங்களாக மகாத்மா காந்தி இந்தப் புராதன இந்தியப் பொருளாதார முறையின் லட்சியங்களையே வற்புறுத்தி வந்திருக்கிறார். அவருடைய பொருளாதாரக் கருத்துக்களைப் பிரசித்திபெற்ற மேலைநாட்டு அறிவாளிகள் கூட இப்பொழுது ஆதரித்து வருகிறார்கள். இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னைகள் பலவற்றையும் நான் மகாத்மாவுடன் நேரில் விவாதித்திருக்கிறேன். அதனால் தான் அவருடைய கருத்துக்களை முறைப்படுத்திப் பொது ஜனங்களின் முன்பு சமர்ப்பிக்கத் துணிந்தேன். புகழ் பெற்ற மேலைநாட்டுப் பொருளாதார நிபுணர்கள், சமூக சாஸ்திர விற்பன்னர்களுடைய கருத்துக்களையும் இடையிடையே மேற்கோளாகக் காட்டியிருக்கிறேன். இந்தியப் பொருளாதாரப் பிரச்னைகளைப் பற்றி காந்திஜி ஏராளமாக எழுதியிருக்கிறார்; ஆயினும், காலத்தால் நைந்து போன சொற்களையும் வாக்கியங்களையும் பிரயோகித்து விவாதிக்கும் சாஸ்திரீய நிபுணர் அல்லர். அவருடைய கருத்துக்கள் ஆழ்ந்த உணர்ச்சியும் உருக்கமும் நிறைந்தவை. வறட்டுப் பொருளாதார ஆராய்ச்சிக்கு இவை தேவையில்லை என்று சொல்லுவார்கள். சாஸ்திரீய நிபுணராக இல்லாவிட்டாலும், மகாத்மாவின் எழுத்துக்களில் பழைய இந்தியப் பண்புகளை ஆதாரமாகக் கொண்ட பொருளாதார முறையின் சாயைகளை நாம் எளிதில் கண்டுபிடித்து விடலாம். அதன் பல பகுதிகளையும் பூரணமாக ஆராய்ந்து பார்த்தால், போரால் நலிந்துபோன உலகத்திற்கு உய்யும் வழி காட்டலாம்; போர், கொள்ளை, சர்வநாசம் ஆகியவற்றையே விளைவிக்கும் திட்டத்திற்குப் பதிலாக, சமாதானம், கவலையற்ற வாழ்வு, முன்னேற்றம் ஆகியவை நிலைக்கும்படி சரியான திட்டம் ஒன்றையும் வகுத்துவிட முடியும்.

அரசியல் சுதந்திரம் இல்லாவிட்டால், மற்றத் திட்டங்களும் வியர்த்தந்தான் என்பதை நாம் ஒரு நிமிஷம் கூட மறந்துவிடக் கூடாது. புனர் நிர்மாணத்திற்கான எந்தப் பொருளாதாரத் திட்டமும், இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது என்ற பிரமேயத்தின்மீதே வகுக்கப்பட வேண்டும். இப்பொழுது யுத்தப் பிற்காலப் புனர் நிர்மாணத்திற்காக மற்றத் திட்டங்கள் பல, ஆராய்ந்து, விவாதித்து, நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், காந்திஜியின் பொருளாதாரக் கருத்துக்களை முறைப்படுத்தி, அவைகளை ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ள இச்சிறு நூல் உதவியாயிருக்கும்படி செய்வதே என்னுடைய தாழ்மையான முயற்சி. இந்தியாவின் க்ஷேமத்தில் நாட்டமுள்ளவர்கள் சிந்திப்பதற்கும் ஆராய்வதற்கும் உரிய புது விஷயங்கள் ஏதேனும் இதில் இருந்தால், இந்நூலைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டதற்கு எனக்குப் போதுமான சம்மானம் கிடைத்துவிட்டதாக எண்ணுவேன்.

ஸ்ரீமந் நாராயண அகர்வால்

# II

## திட்டம் வகுக்கும் நியமங்கள்

எங்கே பார்த்தாலும் திட்டங்கள், ஏற்பாடுகள், புனர் நிர்மாண முறை பற்றிய அறிக்கைகள் ஒரே வெள்ளப் பெருக்காகிவிட்டன. திட்டம் வகுத்தல் ஒரு லட்சியத்தை அடையும் மார்க்கமே தவிர, அதுவே முடிவான லட்சியமாக இருக்க முடியாது. இந்த முக்கிய உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. விளம்பரம் செய்யப்படும் மருந்துகளைப் போல், ஒவ்வொரு திட்டமும் தானே முதல்தரமானது என்று பாவிப்பது இயற்கை. நம்முடைய பொருளாதார இன்னல்களையெல்லாம் ஒரே அடியாக ஒழித்து விடும் வல்லமையுள்ள சர்வரோக நிவாரணிகளான திட்டங்களைச் சிருஷ்டிக்கும் ஆசை ஜனங்களின் கற்பனா சக்திக்கு உண்டு. ஆயினும், திட்டம் போடுவது நல்ல காரியந்தான். ஆழ்ந்த அறிவும் தீர்க்க தரிசனமும் இருந்தால்தான் திட்டம் வகுக்க முடியும். ஆனால், விகார சொரூபங்களையும் மர்மங்களையும் வசீகரமாய்த் தோன்றும்படி செய்வதற்கும் பட்டோபத் திட்டங்கள் உபயோகிக்கப் படும்பொழுது, அவைகளைக் குறித்து நாம் சந்தேகத்துடன் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

திட்டம் வகுப்பதால் மட்டுமே நம்முடைய சிக்கலான பிரச்னைகள் தீர்ந்து, உலகம் மேம்பட்டு விடாது. திட்டம் எந்த லட்சியத்தை நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்பதைப் பொறுத்தே பயன் கிடைக்கும். ஸோவியத் ரஷ்யாவைப் போல், திட்டம் வகுப்பதால் ஜனங்களின் வாழ்க்கை நிலை செழிப்படையக் கூடும்; ஆனால், அங்கே இதனால் தனி நபர்களுடைய சுதந்திரம் பாதிக்கப்பட்டது. நாஜி ஜெர்மனியைப் போல், திட்டம் வகுப்பதால், பொது மக்களை ஈவிரக்கமின்றிப் படை படையாக அணிவகுத்து, யுத்தத்திற்குத் தேவையான பொருளாதார நிலையை அமைத்துக் கொண்டு, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்கலாம். அமெரிக்காவில் கையாளப்பட்ட 'புது ஏற்பாடு' தாற்காலிகமாக வர்த்தக மந்தத்தை

நிவர்த்திக்கும் ஒரு பரிகாரமாகவோ, அல்லது நிலைகுலைந்த பொருளாதாரத்தின் கொடூரம் அதிகமாக உறைக்காதபடி செய்யவோ மட்டும் பயன்பட்டிருக்கும். ஆங்கில மக்களின் வாழ்க்கைக் கவலைகளைப் போக்கும்படியான சில ஏற்பாடுகளைச் செய்ய பெவிரிட்ஜ் திட்டம் பிரிட்டனுக்குப் பயன்படலாம்; குடியேற்ற நாடுகளையும் அடிமை நாடுகளையும் இப்போதைவிட அதிகமாகச் சுரண்டுவதன் மூலமே இது சாத்தியமாகும். திட்டம் வகுத்தல் ஒரு பெரிய யந்திரத்தைப் போன்றது; நன்மைக்கோ தின்மைக்கோ உபயோகிக்க முடியும். ஆகையால், திட்டம் வகுப்பதில் நோக்கமும், குறியும், மனோபாவமுமே முக்கிய அம்சங்களாகக் கருதப்பட வேண்டும்.

பொருளாதாரத் திட்டம் தயாரிப்பதற்கு முக்கியமான குறிக்கோள்தான் எதுவாயிருக்க வேண்டும்? 'வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்துவது,' அல்லது 'அதிக சுபிட்சத்தை உண்டாக்குவது' நம்முடைய நோக்கம் என்று சொல்லிவிட்டால் போதாது. பம்பாய்த் திட்டத்தின் நோக்கம் '15 வருஷ காலத்தில் ஒவ்வொரு நபருடைய சராசரி வருமானத்தையும், இப்பொழுது உள்ளதைவிட இரண்டு மடங்கு பெருக்குவது.' இப்பொழுது உள்ள நிலைமைகளில் பொதுமக்களின் சராசரி வருமானத்தை இரட்டிப்பாக்குவது சாத்தியம் என்றே வைத்துக்கொண்டாலும், அது மட்டுமே போதுமான லட்சியம் ஆகிவிடாது. வாழ்க்கையில் மக்களின் இயல்புகளையும் கலைப் பண்பையும் விட்டுப் பொருளாதாரப் பயன்களை மட்டும் வேருக வெட்டியெடுக்க இனிமேல் முடியாது. திட்டம் வகுப்பதில் 'வாழ்க்கையின் கலைப் பண்பும், ஆத்மீகப் பெருமையும், மனித உணர்ச்சியும் கவனிக்கப்பட வேண்டும்' என்று காங்கிரஸ் தேசியத் திட்டக் கமிட்டியும் சொல்லியிருக்கிறது.

மேலைநாடுகளில் வாழ்க்கைத் தரத்தை இப்பொழுது இருப்பதற்கு மேல் உயர்த்த முடியாததால், திட்டம் வகுப்பதன் நோக்கம் 'எல்லோருக்கும் வேலை கொடுப்பது' என்று சொல்லப்படுகிறது. இதுவும் ஒரு விஷம

சக்கரத்துள் சுற்றிச் சுற்றி வருவதுபோலத்தான். ஏனென்றால், வேலை கொடுப்பதே ஒரு திட்டத்தின் குறிக்கோளாக இருக்க முடியாது; திட்டம் என்பது ஒரு முடிவை அடைவதற்குரிய வழியைத் தவிர வேறில்லை. ஒரு தேசத்தின் இயற்கை வசதிகளேயும் மக்களின் உழைப்புச் சக்தியையும் பூரணமாக உபயோகித்துக் கொண்டு பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதே திட்டத்தின் நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. உற்பத்திப் பெருக்கு, யந்திரத் தொழில் பெருக்கு இவற்றின் விளைவு, செல்வச் செழிப்பின் மத்தியிலே பரம தரித்திரம் தாண்டவமாடுவது தான்! இது வெட்ட வெளிச்சம்; விளக்கத் தேவையில்லை.

ஆகவே, நம்முடைய திட்டம் எதைத்தான் நோக்கமாகக் கொள்ளவேண்டும்? ஆசிரியர் கோல் கூறுகிறார்: 'கிடைக்கக்கூடிய உற்பத்திச் சாதனங்களை யெல்லாம் பூரணமாக உபயோகிக்க வேண்டும்; வருமானத்தை விநியோகிப்பதிலும் திட்டம் இருக்க வேண்டும்; இதனால், பொதுஜன தேவைக்கும் தனி நபர்கள் வாங்கி உபயோகிக்கும் பொருள்களின் அளவுக்கும் இயன்றவரை முரண்பாடில்லாதபடி வாழ்க்கைத் தரம் நிர்ணயிக்கப்பட வேண்டும்! இவைகளை முக்கிய நியமங்களாகக் கொண்டு பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.' * 'திட்டம் எந்தச் சமூகத்திற்கு உபயோகிக்கப்படுகிறதோ அந்தச் சமூகம், நீதிநெறி நின்று, சாத்வீகமாயும், ஒழுக்கம் நிறைந்ததாயும், அறிவு வளர்ச்சியுடையதாயும் மாறுவதற்குப் பயன்பட வேண்டும்; சமூகத்திலுள்ள ஆடவரும் பெண்டிரும் தனி மனித சுதந்திரத்தை இழக்காமல், பொறுப்புள்ளவர்களாக இருக்கும்படி செய்ய வேண்டும்.' † இதுவே ஒரு நல்ல திட்டத்திற்கு ஆசிரியர் ஆல்டஸ் ஹக்ஸ்லே குறிப்பிடும் உரைகல். எம். என். ராய்-

* 'Principles of Economic Planning - பொருளாதாரத் திட்டம் வகுக்கும் நியமங்கள்.'

† 'Ends and Means - லட்சியங்களும் மார்க்கங்களும்', பக்கம் 32.

திட்டமோ, 'பொருளாதாரத் திட்டத்தின் நோக்கம், மக்களுடைய அத்தியாவசியமான தேவைகளையும் அவசரத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுதான்' என்று கூறுகிறது. ஆனால் இந்தப் பிரச்னை சம்பந்தமாக, டாக்டர் ஸன்யாட்-ஸென்* வகுத்த 'ஜனங்களின் மூன்று கொள்கைகளான'† தேசீயம், ஜனநாயகம், வாழ்க்கை வசதி ஆகியவைகளுக்கு மேலாக வேறு எதுவும் இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. நாம் வகுக்கும் திட்டம் நம் சமூகத்தின் சொந்தக் கலைப் பண்பிலும் நாகரிகத்திலும் வேரூன்றியிருக்கவேண்டும்; உள்ளிருந்து தானாக வளர்ந்து முதிர்ச்சியடைவதாக இருக்கவேண்டும்; தனிப்பட்ட ஒரு சிறு வகுப்புக்காகவோ கூட்டத்திற்காகவோ அல்லாமல், சமூகம் முழுவதற்கும் க்ஷேமத்தையும் சுகத்தையும் பெருக்குவதாக இருக்க வேண்டும். பொருளாதார நிர்மாணத்தில் இதுவே முதல் நியமமாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து. இரண்டாவதாக, திட்டம் வகுப்பதால், பொது ஜனங்களுக்கு நியாயமாக உரித்தாயுள்ள சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையின் சுதந்திரத்தைப் பறித்து, படைகளை அணிவகுப்பது போல் அவர்களை அணிவகுத்து வேலை செய்யும்படி நிர்ப்பந்திப்பதும் கூடாது. நாம் ஜனநாயகத்திற்கு ஏற்றபடி திட்டம் வகுக்க வேண்டுமே அல்லாது சர்வாதிகார ஆதிக்கத்திற்கு அல்ல. கடுமையான விதிகளும் நுணுக்க விவரங்களுமுள்ள திட்டத்தை ஒரு சமூகத்தின் மேல் சுமத்துவதன் மூலம் அதன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் நாம் வெற்றியடையக் கூடும். ஆனால் ஜனங்கள் தங்கள் ஆத்மாவையும் சுதந்திர, சுய ஆட் உணர்ச்சிகளையும் இழந்துவிட்டு, அத்தகைய போ

---

* டாக்டர் ஸன்யாட் - ஸென் சீன தேசத்துத் தலைவர் அங்கே புரட்சிசெய்து குடியரசை ஸ்தாபித்தவர். இ ருடைய காலம் **1866 - 1925.**

† டாக்டர் ஸன்னுடைய மூன்று கொள்கைகளுக்கு சீன பாஷையில் 'ஸான் மின் ஜூ-யி' என்று பெயர்; சீன குழந்தைகள்கூட இந்தக் கொள்கைகளை மனப்பாட செய்வது வழக்கம்.

போக்கியங்களை மட்டும் அடைவதால் என்ன பயன்? ஆதலால், பொருளாதாரத் திட்டம் வகுப்பதில், அரசாங்கத் தலையீடும் நிர்ப்பந்தமும் மிக மிகக் குறைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். எந்த அரசாங்கம் ஜனங்களிடம் அதிகமாய்த் தலையிடாமல் ஆளுகின்றதோ அதுவே தலைசிறந்த அரசாங்கம். இதற்கு மேலும் ஒருபடி போகவேண்டும் என்பது என் நோக்கம். திட்டம் வகுக்கும்போது ஜனநாயகத்தைப் பாதுகாத்தால் போதாது; அத்துடன் ஜனநாயகத்தை உண்மையாக்கி நிலைபெறச் செய்து, அதைச் செழுமையுடையதாக்கவும் வேண்டும். மேலும் நம் தேசத்தில் மட்டும் ஜனநாயகம் நிலைத்து வளர்வதோடு திருப்தி கொண்டுவிடக் கூடாது; தொழில் துறையில் அதிக முற்போக்கு அடையாத மற்ற நாடுகளின் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பறித்துவிடாமல் எச்சரிக்கையுடன் இருக்கவும் வேண்டும். 'ஒருவருடைய சொந்தச் சமூகத்தின் நன்மைக்காக அளவு கடந்து ஆத்திரப்படுவதன் மூலம் சர்வதேச மனப்பான்மையை விட்டுவிடக் கூடாது; ஏனெனில், வெளிநாடுகளில் ஜனநாயகம் அழிந்தால், அதுவே உள்நாட்டிலும் ஜனநாயகத்தின் அழிவுக்குக் காரணமாகிவிடும்.' இந்த உண்மையை ஆசிரியர் ராபின்ஸ் தம்முடைய 'பொருளாதாரத் திட்டத் தயாரிப்பும் சர்வதேசிய அமைப்பும்' என்ற நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பொருளாதார சமத்துவம் இல்லாமல் அரசியல் ஜனநாயகம் சாத்தியமில்லை. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 'உண்மையான பொருளாதார சமத்துவம் ஏற்படாமல் அரசியல் சமத்துவம் மட்டும் இருந்தால், அது காரியாம்சத்தில் ஒருபோதும் சமத்துவமாக இருக்க முடியாது. அங்கிலையில் அரசியல் அதிகாரம் பொருளாதார அதிகாரத்தின் கையாளாகத்தான் இருக்கும்'* என்று ஆசிரியர் லாஸ்கி சொல்லு

* 'Grammar of Politics - அரசியல் இலக்கணம்' என்ற ராஜீய சாஸ்திரம்; பக்கம் 162.

கிறார். அதனால்தான் முதலாளித்துவமும் ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருக்கின்றன; முதலாளித்துவ சமூகத்தில், 'பொருளில்லா'ருக்கும் 'பொருளுடையோ'ருக்கும் இடையே நிரப்ப முடியாத ஒரு பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதே இதற்கு அத்தாட்சி. எனவே, நல்ல முறையில் ஏற்படும் ஒரு தேசியப் பொருளாதார அமைப்பில், தனி நபர்களுக்குள்ளே வருமானங்களில் அதிகத் தாரதம்மியம் இருக்கும்படி இடம் கொடுக்கக் கூடாது; இல்லாவிட்டால், நாளடைவில் ஜனநாயகம் மாறி, அதன் ஸ்தானத்தில் பணக்காரருடைய ஆட்சியான பணநாயகமோ, சிறு கோஷ்டிகளின் சர்வாதிகாரமோ ஏற்பட்டுவிடும்.

திட்டம் வகுப்பதில் கவனிக்கவேண்டிய மூன்றாவது நியமம்: சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நபரும், நியாயமான கௌரவமான வழிகளில் தன் ஜீவனத்திற்கு வேண்டிய உபாயத்தைத் தேடிக்கொள்ள உரிமை இருக்க வேண்டும். உழைக்கவும், அந்த உழைப்பின் பயனை அனுபவிக்கவும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு. அவ்வுரிமையை யாரும் பறிக்க முடியாது. அரசாங்கம் உம்பளமாகக் கொடுக்கும் 'உதவி நிதி'யும், வேலையில்லாத காலத்தில் தரும் இன்ஷூரன்ஸ் உதவியும் 'ஜீவனோபாயம்' என்று மதிக்கத்தக்கன அல்ல. இவை ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாதவை. ஜீவனோபாயம் வேலையையும் வாழ்வையும் குறிக்கும்; மற்றவை 'அழுகி அழிவதையே' குறிக்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்து வைப்பதோ, ஜீவனோபாயத்திற்கு வழி செய்வதோ, எதுவானாலும் திருப்தியாக நிறைவேற வேண்டுமானால், நாம் ஒரு விஷயத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். மனிதருடைய சிரமத்தைக் குறைக்கக்கூடிய திறமை மிகுந்த யந்திரங்களின் மூலம் பொருளுற்பத்தியைப் பெருக்கிவிடுவது என்பது நமது லட்சியமில்லை, லட்சியமாக இருக்கவும் கூடாது. பொருளாதார வாழ்க்கையின் மானிட அம்சத்தை நாம் இனி அலட்சியமாய்த் தள்ளிவிட முடியாது. யந்திரங்களையும்,

பொருள்களையும் பார்க்கிலும் பலமடங்கு மேம்பட்டவன் மனிதன். மனிதனைப் பலி கொடுத்துப் பொருள் உற்பத்தியையும், தேசியச் செல்வத்தையும் பெருக்கி என்ன பயன்? அவனுக்காக அல்லவா இவை பெருக வேண்டும்? இதுவே டாக்டர் ஸன்யாட்-ஸென்னுடைய 'ஜனங்களின் மூன்று கொள்கைக'ளுக்குச் சரியான வியாக்கியானம் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்தக் கொள்கைகளையே மற்றோர் ஆசியத் தலைவரான மகாத்மா காந்தியும் வற்புறுத்தி வருகிறார்! இரு தலைவர்களும் உபயோகித்திருக்கும் சொற்களில்தான் வித்தியாசம். முதலாளித்துவ முறையிலும் அபேதவாத முறையிலும் உள்ள பற்பல திட்டங்களையும் சுருக்கமாகப் பரிசீலனை செய்து, அவைகள் மேலே குறிப்பிட்ட மூலாதாரமான நியமங்களை எவ்வளவு தூரம் நிறைவேற்றுகின்றன என்பதை அடுத்த அத்தியாயத்தில் குறிப்பிடுகிறேன்.

# III

## காந்தியத் திட்டம் எதற்கு?

சென்ற சில வியாழவட்டங்களாகத் தொழில்களில் மட்டுமல்லாமல் விவசாயத்திலும் உற்பத்திச் சக்தி மிக அதிகமாகப் பெருகியிருக்கிறது. எங்கும் ஜனத்தொகை பெருகியுள்ள அளவுக்கு மேலாகவே உற்பத்திச் சக்தி முன்னேறி யிருக்கிறது. ஆகவே, இந்த உற்பத்திச் சக்தியின் பெருக்கம் உலகமக்களின் செல்வத்தை அதிகமாக்கி, ஆரோக்கியத்தை வளர்த்து, இன்பத்தை விருத்தி செய்திருக்க வேண்டியதுதான் முறை; இதனால் வறுமை தானாகவே ஒழிந்திருக்கவேண்டும். ஆனால் நாம் காண்பது என்ன? உலகம் அதன் அஸ்திவாரத்தையே குலுக்கிவிடக் கூடிய ஒரு பெரிய பொருளாதார மந்தத்தை அனுபவிக்க நேர்ந்தது. அத்தகைய நெருக்கடி முன்னால் ஏற்பட்டதில்லை. ஏராளமான உணவுப்

பொருள்களும் மூலப் பொருள்களும் குவிந்து கிடக்கின்றன. ஆனால், தக்க விலைகொடுத்து வாங்குவோர்தான் இல்லை. தொழிற்சாலைகளை நடத்திவந்தவர்கள் தங்கள் சாமான்களை லாபகரமாக விற்க முடியாததால், லட்சக் கணக்கான ஆண்களும் பெண்களும் வேலையில்லாமல் திண்டாடுவது உண்டு. உலகம் தன்னுடைய உற்பத்திச் சக்தியின் அளவைக் கண்டே ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. இந்தச் சக்தி எவ்வளவுக்கெவ்வளவு பெருகுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு உலகம் இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் தவிக்கிறது.

'மனிதர் உழைப்பினால் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய முறைகளை விஞ்ஞானிகள் கண்டு பிடிக்கிறார்கள். அதன் பயனாக, உற்பத்திச் சக்தியின் பெருக்கமே வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் துயரத்திற்கும் காரணமாகிறது. எனவே, விஞ்ஞானிகளின் சிருஷ்டிகளால் என்ன பயன்? தொழில் செய்யும் சிரமத்தைக் குறைப்பதற்குக் கண்டுபிடிக்கும் வழிகளே, படிப்படியாக, அதிகமான ஜனங்களுக்கு வேலையும் வருமானமும் இல்லாமல் செய்யுமானால், அவைகளால் என்ன பிரயோஜனம்? விவசாயி விதை விதைக்கிறான். அதிகமாக விளைந்தால் பணக்கஷ்டங்கள் ஏற்பட்டு விடுமே யென்று அவன் அஞ்சி, பயிரிடும் பொழுதே, அதிகமாக விளையாமலிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறான்! இத்தகைய உலகத்தைப்பற்றி நாம் என்ன சொல்வது? நாம் ஒரு விசித்திர உலகில்தான் வசிக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.'*

ஆசிரியர் கோல் மேலே கேட்டிருக்கும் கேள்வி சரியானதுதான். பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய நமது சக்தி அவைகளை உபயோகித்துக் கொள்ளும்

---

* 'The Intelligent Man's Guide, through Wor Chaos – உலகக் குழப்பத்தில் புத்திசாலியான மனிதனுக்கு வழிகாட்டி.'—ஜி. டி. எச். கோல்.

செய்யும் சக்தியைக் காட்டிலும் அதிகமாய்ப் போய்விட்டது. அதன் பயனாகத்தான் ஜனங்களிடையே வேலையின்மையும், துயரமும், பலவீனமும், பரிதாப மனப்பான்மையும் பெருகியிருக்கின்றன. 'நுணுக்கமான சாதனங்களின் மூலம் தொழில் நாளுக்கு நாள் வளர்ந்து, உற்பத்தியைப் பெருக்கப் பெருக்க, அதுவே தான் தயாரிக்கும் பொருளுக்கு இருக்க வேண்டிய கிராக்கியை—தேவையை—அழித்துக்கொண்டே வருகிற காட்சிதான் நமக்கு எதிரே நிற்கிறது.'* ஏராளமான பொருளை உற்பத்தி செய்யக்கூடிய நிலையிலும், உற்பத்தி செய்திருக்கும் போதும், மனிதன் பட்டினிகிடக்க நேருகிறது என்பதும், மிகுந்த செழிப்பின் மத்தியில் கேவலமான வறுமை தாண்டவமாடுகிறது என்பதும் கேலிக்கூத்தே. கிரேப் † என்பவர் இந்த நிலைமையைப் பற்றி ஒரு கவி எழுதியிருக்கிறார். அதன் பொருள் வருமாறு:

> 'சுபிட்சம் பொங்குகிறது—அந்தோ! சிலரே அதனால் செழிப்படைகின்றனர். அதை அனுபவிக்காதவர்கள் அதன் களஞ்சியத்தைக் கண்ணால் மட்டும் காண்கிறார்கள். அவர்கள் உலோகக் கனிகளைத் தோண்டியெடுக்கும் அடிமைகளைப் போன்றவர்கள். செல்வத்தின் நடுவே இவர்களெல்லோரும் வறுமையில் இருப்பதால், இவர்களுடைய வறுமை இரட்டிப்பாகிறது.'

ஆயினும், நம்முடைய இன்னல்களுக்குக் காரணம் உற்பத்திப் பெருக்கம் அன்று; நமது பொருளாதார அமைப்பும், அதன் லட்சியங்களுமே உண்மையான காரணம் என்பது தெளிவு. முதலாளித்துவம் தோன்றும் பொழுது, சுரண்டலையும் வேலையில்லாத் துன்பத்தையும் தன்னுடனே அழைத்து வந்தது மட்டுமல்லாமல், மனிதனை அது பீரங்கியின் உணவாக்கிவிட்டது, யந்திரத்தி

* 'Work, Wealth and Happiness of Mankind - மனித சமூகத்தின் தொழிலும், செல்வமும், சுகமும்.'—எச். ஜி. வெல்ஸ்.

† Crabbe.

லுள்ள சக்கரங்களைப் போல் மனிதனை அசேதனப் பொருளாக ஆக்கிவிட்டது. மெல்ல மெல்ல முதலாளித்துவம் ஜனநாயகத்தைத் தீர்த்துக்கட்டி அதைப் பரிகாசப் பொருளாக மாற்றிவிட்டது; மனித சமூகம் முன்னும் போகாமல் பின்னும் போகாமல் தேங்கி நிற்கும்படி அது செய்துவிட்டது. தங்கத்தின் கொடுங்கோன்மை ஒரு பெரிய பூதம்போல் வியாபித்துவிட்டது. முதலாளித்துவத்தின் உண்மையான சொரூபத்தை மறைத்து, அதுவே சுதந்திரம், நீதி, ஜனநாயகம் என்று தோன்றும்படி வேஷங்கள் போட முயற்சிகள் நடக்கின்றன: இந்த முயற்சிகள் வீணானவை, மகா கேவலமானவை. ஆனால், வேஷத்தைக் களைந்துவிட்டால், உள்ளே யிருப்பது கோர சொரூபமே என்பதை ஒவ்வொருவரும் இப்பொழுது நன்கு அறிந்திருக்கின்றனர். ஏனெனில், முதலாளித்துவம் தன் ஆதிபத்தியத்திற்கு ஆபத்து வருவதாக உணரும் சந்தர்ப்பங்களில், அது வேறொரு விகாரமான உருவத்தில், ராக்ஷஸ பலத்துடனும் சர்வாதிகார மமதையுடனும், மீண்டும் தலை விரித்து ஆட ஆரம்பித்து விடுகிறது. அந்தப் புதிய உருவத்திற்குத்தான் பாஸிஸம் அல்லது நாஜீயம் என்று பெயர். 'இங்கிருந்து எங்கே போகிறோம்?'* என்ற நூலில் ஆசிரியர் லாஸ்கி மேலைநாடுகளின் சமீப காலத்திய அரசியல் சரித்திரத்தை ஆராய்ந்திருக்கிறார். முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயகம் சாத்தியமில்லை என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி அதில் நிரூபித்திருக்கிறார். எங்கே முதலாளித்துவத்திற்கு எதிர்ப்பு பலமுள்ளதாக இல்லையோ, அங்கே அது வெளி வேஷத்தைக் கலைக்காமல், ஜனப்பிரதிநிதி சபைகளின் மூலமே ஆட்சி புரிவதுபோல் பாவனை செய்துகொண்டிருக்கும். ஆனால், அபாயம் நெருங்கியவுடன், தன் நிலை தளர்ந்துவிடும் என்ற பயம் தோன்றியவுடன், அது எல்லையற்ற பலாத்காரத்தையும், சர்வாதிகார அமலையும் கையாளத் தயங்குவதில்லை.

* 'Where Do We Go from Here?'—by Prof. Laski.

சுயேச்சையான தொழில்-வர்த்தகங்களில் அரசாங்கம் தலையிடலாகாது என்ற சித்தாந்தம் முடிவுற்றது பற்றி கீன்ஸ் பிரபு எழுதியுள்ள நூலில்* முதலாளித்துவத்தின் தத்துவத்தைப் பின்கண்ட முறையில் விளக்கியிருக்கிறார்: 'பணம் சேர்ப்பதிலும், பண ஆசையிலும் தனி நபர்களுக்கு உள்ள இயற்கை உணர்ச்சிகளைத் தூண்டுவதையே முதலாளித்துவம் பொருளாதார அமைப்பின் முக்கிய ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.' பணத்தின்பேரில் அளவு கடந்த பேராசை கொள்வதால், சுரண்டல், நாடு பிடித்தல் - குடியேற்றம், ஏகாதிபத்திய வெறி என ஒன்றன்பின் ஒன்றாக ஓர் அனர்த்த பரம்பரை சிருஷ்டியாகிறது. இவைகள் இரத்த வெள்ளத்தைப் பெருக்கும் யுத்தங்களிலும், மொத்தமாக மக்களை அரிந்து தள்ளுவதிலும் கொண்டு சேர்த்துவிடுகின்றன. 'முதலாளித்துவத்திற்கு மனச்சாட்சி என்றோ, தேசம் என்றோ வரையறை கிடையாது' என்று பெர்னார்ட் ஷா கூறுகிறார். ஆதாயம் ஒன்றே அதன் நாட்டம்; தங்கமே தெய்வம். இதைத்தான் 'பொருளாதார தர்மம்' என்கிறோம். மனித தர்மத்திற்குப் பதில் இந்தப் 'பொருளாதார தர்மம்' ஒன்று கிளம்பியிருக்கிறது. அமெரிக்க உதவி - ஜனாதிபதி ஸ்ரீ. வாலஸ், 'வர்த்தக முதலாளிகள் பங்கு மார்க்கெட்டைப் பிரதானமாக வைத்துக்கொண்டு தேசத்தை இரண்டாவதாகத் தள்ளிவிடக் கூடும்' என்று எச்சரிக்கிறார். பணத்தின் மூலமே நாகரிகத்திற்கு அபாயம் ஏற்படும் என்று ஆசிரியர் ஸாடி அறிவிக்கிறார். 'பூமியே சூரியனைச் சுற்றி வருகிறது, சூரியன் பூமியைச் சுற்றவில்லை என்று பிரசாரம் செய்தபோது அது மதத்துரோகமாகக் கருதப்பட்டதுண்டு. அதுபோல், பணம் மனிதனுக்காக ஏற்பட்டதே அல்லாமல், மனிதனைப் பணத்திற்காகப் படைக்கவில்லை என்ற கருத்தை இக்காலத்து நாணய

---

* 'The End of ***Laiss'ez faire*** - தொழில் - வர்த்தகங்களில் அரசாங்கத் தலையீட்டின் முடிவு.'

நிபுணர்கள் "உண்மைக்கு" எதிர்ப்பாகக் கருதுகிறோம்.'* ஆகவே, இப்போது நாம் வாழும் உலகம் பணப்பித்துப் பிடித்த உலகம். முதலாளிகளே இதில் ஆட்சி செலுத்துகிறார்கள். பணத்திற்காகவும், லாபத்திற்காகவும் இடைவிடாமல் நடக்கும் இந்த வெறியாட்டம், சாதாரண மக்களை நாசகரமாகச் சூறையாடுவதில் வந்து முடிந்திருக்கிறது என்று சகோடின் கூறுகிறார். ஆனால், முதலாளித்துவம் தன்னை அழித்துவிடக்கூடிய சக்திகளையும் தானே தனக்குள் தாங்கி நிற்கிறது. ஏனெனில், அளவுகடந்த பேராசை, உடனேயோ காலங் கடந்தோ, அதன் விளைவுகளை அனுபவித்தே தீரும்; அதனால் அழிவும் ஆபத்துமே விளையும். வினை விதைத்தவன் வினையையே அறுப்பான். புகழ்பெற்ற 'கம்யூனிஸ்ட் பிரகடனம்'† இவ்விஷயத்தைத் தெளிவாக விளக்கியிருக்கிறது: 'தற்காலப் பரசிரம ஜீவிகள்‡ நிறைந்த சமூகம், பொருள் உற்பத்தி, பண்டமாற்று, சொத்து என்ற ஏற்பாடுகளின் மூலம், உற்பத்தியையும் வர்த்தகத்தையும் பிரமாதமாகப் பெருக்கும் கருவிகளை ஏவிவிட்டிருக்கிறது. ஆனால் அதன் இன்றைய நிலைமை, பெரிய பூதப் பிசாசுகளைச் சிருஷ்டித்துவிட்டு அவைகளை அடக்க முடியாமல் திணறும் ஓர் மந்திரவாதியின் நிலைமையைப் போலவே இருக்கிறது.'

இதற்கெல்லாம் பரிகாரந்தான் என்ன? சுபிட்சத்தின் மத்தியிலேயே வறுமையும் இருக்கிறது; உற்பத்திப் பெருக்கத்தின் நடுவிலேயே வேண்டுமென்றே பொருள்கள் அழிக்கப்படுகின்றன: ஒன்றுக்கொன்று நேர் முரணான இந்த விஷயங்களின் சிக்கலை விடுவிப்பது எப்படி? எல்லாம் காலத்தால் சரிப்பட்டுவிடும் என்று நம்பி, இருக்கிற நிலைமையை மாற்ற முன்வராமல், இருப்ப

* 'Money versus Man - பணமும் மனிதனும்.'

† பிரபல பொதுவுடைமைத் தலைவர்களான கார்ல் மார்க்ஸும், பிரடெரிக் எங்கல்ஸும் 1848-ல் வெளியிட்ட பிரசித்தமான அறிக்கை - Communist Manifesto.

‡ பிறர் உழைப்பால் வாழ்க்கை நடத்துபவர்கள்.

யுடன் சோம்பிக் கிடந்தோமானல், கஷ்டத்தைத் தாங்க முடியாது.

'குதிரை வண்டியைவிட்டு அறுத்துக்கொண்டு ஓடுகையில், "நான் என்ன செய்ய முடியும்?" என்று வண்டிக்குள்ளே சோம்பி உட்கார்ந்திருப்பது போலத் தான் இதுவும். ஆனல் உங்களுக்குச் சக்தி இல்லை என்பதற்காக் வண்டி மோதுண்டு சிதறிப் போகாமல் இருக்குமா?'*

## பாஸிஸத் திட்டம்

உலகத்தில் வெவ்வேறு நாடுகளில் இதுவரை தனித் தன்மையுள்ள மூன்று திட்டங்கள் பரீட்சை பார்க்கப் பட்டிருக்கின்றன. முதலாவது பாஸிஸ முறை அல்லது நாஜித் திட்டம். இந்தத் திட்டத்தில் நோயைக் காட்டிலும் பரிகாரம் மோசமானது என்பது மறுக்க முடியாத உண்மை. ஜெர்மனியில் நான்குவருஷத்துப் பொருளாதார சுபிட்சத் திட்டத்தை 1936-ம் வருஷம் செப்டம்பரில் ஹிட்லர் தாமே பிரகடனம் செய்தார். ஆயுத உற்பத்தி விஸ்தரிப்பாலும், நாட்டின் தேவைக்குப் போதுமானதை அந்நாட்டிலேயே உற்பத்தி செய்வது என்ற ஏற்பாட்டினலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அது குறைத்தது என்பது உண்மைதான். ஆனல் அதிகப் பேருக்கு வேலை கிடைத்துவிட்டதால், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடவில்லை. அதற்கு மாருக, நாடெங்கும் போர்க் கருவிகளே நிறைந்தன; ஜெர்மானிய மக்களும் 'உணவு'க்குப் பதிலாகத் 'துப்பாக்கி'களே போதும் என்று நினைக்கும்படி பயிற்சி செய்யப்பட்டார்கள். நாஜிப் பொருளாதார முறை முக்கியமாக யுத்தகால அமைப்பாகவே விளங்கியது. அது படீரென்று எந்த நிமிஷத்திலும் வெடித்துவிடும் நிலையிலேயே இருந்தது. பின்னல், அப்படியே வெடிக்கவும் செய்தது. அந்த வெடிப்பு

* 'The Intelligent Woman's Guide to Socialism and Capitalism - புத்திசாலியான பெண்ணுக்கு அபேதவாதம், முதலாளித்துவம் பற்றிய வழிகாட்டி'—பெர்ஞர்ட் ஷா.

உலகம் முழுவதையும் அஸ்திவாரத்திலிருந்தே ஆட்டி வைத்துவிட்டது. 'ஒரே கட்சியைக் கொண்ட சர்வாதிகார சர்க்கார்' என்ற பெயரால், பாட்டாளி மக்களுக்குக் கொஞ்சம் உபகாரம் செய்து திருப்திப் படுத்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன என்பது உண்மைதான். ஆயினும் செல்வம் மிகுந்த முதலாளிகளே சர்க்காரின் பின்னல் இருந்துகொண்டு அதைத் தம் கைப்பதுமை யாக ஆட்டிவந்தார்கள், ஆட்டத்திற்கு உரிய கூலியும் கொடுத்து வந்தார்கள். உண்மை என்னவென்றால், சீரிழந்துவந்த முதலாளித்துவம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆக்குரோசத்துடன் கிளம்பியது; இத னடியாகவே பாஸிஸம் பிறந்தது. ஆகவே பேராசை—சுரண்டல் என்ற கோட்டை தகர்ந்து விடாமல் முட்டுக் கொடுத்துத் தாங்குவதே பாஸிஸத்தின் முக்கிய வேலை யாக அமைந்தது. பாஸிஸத் திட்டத்தில், சர்க்காரின் சர் வாதிகார ஆதிக்கத்திற்குத் தனி நபர் கண்டிப்பாக உட் பட்டிருக்கும்படி செய்யப்பட்டது. 'சர்க்காரையே தெய்வ மாக வணங்கச் செய்வதுபோல் இது ஆகிவிட்டது. மற்றக் காலங்களைவிட, மிகவும் அபாயகரமான ஓர் விக்கிரக ஆரா தனை இப்போது நடைபெறுகிறது. இந்த ஆராதனையின் மூர்த்திதான் அரசாங்கம்'* என்கிறார் கவுண்ட் கலேர்கி. ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய விசேஷப் பண்பை மதிப்பதேயே அடிப்படையாகக் கொண்ட ஜன நாயகத்தை இடைவிடாமல் நசுக்கி, அதன் ஸ்தானத்தில் சர்வ வல்லமையுள்ள ஒரு சர்வாதிகாரத்தை நிலைநாட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 'மனிதனை வைத்தே எல்லா விஷயங்களையும் அளந்து பார்க்கவேண்டும்' என்று கிரேக்க ஞானி பிரோட்டோகோரஸ் கூறினார். ஆனால், மனிதனுக்குப் பதிலாக, நம் தத்துவங்களை யெல்லாம் அளந்து பார்ப்பதற்கு இப்பொழுது அர சாங்கமே அளவுகோலாக்கப்பட்டிருக்கிறது. புராதன

---

* 'The Totalitarian State against Man', by Count Coudenhove - Kalergi - கவுண்ட் கௌடன்ஹோவ்-கலெர்கி எழுதியுள்ள 'மனிதனுக்கு எதிர்ப்பான சர்வாதிகார அர சாங்கம்'; பக்கம் 20.

ஏதென்ஸ் நகர நாகரிகத்தின்படி* தனி மனித கௌரவத்திற்கே வியாபகம் அளிக்கப்பட்டது. ஆனால் பாஸிஸப் பொருளாதார அமைப்போ, அரசாங்கத்துக்கே சர்வ வியாபகம் என்ற ஸ்பார்ட்டாவின்† கொள்கையைப் பின்பற்றுகிறது.

## அமெரிக்காவின் 'புது ஏற்பாடு'

பொருளாதாரத் திட்டம் வகுப்பதில் இரண்டாவது பரீட்சை அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் கையாண்டதாகும். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வகுத்த 'புது ஏற்பாடு' (New Deal) என்பதையே நான் இங்கு குறிப்பிடுகிறேன். இதை ஒரு 'திட்டம்' என்று கூறுவது அவ்வளவு பொருத்தமாக இராது. முதலாளித்துவம் ஆபத்தில் சிக்கிக்கொண்டு தவித்தபொழுது, அது எப்படியாவது பிழைத்துக் கடைத்தேற வேண்டுமே என்ற கவலையில், தற்கால சாந்தியாகக் கையாளப்பட்ட பல பரிகாரங்களே மொத்தமாகப் 'புது ஏற்பாடு' என்று சொல்லப்பட்டன. சமூகத்தில் வகுப்புகளிடையே ஏற்பட்டிருந்த பெரிய அநீதிகளின் காரணங்களில் சிலவற்றை நீக்கி, முதலாளித்துவ முறையைக் கொஞ்சம் சீர்திருத்தி நிலைநாட்டச் செய்த ஓர் தீவிர முயற்சியாகவே இந்த ஏற்பாட்டைக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் புதிதான ஒரு பொருளாதார அமைப்பைச் சிருஷ்டிக்க எண்ணவில்லை. பழைய அமைப்பைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டு வைப்பதே அவர் நோக்கம். அணைகள் ரஸ்தாக்கள் போன்ற கட்டட வேலைகளை ஆரம்பித்துப் பலருக்கு வேலையும் கூலியும் கிடைக்கும்படி அவர் செய்தார். தொழில் இல்லாமல் தவித்தவர்களுக்கு ஊதியம் கிடைக்கவே, அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளைத் திருப்தி செய்துகொள்ள வசதி உண்டாயிற்று; அவர்களுடைய தேவைகளைத் திருப்தி செய்ததில் முதலாளிகளுக்கும் தக்க

* நாகரிகம் மிகுந்த பழங்காலத்து ஏதென்ஸ் நகரம் கிரேக்க நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணை.

† ஸ்பார்ட்டா-கிரேக்க தேசத்து மாகாணங்களில் ஒன்று.

லாபம் கிடைத்தது. தொழிலாளரின் வேலை நேரம் குறைக்கப்பட்டது, கூலி விகிதம் உயர்த்தப்பட்டது, சுங்கவரித் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. மார்க்கெட்டில் தானியங்கள் குவிந்து தேங்கிவிடாமல் அவைகளைப் பொதுப் பணத்திலிருந்து வாங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு உதவி செய்யப்பட்டது; சிலவகை நிலங்களில் விளைவு கட்டுப்படுத்தப்பட்டு, விளைபொருள்களின் விலைவாசிகள் கூட்டப்பட்டன. பணக் கஷ்டத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த பாங்கிகளுக்கு சர்க்காரிலிருந்து கடன் தொகைகள் கொடுக்கப்பட்டன. பொது விலைவாசிகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு நாணய மார்க்கெட்டில் சர்க்கார் பிரவேசித்ததோடு, அதிகமான காகித நாணயமும் வழங்கப்பட்டது. பெரிய அபாயம் நேர்ந்த சமயத்தில் அமெரிக்கா தப்பிப் பிழைக்க இத்தகைய முறைகள் மிகவும் உதவியாக இருந்தன. ஆனால், உடலுக்குள்ளே தாவியிருந்த நோய்க்கு இவையெல்லாம் நிலையான பரிகாரம் என்று சொல்லமுடியாது; நோயின் வெளித்தோற்றத்தைச் சிறிது தணிப்பதற்கே இவை பயன்பட்டன. 'இந்தப் புது ஏற்பாடு அரைகுறை அபேதவாதத்தைக்கூடச் சார்ந்ததாக இருக்கவில்லை. ஆனால் அமெரிக்க முதலாளித்துவம் லாபம் தேடும் முறையில் மறுபடி உறுதியாக நிலைப்பதற்குச் செய்த முயற்சியே இது.'*

## பிரிட்டிஷ் திட்டம்

பிரிட்டன் எப்பொழுதுமே மாறுதலை விரும்பா நிதானக் கொள்கையுடையது. பொருளாதாரத் திட்ட வகுப்பதிலும் அது இந்தக் கொள்கையையே அனுசரித்து, காலப்போக்கில் எல்லாம் சரிப்பட்டுவிடும் என்று சும்மா இருந்துவிட்டது. பொருளாதாரத் திட்டம் யாதொரு திட்டமும் இல்லாத நாட்டுக்குத் தக்க உதாரணமாக 1914-வரை இருந்துவந்த பிரிட்டனைக் கு

* 'Practical Economics - அனுபவ ரீதியான பொருளாதாரம்'—ஜி. டி. எச். கோல்; பக்கம் 164.

பிடுவது மிகவும் பொருத்தமாகும். ஆனால், யுத்தக் காலத்தில் வர்த்தகம், தொழில், விவசாயம் ஆகியவற்றில் அரசாங்கம் ஆதிக்கம் செலுத்துவது அத்தியாவசியம் என்பது அனுபவத்தில் ருசுவாயிற்று. ஆகையால் பழைய கொள்கை நீடிக்க முடியவில்லை. 1914-18 யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட பொருளாதார மந்தத்திற்கு அப்பால், சில பொருளாதாரக் கட்டுத்திட்டங்களையாவது பிரிட்டன் வகுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆயினும், அந்தத் திட்டங்கள் எல்லாம் அரைகுறையாக நிறுவப்பட்டவை, ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாதவை, குறிக்கோள் ஒன்றுமே இல்லாதவை என்றும் சொல்லலாம். குறிப்பிட்ட சமயங்களில், செய்து தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் எந்த அம்சத்தில் ஏற்பட்டதோ, அதில் மட்டுமே புது முறைகளைக் கைக்கொண்டது. இந்த வழியில் கடைசியாக ஏற்பட்டுள்ள முயற்சி பிரபலமான பெவிரிட்ஜ் திட்டம். அதனுடைய முக்கிய நோக்கம் 'எல்லோருக்கும் வேலை கொடுத்தல்', ஒவ்வொரு பிரஜைக்கும் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளாவது கிடைக்கும்படி தொழில் இன்ஷூரன்ஸ், தொழில் செய்ய வசதியில்லாமற் போனால் உதவி, வயோதிக நிலையில் உபகாரச்சம்பளம், குழந்தைகளுக்காக விசேஷ உபகாரம், வைத்திய வசதி ஆகியவற்றை அமைப்பது. பணக்காரர்களின் செல்வத்தை வரிகளின் மூலம் மட்டுப்படுத்தி, அந்த வரி வசூலிலிருந்து ஏழைகளுக்குப் பலவித வாழ்க்கை வசதிகளைச் செய்து, அவர்களை ஓரளவு கைதூக்கி விடுவது திட்டத்தின் நோக்கம். முற்காலத்தில் டிஸ்ரேலி என்பவர், இங்கிலாந்து இரண்டு சமூகங்களாகப் பிரிந்திருப்பதாகவும், ஒன்று பணக்காரர் சமூகம் — மற்றது ஏழைகள் சமூகம் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், பெவிரிட்ஜ் திட்டம் போன்ற முறைகளால், 'தேசம் இப்பொழுது வேறு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்: ஒன்று வரி செலுத்தும் சமூகம் — மற்றது வரியைப் பட்சிக்கும் சமூகம்.' * புதிய பாகு

* 'The Fall of the Idols - போலித் தேவதைகளின் வீழ்ச்சி'—by Dean Inge ; P. 105.

பாட்டிற்கு டீன் இஞ்ஜ் என்ற அறிஞர் இந்தப் பெயர்களைச் சூட்டியிருக்கிறார். 'வேலையில்லாதார் இன்ஷ்யூரன்ஸ்' திட்டமானது வேலையற்றோருக்கு அவ்வப்பொழுது உம்பளம் அளிப்பதைப் போல் அவ்வளவு தூரம் தொழிலாளருக்குக் கண்ணியக் குறைவல்ல என்பது உண்மைதான்; ஆனால் இந்த வித்தியாசம் அளவைப் பொறுத்ததே அல்லாமல், எப்படியும் அவமானம் அவமானந்தான். இப்படித் திட்டம் வகுத்தல் ஒரு சுற்று வழி: இதன்படி முதலில் முதலாளிகள் ஏழைகளைச் சுரண்டுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டு, பிறகு சுரண்டியவர்களுக்கு வரி விதித்துச் சுரண்டப்பட்டவர்களுக்கு அற்ப சொற்பமான பொருள் உதவிகள் செய்யப்படுகின்றன. இந்த முறை முழுதுமே இயற்கைக்கு மாறுபட்டது, கேவலமானது, நஷ்டப் பிரவர்த்தியுங்கூட.

## ஸோவியத் திட்டம்

மூன்றாவது மாதிரியான திட்டம் ஸோவியத் யூனியனுடையது. ரஷ்ய ஐந்துவருஷத் திட்டங்கள் இரண்டும் உலகத்தின் கவனத்தையும் பாராட்டுதலையும் பெற்றன. ஏனெனில், முதலாளித்துவத்திற்கு எதிராக, அபேதவாதத் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு அவை வகுக்கப்பட்டிருந்தன. சுரண்டப்பட்ட மக்கள் சமுதாயம் அனைத்தையுமே ரட்சிப்பதற்குத் தோன்றிய முறை என்று இந்த ஸோவியத் பரீட்சையை உலகம் முழுதும் வரவேற்றது. பூரணமாகவும், முறையாகவும் அபேதவாதத் திட்டம் வகுத்ததால், ஸோவியத் ரஷ்யா பொது மக்களின் வாழ்க்கை அந்தஸ்தை மிக அதிகமாக உயர்த்துவதில் வெற்றி அடைந்துவிட்டது என்பதும் உண்மைதான். தாட்சிணிய மில்லாமல் கடுமையான முறைகளை இடைவிடாமல் அனுஷ்டித்து, முதலாளி வகுப்பு வேருடன் அகற்றப்பட்டுவிட்டது. கூட்டம் கூட்டமாகக் கொலைகள் செய்யப்பட்டன, துரோகத்திற்கா விசாரணைகள் நடத்திப் பலர் பகிஷ்கரிக்கப் பட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியே 'பாட்டாளி மக்களின் சர்வாதிகாரி

யாக'த் தலைமையான ஆதிக்கத்தைப் பெற்றிருந்தது. தனி நபரின் சுதந்திரத்தைக் கண்டிப்பாக வரையறுக்கவும் குறைக்கவும் வேண்டியிருந்தது. எனினும், இந்த ஸோவியத் பரீட்சை, பொருளாதாரப் புனர் நிர்மாணத்தின் சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்க மகோன்னத சம்பவமாகவும், மனித சமுதாயத்தின் விடுதலைக்கு வழி காட்டியாகவும் அங்கீகரிக்கப்பட்டது. ஏனென்றால், இதுவே முதலாளித்துவத்தை அதன் உயர்ந்த ஆதிக்க பீடத்திலிருந்து கீழே தள்ளியது; பொதுமக்களைக் கருத்தில் வைத்துக்கொண்டு பொருளாதார வாழ்க்கைக்குத் திட்டம் வகுத்தது; ஜனங்களின் நன்மைக்காக, தொழில், வர்த்தகம், பண்டமாற்று ஆகியவற்றை அரசாங்கம் தன் கையில் வைத்துக்கொண்டு ஒழுங்குபடுத்தி வந்தது. ஆகவே, உலகத்தில் வறுமையாகவும், சுரண்டப்பட்டும், மிதித்து நசுக்கப்பட்டும் அவதியுற்றுக்கொண்டிருந்த தேசங்களுக்கு ரஷ்யப் புரட்சியில் நம்பிக்கையும், ரஷ்யாவிடம் நன்மதிப்பும் ஏற்பட்டது இயற்கையேயாகும்.

ஆனால் இப்பொழுது எதிர்ச் சுழல் ஆரம்பித்து விட்டது. ரஷ்யப் புரட்சியையும், ஸோவியத் அபேதவாதப் பொருளாதார அமைப்பையும் ஆதரித்து நின்றவர்கள் மயக்கம் தெளிந்து வருகிறார்கள். லூயி பிஷர், மாக்ஸ் ஈஸ்ட்மன், ஆண்டிரி கைட், பிரேடா உட்லே* ஆகியோரைப்போல் ஸோவியத் யூனியனில் வருஷக் கணக்காக வாழ்ந்து, ரஷ்யப் பரீட்சையைப் பற்றி உலகத்திற்கு விளக்கிச் சொல்லிவந்த எழுத்தாளர்களும் அறிஞர்களும், இப்பொழுது புரட்சி போய்க்கொண்டிருக்கும் திசையைப் பார்த்து, ஏமாற்றமே அடைந்திருக்கின்றனர். நம்முடைய நாட்டிலும், எம். ஆர். மஸானி போன்ற தீவிர அபேதவாதிகள் ஸோவியத் திட்டத்தின் விளைவுகளைக் கண்டு இப்பொழுது மிகுந்த அதிருப்தி அடைந்திருக்கின்றனர். ஆதியில், அபேதவாத சமூகம் என்பது வகுப்புப் பிரிவினைகள் அற்றதாயும், ஜனநாயக முறை

* Louis Fischer, Max Eastman, Andre Gide and Freda Utley.

யிலும், சர்வ தேசங்களையும் அணைத்துக்கொள்ளும் போக்கை உடையதாயும் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. இடைக்கால மாறுதலுக்கு அப்பால் அரசாங்கமே (தேவையில்லாமல்) உதிர்ந்துவிடும் என்று கருதியதுபோல், 'பாட்டாளி மக்களின் சர்வாதிகார'மும் தாற்காலிகமாக இருந்து மறைந்துவிடும் என்று எண்ணப்பட்டது. ஜனநாயகமே ஸோவியத் அமைப்பின் அடிப்படையாக இருக்கவேண்டும் என்றும், புரட்சியின் முடிவான நோக்கம் சர்வதேசப் பொதுவுடைமை என்றும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் நடந்ததென்ன? சமூகம் வகுப்புப் பிரிவினைகள் அற்றதாக மாறாததுடன், நிர்வாகஸ்தர்கள் என்ற சக்தி மிகுந்த ஒரு புதிய வகுப்பினர் முளைத்து ஆதிக்கம் பெற்று விளங்குகின்றனர்.* மேலும் தனி நபர் வருமானத்திலும் ஏற்றத் தாழ்வு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது; சிலரது வருமானம் வேறு சிலரது வருமானத்தைவிட் 80 மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது. அரசாங்கம் தனி நபர்களின் சுதந்திரத்தைப் பூரணமாக அடக்கியாளும் போக்கைக் கொஞ்சமேனும் தளர்த்துவதற்குப் பிரியப்படவில்லை. 'பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம்' ஜனங்களை ஒரே அச்சில் வார்த்ததுபோல் அணிவகுத்து நிறுத்துவதிலே வந்து முடிந்திருக்கிறது. 'அந்தச் சர்வாதிகாரமும் கம்யூனிஸ்ட் கட்சியினுடையதாக இல்லாமல், "ஜி. பி. யு." என்று சொல்லப்படும் ஈவிரக்கமற்ற ரகசியப் போலீஸின் மூலம் ஆட்சி புரியும் ஒரே தலைவருடைய சர்வாதிகாரமாக இப்பொழுது அமைந்திருக்கிறது. அந்த ரகசியப் போலீஸைப் பார்த்தே ஹிட்லர் தமது "கெஸ்டபோ" போலீஸையும் அமைத்துக் கொண்டார்.'† ஸோவியத் யூனியன் சர்வதேச கம்யூனிஸ்ட் சங்கத்தைக் கலைத்து, தன் தேசிய [illegible]

* See Burnham's 'Managerial Revolution'-பர்ன்ஹாம் எழுதியுள்ள 'நிர்வாகஸ்தர்களின் புரட்சி'யைப் பார்க்கவும்.

† 'Socialism Re-considered - அபேதவாதம் பற்றிய பரிசீலனை'—எம். ஆர். மஸானி; பக்கம் 20.

இருந்துவந்த சர்வதேசப் பொதுவுடைமைக் கீதத்தையும் நிறுத்திவிட்டதன் மூலம், இப்பொழுது சர்வதேசியப் போக்கையே அடியோடு உதறிவிட்டது. எனவே தேசியம் மீண்டும் வந்திருக்கிறது. இதனுடைய இயற்கையான முடிவு ஏகாதிபத்தியக் கொள்கை. இது அபேதவாத முத்திரையுடன் தோன்றினாலும், ஏகாதிபத்திய மோகத்தைத் தவிர வேறாக இருக்கமுடியாது. மேலும், தற்போதைய யுத்தம் போகிற போக்கில், ரஷ்யா வெகு வேகமாக, இறுமாப்பு மிகுந்த பெரிய அபேதவாத ஏகாதிபத்தியமாக மாறிவருகிறது என்பதற்கு இப்பொழுது, போதுமான அத்தாட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன; 'ஏகாதிபத்தியம்' என்பது கோரமான வார்த்தையாயிருந்தால், அதைவிட மென்மையாகவும் இனிமையாகவும் உள்ள 'அபேதவாத சாம்ராஜ்யம் (காமன்-வெல்த்)' என்று சொல்லிக் கொள்ளலாம்.

இந்த மாறுதலுக்கு மூலாதாரமான காரணத்தை எளிதில் கண்டு கொள்ளலாம். அதிகாரம் அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்திருந்து, பெரிய அளவில் திட்டம் வகுத்துத் தொழில்களைப் பெருக்குவதனால், தனி நபர்களின் சுதந்திரம் நசுக்கப்பட்டு அழிந்தே தீரும். அதனால் ஏற்படுகிற அரசியல் அதிகாரம், ஆட்சி புரிவோர் எவ்வளவு பெரியவர்களாயும் கண்ணியமுள்ளவர்களாயும் இருந்த போதிலும், அவர்களது சீலத்தைக் குலைத்துவிடும். ஆசிரியர் ஜோட், 'ஒழுக்கம், அரசியல் ஆகியவற்றின் தத்துவ சாஸ்திரத்திற்கு வழிகாட்டி'* என்ற தமது நூலில் பின்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

> 'சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், சர்வாதிகாரங்கள் நாளடைவில் அதிகாரத்தில் குறைவதில்லை, அமிதமாகவே போய்க்கொண்டிருக்கும். அவைகளின் குறைகளை எடுத்துக் கூறினால், சகிப்புத் தன்மை இல்லாமல் அவை அதிக ஆத்திரமே கொள்ளுகின்றன என்பதைக் காணலாம். இவையெல்லாம் அவைகளின் சுபாவம். தற்கால

---

* 'Guide to the Philosophy of Morals and Politics.'

உலகின் மாறுதல்களும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும், சரித்திரம் கற்பிக்கும் பாடத்திற்கு நேர் மாறாகவே ஏற்படும் என்று கம்யூனிஸ்ட் கொள்கை எதிர்பார்க்கிறது. சர்வாதிகாரமுள்ள ஓர் அரசாங்கம், குறித்த சமயத்தில் எஞ்சின்களை மறுதிசையில் திருப்பி, தன் அதிகாரத்தைத் திருப்பிக் கொடுத்து, முன்னால் பறித்துக் கொண்ட சுதந்திரத்தையும் கொடுத்து விட்டுப் போய்விடும் என்று அந்தக் கொள்கை சித்தாந்தப் படுத்துகிறது. சரித்திரத்திலோ, மனிதரின் மனோதத்துவ ஆராய்ச்சியிலோ, இந்த முடிவு சரியானது என்பதற்கு எத்தகைய அத்தாட்சியும் கிடையாது.'

ஸோவியத் ருஷ்யாவில் பொருள் உற்பத்திக் கருவிகள், வசதிகள் எல்லாவற்றையும் அரசாங்கமே உடைமையாகக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனால் அரசாங்கம் யாருடைய உடைமை என்பதே அடிப்படையான பிரச்னை. அரசியல் பொருளாதார விஷயங்களில் சர்வாதிகாரம் செலுத்துவதால், முறைப்படி அதிகாரம் அனைத்தும் தலைமைச் சர்வாதிகாரியான ஸ்டாலின் கையிலும், நிர்வாகத்தை நடத்தும் அவருடைய அதிகார வர்க்கத்தினர் கையிலும் குவிந்திருக்கிறது. 'இந்தியாவின் தொழில் பிரச்னைகள்' * என்ற தம்முடைய நூலின் முன்னுரையில் டாக்டர் கியான்சந்த் கூறுவதாவது :

"பொருள் உற்பத்தி முறைகள் எல்லாம் ஒரே மத்திய ஸ்தாபனத்தின் ஆதிக்கத்தில் இருந்தால், பொருளாதாரத்திலும், அரசியலிலும் யதேச்சாதிகாரத்தின் மூலம் அபாயங்கள் இயற்கையாகவே நேரக்கூடும் என்பதை ஒப்புக்கொண்டே தீர வேண்டும். ஒருவருடைய ஜீவனத்திற்காக மற்றொருவருக்கு அடங்கியிருப்பதே தீமைதான்; ஆனால் தொழிலுக்குரிய ஒவ்வொரு மார்க்கத்திலும் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கத்திற்கு

* 'Industrial Problems of India'—by Dr. Gyanchand.

அடங்கி யிருக்கும்படி கட்டாயப் படுத்துவது அதிலும் படுமோசமான தீமையாகும்.'

'சமூக மனோதத்துவம்'* என்ற தம்முடைய நூலில் ஆசிரியர் கின்ஸ்பர்க் கூறுவதாவது :

> 'சகல அதிகாரங்களையும் தன்னிடம் வைத்துக் கொள்ளும் முறையில் நடைபெறும் ஒரு மத்திய அரசாங்கம், செல்வாக்குள்ள சிறு கோஷ்டிகளின் ஆதிக்கமாகவே அமையும். அரசாங்கம் தானாகவே "உதிர்ந்துவிடும்" என்று சொல்லப் படுகிறது. ......... ஆனால் அப்படி நிகழ்ந்தால், அதிகாரத்தை வகிக்கக்கூடிய சிறுபான்மை யினர் கூட்டம் ஒன்று கிளம்புவது நிச்சயம்......... எத்தகைய புனர் நிர்மாண முறையும், அதிகாரம் ஒரே இடத்தில் தேங்காமல், பரவலாக, பல பிரிவுக ளாக இருக்கும்படி செய்தால்தான் உண்மை யான பயன் விளையும்.'

தேசியம், ஜனநாயகம், வாழ்க்கை வசதி ஆகிய 'ஜனங்களின் மூன்று கொள்கைக'ளின்படி † பார்த்தால், காந்தித் திட்டம், அமெரிக்க ஏற்பாடு, ரஷ்யத் திட்டம் ஆகிய மூன்றுமே நம் லட்சியத்திற்குக் கீழ்ப்பட்டவையாக இருக்கின்றன. கடைசியாகக் குறித்த திட்டம் மூன்றாவது கொள்கையான 'வாழ்க்கை வசதி'யை மட்டும் பாதியும் பெரும்பாலும் பூர்த்தி செய்வதாக இருக்கிறது. ஆனால் ஜீவனோபாயம் மட்டும் கிடைத்தால் போதாது; சுதந்திரம் இருக்கவேண்டும், தனி மனிதன் வளர்ச்சி பெறுவதற்கு வசதியும் வேண்டும்.

## காந்தியத் திட்டம்

இந்நிலையில் வேறு மார்க்கந்தான் என்ன ? ஆடம்பர மற்ற வாழ்க்கை, பொருள் உற்பத்தி ஒரே இடத்தில்

---

* 'Psychology of Society'—by Prof. Ginsberg.

† 11-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள டாக்டர் ஸன்யாட் ஸென்னுடைய கொள்கைகள்.

குவியாமல் பரவலாக அமைத்தல், குடிசைத் தொழில்—இவைகளைக் கைக்கொள்வதே தக்க மார்க்கம். மற்றப் பொருளாதாரக் கொள்கைகள் முடிவான வழி ஒன்றும் காட்டமுடியாத நிலையில், காந்தியப் பொருளாதாரக்கொள்கைகள் பரிகாரம் தரக்கூடியதாக இருப்பதால், சந்தர்ப்பத்தைப் பொறுத்து, அவை அசாதாரணமான முக்கியத்துவத்தை அடைந்திருக்கின்றன. காந்திஜியின் பொருளாதாரக் கொள்கைகள் வெறும் மனோராஜ்யமானவை என்றும், பிரமையினால் அவர் அவைகளைப் பிடிவாதமாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறார் என்றும், அவை காரியசாத்தியமாக இருக்கவில்லை என்றும் ஏளனம் செய்யப்பட்ட காலமும் இருந்தது. ஆனால் இந்தத் தேசத்திலும், உலகம் முழுதிலும் ஏற்பட்டுள்ள அனுபவமானது, நாடெங்கும் பரவலாக அமையத்தக்க குடிசைத் தொழில் அபிவிருத்தியின் மூலம் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பலாபலன்களைக் கவனித்து ஆராயும்படி தூண்டியிருக்கிறது. 'குடிசையில் செய்யப்படும் கதர்த் துணி உற்பத்தியை விருத்தி செய்வதற்கு காந்திஜி செய்துவரும் தீவிரப் பிரசாரம், வெறும் பழமை மோகம் கொண்டு, பழையகால முறையை மறுபடியும் கொண்டு வரவேண்டும் என்ற நினைப்பித்து அல்ல; இந்தியக் கிராமவாசியின் வறுமை நோயைத் தணித்து, வாழ்க்கைத் தரத்தில் அவனைக் கைதூக்கி விடுவதற்கு ஏற்ற, காரிய சாத்தியமான ஒரு முயற்சியேயாகும்' * என்று ஆசிரியர் கோல் போன்ற பிரபல பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்கள் கூட ஒப்புக்கொள்ளும்படி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே காந்தீயத் திட்டம் நடைமுறைக்கு ஏற்றதே. இந்தக் காலத்திற்கு இன்றியமையாததும் கூட. ஏனெனில், யுத்தத்தால் பாழாகிப் பரிதவிக்கும் உலகிற்கு, சாந்தி, ஜனநாயகம், மானிட கௌரவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார முறையை அது காட்டுகிறது.

---

* 'A Guide to Modern Politics—தற்கால அரசியல் முறைகளுக்கு வழிகாட்டி'—ஜி. டி. எச். கோல்; பக்கம் 290.

# IV

## காந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சங்கள்

இந்தியாவின் பொருளாதாரப் புனருத்தாரணத்திற்கான காந்தீயத் திட்டத்தை விவரிப்பதற்கு முன்னால் காந்திஜியின் பொருளாதார அபிப்பிராயங்களுக்கு ஆதாரமான பல அடிப்படைத் தத்துவங்களையும் ஆராய்ந்து அறிந்துகொள்வது நல்லது. மூலாதாரமான இந்தக் கருத்துக்களைப் புரிந்துகொள்ளாமல், கிராமக் கைத்தொழில் முறையையும், பரவல் - உற்பத்தி முறையையும் அவர் வற்புறுத்துவதன் உண்மையான பொருளை நாம் உணர்ந்துகொள்ள முடியாது.

### ஆடம்பரமின்மை

காந்திஜி தமது நோக்கத்தில் கர்நாடகமான பழம் பசலியாக இருக்கவில்லை; கால சக்கரத்தை அவர் பின்னுக்குத் தள்ளவுமில்லை. காரிய திருஷ்டியுள்ள லட்சிய வாதியாகையால், நவ நாகரிகத்தின் உண்மையான வியாதி என்ன என்பதை அவர் கண்டுபிடிக்க முடிந்தது. அந்த நோய்க்கு உரிய பரிகாரத்தை அவர் சுட்டிக்காட்டு கிறார். ஆகவே அவர் காலப் போக்குக்குப் பின்தங்கி நிற்பவரல்லர், முன்னேறிச் செல்பவர்தான். தற்கால மேலைநாட்டு நாகரிகம் வெளிப்படையான சுகபோகங் களுக்கே மிக அதிகமான முக்கியத்துவம் அளிக்கிறது. முன்னேறிச் செல்லும் ஒரு நபரோ, சமூகமோ, சரீர சுகங்களையும் ஆடம்பரப் பொருள்களையும் இடைவிடா மல் பெருக்கிக் கொள்வதையே லட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று மேலைநாட்டு நாகரிகம் கருதுகிறது. காந்திஜி 'இந்திய சுயராஜ்யம்' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி, 'ஜனங்கள் சரீர சுகத்தையே வாழ்க் கையில் லட்சியமாகக் கொள்வதுதான் நவீன நாக ரிகத்தின் சின்னமாக இருக்கிறது.'

ஆனால், இந்தியா போற்றும் லட்சியம் இதுவன்று. 'மனம் என்பது அமைதி பெறாத ஒரு பறவை; அது எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய்ப் பெறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு மேலும் மேலும் அதிகமாய்க் கேட்கிறது; ஒருபோதும் திருப்தியடைவதில்லை' என்று காந்திஜி சொல்லுகிறார். 'இந்திரிய சுகங்களில் நாம் எவ்வளவு அதிகமாக ஈடுபடுகிறோமோ, அவ்வளவுக்கு அவை கட்டுப்படாமல் போகின்றன. ஆதலால் நம் முன்னோர்கள் இந்திரிய போகங்களுக்கு ஓர் எல்லை வகுத்தனர். இன்பம் என்பது பெரிதும் ஒரு மன நிலையே என்பதை அவர்கள் கண்டனர். ஒரு மனிதன் பணக்காரனாக இருப்பதால் மட்டுமே ஆனந்தமாக இருப்பான் என்பதில்லை, ஏழையாக இருப்பதாலேயே துக்கமடைகிறான் என்பதுமில்லை. செல்வர்கள் துக்கப்படுவதையும், ஏழைகள் இன்பமாக இருப்பதையும் நாம் அடிக்கடி காண்கிறோம்......இவைகளை எல்லாம் கண்டு, நம் முன்னோர்கள் ஆடம்பரங்களிலும் போகங்களிலும் மோகம் கொள்ளாதிருக்கும்படி உபதேசித்து வந்தார்கள்......யந்திரங்களை உண்டாக்குவது நம் முன்னோர்களுக்குத் தெரியாத ஒரு வித்தையன்று; ஆனால் அத்தகைய தேவைகளைப் பற்றிச் சிந்தையைச் செலுத்தி விட்டால், நாம் அடிமைகளாகி, நம் ஒழுக்க சம்பத்தை இழந்துவிடுவோம் என்று அவர்கள் அஞ்சினார்கள். ஆதலால் அவர்கள் தீர்க்கமாக ஆராய்ச்சி செய்து, கைகளாலும் கால்களாலும் செய்யக்கூடியதை மட்டுமே நாம் செய்யவேண்டும் என்று தீர்மானித்தார்கள். கைகளையும் கால்களையும் தக்க முறையில் உபயோகிப்பதன் மூலமே நமக்கு உண்மையான மகிழ்ச்சியும் தேக ஆரோக்கியமும் ஏற்படும் என்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள்.' * மேலும் காந்திஜி கூறுவதாவது: 'தேவைகளைப் பெருக்குவதும், அவைகளைப் பூர்த்திசெய்ய யந்திரங்களை நிறுவுவதும் உலகம் தன் லட்சியத்தை அடையும் வழியில் ஓர் அடிகூட முன்னேறிச் செல்வதற்கு உதவிபுரியும் என்று

---

* 'இந்திய சுயராஜ்யம்.'

நான் காணவில்லை.' 'தூரம், காலம் இரண்டையும் அழித்து, பெருக ஆசைகளை வளர்த்து, அவைகளைத் திருப்தி செய்துகொள்வதற்காகத் திகாந்தங்களுக் கெல்லாம் ஓடி அலையும் பித்தவெறியை நான் அடியோடு வெறுக்கிறேன்.'* அறிஞர் வெல்ஸ் எழுதிய 'வரப் போகும் பிரபஞ்சம்' † என்ற கற்பனைச் சித்திரத்தில் தியோபோடோகோபுலஸ் என்னும் பாத்திரம் கதறுவது செவிசாய்க்கத் தக்கது:

> 'முன்னேற்றமாமே, என்ன இது? இந்த முன்னேற்றத்தின் பயன்தான் என்ன? முன்னேறி முன்னேறிச் செல்கிறோமே! கண்டிப்பாக இதை நிறுத்தியே தீரவேண்டும். ஓய்வு கிடைத்துத் தீரவேண்டும். வாழ்க்கையின் நோக்கம் சந்தோஷமாக வாழ்வதுதான்!'

'ஏராளமாக வேண்டும், மிகுதியாக வேண்டும்' என்ற நாகரிக வெறி தலைக்கேறியவர்களுக்கு, காந்திஜியின் இந்தக் கருத்து ஏதோ துறவு போலவும், வேதாந்தம் போலவும் தோன்றக் கூடும். ஆனால் உண்மை என்னவென்றால், காந்திஜி தற்காலப் பொருளாதாரக் குழப்பம், அரசியல் சச்சரவுகள் ஆகியவைகளின் மர்மங்களை ஆராய்ந்து, நம் துன்பங்களுக் கெல்லாம் மூலகாரணத்தைக் கண்டுபிடித்துவிட்டார் என்பதுதான். 'அபேதவாதமும் கம்யூனிஸமும் கூட முதலாளித்துவத்தின் அடிப்படையான கருத்துச் சுழலில் சேர்க்கத்தக்கவைதான்' — இது பிரசித்திபெற்ற ஓர் ஆங்கில ஆசிரியரின் கூற்று. பணத்தையும், பணத்தால் வாங்கக்கூடிய பொருள்களையும் பிரதான நன்மையாக மதிப்பது முதலாளித்துவம். அபேதவாதமும் கம்யூனிஸமும்கூட அப்படித்தான். அதனால்தான் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் பின்வருமாறு கூறுகிறார்: 'உலகில் அபேதவாதம் எப்போதாவது வரும் என்றோ வைத்துக்கொண்டாலும், அது உண்மையில் நன்மை பயக்கவேண்டுமானால், பொரு

* 'யங் இந்தியா'; 17-3-1927.

† 'Things to Come' — H. G. Wells.

ளாதார முக்கியத்துவமில்லாத பொருள்களையும் மதிப்புள்ள பொருள்களாக எண்ணி, அவற்றில் நாட்டம் கொள்ள நாம் தயாரா யிருக்கவேண்டும்.' *

நார்ஸிஸஸ் † என்ற கிரேக்க இளைஞனைப் போல், தற்கால நாகரிகம் தன் செல்வத்திலும் செழிப்பிலும் ஈடு பட்டுத் தன்னையே தான் காதலிக்க ஆரம்பித்து விட்ட தாகத் தெரிகிறது. ஆதலால், வருந்தி வாடி அழிவதே அதன் போக்காகக் காணப்படுகிறது. பணத்திற்காகவும் மற்றப் பொருள்களுக்காகவும் தோன்றியுள்ள வெறி பிடித்த போட்டியினால், ஈவிரக்க மில்லாத சுரண்டல் கொள்கை, பலம் பொருந்திய ஏகாதிபத்தியக் கொள்கை, இரத்த வெள்ளம் பெருக்கிச் சர்வநாசம் விளைத்தல் ஆகிய சுழியின் நடுவே உலகம் சிக்கித் தத்த ளிக்கிறது. வாழ்க்கையைப் பற்றி நாம் கொண்டுள்ள லட்சியங்களையும் மனப்பான்மையையும் ஆராய்ந்து உடனே மாற்றிக்கொள்ளா விட்டால், எத்தனை பொரு ளாதார நிபுணர்கள் புத்திக்கூர்மையுடன் திட்டங்களும் உபாயங்களும் வகுத்தாலும், உலகம் நாசமுற்று அழி வதைத் தடுக்க முடியாது. செல்வம் சேர்ப்பதிலேயே நம் சக்திகள் அனைத்தும் வீணாக்கப் படுகின்றன; அதைத் தவிர, பூவுலக வாழ்க்கையில் நமக்கு வேறு வேலையோ, லட்சியமோ எதுவும் கிடையாது என்று ஆகிவிட்டது. ‘பணம்’ (நாணயம்) என்பது ஆதியில் பண்ட மாற்றுக்குப் பயன்படக்கூடிய சாதாரணப் பொருளாக இருந்தது போய், இப்பொழுது உலகத்தில் ஆசைப்படக் கூடிய பொருள்களில் அதுவே உச்சஸ்தானத்தை வகிக் கிறது. அதனுடைய கொடுங்கோன்மையின் கீழ் உலகமே அல்லலுற்று அலறுகிறது. தங்கத்தின் மோகம்

* ‘Roads to Freedom — சுதந்திரத்திற்கு மார்க்கங்கள்.’

† நார்ஸிஸஸ் தன் உருவத்தின் பிரதிபிம்பத்தைத் தண்ணீரில் கண்டு சொக்கிப்போய், தன்னையே தான் காதலிக்க ஆரம்பித்து, முடிவில் மரித்து ஒழிந்து போனதாகக் கிரேக்கப் புராணக் கதையொன்று உண்டு.

பணத்தாசை பிடித்து அலைந்த மிடாஸ் * அரசனின் கதையை நாம் எல்லோரும் அறிவோம். இந்தக் கதையில் சிறந்த பொருள் பொதிந்திருக்கிறது. இதிலிருந்து நாம் அந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்வது இப்போது பயனுள்ளதாகும். பண மோகம் கொண்டு நாம் இன்னும் அலைந்து கொண்டிருந்தால், மிடாஸைப் போல், நாமும் மனித கௌரவத்தை (மானுடத்தை)த் தங்கத்தோடு எடைபோட்டுப் பார்த்து, ஒருவேளை நாமுமே பொற்சிலைகளாக மாறிவிடக்கூடும்; தங்கமயமானாலும் நாம் உயிரற்ற சடலங்களாகவே மாறிப்போவோம். மனிதரைச் சமூகமாக இணைத்து நிற்பது பணத் தொடர்புதான் என்று இருக்கக்கூடாது. ஒருவருக்கு லாபமானால் மற்றொருவருக்கு அதுவே நஷ்டமாக விளங்கக்கூடிய தன்மையில் சாதாரணப் பொருள்கள் இருக்கலாம். ஆனால் வாழ்க்கையின் உன்னதமான விஷயங்கள் அப்படிப்பட்டவை அல்ல. ஒரு நாட்டிலுள்ள சமூகத்தின் உண்மையான செல்வம் எது? மாட மாளிகைகளும், மாபெரும் தொழிற்சாலைகளும், எல்லையற்ற ஆடம்பரப் பொருள்களும் உண்மைச் செல்வம் அல்ல; உயர்ந்த யோக்கியதையும், கலைப்பண்பும், சுயநலமின்மையும் கொண்ட ஆடவரும் பெண்டிருமே நாட்டின் உண்மையான செல்வம். 'கண்ணியமான மனிதன் எவ்வளவுதான் ஏழையாயிருப்பினும், மக்களில் அவனே மன்னவனாவான்' என்று கவி பர்ன்ஸ் கூறியதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலமாகும்.

'சேர்த்துச் சேர்த்துச் சேர்த்துக்கொண்டே போவதால் யாது பயன்?' என்று கேட்கிறார் டாகூர். 'நாதத்தின் அளவையோ ஸ்தாயியையோ கூட்டிக்கொண்டே போவதால், நாம் பெறக்கூடியது உரத்த அலறலைத் தவிர வேறில்லை. நாதத்தைக் கட்டுப்படுத்தி, தாளக் கட்டுடன் ஓசை உயர்ந்தும் இறங்கியும் முறையாக இசையும்படி

---

* இவ்வரசன் தான் தொட்டது எல்லாம் பொன்னாக வேண்டும் என்று வரம் பெற்றுப் பின்னால் அது மூடத்தனம் என்று உணர்ந்தவன்.

செய்வதாலேயே நாம் இன்னிசையைப் பெற முடியும்.' *
கி. மு. நான்காவது நூற்றாண்டில் புகழ்பெற்ற இந்திய அறிஞராக விளங்கிய கௌடில்யர் † லௌகிக ஞானத்திற்குப் பேர் பெற்றவர். அவர்கூடத் தமது 'அர்த்த சாஸ்திர'த்தில் பின்கண்டவாறு எழுதியுள்ளார்:

> 'எல்லாக் கலை ஞானத்தின் நோக்கமும் புலனடக்கமே தவிர வேறில்லை. இதற்கு மாறுபட்ட குணம் படைத்தவர் யாராயிருந்தாலும், புலன்களைத் தம் ஆதிக்கத்தில் அடக்கி வைத்துக் கொள்ளாத எவரும், நான்கு திசைகளாலும் சூழப்பட்ட வையகம் முழுவதையும் சொந்தமாகப் பெற்றிருந்த போதிலும், விரைவில் அழிவது நிச்சயம்.'

கீழ்த்திசை நாடுகளில் உள்ளோருக்கு இந்தக் கருத்துக்கள் நம் கைக்கால்களைப் போலவே பிரத்தியட்ச உண்மைகளாகக் காண்கின்றன. ஆனால் மேலைநாட்டு உள்ளத்திற்கு, 'எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை' என்ற கருத்துக்கள் வெறும் கற்பனையாகவும், மனோராஜ்யமாகவும், பயனற்ற உணர்ச்சிக் கனவாகவுமே இருக்கின்றன. நவீனப் பொருளாதார சாஸ்திரம் முழுதும் மேலைநாட்டுக் கொள்கைகளையே ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால், கீழ்த்திசைக் கருத்துக்கள் அதன் தத்துவங்களையும் கொள்கைகளையும் இதுவரை பாதிக்க முடியவில்லை. கீழ்த்திசை நாடுகளுக்கும் தம்மவை என்று மதிக்கத்தக்க பொருளாதாரக் கருத்துக்கள் இருக்கத்தான் செய்தன, இப்போதும் இருக்கின்றன. இவையும் மேற்கிலுள்ள பொருளாதார அமைப்புக்கு நிகராகத் திட்டமான சாஸ்திரீய முறையில் அமைந்

---

* 'Thoughts from Tagore - டாகுரின் சிந்தனைகள்.'

† கௌடல்யர் என்றும் சொல்லப்படுவர்; இவரது இயற்பெயர் சாணக்கியர். இவர் எழுதிய 'அர்த்த சாஸ்திரம்' உலகப் புகழ் பெற்றது, பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூல் ௧௫ பதினைந்து பாகங்கள் கொண்டது.

[illegible]. ஆதலால், காந்திஜி பொருளாதாரம் பற்றிய [illegible] கருத்துக்களை ஆணித்தரமாக வற் [illegible] சந்தேகமோ தயக்கமோ கொள்வ [illegible]; அவருடைய கருத்துக்கள் இந்தியப் பண்பாட்டின் [illegible] அமைந்தவை. எனவே, ஆடம்பர மின் [illegible] - எளிமையே - காந்தியத்தின் அடிப்படையான [illegible] கொள்கை. முன்னேற்றம் என்றால் பல பொருட் [illegible] பின்னலாக விளங்கவேண்டும் என்று காந்திஜி [illegible]வதில்லை; முன்னேற்றமான ஒரு பொருளாதார அமைப்பு வாழ்க்கையை நிறைவும் செறிவுமுள்ளதாக ஆக்கலாம்; ஆனால் அது சிக்கலை அதிகரிக்கச் செய்யாமல், மேலும் மேலும் எளிதாக்கி வரவேண்டும் என்பதே அவர் கருத்து.

இடைவிடாமல் செல்வங்களைச் சேர்ப்பதுதான் யந்திரத் தொழிலின் பொருள் என்பது காந்திஜியின் அபிப்பிராயம். அப்படிச் சேர்ப்பது ஒழுக்கத்தையும் மாறுபாட்டையும் பாழாக்கிவிடுகிறது. இதனால்தான் இந்தியாவில் யந்திரத் தொழிலைப் புகுத்தக்கூடாது என்று அவர் உறுதியுடன் எதிர்த்து வருகிறார்:

> 'தேசியப் புனருத்தாரணத் திட்டம் வகுப்பதுபற்றி இப்பொழுது உலவிவரும் அபிப்பிராயங்கள் என் கருத்துக்கு மாறுபட்டவை. நம் தேசத்துக்கான திட்டம் யந்திரத் தொழில் முறையில் அமைக்கப் படுவதை நான் விரும்பவில்லை. நம்முடைய கிராமங் களில் யந்திரத் தொழில் (என்ற தொத்து நோய்) பரவிவிடாமல் தடுக்க நான் விரும்புகிறேன்.' *

வாழ்க்கையில் எளிமையை (ஏழைமை அன்று) மேற் கொள்வதால் ஒழுக்கத்திலும் மனப்பண்பிலும் ஏற்படுகிற [illegible] ஒருபுறம் இருக்கட்டும்: யந்திரத் தொழில் [illegible] 'கண்மூடித்தனமாகச் செல்வம் தேடித் திரிவது' [illegible] என்று காந்திஜி சொல்லுகிறார். தேக உழைப் [illegible] எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு (பிறரைச்

* 'ஹரிஜன்': 29-9-1940.

சாராமல்) நம்மையே சார்ந்து நிற்கவேண்டும்; இல்லையானால் பொருளாதார அடிமைத்தனம் என்ற சங்கிலிப் பிணைப்பில் நாமும் விலகமுடியாது சிக்கிவிடுவோம். நம் தினசரி வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களுக்கும் குறைந்தபட்ச வசதிகளுக்குங்கூட, குவியல் - தொழில் முறையிலுள்ள * ஒரு மத்திய ஸ்தாபனத்தை எதிர்பார்த்து நிற்பதை அவர் அறவே வெறுக்கிறார்; ஒவ்வொருவரும் அடிப்படை தம்முடைய சரீரப் பிரயாசையால், தமக்குத் தேவையானவைகளைத் தாமே தயாரித்துக் கொள்வதே உசிதம் என்று அவர் வற்புறுத்துகிறார். சுதந்திரமான சூழ்நிலையில் நம்முடைய மனிதப் பண்பு வளர்வதையும், வளர்ந்து மலர்வதையுமே நாம் செய்யும் சகல வேலைகளும் நோக்கமாய்க் கொண்டிருக்க வேண்டும் என்று காந்திஜி வாதிக்கிறார். ஆகலால், தொழில்களை மொத்தமாகச் சில இடங்களில் குவியவிடாமல், பரவலாகப் பல இடங்களில் தனித் தனி வளரும்படி செய்வது அவசியம். பெரிய எடுப்பில் பொருள்களை உற்பத்தி செய்தல், நமக்கு அதிகச் சௌகரியங்களையும் ஆடம்பரப் பொருள்களையும் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நம் வாழ்க்கை ஒவ்வொரு படியிலும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்; ஆல்டஸ் ஹக்ஸ்லியின் 'வீரப் புது உலகம்' என்ற கதையில் வரும் அநாகரிக மனிதனைப் போல், நாமும் 'சுதந்திரமாக இருப்பதற்குள்ள சுதந்திர'த்தை இழந்தவர்களாய், நிர்க்கதியாகத் துன்பப்படவே நேரும். உண்மையான ஜனநாயகம் மடிந்து மறைந்துவிடும். 'ஜனநாயகத்தில் தான் "ஜனங்கள்" நாயகத்தை† நடத்துகிறார்களோ அவர்களில் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே ஆண்டு

* தொழில்கள், அதிகாரங்கள் எல்லாவற்றையும் ஒரு மத்திய ஸ்தாபனத்தின் பொறுப்பாக அமைப்பது 'குவியல் முறை-centralisation' என்றும், நாடெங்கும் பல ஸ்தாபனங்களின் பொறுப்பாக இருக்கும்படி அவைகளைப் பரவலாக அமைப்பது 'பரவல் முறை-decentralisation' என்றும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன.

† நாயகம் - ஆட்சி.

கொள்பவராக இருந்தால்தான், ஜனநாயகம் பிழைக்க முடியும் — அந்த நிலையில்தான் அது பிறக்கவே முடியும் — என்பதை நிச்சயமாக நம்புங்கள்.'

அஹிம்ஸை

காந்தியப் பொருளாதாரத் தத்துவத்தின் அடிப்படையான இரண்டாவது கொள்கை அஹிம்ஸை. எத்தகைய ஹிம்ஸையும் நம்மை நிரந்தரமான சமாதானத்திலும், சமூகப் பொருளாதாரப் புனருத்தாரணத்திலும் கொண்டுபோய்ச் சேர்க்காது என்று காந்திஜி நம்புகிறார். அஹிம்ஸையை அனுஷ்டிக்கும் சமூகத்தில்தான் உண்மையான ஜனநாயகத்தையும், மானிடப் பண்பின் வளர்ச்சியையும் எதிர்பார்க்க முடியும். ஹிம்ஸை அதிக ஹிம்ஸையையே தோற்றுவிக்கும், ஹிம்ஸையால் பெற்ற எதையும் முன்னிலும் அதிகமான ஹிம்ஸையாலேயே பாதுகாக்க முடியும். ஹிம்ஸை என்பது உண்மைச் சுதந்திரத்திற்கு முரண்பட்டது, அதன் மூலம் *அடையும் சுதந்திரமும் இரத்தக் கறை தோய்ந்ததாகவே இருக்கும். 'வாள் எடுப்பவர் வாளாலேயே மடிவர்.' ஆதலால் காந்திஜி ஹிம்ஸை முறையை எள்ளளவும் ஆதரிக்கமாட்டார். திட்டப்படி அமைக்கும் சமூகத்தில் திட்டம் ஓர் உபாயமே, இறுதி லட்சியமன்று. திட்டம் பேருடைவதே ஒரு லட்சியம் என்று மதிக்கப்பட்டாலும், 'லட்சியம் நல்லதாயின் எந்த வழியும் நியாயமே' என்ற கொள்கையை அவர் ஒப்புக்கொள்வதில்லை. முடிவு புனிதமாக இருக்கும்படி காப்பதற்கு, அதை அடையும் வழியும் அதைப் போலவே புனிதமாக இருக்கவேண்டும். இதனால்தான் காந்திஜி, அபேதவாத சமூகத்தைக்கூடப் பலாத்காரப் புரட்சியாலன்றி, அஹிம்ஸை மூலமாகவே அமைக்க வேண்டும் என்று தீர்மானமாய்க் கூறுகிறார்.

அஹிம்ஸை பற்றிய இந்தக் கருத்து ஏதோ மத சம்பந்தமான உணர்ச்சி அன்று என்பதை நான் கூற விரும்புகிறேன். அதன் அவசியத்தையும் முக்கியத்தை

* 'The Modern State - தற்கால அரசாங்கம்'; பக்கம் 161.

யும் வற்புறுத்திச் சொல்லுவதில் காந்திஜி மட்டும் தனியாக நிற்கவில்லை. ஆசிரியர் லாஸ்கி சமூக, அரசியல் வளர்ச்சியை எல்லாம் விவரமாக ஆராய்ச்சி செய்துவிட்டு, தீவிரமான துவேஷமும் பலாத்காரமும் பயனற்றவை என்பதை ஒப்புக்கொண்டு, 'சம்மதத்தின் மூலம் புரட்சி - revolution by consent' என்ற கொள்கையைச் சிபார்சு செய்கிறார்.

'எல்லாக் குணங்களிலும் துவேஷம் பொல்லாத புத்து, பிள்ளைவ போன்றது. அதனால், மற்றவர்களிடம் எதைக் கண்டிக்கிறோமோ அதை நம்மிடம் வளர்த்துக்கொள்ளும் மனப்பான்மை ஏற்படும்... தற்கால உலகில் "வலிமை" என்பது நீடித்து நிற்க வேண்டுமானால், அது நீதியுடன் சேர்ந்துதான் ஆகவேண்டும்.........ஐரோப்பாவின் ஆத்மார்த்திக வாழ்க்கைக்குக் காரணமானவர் ஸீஸரும் நெப்போலியனும் அல்லர், கிறிஸ்துநாதரே. செங்கிஸ்கானையும் அக்பரையும் பார்க்கிலும் புத்தரே கீழ்த்திசை நாகரிகத்தைப் பாதித்து வளப்படுத்தியிருக்கிறார். நாம் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் இந்த உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் பகைமையை அன்பாலும், தீமையை நன்மையாலும் வெல்லுகிறோம்; இழிதகைமை தன்னைப் போன்ற இழிவான பிறவிகளையே சிருஷ்டிக்கும்.' *

'சுதந்திரத்தை ஸ்தாபிக்கும் உபாயம்' ¶ என்ற தம் நூலில் ஆசிரியர் லாஸ்கி குறிப்பிடுவதாவது:

'பலாத்காரத்தால் கட்டாயப்படுத்திச் செய்கிறவைகளைக் காட்டிலும், ஜனங்களின் சம்மதம் பெற்றுச் செய்யும் முடிவுகள் (சீர்திருத்தங்கள்) அதிகக்

---

* 'Grammar of Politics - அரசியல் இலக்கணம்'; இந்த மேற்கோளில் குறித்துள்ள ஜூலியஸ் ஸீஸரும், நெப்போலியனும் ஐரோப்பிய அசகாய சூரர்கள்; செங்கிஸ்கானும், அக்பரும் ஆசியாவின் அசகாய சூரர்கள்.

¶ 'Strategy of Freedom.'

காலம் நீடித்து நிற்கத்தக்கவை என்று நாம் காண்கிறோம்.'

ஹாரோல்ட் லாஸ்கியை 'உணர்ச்சிவசமான சிந்தனையாளர்' என்று யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

ஜனநாயகம் அபாயமில்லாமல் நிலைபெறுவதற்கு வசதியாக உலகத்தைச் செம்மைப்படுத்தவும், நிரந்தரமான சமாதானம் நிலவும்படி செய்யவுமே சென்ற உலக மகாயுத்தம் நடத்தப்பட்டது. ஆனால் ஜெர்மனியைப் பலவந்தமாக அடக்கிய தன் விளைவாக ஹிட்லர் தோன்றிவிட்டார்; ஹிட்லரைவிட அதிகமான பலாத்காரத்தை உபயோகித்து அவரை இப்போது முறியடித்துவிட்டால், பின்னால் பலவந்தமாக ஏற்படுத்தும் சமாதானத்திலிருந்து ஒரு மகா-ஹிட்லர் கிளம்பிவிடுவார் என்பது நிச்சயம். ஹிம்ஸையே உலகத்தின் இயற்கை என்றும், புத்தர்களும் காந்திகளும் அந்த இயற்கையை மாற்றிவிட முடியாது என்றும் சொல்லுவதில் பயனில்லை. மனித சமூகத்தைப் பற்றிப் பிராணி நூல் முறையில் சொல்லப்பட்டுவந்த கொள்கை முன்பே தவிடுபொடியாகிவிட்டது; இன்னும் உலகம் 'பல்லும் நகமும் இரத்தம் தோய்ந்ததாகவே' இருக்கவேண்டும் (ஹிம்ஸையையே கொள்ள வேண்டும்) என்று சொல்வது வறட்டு மூளையின் தர்க்க வித்தையேயாகும். இரத்தப் பெருக்கும் பலாத்காரமும் நிறைந்த பழைய பாதையிலேயே மீண்டும் சென்றால், உண்மையான சமாதானம், இன்பம், சமத்துவம் ஆகியவைகளைப் பெற முடியாது; அந்த வழி சாவும் சர்வ நாசமும் நிறைந்த அகாதமான படுகுழியில்தான் கொண்டுபோய்ச் சேர்க்கும். இந்த அபிப்பிராயத்திற்கு உலக நிகழ்ச்சிகளின் இப்போதைய போக்கிலேயே போதுமான அத்தாட்சி கிடைக்கிறது. 'பிரத்தியட்சமான காரணங்களுக்காகவும் ஆத்மார்த்திகக் காரணங்களுக்காகவும், உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் (சமூகங்களும்) பலாத்காரப் பிரயோகத்தைக் கைவிடும் நிலைக்கு வரவேண்டியதே' என்று அட்லாண்டிக் சாஸனம்கூட ஒப்புக்கொள்ளும்படி நேர்ந்திருக்கிறது. ஆகவே, என் அபிப்

பிராயத்தில், காந்திய அஹிம்ஸை 'பயனற்ற வெறும் உணர்ச்சி' அன்று. நம்பிக்கை யிழந்து பரிதபிக்கும் நமக்கு, கண்முன்பு காணும் நிலைமைகளை ஆராய்ந்து, கதிமோட்சத்தைக் காட்டும் வழியே காந்திய அஹிம்ஸை.

காந்திஜியின் பொருளாதாரத்தை அஹிம்ஸைப் பொருளாதாரம் என்றும் அழைக்கலாம். ஏனெனில், அவருடைய பொருளாதாரக் கருத்துக்கள் முழுதிலும் அஹிம்ஸைக் கொள்கையே ஊடுருவிக் கிடக்கிறது. மக்களது உழைப்பின் 'மிச்ச மதிப்'பைச் சுரண்டிக் கொள்வதுதான் முதலாளித்துவத்தின் அடிப்படை— இது இழிவான பலாத்காரமே ஆகும். யந்திரம் முதலாளித்துவத்தின் கையாளாக இருக்கிறது; மனித உழைப்பை வெளியே விரட்டிவிட்டு, சிலருடைய கையில் செல்வமும் அதிகாரமும் குவியும்படி செய்கிறது. இவ்வாறாகச் செல்வம் பலாத்காரத்தின் மூலமாகவே குவிக்கப் படுகிறது; அதைப் பாதுகாக்கவும் பலாத்காரம் அவசியமாகிறது. தொழில்களை யந்திர மயமாக்குவதும், பொருள் உற்பத்தியைப் பெருவாரியான முறையில் குவியலாக அமைப்பதுமே உலகின் இன்றைய இடர்களுக்குக் காரணம் என்று காந்திஜி கருதுகிறார். ஆகையால் இந்த விகாரமான யந்திர சாதன முறையையும், எல்லாத் தொழில்களையும் யந்திர மயமாக்குதலையும், குவியல்—உற்பத்தி முறையையும் அவர் கண்ணெடுத்துப் பார்க்கவும் விரும்புவதில்லை. காந்திஜி சொல்வதாவது:

> 'இந்தியா அஹிம்ஸை நெறியில் வளர்ச்சி பெற வேண்டுமானால், அது பல விஷயங்களில் பரவல் முறையைக் கைக்கொள்ள வேண்டியிருக்கும். குவியல் முறையை (அரசியல் அதிகாரத்தையோ, பொருள் உற்பத்தியையோ ஒரே இடத்தில் குவித்துவைக்கும் முறை - centralisation) நிர்வகிப்பதற்குப் பலாத்காரம் போதிய அளவில் இருப்பது அவசியமாகும்; அதைக் காப்பாற்றுவதற்கும் அப்படியே. உதாரணமாக, சாதாரண மக்களின் சிறு குடிசைகளுக்குப் பிரமாதமான

பொலீஸ் பந்தோபஸ்து அவசியமில்லை. பணக்காரர்களுடைய அரண்மனைகளுக்கே கொள்ளைக்காரர்கள் புகுந்துவிடாமல் தடுப்பதற்குப் பிரமாத பந்தோபஸ்துகள் தேவை. பெரிய தொழிற்சாலைகளுக்கும் அப்படித்தான். அந்நியப் படையெடுப்பினால் நாட்டுப்புறங்கள் அதிகமாய்ப் பயப்பட வேண்டியதில்லை; அவைகளைப் பார்க்கிலும், ராணுவத்தினாலும், கடல், விமானப் படைகளாலும் தக்க பாதுகாப்புடைய நகரப் பிரதேசங்களே படையெடுப்புக்கு இலக்குகளாக இருப்பவை.' *

இரத்தம் தோய்ந்த மேலைநாட்டு வழி நமக்கு ஏற்றதன்று. அந்த வழியில் மேலைநாட்டாருக்கே அலுப்புத் தட்டியாய்விட்டது என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. எளிமையான சன்மார்க்க வாழ்க்கையினால் கிடைக்கும் இரத்தக்கறையற்ற சமாதான மார்க்கமே இந்தியாவுக்குப் பொருத்தம்.' ¶

தற்கால சமூகத்தில் 'பொருளாதார சமத்துவ'த்தை நிலைநாட்டுவதற்குக்கூடப் பலாத்காரம் கூடாது என்பது காந்திஜியின் கருத்து:

'செல்வர்களுக்கும் பசியால் வாடும் லட்சக்கணக்கான மக்களுக்கும் இடையே கடல்போன்ற பெரும் பிளவு இருந்துகொண்டிருக்கும் வரை, அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசாங்கம் ஏற்பட முடியாது என்பது தெளிவு. மிகப் பெரிய செல்வர்களுக்கு உள்ள அதிகாரத்தைப் போலவே ஏழை மக்களும் சம-அதிகாரம் பெறக்கூடிய சுதந்திர இந்தியாவில், புது டெல்லியின் அரண்மனைகளுக்கும் ஏழைத் தொழிலாளரின் அலங்கோலமான குடிசைகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடு ஒரு நாள்

* 'ஹரிஜன்'; 30-12-1934.
¶ 'யங் இந்தியா'; 7-10-1926.

கூட நிலைத்திருக்க முடியாது. செல்வர்கள் தம் செல்வங்களையும் அவைகளின் மூலம் கிடைக்கும் அதிகாரத்தையும் எல்லோருடைய பொது நன்மைக்காகத் தாமாகப் பிரித்துக் கொடுத்துப் பகிர்ந்துகொள்ளாவிட்டால், என்றாவது ஒருநாள், பயங்கரமான பலாத்காரமும் இரத்தப்பெருக்கும் பொருந்திய புரட்சி நிச்சயமாக ஏற்பட்டே தீரும். செல்வர்கள் தம் செல்வங்களை யெல்லாம் மற்றவர்களுக்கான தர்மச் சொத்தாக மதிக்கவேண்டும் என்று நான் கூறிவரும் கொள்கையைப் பலர் பரிகசித்து வந்த போதிலும், நான் அதை இன்னும் விடுவதாயில்லை. அந்த நிலையை அடைவது கஷ்டம் என்பது உண்மைதான். அவ்விதமே அஹிம்ஸையைக் கடைப்பிடிப்பதும் கஷ்டந்தான்.....பலாத்கார வழி நமக்குத் தெரிந்ததுதான். எந்த இடத்திலும் அது வெற்றியடைந்துவிடவில்லை. ரஷ்யாவில் அது பெரிதும் வெற்றியடைந்திருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். அதில் எனக்குச் சந்தேகந்தான். ரஷ்யர் பலாத்காரத்தால் வெற்றி பெற்றுவிட்டதாக ஓங்கியடித்துப் பேசுவதற்கு இன்னும் காலம் வரவில்லை. ...அஹிம்ஸை முறையான பலாத்காரமற்ற பரீட்சையோ இப்பொழுதுதான் நடந்து வருகிறது. நாம் இன்னது சாதித்துவிட்டோம் என்று வெளிப்படையாகப் பிறருக்கு நிரூபித்துக் காட்டுவதற்குப் போதிய அளவில் எதுவும் இல்லாவிட்டாலும், நான் கவனித்த அளவில், சமத்துவப் பாதையில் இந்த முறை திறமையோடும் வேலைசெய்ய ஆரம்பித்து விட்டது என்றே எனக்குத் தோன்றுகிறது. அஹிம்ஸை அன்பின் மூலம் மனமாற்றத்தை உண்டுபண்ணும் காரியமாதலால், அந்த மனமாற்றம் ஏற்பட்டால், அது நிரந்தரமாக நிலைத்திருக்கும். அஹிம்ஸையை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்படும் ஒரு சமூகமோ, தேசமோ, உள்நாட்டிலிருந்தும் வெளியிலிருந்தும் ஏற்படக்கூடிய

தாக்குதலைச் சமாளித்துக்கொள்ளும் வல்லமையைப் பெற்றிருக்கும்.' *

'ஒரு பொருளாதாரச் சீர்திருத்தம் மிக்வும் அவசியமாக இருக்கலாம். ஆனால் தக்க சந்தர்ப்பத்தில், விரும்பத்தகுந்த முறைகளின் மூலம் நிறைவேற்றினாலன்றி, அது விரும்பத்தகுந்த மாறுதல்களை உண்டாக்க முடியாது; அந்த மாறுதல்கள் தனி நபர்களிடமும் அவர்கள் சேர்ந்துள்ள சமூகத்தினிடமும் ஏற்பட வேண்டும்' என்று ஆசிரியர் ஹக்ஸ்லியும் நம்புகிறார். மேலும் அவர் விளக்கிக் கூறுகிறார்: 'அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரை சீர்திருத்தத்திற்குத் தக்க சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலை எது என்றால், நாடெங்கும் சுய ஆட்சி நிலவியிருக்க வேண்டும், அதிகாரமும் தொழில்களும் பரவல் முறையில் அமைந்திருக்க வேண்டும். சீர்திருத்தத்திற்கு விரும்பத்தகுந்த முறைகள் எவை என்றால், அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்ட முறைகள்தான்.' ரஷ்யாவில் ஏற்பட்ட பலாத்கார அபேதவாதத்தைக் காந்திஜியைப் போலவே ஆசிரியர் ஹக்ஸ்லியும் எதிர்க்கிறார்:

'கொடுமையான முறையை அனுஷ்டித்தல் கோபத்தைத் தூண்டுகிறது. கோபத்தைப் பலாத்காரத்தின் மூலமே அடக்கவேண்டியிருக்கும். பலாத்காரத்தின் முக்கியமான விளைவு என்ன? மேலும் அதிகமான பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதுதான். ஸோவியத் திட்ட அமைப்பின் நிலை இப்படித்தான் இருக்கிறது. அது நல்ல நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிரயோகிக்கப்பட்ட முறைகளின் காரணமாக, புரட்சியைத் தோற்றுவித்தவர்கள் (லெனின் போன்றவர்கள்)

* 'Constructive Programme - நிர்மாணத் திட்டம்'; பக்கம் 18 — 19.

எதிர்பார்த்ததற்கு நேர் மாறான பலன்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.' *

ஆகவே, காந்திஜியின் கருத்துப்படி அமையும் அஹிம்ஸா சமூகத்தில் சுரண்டலுக்கு இடமே இருக்காது; ஏனெனில் உற்பத்தி செய்யும் பொருள்கள் உடனே உபயோகப்படுத்துவதற்காகவே இருக்கும், லாபம் தரக் கூடிய தொலைவிலுள்ள மார்க்கெட்டுகளுக்காக அவை தயாரிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு கிராமமும், அல்லது சில கிராமங்கள் சேர்ந்த தொகுதியும், அநேகமாகத் தன் ஆட்சியைத் தானே நடத்தி, தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொண்டு விடுவதால், மத்திய அரசாங்கத்திலிருந்து கண்டிப்பான திட்டம் வகுக்கவேண்டிய அவசியமே இல்லாது போய்விடும். அந்த நிலையில்தான் ஜனங்கள் உண்மையான ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் அனுபவிக்க முடியும். இத்தகைய பலாத்காரமற்ற கிராமக் குடியரசுகள் குறுகிய எல்லைகளுக்குள் ஒடுங்கி யிருக்கும்; ஆனால் அவைகள் தம் பொருளாதாரத் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்வதைத் தவிர, அவைகளின் பொதுநோக்கு குறுகியதாக இருக்க வேண்டிய அவசியமில்லை, இருக்கவும் மாட்டாது; அவை (தமக்குள்ளும், தேசத்தின் இதர பாகங்களுடனும்) ஒத்து வாழ்வதில் தடை ஏதும் இல்லை. கருத்து - உலகிலும் கலைப்பண்பிலும், கிராமத்தைவிடப் பெரிதாகப் பரந்து விளங்கும் தேசியத்திற்கோ, சர்வதேசக் கொள்கைக்கோ கிராமப் பொருளாதார அமைப்பு முரண்பட்டதன்று.

## உழைப்பின் புனிதத்தன்மை

காந்தியப் பொருளாதார நாகரிகத்தில் மூன்றாவது முக்கியக் கொள்கை 'தேக உழைப்பு கௌரவமானது, பவித்திரமானது' என்று கருதுவது. உழைப்பு இயற்கையின் விதி என்பது காந்திஜியின் கருத்து. அதை

* 'Ends and Means – லட்சியங்களும் மார்க்கங்களும்'; பக்கம் 70.

மீறி அலட்சியம் செய்ததே நமது தற்காலப் பொருளாதாரக் குழப்பத்திற்கு மூலகாரணம்:

'கோடிக்கணக்கான மக்கள் தம் கைகளைக் கைகளாக உபயோகிப்பதை நிறுத்தி விட்டார்கள். இவ் விஷயம் கிலேசப்படவேண்டிய ஒரு விபத்து. நாம் மானிட ஜீவன்கள் என்ற முறையில் இயற்கைத் தாய் நமக்குப் பரிசாகக் கொடுத்த சக்தியை நாம் வீணாக்குவதால், அந்த அக்கிரமத்திற்கு அவள் பயங்கரமாகப் பழிக்குப் பழி வாங்கி வருகிறாள்.' *

காந்திஜி மேலும் கூறுவதாவது:

'நம்முடைய உடல்களாகிய ஜீவனுள்ள யந்திரங்களைத் துருப்பிடிக்கும்படி வைத்து அவைகளை அழித்து விட்டு, அவைகளுக்குப் பதிலாக உயிரற்ற யந்திரங்களை ஏற்படுத்த முயலுகிறோம்.' †

'வேலைசெய்ய விரும்பாதவன் சாப்பிடவும் உரிமையற்றவன்' என்று கிறிஸ்தவ முனிவரான பால் கூறியுள்ளார். மேலும், அவர் தாம் யாருக்கும் பாரமாக இல்லாமல், தம் கைகளால் உழைத்து ஜீவனம் நடத்தியதில் பெருமை கொண்டவர். 'அருளுடைய பரம்பொருளுக்குத் தன் உழைப்பைக் காணிக்கையாகச் செலுத்தாமல் ஒருவன் பூமியில் விளையும் பலன்களை உண்டால், அவன் திருடன்' என்று கீதை நமக்குப் போதிக்கிறது. அது போலவே காந்திஜிக்கும் 'உழைப்பே ஒரு வழிபாடு', 'சோம்பேறி உள்ளம் சயித்தானின் பட்டறை' என்ற கொள்கைதான்.

மனம் சரியானபடி வளர்ச்சி பெறவேண்டுமானால் புத்திசாதுரியத்திற்கு ஏற்ற சரீர உழைப்பு அவசியம் என்றும், மனப் பயிற்சிக்குக் கைப்பயிற்சி இன்றியமையாதது என்றும் காந்திஜி அபிப்பிராயப்படுகிறார். இந்த உண்மை நவீன மனோதத்துவ ஆராய்ச்சி மூலம் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. காந்திஜியின் ஆலோசனையின்

* 'யங் இந்தியா'; 17-2-1927.
† 'யங் இந்தியா'; 8-1-1925.

பேரில் தயாரான 'வர்தாத் திட்டம்' என்று பொதுவாகச் சொல்லப்படும் அடிப்படைக் கல்வித் திட்டம், 'செயல் புரிவதன் மூலம் கல்வி கற்றல்' என்ற மனோதத்துவ முறையையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறது. கல்விக்குரிய இதே தத்துவத்தை அமெரிக்க ஆசிரியரான டூயி என்பவரும் வற்புறுத்தி யிருக்கிறார் :

> 'தொழில்களின் மூலம் கல்வி கற்பதில், மற்ற எந்த முறையைக் காட்டிலும் அதிகமான அளவில், கற்பதற்கு அனுகூலமான விஷயங்கள் ஒருங்கே அமைந்திருக்கின்றன. அது இயற்கையான சிந்தனா சக்திகளையும் பழக்கங்களையும் பயனுள்ள வகையில் தூண்டுகிறது. ஏதோ ஆசிரியர் சொல்வதை வாங்கி மனத்தில் குவித்துக் கொள்ளும் கல்வி முறைக்கு நேர் எதிரானது தொழில் மூலம் கற்பது.'

'உடல் உழைப்பு மூளையால் செய்யும் வேலைக்குத் தடையாக இல்லை ; மற்று, அதன் சிறப்பை அதிகப் படுத்துகிறது, மூளை - வேலையை அபிவிருத்தி செய்து, அதற்கு உதவியாகவும் இருக்கிறது.'* டால்ஸ்டாய்† அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்ட உண்மை இது. ஆகையால் மெய்வருந்த வேலை செய்வதை அவர் ஒரு சாபத்தீடாகக் கருதாமல், வாழ்க்கையின் ஆனந்தத் தொழிலாக எண்ணினார். மனிதனை அதிக ஆரோக்கிய முள்ளவனாகவும், இன்பமுள்ளவனாகவும், தகுதியுள்ளவனாகவும், அன்புடையவனாகவும் செய்யும் சக்தி உடல் — உழைப்புக்கு உண்டு என அவர் கண்டார். அவருடைய அபிப்பிராயத்தில், சரீர உழைப்பு மனிதனுக்குக் கௌரவம், பவித்திரமான கடமை, அவனுக்குள்ள பொறுப்பு. 'தொழிலின் பெருமை'யில் காந்திஜிக்கும் உறுதியான நம்பிக்கை இருக்கிறது. 'உழைப்பு ஒரு சுமையாகவும், தண்டனை போலவும் இருக்கலாம் ; ஆனால்

---

* 'What, then, Must We Do ?—இனி நாம் செய்ய வேண்டியது என்ன ?' ; பக்கம் 340.

† ரஷ்ய ஞானி லியோ டால்ஸ்டாய் என்ற பிரபு.

அது கௌரவமாகவும், மேன்மையாகவும் மதிக்கத் தக்கது' என்பது ஸாமுவெல் ஸ்மைல்ஸின் வாக்கு. பிரின்ஸ் கிராபாட்கின்* 'அரசில்லாப் பொதுவுடைமை' என்ற நூலில் குறிப்பிடுவதாவது: 'உழைப்பென்பது இயற்கையான பொழுதுபோக்கு; சோம்பியிருப்பது இயற்கைக்கு மாறு பாடு.'

## ஓய்வு பற்றிய மயக்கம்

அதிக ஓய்வு வேண்டும் என்று கேட்கப்படுவதைக் காந்திஜி அபாயமானது என்றும், இயற்கைக்கு மாறானது என்றும் கருதுகிறார்:

'ஓய்வு, குறித்த ஓர் அளவுக்கு மட்டும் நன்மையாகவும், அவசியமாகவும் இருக்கிறது. நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி உழைத்தே மனிதன் தன் உணவை உண்ணவேண்டும் என்பதாகவே கடவுளின் விதி; நம் உணவுப் பொருள்களைப்போல் மற்றும் தேவையான சகல பொருள்களையும், (செப்படி வித்தைக்காரன் சாமான்கள் வரவழைப்பதுபோல்) நாம் ஒரு மந்திர சக்தியால் சிருஷ்டித்துவிட முடியும் என்ற நிலைமை ஏற்பட்டால், அதைப்பற்றி நான் அஞ்சி நடுங்குவேன்.' †

மேலும் காந்திஜி கூறுவதாவது:

'அமெரிக்காவிலிருந்து சில கோடீசுவரர்கள் இங்கு வருவதாக வைத்துக்கொள்வோம்; வந்து, நமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அனைத்தையும் அனுப்புவதாகச் சொல்லி, நாம் வேலையே செய்யாமல் இருக்கவேண்டும் என்றும், அவர்களுடைய தர்ம குணத்தைக் காட்டிக்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்றும் நம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டால், அவர்களுடைய அன்பு

---

* ரஷ்ய நாட்டு அறிஞர், தம் கொள்கைக்காக நாடுகடத்தப்பட்டு நெடுங்காலம் துன்பமடைந்தவர். அரசாங்கமே இல்லாத பொதுவுடைமையே மனித சமூகத்தின் லட்சியமாக இருக்கவேண்டும் என்பது அவர் தீர்மானம்.

† 'ஹரிஜன்'; 16-5-1936.

நிறைந்த கொடையைத் தாட்சிணியமே இல்லாமல் நான் மறுத்துவிடுவேன்......இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், இந்தக் கொடை நாமது ஜீவிதத்தின் மூல நியமத்தையே வேரறுப்பதாகும்.' *

ஓய்வு என்ற பிரச்னைபற்றி பெர்னர்ட் ஷா தமது 'புத்திசாலியான பெண்ணுக்கு அபேதவாதம், முதலாளித்துவம் பற்றிய வழிகாட்டி' என்ற நூலில் ருசிகரமான சில அபிப்பிராயங்களை எழுதியிருக்கிறார் :

'வாழ்க்கையை ஒரே நீண்ட ஓய்வுநாளாகச் செய்ய வேண்டும் என்று முயல்பவர்கள், அந்த ஓய்வு நாளிலிருந்தும் தமக்கு ஓர் ஓய்வு தேவை என்றே எண்ணுவார்கள். சோம்பிக் கிடத்தல் இயற்கைக்கு மாறானது, சலித்துக் களைப்படையச் செய்வது ; இதனாலேயே "செல்வம் மிகுந்த சோம்பேறிகள்" என்று அழைக்கப்படுவோரின் உலகம், மிகுந்த சோர்வை உண்டாக்கும் இடைவிடாத ஓயா உழைப்புகள் நிறைந்த உலகமாகவே யிருக்கிறது.'

ஒரு கவிஞர் குறிப்பிடும் உண்மை இது :

'அவனுடைய ஒரே வேலை, நேரத்தைக் கொல்வது தான், அந்த வேலையே பயங்கரம், நலியச் செய்யும் துன்பம்.'

ஏராளமான ஓய்வு பெற்றிருக்கும் பணக்காரர்கள் ஒன்றும் செய்யாமல் இருப்பதைவிட்டு, 'ஒன்றும் செய்யாமல் இருப்பதற்குத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்காக எப்பொழுதும் ஏதாவது செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்' என ஷா எடுத்துக் காட்டுகிறார். 'நிரந்தரமான ஓய்வே நரகம் — நரகத்திற்கு இதுவே சிறந்த வியாக்கியானம்' என்றும் அவர் கூறுகிறார். உண்மை என்னவென்றால், வெறுப்புக்குக் காரணமாக இருப்பது சாதாரணமான உழைப்பு என்ப

* 'ஹரிஜன்'; 7-12-1935.

தன்று; பெரிய தொழிற்சாலைகளிலுள்ள தற்காலத் தொழிலாளியின் உயிரற்ற, ஒரே மாதிரியான, கடின உழைப்புத்தான் வெறுக்கப்படுகிறது. தற்காலத் தொழிலில் இன்பம் இல்லை; அதனால்தான் ஓய்வு வேண்டும் என்ற கூச்சல் எழுகிறது. ஓய்வு பற்றி ஏற்படும் மயக்கமான ஆசையே நன்னெறிக்கு மாறாக மக்களைச் சிக்கவைக்கும் அபாயகரமான ஒரு பொறி என்பது காந்திஜியின் எண்ணம்; ஏனென்றால் ஓய்வு பெறும் பிரச்னையைப் பார்க்கிலும், பெற்ற ஓய்வைச் சரியான முறையில் பயன்படுத்தும் பிரச்னை அதிகக் கஷ்டமாக இருக்கும். மேலும் போதுமான வேலை இல்லாவிட்டால், சரீரமும், மூளையின் சக்தியும், ஒழுக்கமும் தேய்ந்து நலியக் காரணமாகும். இதனால்தான், தற்கால நகரங்களில் மூச்சைத் திணறவைத்து உடலைக் கசக்கிப் பிழியும் தொழிலுக்குப் பதிலாக, கிராமங்களின் குடிசைகளில் நல்ல காற்றுள்ள சுகாதாரமான இடங்களில் இருந்துகொண்டு செய்யும் வேலையையே அவர் விரும்பிச் சிபார்சு செய்கிறார்.

ஒழுக்கம், மனோதத்துவம் சம்பந்தமான காரணங்களுக்காக மட்டும்தான் காந்திஜி சரீர முயற்சியின் அவசியத்தையும் நலத்தையும் வற்புறுத்துகிறார் என்பதில்லை. ஒவ்வொருவரும் சாத்தியமானவரை பிறர் தயவை எதிர்பாராமல் தம்மையே தாம் சார்ந்து நிற்கும் நிலையை அடையவேண்டும் என்று வற்புறுத்துவதன் மூலம் பொருளாதாரச் சுரண்டலின் ஆணிவேரையே வெட்டிவிடவேண்டும் என்று அவர் விரும்புகிறார். பிறருடைய உழைப்பை அநியாயமாகச் சுரண்டுவதாலேயே தற்போதைய பொருளாதாரக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனாக, ஒரு பக்கத்தில் சரீர உழைப்பே இல்லாத 'சோம்பேறிப் பணக்காரர்' வகுப்பும், மறு பக்கத்தில் அதிக வேலை செய்து களைப்படைந்து ஓய்வுக்காக ஏங்கி நிற்கும் தொழிலாளர் வகுப்பும் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் தத்தம் ஜீவனத்திற்காக உழைத்து வாழக்கூடியவர்களைக் கொண்ட, வெளி உதவி தேவை

யில்லாத வேறு சமுதாயங்கள் இருந்தால், சுரண்டலுக்கு இடமே இருக்க முடியாது; மத்தியிலுள்ள தரகர்களையும் நாளடைவில் ஒழித்துவிடலாம். ஒரு சமயம் குருதேவர் டாகூருக்கு இதைப்பற்றி விளக்குகையில் காந்திஜி குறிப்பிட்டதாவது: "உணவுக்காக உழைக்கவேண்டிய அவசியமில்லாத நான் ஏன் நூற்கவேண்டும்?" என்ற கேள்வி பிறக்கக்கூடும். ஏன் உழைக்கவேண்டும் என்றால், நான் உண்பது எனக்குச் சொந்தமில்லாத உணவு. என் தேச மக்களுடையதைப் பறித்துக்கொள்வதன் மூலமே நான் வாழ்க்கை நடத்துகிறேன். உங்களுடைய பையில் வந்துசேரும் ஒவ்வொரு நாணயமும் எங்கிருந்து வருகிறது என்ற வழி-முறையைக் கண்டுபிடித்தால் நான் எழுதுவதன் உண்மையைக் கண்டுகொள்ள முடியும்.' *

அபேதவாத சமூகத்தில் இத்தகைய சுரண்டலுக்கு இடமில்லை என்றும், ஆகவே பழங்காலத்துப் பொருளாதார முறைக்குத் திரும்பவேண்டியது அவசியமில்லை என்றும் ஆட்சேபிக்கக்கூடும். ஆனால், முன்னால் குறிப்பிட்டிருக்கிறபடி, அத்தகைய அபேதவாத முறையை ஒரு மத்திய ஸ்தாபனம் கடுமையான அதிகாரங்களால்தான் நிர்வகிக்க முடியும். அது தனிமனித சுதந்திரத்தை நசுக்கி, மனிதப் பண்பின் இயற்கையான வளர்ச்சியை மட்டுக்கட்டிவிடுகிறது. மேலும் ரஷ்ய முறையில் ஓர் அபேதவாத சமூகத்தைப் பலாத்காரமில்லாமல் அமைக்க முடியாது; பலாத்காரமோ காந்திஜிக்கு நேர் விரோதமானது. இதனால், 'பெருவாரியான பொருள் உற்பத்திக்குப் பதிலாக, பெருவாரியான ஜனங்களால் பொருள் உற்பத்தி' செய்ய வேண்டும் என்று காந்திஜி கூறுகிறார். 'என்னுடைய முறையில் பண்டமாற்றுக்கு உபயோகமாகும் பொருள் உழைப்புத்தான், நாணயம் அல்ல' என்று அவர் கூறியிருக்கிறார். 'தன்னுடைய உழைப்பை அந்த நாணயமாக உபயோகிக்கக் கூடியவன் எவனும் செல்வமுடையவன்தான். அவன் அதைத் தானியமாக மாற்றுகிறான், அந்த உழைப்பையே

* 'யங் இந்தியா'; 1-10-1921.

உணவாகவும் மாற்றுகிறான். அவனுக்கு மண்ணெண்ணெய் தேவைப்படும்பொழுது, அதை அவனே தயாரித்துக்கொள்ள முடியாததால், அதைப் பெறுவதற்காகத் தன்னிடம் மிச்சமிருக்கும் தானியத்தைக் கொடுத்து எண்ணெய் வாங்குகிறான். இது சுதந்திரமாகவும், நேர்மையாகவும், சமத்துவமாகவும் உள்ள முறைகளில் உழைப்பைப் பண்டமாற்றுக் செய்துகொள்வதாகும். ஆகவே இதில் "கொள்ளை" என்ற அம்சம் இல்லை. இது பண்டைக்காலத்துப் பரிவர்த்தனை முறைதானே என்று நீங்கள் ஆட்சேபிக்கலாம். ஆனால் சகலவிதமான சர்வதேச வியாபாரமும் பரிவர்த்தனை முறையைத்தானே அடிப்படையாகக் கொண்டு நடக்கிறது!' *

எனவே 'உணவுக்கான உழைப்பு' காந்திஜிக்கு ஒரு மதக் கொள்கையாகிவிட்டது. அவருடைய லட்சியப்படி அமையும் சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் எட்டுமணி நேர வேலைக்கு இடம் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார். எட்டு மணி நேரம் உறக்கம், எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு — இவ்வாறு நேரத்தைப் பிரித்துக்கொண்டு அனுஷ்டிப்பதே உத்தமம் என்பது அவர் கருத்து. ஓய்வுக்கு உரிய நேரத்தில் மற்றப் பொதுநலக் காரியங்களையும் கலைப் பயிற்சிகளையும் செய்துகொள்ள வேண்டியது.

## மானுட கௌரவம்

காந்தியப் பொருளாதாரத்தின் நான்காவது அடிப்படை இதுவரை மதிப்பை அளவிடுவதற்கு உபயோகித்த முறைகளை மாற்றி அமைப்பதாகும். சாஸ்திரீயப் பொருளாதாரம், ஒழுக்கத்தின் மதிப்புகளையும் மனிதத் தன்மையின் விசேஷங்களையும் ஒதுக்கிவிட்டு, பணம், அனுபோகத்திற்குரிய பொருள்கள் ஆகியவைகளின் மதிப்பையே அளவுக்கு அதிகமாக வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆனால் 'பொருளாதார மனிதன்' என்ற

* 'ஹரிஜன்': 2-11-1934.

பெயரால் தனிப் பொருளாதாரத்திற்கு மட்டுமே பிரா தானியம் கொடுத்துவந்த காலம் மலையேறி வருவதை நாம் இப்பொழுதே கண்டு வருகிறோம். இப்பொழுது பொரு ளாதார அளவைகளில் (economic standards) புரட்சிகர மான மாறுதலைக் கைக்கொள்வது மிகவும் அவசியம். பிரான்ஸ் தேசத்துப் பொருளாதார நிபுணர் ஸிஸ்மாண்டி யைப் போல் காந்திஜியும், பொருளாதாரமும் ஒழுக்க முறைகளும் வெவ்வேறாகப் பிரிக்க முடியாதவை என்றும், வாழ்க்கையைப் பல அம்சங்களாகப் பிரிக்காமல் முழுமை யாகவே கவனிக்க வேண்டும் என்றும் கருதுகிறார்.

‘பொருளாதாரம் வேறு ஒழுக்கமுறை வேறு என்று நான் பிரித்து நோக்குவதில்லை. ஒரு தனிமனிதன் அல்லது சமூகத்தின் நல்லொழுக் கத்திற்குத் தீமை செய்யும் பொருளாதாரம் ஒழுக்கங் கெட்டது, ஆதலால் பாபகரமானது. இம்மாதிரியே, ஒரு தேசம் மற்றொன்றைச் சுரண்டி உறிஞ்சிக்கொண்டிருக்க அனுமதிக்கும் பொருளா தாரமும் தீயொழுக்கத்தைச் சேர்ந்ததே. போதிய கூலியில்லாமல் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கு வதன் மூலம் தயாரிக்கப்படும் பொருள்களை வாங்குவதும், உபயோகிப்பதும் பாவமே. வாங் குவாரில்லாமல் அண்டைவீட்டு வியாபாரி வாடி வதங்கி நிற்க, நான் அமெரிக்கக் கோதுமையை வாங்கி உண்பதும் பாவம். எனக்கு அருகிலுள்ள நூற்பவர்களும் நெசவாளர்களும் தயாரித்த துணிகளை நான் அணிந்துகொண்டால், நான் உடை அணிந்ததோடு, அவர்களுக்கும் உணவும் உடையும் அளித்தவனாவேன் என்பதை உணர்ந் திருக்கும்பொழுது, வெளி நாட்டிலிருந்து வரும் மிக நவீனமான மெல்லிய ஆடையை வாங்கி அணிவது எனக்குப் பாவமாகும்.’*

‘ஒரு தொழிலின் முக்கியத்தை அளவிட்டு அறிவதற்கு, அதில் பணத்தைப் போட்டுவிட்டுப்

*‘யங் இந்தியா’; 13-10-1921.

பேசாமலிருக்கும் பங்குதாரர்களுக்கு எவ்வளவு லாபம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது என்பதைக் கணக்குப் பார்த்தால் போதாது; அந்தத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்யும் மக்களுடைய உடல்களிலும், உயிர்களிலும், உணர்ச்சிகளிலும் அது எப்படிப் பாதித்து, என்ன பயன்களை விளைவித்திருக்கிறது என்பதையே அதிகமாய்க் கவனிக்க வேண்டும். ஒரு துணி குறைந்த விலைக்குக் கிடைப்பதால் வாங்குவோருக்குச் சில அணுக்கள் லாபமாகலாம்; அதே சமயத்தில், அது குறைந்த விலைக்கு விற்கப்பட்டதால் பம்பாயில் தொழிலாளர் விடுதிகளில் தங்கியிருக்கும் மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தைக் குறைத்து விடுமானால், அந்தத் துணி கிராக்கியானது (மலிவானதன்று) என்றே எண்ண வேண்டும்.' *

மானுட கௌரவம் என்ற அம்சத்தை இவ்வளவு தூரம் வற்புறுத்துவதுதான் காந்திஜியின் 'சுதேசியம்' என்ற லட்சியத்தின் சாராம்சம். மலிவாகக் கிடைக்கும் மார்க்கெட்டில் வாங்கி, கிராக்கியான மார்க்கெட்டில் விற்க வேண்டும் என்பது சாதாரணப் பொருளாதார நியமம். தற்காலப் பொருளாதார சாஸ்திரக்காரர்கள் வகுத்த மற்ற எல்லா நியமங்களையும்விட இது மிகவும் ஜீவகாருண்யமற்ற நியமம் என்று காந்திஜி கருதுகிறார். இந்த விஷயத்தைப்பற்றி ரஸ்கினும் † மனம் நொந்து எழுதியிருக்கிறார்:

'தற்கால வர்த்தகத்தின் சூத்திரம் இதுதான்: "மிகவும் மலிவான மார்க்கெட்டில் வாங்கி மிகவும் கிராக்கியான இடத்தில் விற்கவேண்டும்." இதைப் போல் மானிட அறிவுக்குக் கேவலமான ஒரு விஷயம் நான் அறிந்தவரை சரித்திரத்திலேயே

---

* 'யங் இந்தியா'; 6-4-1922.

† ஜான் ரஸ்கின்—ஆங்கில அறிஞர், தத்துவஞானி, பல நூல்களின் ஆசிரியர் (1819 – 1900).

காணப்படவில்லை. இது தேசீயப் பொருளாதார அமைப்புக்கு ஏற்ற தத்துவமாக எந்த நிலைமையிலாவது இருக்கமுடியுமா? மிகவும் மலிவான மார்க்கெட்டில் வாங்கவேண்டுமாம்! —ஆமாம். ஆனால் உங்களுடைய மார்க்கெட்டை மலிவாக்கியது எது? உங்கள் வீடுகள் தீப்பட்ட பிறகு எரிந்த உத்திரக் கட்டைகளின் கரி மலிவாகத்தான் இருக்கும்; ஒரு பூகம்பத்திற்குப் பின்னால், உங்கள் தெருக்களில் துண்டுச் செங்கல் விலை சகாயமாய்த்தான் இருக்கும்; ஆனால் நெருப்பும் பூகம்பமும் தேசீய லாபங்களாக் - அனுகூலங்களாக - இருக்க முடியாது. மிகவும் கிராக்கியான இடத்தில் விற்கவேண்டுமாம்!—ஆம், உண்மைதான்; ஆனால் உங்களுடைய மார்க்கெட்டைக் கிராக்கியாகச் செய்வது எது? இன்றைக்கு உங்களுடைய ரொட்டி நல்ல விலைக்குத்தான் விற்றது என்று வைத்துக்கொள்வோம்: அதை வாங்கியவன் மரண அவஸ்தையில் இருந்துகொண்டு, தன்னிடம் இருந்த கடைசிப் பணத்தை அதற்காகக் கொடுத்துவிட்டு, இனி எக்காலத்திலும் ரொட்டியே தேவையில்லாத நிலையை அடைந்துவிட்டான், அவன் நிலைதான் என்னாயிற்று என்று கவனித்தீர்களா?'

மேலைநாடுகளில் பணமும் லாபமுமே முக்கிய லட்சியமாகக் கருதப்படுகின்றன. இதனால்தான் வெட்கமில்லாத இரக்கமற்ற சுரண்டலும், கோரமான வேலையில்லாத் திண்டாட்டமும், பாட்டாளி மக்களைக் கசக்கிப் பிழிந்து வேலைவாங்குவதும் ஏற்படுகின்றன. ஆசிரியர் குமரப்பா மிகவும் பொருத்தமாகக் கூறியிருக்கும் வாசகம் இது:

---

* 'Unto This Last - கடைசி மனிதன் வரையில்'—இந்நூலில் செல்வத்தைப்பற்றி ரஸ்கின் ஆராய்ந்திருக்கிறார். கடைசி மனிதன்வரை மக்கள் யாவருக்கும் உணவும் சாந்தியும் கிடைக்கும்படி நாம் உழைக்கவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் புத்தகம் முடிகிறது.

'தொழிற்சாலையிலுள்ள உழைப்பாளர்கள் நறுக்கப்பட்டு இறைச்சியாக்கப்படலாம், ஆனால் ஒரு தொழிலாளியின் உயிரைக் காப்பதற்காகச் சிகாகோ * நகரில் இறைச்சி தயாரித்து டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலையின் யந்திரங்கள் நிறுத்திவைக்கப்படமாட்டா.' †

காந்திஜிக்கோ 'மானுடமே அதி முக்கிய அம்சம்', 'பணத்தைவிட உயிரே பெரிது'. 'வயதாகிவிட்ட நம் பெற்றோர்கள் யாதொரு வேலையும் செய்ய முடியாமல், நமது சொற்ப வருமானத்திற்குப் பாரமாக இருந்தால், அவர்களைக் கொன்றுவிடுதல் லாபகரமான விஷயந்தான். நமக்குப் பிரதிப்பிரயோஜனம் ஒன்றும் இல்லாமல், நாம் வளர்த்துவர வேண்டியிருக்கும் நம் குழந்தைகளைக் கொன்றுவிடுவதும் லாபந்தான்! ஆனால் நாம் பெற்றோர்களையோ குழந்தைகளையோ வதைத்துவிடுகிறோமா? அவர்களைப் பாதுகாப்பதே நமது பெருமை பொருந்திய உரிமை என்று கருதி, எவ்வளவு செலவானாலும் ஏற்றுக் கொள்ளுகிறோம்.' §

தம் பொருளாதாரக் கொள்கைகளை விளக்கி, காந்திஜி கூறுகிறார்:

'கதரை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை சாதாரண முறையிலிருந்து முழுதும் மாறுபட்டது. சாதாரணப் பொருளாதாரம் மானுட மதிப்பைக் கவனிப்பதேயில்லை. கதர்ப் பொருளாதாரம் மனிதனையே முக்கியமாகக் கவனிக்கிறது.' ¶

---

* லட்சக்கணக்கான மிருகங்களை வெகு விரைவாக அடித்து, உரித்து, நறுக்கி, இறைச்சியாக்கி, டப்பாக்களில் அடைப்பதற்கான யந்திரங்களையுடைய பெரிய தொழிற்சாலைகள் அமெரிக்காவில் சிகாகோ நகரில் இருக்கின்றன.

† 'Why the Village Movement?–கிராம இயக்கம் ஏன்?'

§ 'ஹரிஜன்'; 10-12-1938.

¶ 'ஹரிஜன்'; 16-7-1931.

'கதர் புகட்டும் உணர்ச்சிக்கு அர்த்தம் பூமியிலுள்ள ஒவ்வொரு மனுஷ்ய ஜீவனிடத்திலும் சகோதர வாஞ்சை என்பதே. நம் சகோதர மக்களுக்கு ஹானி விளைவிக்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் அறவே விட்டு விலகுவது என்பதுதான் அதன் பொருள்.' *

'கதர் மானிட ஜீவனின் மதிப்பைக் காட்டும், மில் துணி வெறும் உலோகத்தின் (நாணயத்தின்) மதிப்பையே குறிக்கும்.' †

ஆடம்பரமின்மை, அஹிம்ஸை, உழைப்பின் மாட்சி, மானுட கௌரவம் ஆகிய இந்த நான்கு அடிப்படைகளின்மீதே காந்திஜி தமது லட்சியப் பொருளாதார முறையை அமைக்கிறார். இந்த முறையில் தொழில்களைக் குடிசைகள்வரை பரவும்படி பரவலாக அமைப்பதும், தம்மிலே தாம் நிறைவு பெற்ற கிராம சமுதாயங்களை நிறுவுவதும் முக்கிய அம்சங்கள். பரவல் - தொழில் முறையின் பல்பலன்களையும், அதனுள் அடங்கியுள்ள சக்திகளையும் பற்றி, இந்திய நிலைமைகளை முக்கியமாகக் கொண்டு, அடுத்த அத்தியாயத்தில் விவரமாக ஆராய்கிறேன்.



* 'யங் இந்தியா'; 22-9-1927.
† 'ஹரிஜன்'; 9-2-1934.

# V

## கிராமப் பொதுவுடைமை

சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே, இந்தியா கிராம சமுதாயங்கள் அல்லது கிராமப் பஞ்சாயத்துகள் நிறைந்த நாடாக இருந்து வந்திருக்கிறது. கங்கைக்கும் யமுனைக்கும் இடையேயுள்ள பிரதேசத்தில் குடியேறிய பொழுது பிருது * சக்கரவர்த்தியே முதன் முதலாகப் பஞ்சாயத்து முறையை ஆரம்பித்து வைத்ததாகச் சொல்லப் படுகிறது. மகாபாரதம் சாந்தி பர்வத்திலும், 'மனுஸ்மிருதி'யிலும் இந்தக் 'கிராம-சங்கங்கள்' பற்றிய நிச்சயமான குறிப்புகள் இருக்கின்றன. கி. மு. 400-ம் வருஷத்தில் வாழ்ந்திருந்த கௌடில்யரும் தமது 'அர்த்த சாஸ்திர'த்தில் இந்தக் கிராம சமுதாயங்களைப் பற்றி விவரித்திருக்கிறார். வால்மீகி ராமாயணத்தில் 'ஜனபதம்' என்ற பிரஸ்தாபம் இருக்கிறது; இது ஒருகால் பல கிராமக் குடியரசுகள் சேர்ந்த ஒரு தொகுதியாக இருக்கக் கூடும். கிரேக்கர் படையெடுத்து வந்த காலத்திலும் இந்தத் தேசத்தில் பஞ்சாயத்து முறை பிரபலமாகப் பரவியிருந்தது. இந்தப் பஞ்சாயத்துகளைப் பற்றி 'பெந்தாதுகள்' என்ற பெயரால் மெகாஸ்தனீஸ் † தெளிவான விவரங்கள் எழுதிவைத்திருக்கிறார். சீன யாத்திரிகர்களான பேஹியான் § ஹ்யூன்த்ஸாங் ¶ இருவரும்

---

* பழைய இதிகாச காலத்துச் சக்கரவர்த்திகளில் ஒருவர்; இவருடைய பிரஜைகள் பூமியிலிருந்து காய் கனிகள் கிடைக்காததால் பஞ்சமுற்றுத் தவித்ததாகவும், அதற்காக இவர் பூமி தேவியுடன் போர் தொடுத்துச் சகல வளங்களும் பொழியும்படி செய்ததாகவும் கதை உண்டு. இந்த மன்னனின் பேராலேயே பூமிக்குப் 'பிருதுவி' என்று பெயர் வந்தது என்பது ஐதிகம்.

† கிரேக்க தூதராக இந்தியாவில் சந்திரகுப்தரின் ராஜ சபையில் இருந்தவர்.

§ Fa Hien.

¶ Hieun Tsang.

தாங்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த பொழுது கண்ட நிலைமைகளைப்பற்றி விவரித்திருக்கிறார்கள் அக்காலத்தில் தேசம் 'மிகுந்த பொருள் உற்பத்தியுள்ளதாக' இருந்ததாயும் 'உவமித்துக் கூற முடியாத அளவுக்கு ஜனங்கள் செழிப்பும் ஆனந்தமும் கொண்டிருந்தார்கள்' என்றும் அவர்கள் சொல்லியிருக்கின்றனர். மத்திய காலத்தில் பஞ்சாயத்துகளைப் பற்றிய விவரம் சுக்ராசாரியரின் 'நீதிசார'த்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## இந்தியக் கிராம சமுதாயங்கள்

கிராம சமுதாயங்கள் சுய ஆட்சியுள்ள குட்டிக் குடியரசுகளாக இந்தியா முழுதும் பரவியிருந்தன. அவை ஹிந்து அரசாங்கங்களின் கீழும், முஸ்லிம் அரசாங்கங்களின் கீழும் தழைத்தோங்கி யிருந்தன. ராஜ வம்சங்கள் சிதறிப் போனாலும், ஏகாதிபத்தியங்கள் வீழ்ச்சியுற்றாலும் அவைகள் பாதிக்கப்படாமல் தப்பிப் பிழைத்து வந்தன. கிழக்கு இந்தியக் கம்பெனியின் ரகசியக் கமிட்டிகூட, 1812–ல் கீழ்க்கண்ட மாதிரி அறிவித்திருந்தது :

> 'சிக்கலில்லாத, சாதாரணமான, இந்த முனிசிபல் அரசாங்கங்களின் (பஞ்சாயத்துகளின்) கீழே, நினைவுக்கும் எட்டாத பழங்காலம் முதலே தேச மக்கள் வசித்து வந்திருக்கிறார்கள்...........ராஜ்யங்கள் சிதைக்கப்படுவதையோ, பங்கு போட்டுக் கொள்ளப்படுவதையோ பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை ; கிராமத்திற்கு ஹானி ஒன்றும் இல்லாதவரை, கிராமம் எந்த ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டாலும், எந்த மன்னனுக்குக் கட்டுப்பட்டிருக்க நேர்ந்தாலும், அவர்கள் கவலை கொள்வதில்லை ; கிராமத்தின் பொருளாதார அமைப்பு சீர் குலையாமல் நிலைத்து நிற்கிறது.'

'ஒருவர் மாறி ஒருவராக அந்நிய நாட்டுப் பகைவர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்திருக்கின்றனர் ;

ஆனால் கிராம முனிசிபாலிட்டிகள், இந்தியத் தருப்பைப் புல்லைப்போல், பூமியிலே நன்றாக வேரூன்றி அசையாமல் இருந்துவிட்டன' என்று ஸர் சார்லஸ் டிரிவேல்லின் கூறியிருக்கிறார். இந்தியாவின் கவர்னர் - ஜெனரலுக்குப் பிரதியாக வேலைபார்த்து வந்த ஸர் சார்லஸ் மெட்காப் 1830-ல் ஒரு குறிப்பு எழுதியுள்ளார். அதில், கிராம சமுதாயங்கள் குட்டிக் குடியரசுகள் என்றும், அவைகளுக்குத் தேவையான எல்லா விஷயங்களும் அவைகளிடமே அமைந்திருந்தன என்றும், அநேகமாக வெளிச் சம்பந்தங்கள் இல்லாமல் அவை சுதந்திரமாக இருந்தன என்றும் விளக்கியிருக்கிறார்:

> 'வேறு எதுவும் நிலைக்காத இடத்திலே அவைகள் மட்டும் நிலைத்திருக்கின்றன...கிராம சமுதாயங்களின் யூனியனில், ஒவ்வொன்றும் ஒரு குட்டி அரசாங்கமாக அமைந்திருக்கிறது; இந்திய மக்கள் துன்புற்ற பற்பல புரட்சிகளிலிருந்தும் மாறுதல்களிலிருந்தும் அவர்கள் தப்பிப் பிழைத்திருக்கும்படி செய்ததற்கு, மற்ற எந்தக் காரணத்தையும் விட மேலே குறித்த யூனியனே முக்கியமானது என்று நான் கருதுகிறேன். அதுவே அவர்களுடைய இன்பத்திற்கும், சுதந்திரத்தின் பெரும் பகுதிக்கும் காரணமாயிருக்கிறது. ஆதலால் இந்தக் கிராம அமைப்புக்களை ஒருபோதும் சலனப்படுத்திவிடக் கூடாது என்று நான் விரும்புகிறேன்; இவைகளைச் சீர்குலையச் செய்யும் எதுவும் என்னை அஞ்சி நடுங்கச் செய்யும்.'

ஆனால் இவர் விரும்பியவாறு நடைபெறவில்லை. நிலவரி வருமானத்தைக் கூடியவரை உயர்த்த வேண்டும் என்ற ஆத்திரத்தினால் கிழக்கு இந்தியக் கம்பெனி பல புது ஏற்பாடுகள் செய்தது. கிராம சமுதாயத்தினிடம் சம்பந்தம் வைத்திருந்ததை மாற்றி, ஒவ்வொரு விவசாயியிடமும் நேர்முகமாக ஏற்பாடுகள் செய்து கொண்டது. நீதி பரிபாலனத்திலும், நிர்வாகம் நடத்துவதிலும் அதிகாரங்களைத் தங்கள் கையில் குவியலாகச் சேர்த்து

யைத்துக்கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினர் ஆத்திரப் பட்டனர். எனவே கிராம ஸ்தாபனங்கள் ரத்துச் செய்யப்பட்டு, பண்டைப் பழங் காலம் முதல் அவைகள் அனுபவித்துவந்த அதிகாரங் களும் பறிக்கப்பட்டன. ஆகையால் நாளடைவில் அந்தக் குடியரசுகள் மெதுவாக நிலைகுலைந்து போயின. இதைப் பற்றி ரமேஷ் சந்திர தத்தர் 'இந்தியர்வின் பொருளர்தாரச் சரித்திரம்' என்ற தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்: 'உலகத்திலேயே முதன் முதலில் கிராம சுய ஆட்சி முறை ஏற்பட்டது இந்தியாவில்தான்; இங்கேதான் நெடுங் காலம்வரை அது நிலைத்து நின்றது; இத்தகைய சுய ஆட்சி முறை அழிந்தது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட மிகமிக வருந்தத்தக்க விளைவுகளில் ஒன்று.'

இந்தியக் கிராமக் குடியரசுகள் கார்ல் மார்க்ஸின் கவனத்தையும் கவர்ந்தன. அவருடைய 'மூலதனம்'* என்ற நூலில் எழுதியிருப்பதாவது:

> 'அளவில் சிறிதாயும் மிகவும் புராதனமாயும் உள்ள இந்திய சமுதாயங்கள் (பஞ்சாயத்துகள்) ஓரள வுக்கு இன்னும் இருந்து வருகின்றன. நிலத்தில் சமுதாயப் பொதுவுடைமை, விவசாயம் செய்வ தோடு கைத்தொழிலையும் ஒன்றுசேர்த்தல், புதுச் சமுதாயங்கள் ஏற்பட்டாலும் முன்கூட்டியே தயாராயுள்ள ஒரு திட்டத்தை நேரடியாகப் பின் பற்றக்கூடிய முறையில் தொழில் - பாகுபாட்டிற்கு நிரந்தரமாக ஒரு முறையை அமைத்தல், ஆகிய அம்சங்களின் மீதே மேற்படி சமுதாயங்கள் அமைந் திருக்கின்றன. ஒரு சமுதாயம் விவசாயத்திற்கு உபயோகிக்கும் மொத்த நிலத்தின் விஸ்தீரணம் நூறு ஏக்கரிலிருந்து பல ஆயிரம் ஏக்கர்வரை இருக்கும். இந்தச் சமுதாயங்கள் பொருள் உற்பத்தியில் சுய தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்ளக் கூடியவை. சமுதாயத்திற்கு

---

* 'Das Capital'.

அவ்வப்போதுள்ள தேவைகளுக்கே பெரும்பாலான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன, விற்பனைக்காக அல்ல. பண்டமாற்று முறையால் இந்திய சமூகத்திலும் தொழில் - பாகுபாடு ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தப் பாகுபாட்டினால் பாதிக்கப்படாமலே உற்பத்தி நடைபெறுகிறது. ......இந்தியாவின் பல பாகங்களிலும் இத்தகைய சமுதாயங்களில் வெவ்வேறு விதமானவைகளைக் காண்கிறோம். சாதாரண சமுதாயத்தில், நிலம் மட்டும் பொதுவில் பயிர் செய்யப்படுகிறது, விளைவு முழுதும் சமுதாயத்திலுள்ள அங்கத்தினர் அனைவருக்குள்ளும் பிரித்து எடுத்துக் கொள்ளப்படுகிறது; ஒவ்வொரு குடும்பமும் துணைத்தொழில்களாக நூல் நூற்றல், நெசவு செய்தல் முதலியவற்றைச் செய்து வருகிறது. எளிதான முறையில் பொருள் உற்பத்திக்குச் செய்யப்பட்டிருக்கும் இந்த ஏற்பாடே ஆசிய நாட்டுச் சமூகம் மாறுதலில் நிலைத்திருக்கும் விந்தையின் ரகசியத்தை நமக்கு விளக்குகிறது. இதற்கு மிகவும் மாறாக இருப்பவை ஆசிய அரசாங்கங்கள் அடிக்கடி அழிந்து அமைக்கப்படுவதும், ராஜவம்சங்கள் மாறுவதில் ஒரு முடிவு இல்லாமலிருப்பதும். ஆயினும் அரசியல் வானத்தின் புயல்களால் சமூகத்தின் பொருளாதார அம்சங்களின் கட்டுக்கோப்பு பாதிக்கப்படாமல் இருந்து வருகிறது.'

'கீழ்த்திசையிலும் மேல்திசையிலும் கிராம சமுதாயங்கள்' என்ற தமது புத்தகத்தில் ஸர் ஹென்றி மெயின், 'இந்தியக் கிராம சமுதாயம் உயிரற்ற ஸ்தாபனமாக இராமல் ஜீவனுடன் விளங்கி வந்தது' என்றும், 'இந்தியாவிலும் முற்காலத்து ஐரோப்பாவிலும் இருந்த கிராம சமுதாய அமைப்புகள் முக்கியமான அம்சங்கள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியாக இருந்தன' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். 'வட அமெரிக்காவுக்குச் சென்று முதலாவதாகக் குடியேறிய ஆங்கிலேயர்கள் அங்கே விவசாயம்

செய்வதற்காக ஆரம்பத்தில் தங்களைக் கிராம சமுதாயங்களாகவே அமைத்துக் கொண்டது மிகவும் குறிப்பிடத்தக்க உண்மை' என்றும் அவர் கூறுகிறார். பிரின்ஸ் கிராபாட்கின் தமது அபூர்வமான 'பரஸ்பர உதவி' * என்ற நூலில், பொதுவாக மேலை நாடுகளிலும், சிறப்பாக ருஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்விட்ஜர்லந்து ஆகியவற்றிலும், இந்தச் சமுதாயங்கள் தோன்றி வளர்ந்த சரித்திரத்தை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். சுய–நிறைவு பெற்ற இந்த ஸ்தாபனங்கள், இயற்கையான சமூக வளர்ச்சி காரணமாகத் தாமாக அழிந்துவிடவில்லை என்பதையும், சுயநலக் கூட்டங்களால், வேண்டுமென்றே இடைவிடாமல் கங்கணம் கட்டிக்கொண்டு இவைகள் அழிக்கப்பட்டன என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்!

'கிராம சமுதாயங்கள் பொருளாதார முறையில் கஷ்டமாக இருந்ததால் அவைகள் தாமாகவே மடிந்துவிட்டன என்று சொல்வது, யுத்தகளத்தில் வெட்டி வீழ்த்தப்பட்ட சிப்பாய்கள் இயற்கையாக மரணமடைந்தனர் என்று சொல்வது போன்ற குரூரமான பரிகாசம் என்று சுருக்கமாய்ச் சொல்லிவிடலாம்.'

கிராபாட்கின் எழுதியுள்ள இந்த வாக்கியங்கள் இந்தியாவுக்கு எவ்வளவு நன்றாகப் பொருந்துகின்றன என்பதை இந்தியப் பொருளாதார, சரித்திர ஆராய்ச்சியாளர் நன்கு உணரலாம்.

தொழில்களில் சர்க்கார் தலையிடவே கூடாது என்ற கொள்கை, சகலத்தையும் சர்க்காரே சர்வாதிகாரம் வகித்து நடத்தவேண்டும் என்ற கொள்கை ஆகிய இரண்டு அமிதமான கொள்கைகளையும் ஒதுக்கிவிட்டு, இந்தியக் கிராமங்கள், சமூக-பொருளாதார-அரசியல் முறையைத் தக்க சமநிலையில் அமைத்திருந்தன. விவசாயத்திலும் தொழிலிலும் அவைகள் முதல்தரமான

* 'Mutual Aid'.

கூட்டுறவு முறையை நிர்மாணித்து, ஏழைகளைப் பணக்காரர் சுரண்டுவதற்கு எத்தகைய வழியும் இல்லாதபடி செய்திருந்தனர். காந்திஜி சொல்வதுபோல், 'பொருள்கள் உற்பத்தியாவதும், அவைகளின் உபயோகமும் விநியோகமும் அநேகமாக அதே சமயத்திலேயே நடந்து வந்தன', 'நாணயப் பொருளாதாரம்' என்ற விஷம சக்கரம் அடியோடு இல்லாமலிருந்தது. உடனே உபயோகிப்பதற்கே உற்பத்தி நடந்தது, தூர இடங்களில் கொண்டு விற்பதற்காக அல்ல. சமூக அமைப்பு முழுதுமே அஹிம்ஸையின் பேரிலும், சகோதர உணர்ச்சியின் பேரிலும் அமைக்கப்பட்டிருந்தது. இதனால்தான் காந்திஜி, பழைய கிராம சமுதாயங்கள், அவைகளுடைய செழிப்பான விவசாயம், சுயேச்சையான கலை - அழகுள்ள தொழில்கள், சிறு அளவான கூட்டுறவு ஏற்பாடு, பரவலான உற்பத்தித் தொழில்கள் ஆகியவற்றுடன் மீண்டும் அமைக்கப்பட வேண்டும் என்று தீவிரமாகப் பிரசாரம் செய்துவருகிறார்.

## ஆதர்ச ஜனநாயகம்

அரசியல் ஸ்தாபனம் என்ற வகையில் பார்த்தால் இந்தக் கிராமக் குடியரசுகள் ஜனநாயகத்தின் சரியான ஆதர்சங்களாக இருந்தன. 'எந்த சர்க்காரும், "சமூகத்தின் ஆட்சி" என்ற கருத்துக்குப் பொருத்தமான எல்லாவிதத் தேவைகளையும் பூரணமாகத் திருப்தி செய்விப்பதாக இருக்கவேண்டுமாயின், அது சமூகத்திலுள்ள எல்லா நபர்களும் கலந்துகொள்ளக்கூடிய ஓர் ஆட்சியாக இருக்கவேண்டும்; அதுதான் உண்மையான சமூக — ஆட்சியாக இருக்கமுடியும்' என்கிறார் ஜான் ஸ்டுவர்ட் மில். எல்லா நபர்களும் சர்க்காரில் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்ற இந்தச் சோதனையைப் பெரியதோர் அளவுக்கு ஐரோப்பாவில் கிரேக்க நகரக் குடியரசுகள் திருப்தி செய்தன. ஒவ்வொரு குடியரசிலும் காரியாம்சத்தில் முடிவான மேலதிகாரம் ஜனங்கள் அனைவருக்குமே இருந்து வந்தது. 'அந்த ஸ்தாபனம் ஒரு பார்லிமென்டாகவும்,

அரசாங்கமாகவும், நிர்வாக மன்றமாகவும் ஒருங்கே அமைந்தது' என்று பிரைஸ் பிரபு கூறுகிறார். 'கிரேக்கக் குடியரசு அளவில் சிறியது. ஆகையால், ஜன சபையில் "வோட்" கொடுக்கும் உரிமையுள்ளவர்களில் பெரும்பான்மையோரை ஒரே இடத்தில் கூட்டிவைத்து, ஒரே பிரசங்க மேடையிலிருந்து அவர்களிடம் எவரும் தம் கருத்தை அறிவித்துக்கொள்ள வசதியாக இருந்தது; தலைமைப் பதவிக்கோ அதிகாரத்திற்கோ அபேட்சகராக இருப்பவர்களின் யோக்கியதாம்சங்களைப் பற்றி ஒவ்வொருவரும் அபிப்பிராயம் கொள்வதற்கும் வசதியாக இருந்தது.'* புராதன இந்தியக் கிராமப் பஞ்சாயத்துகளும், கிரேக்க நகரக் குடியரசுகளைப் போலவே, தங்கள் ஆட்சியைச் சிரமம் இல்லாமலும் ஒற்றுமையாகவும் நடத்திவர முடிந்தது. ஏனெனில், 'எல்லோருக்கும் சம்பந்தமான விஷயங்களை எல்லோருமே சேர்ந்து தீர்மானித்தனர்.' அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் அநேகமாக இடமில்லை. மேற்கத்திய நாடுகளில் ஜனநாயகம் தோல்வியுற்றதற்கு முக்கியமான காரணம் தேர்தல் தொகுதிகள் மிகவும் பெரிய அளவில் அமைந்திருப்பது; இதனால் சரியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை, ஜனங்களுக்கும் தலைவர்களுக்கும் நெருங்கிய தொடர்பும் இருக்க வசதியில்லை. தற்கால ஜனநாயகத்தைச் சீர்திருத்துவதற்காக அநேகம் பரிகாரங்கள் கூறப்படுகின்றன. அரசாங்க அதிகாரம் முழுதும் ஒரு மத்திய சர்க்காரிடம் இருந்துவிடாமல், நிர்வாகப் பொறுப்புகளை ஆங்காங்கு சில பிரதேசங்களில் விநியோகிக்க வேண்டும் (devolution) என்பதையும், அதிகாரம் ஒரே இடத்தில் குவியாமல் பரவல் முறையில் அமைக்கப்பட வேண்டும் (decentralisation) என்பதையும் சீர்திருத்தவாதிகள் பலரும் வற்புறுத்துகிறார்கள். 'ஸிண்டிகலிஸம்', † 'கில்ட் ஸோஷ

---

* 'Modern Democracies' - தற்கால ஜனநாயகங்கள்'.

† 'ஸிண்டிகலிஸம்'-தொழில்களில் இருப்பவர்களுக்குத் தொழிலிலும் அரசியலிலும் அதிகாரம் இருக்கும்படி செய்ய வேண்டும் என்ற கொள்கை.

விஸம்',* 'அராஜகம்'† ஆகிய கொள்கைகளுக்குள் வேறு என்னென்ன பேதங்கள் இருந்தபோதிலும், அந்தந்த ஸ்தலங்களில் சிறு சிறு ஸ்தாபனங்களை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவதில் இவையெல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஆசிரியர் ஜோட் கூறுவதாவது:

'சமூக - நிர்வாக நடவடிக்கையில் மனிதர்களுக்குரிய நம்பிக்கையைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமானால், அரசாங்கம் துண்டு துண்டாக்கப்பட்டு, அதன் பொறுப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஏற்படுகிறது. ஒவ்வொரு நபரும் பல சிறு நிர்வாக - அதிகார ஸ்தாபனங்களில் சேர்ந்திருப்பதற்கு வசதி செய்யவேண்டும்; அந்த ஸ்தாபனங்கள் பொருளுற்பத்தியையும் ஸ்தல ஆட்சியையும் நடத்திக்கொண்டிருக்கும்; அவைகளில் அங்கத்தினர் என்ற முறையில், ஒவ்வொரு நபரும், தான் [illegible] என்றும், தன்னுடைய தீர்மானத்திற்கும் மதிப்பு உண்டு என்றும், தன்னுடைய வேலை சமூகத்திற்காகவே செய்யப்படுகிறது என்றும் உணர முடியும்...... ஆதலால், அரசாங்க யந்திரத்தைக் குறைக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. [illegible]

* [illegible]

† 'அராஜகம்' — அரசாங்கமே இல்லாதிருத்தல்.

இப்படிப் பகிர்ந்து கொடுக்கும் என்பதை அவர் கள் அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும்; ஏனெனில் சமூகமே அவர்கள்தானே!'*

'மிக நெருக்கமாக இணைக்கப்பெற்ற சிறு குடியரசுகளே நாகரிகத்தின் சிறப்பு வாய்ந்த அங்கங்களாக அமையும்'† என டாக்டர் ஆல்போர்ட்டும் கருதுகிறார்.

## 'யந்திரமய'க் கொள்கையிலுள்ள தீமைகள்

அரசியல் - நிர்வாகம் பற்றிய காரணங்கள் ஒருபுற மிருக்க, இந்தியாவில் கிராம சமுதாயங்களை மீண்டும் நிர்மாணம் செய்யவேண்டும் என்பதில் காந்திஜி தீவிர சிரத்தை கொண்டிருப்பதற்கு முக்கியமான வேறு கார ணமும் உண்டு. பெருவாரியான உற்பத்தி (large-scale production), உற்பத்தியை ஒரே இடத்தில் குவிப்பது (centralisation), யந்திரங்கள் மூலம் உற்பத்தி (mechani-sation) ஆகியவை மனிதனையும் யந்திர - சக்கரங்களைப் போலவே ஆட்டப் பொருளாக்கி, மென்மையான மனித உணர்ச்சிகளை வற்ற அடித்துவிடும் என்ற காரணத் தால், அவர் இத்தகைய உற்பத்தி முறையை அறவே வெறுக்கிறார். பெருவாரியாக யந்திர மயமாக்குவதைக் கண்டிப்பவர் மகாத்மா ஒருவர் மட்டும் அல்லர். தற்காலப் பொருளாதார சாஸ்திரத்தின் தந்தையான ஆடம் ஸ்மித் கூட, கனிஷ்டத் தொழில்களில் தொழில் - பாகுபாடுகளை ‡

* 'Modern Political Theory - தற்கால அரசியல் தத் துவம்'; பக்கம் 120-21.

† 'Social Psychology - சமூக மனப்பாங்கு' — ஆசிரியர் எப். எச். ஆல்போர்ட்.

‡ 'தொழில்-பாகுபாடு' என்பது மேலைநாட்டுப் பொரு ளாதார நூல்களில் ஒரு தனி அர்த்தத்தில் உபயோகிக்கப் படும் தொடர்மொழி. ஒவ்வொரு பொருளையும், எந்தத் தேசத்தில் அல்லது பிரதேசத்தில் செய்வது சுலபமோ, அந்த இடத்திலேயே தயாரிக்க வேண்டும். இவ்வாறு வெவ் வேறு பிரதேசங்களில் வெவ்வேறு பொருள்கள் தயாரிக்கப் பட்டு, தேவையான இடங்களில் விற்பனை செய்வதன் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும் என்பது இந்தக் கொள்கை யின் கருத்து.

(division of labour) ஆமோதிப்பவராக இருந்தும், ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதையும் உற்பத்தியின் ஒரு சாதாரணப் பகுதியை மட்டுமே செய்வதில் செலவிட்டு வந்தால், அவன் பரம மௌட்டியனாக ஆகிவிடுகிறான். அவன் 'ஒரு மானிடன் எவ்வளவு மௌட்டியமாயும் திறமையில்லாமலும் போக முடியுமோ அவ்வளவு மாறி விடுகிறான்' என்கிறார் ஆடம் ஸ்மித். 'வளர்ச்சியற்று, செய்ததையே செய்துகொண்டிருக்கும் அவனது வாழ்க்கை அவன் உள்ளத்தின் உரத்தைக் கெடுத்துவிடுகிறது. ஒரே வேலையை எப்போதும் செய்துவருவதன் பயனாக அவன் பார்த்துவரும் தொழிலில் ஒருவிதக் கைத்திறன் அவனுக்குக் கிடைக்கிறது என்பது உண்மையே; ஆனால் அவன் அதற்காக மூளை நுட்பம், சமூக உறவுக்கான பண்புகள், வீர உணர்ச்சி ஆகியவற்றைப் பறிகொடுக்க வேண்டியிருக்கிறது.' * டேவிட் ரிகார்டோவும், 'மனித உழைப்புக்குப் பதிலாக யந்திரத்தை அமைப்பது அநேகமாகத் தொழிலாளர் வகுப்பின் நலன்களுக்குத் தீமையாகவே யிருக்கிறது' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். 'இந்த அபிப்பிராயம் அரசியல்—பொருளாதார முறையின் சரியான தத்துவங்களுக்கு ஒத்திருப்பதாகும்; இதில் மனக்கோணலோ, தவறோ இல்லை.' † 'ஏராளமாக யந்திரங்களை உபயோகிப்பதாலும், தொழில் பாகுபாட்டுக் கொள்கையாலும் (division of labour) சுயசிரம ஜீவிகளின் (உழைப்பாளரின்) வேலையில் தனிப் பண்பு எதுவும் இருப்பதில்லை; ஆகையால் உழைப்பாளனுக்கு வேலையில் எவ்விதக் கவர்ச்சியும் அளிக்க முடியாமற் போய்விட்டது' என்று கார்ல் மார்க்ஸ் கூறுகிறார். 'அவன் யந்திரத்தின் ஒரு பாகமாக ஆகின்றான்.' ‡ 'மூலதனம்' என்ற தமது நூலில் மார்க்ஸ், தற்கால உற்பத்தி முறை 'தொழிலாளியை

---

* 'Wealth of Nations – தேசிய சமூகங்களின் செல்வம்.

† 'Principles of Political Economy – அரசியல் – பொருளாதாரத் தத்துவங்கள்.'

‡ 'Communist Manifesto – கம்யூனிஸ்ட் பிரகடனம்.'

முடமாவும் கோரமாகவும் மாற்றிவிடுகிறது' என்று வற்புறுத்திச் சொல்லுகிறார். 'சுயேச்சையான குடியான வனோ, கைத்தொழிலாளியோ 'அநுபவ அறிவும், ஆராய்ச்சி அறிவும், மனஉறுதியும் பெறுகிறான்.' 'கையால் தொழில் செய்யும் நுணுக்கமான திறமை பழைய அநாகரிகமாதலால் ஒழிந்துவிட வேண்டும் என்று அழிக்கப்பட்டு வருகிறது' என பிரின்ஸ் கிரபாட்கின் கூறுகிறார். 'தன் கைகளால் செய்யும் வேலையில் சிருஷ்டி-இன்பத்தைக் கண்டு அனுபவித்து வந்த கலைஞன் ஒழிந்து போய், அந்த இடத்தில் ஓர் இரும்பு-அடிமையும், அதற்கு ஒரு மனித-அடிமையும் நிற்பதைக் காண்கிறோம்.' * 'நவீனத் தொழிற்சாலைகள் சிருஷ்டிசக்திக்குரிய மனிதத் திறமை அனைத்தையும் அநேகமாக நசுக்கிவிடுகின்றன; தொழிலாளர்கள் தங்கள் ஓய்வு-நேரத்தில் யந்திர சக்தியின் உதவியால் காட்டப்படும் வேடிக்கைகளை உணர்ச்சியில்லாமல் பார்த்து அனுபவிப்பதற்கு மட்டுமே ஆற்றல் கொண்டிருக்கிறார்கள்' என்று மேரி சதர்லண்டு எடுத்துக் காட்டுகிறார். 'பிரச்னை தொழிற்சாலை வேலையிலுள்ள சௌகரியங்களை மட்டும் பொறுத்ததன்று, பெரும்பாலும் அத்தகைய வேலையின் தன்மையையும் பொறுத்தது.' †

ஆடம் ஸ்மித் காலம் முதல் இன்றுவரை குண்டூசி செய்யும் சரித்திரத்தை ஆராய்ந்து, 'புத்திசாலியான பெண்ணுக்கு அபேதவாதம், முதலாளித்துவம் ஆகியவைகளுக்கு வழிகாட்டி' என்ற நூலில் பெர்னர்ட் ஷா குறிப்பிடுவதாவது:

> 'மனிதன் நாள் ஒன்றுக்குச் சுமார் ஐயாயிரம் குண்டூசிகள் வரை தயாரிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது; இதனால் குண்டூசிகள் ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கின்றன. குண்டூசிகள் ஏராளமாக உற்பத்தியாகிக் கிடைத்துவிட்டதால்,

---

*'Fields, Factories and Workshops – நிலங்கள், தொழிற்சாலைகள், தொழிற்கூடங்கள்.'

†'Victory or Vested Interest? – வெற்றியா, சுயநலமா?'

தேசத்தின் செல்வம் பெருகிவிட்டதாக மதிக்கப்படுகிறது. ஆனால் நடந்திருப்பதென்ன? திறமையுள்ள மனிதர்களாயிருந்த தொழிலாளர்கள் வெறும் யந்திரப் பதுமைகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்; புத்தி சாதுரியம் இல்லாமலே அவர்கள் தம் வேலையைச் செய்துள்ளார்கள். முதலாளிகள், தம் எஞ்சினுக்கு நிலக்கரியும் எண்ணெயும் போடுவது போல், தம்மிடம் அதிகப்படியாகவுள்ள உணவுப் பொருள்களை இந்த மனித யந்திரங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். "செல்வம் குவிகிறது, மனிதன் அழிகின்றான்!" என்று கவி கோல்ட்ஸ்மித் கூறியதையே இது மெய்ப்பிக்கிறது. அவர் கவிஞர் என்பதோடு தீர்க்க தரிசனமுள்ள பொருளாதார நிபுணராகவும் இருந்திருக்கிறார்.'

தற்கால யந்திரத் தொழில் நிர்வாகம் 'திருத்தமான வேலையும் உற்பத்திப் பெருக்கமும் ஏற்படுவதற்குத் துணையாயிருப்பது உண்மையே; ஆனால் தொழிலாளர்களை அதிவேகமாக வேலை செய்யும்படி நிர்ப்பந்திப்பதையும், சீவனற்றுப் போகும்படி செய்வதையும் தடுக்க ஓர் உபாயமும் இல்லை' என்று ஷீல்ட்ஸ் தமது 'யந்திரத் தொழிலமைப்பின் வளர்ச்சி' * என்ற நூலில் தெளிவாக நிரூபித்திருக்கிறார். 'ஒரே பொருளின் வெவ்வேறு உறுப்புக்களைத் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் தயாரிப்பது என்ற முறை இப்போது அதிகரித்து வருகிறது. இதனால் உழைப்பாளி சிந்தனைச் சக்தியையும், சுய முயற்சியையும், ஏதோ ஒன்றைச் சாதித்தோம் என்ற உற்சாகத்தையும், வேலையில் மகிழ்ச்சியையும் இழந்துவிடுகிறான்.' மேலும், இந்த முறையைக் கவனித்து, எர்னஸ்ட் ஜோன்ஸ் உணர்ச்சியுடன் கூறுவதாவது:

'ஈட்டம் அறிவுள்ள தொழிலாளிகளை உயிரற்ற யந்திரங்களின் சக்கரங்களாக மாற்றிவிடும் யந்திர

* 'Evolution of Industrial Organisation' - Prof. Shields.

> சக்தி அபாரமாக வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம். முற்காலத்தில் தொழிலாளி அநேகமாகத் தன் வீட்டிலோ தொழிற் கூடத்திலோ வேலை செய்து, தன் வேலையிலுள்ள சிருஷ்டி அம்சத்தைப் பற்றிப் பெருமை கொண்டிருந்தான்; ஆனால் இப்பொழுதோ, அவன் தொழிற்சாலையில் வெறும் யந்திரமாகிவிட்டான், தொழிலாளர் ஜாபிதாவில் அவனுடைய பெயர்கூட அழிந்துபோய், பெயருக்குப் பதில் "நம்பர்" வந்துவிடுகிறது!'

இந்தத் தீமைகள் யந்திரமய உற்பத்தி முறையில் இன்றியமையாத அம்சமாகிவிட்டன. வெறும் அபேத வாதத்தால் இவைகளைக் களைந்து எறிந்துவிட முடியாது. கார்ல் மார்க்ஸ் இந்தத் தீமைகளை வெட்ட வெளிச்சமாக விவரித்திருக்கிறார்; கம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் அவை இருக்கமாட்டா என்று அவர் நம்பினார். மற்ற முதலாளித்துவ நாடுகளைப் பார்க்கிலும் ஸோவியத் ரஷ்யாவிலுள்ள தொழிலாளருடைய நிலைமை மிக்கவும் உயர்ந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், முதலாளித்துவ அரசாங்கமாயினும் சரி, அபேதவாத அரசாங்கமாயினும் சரி, மிக அதிகமான முறையில் நுணுக்கமான யந்திரங்களைப் பரப்புதல், தொழிலாளருடைய உடல், ஒழுக்கம், மனநிலை ஆகியவைகளை விபரீதமாகப் பாதித்தே தீரும். 'இந்த ஆபாச நாகரிகம்' என்ற நூலில் போர்ஸோடி கூறுவதாவது:

> 'பொருள் உற்பத்தியும் விநியோகமும் தனி மனிதரின் சொந்த உரிமையாக இருப்பதை அழித்துச் சுரண்டல் முறையை நீக்கிவிடுவது தீமையின் வேரைக் களைந்துவிடாது. தொழிற்சாலைகளுக்கு இயல்பாகவே அமைந்துள்ள தீமைகள் மனித வர்க்கத்தை மேலும் வாட்டிக்கொண்டுதான் இருக்கும். தொழிற்சாலையைப் பொதுவுடைமையாக்கினாலும், தொழிற்சாலை நிர்வாகம் பற்றிய (ஸிண்டிகலிஸம் போன்ற) எவ்வித ஏற்பாடு செய்தாலும், லட்சியவாதிகள் பலர் அடையவேண்டும்

என்று கருதி உழைத்துவரும் கனவு—உலகம் உண்டாகிவிடாது. தொழிற்சாலை முறை மனித வர்க்கத்திற்கு உண்டாக்கியிருக்கும் உண்மையான நோய்க்கு அபேதவாதம் முதலியவை சிகிச்சை செய்யாததால், அந்தப் பரிகாரங்கள் தோல்வியுற்றே தீரும். திறமையும் வேகமுமே பிரதானம் என்ற கருத்தால் ஹிம்ஸைப்படும் மனிதவர்க்கத்தின் நோயை இவை தீர்க்க முடியாது.'

மகாத்மா காந்தியும் இதே அபிப்பிராயத்தைக் கூறுகிறார் :

'பண்டித நேரு யந்திரத் தொழில் அபிவிருத்தி ஏற்படவேண்டும் என்று விரும்புகிறார்; அது பொதுவுடைமையாக்கப்பட்டால் முதலாளித்துவத்தின் தீமைகள் அதில் இருக்கமாட்டா என்று அவர் எண்ணுகிறார். என் கருத்து என்னவென்றால், அத்தீமைகள் யந்திரத் தொழிலில் தவிர்க்க முடியாத அம்சங்களே யாதலால், பொதுவுடைமையாக்கினாலும் அவைகளை நீக்கமுடியாது என்பது தான்.' *

## யந்திரங்கள் பற்றி காந்திஜியின் மனப்பான்மை

காந்திஜி எல்லா யந்திரங்களுக்கும் எதிர்ப்பாக இல்லை என்பதை நாம் தெளிவாக முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். 'எத்தகைய யந்திரத்தையுமே நான் வெறுக்கிறேன் என்று அர்த்தமில்லை. கைராட்டினம் கூட அபூர்வ மதிப்புள்ள ஓர் யந்திரந்தான்' என்று அவர் கூறியுள்ளார். 'யந்திர—மோகத்தையும்,' 'கண்டபடி அதைப் பெருக்குவதையும்' தான் அவர் ஆட்சேபிக்கிறார். அவர் யந்திரத்தை அழிக்க விரும்பவில்லை; அதைக் கட்டுப்பாடுகளுக்குள் ஒடுக்கிவைக்கவே விரும்புகிறார். குடிசைகளில் வசிக்கும் கோடிக்கணக்கான மனிதர்

* 'ஹரிஜன்'; 29-9-1940.

களின் கஷ்டத்தைக் குறைக்கக்கூடிய யந்திரங்களை வரவேற்பதற்கு அவர் தயார். ஆனால் மனிதர்களைச் சுயேச்சையற்ற யந்திரப் பதுமைகளாக்கி, மனித உழைப்புக்கு இடமில்லாமல் ஒதுக்கும் சகல யந்திரங்களுக்கும் அவர் எதிரிதான்.

> 'முடிக்கவேண்டிய வேலைக்கு ஆட்கள் மிகவும் குறைவாக இருந்தால் யந்திர அமைப்பு நல்லதுதான். ஆனால், இந்தியாவைப் போல், வேலைக்கு வேண்டிய அளவுக்குக் கூடுதலாக ஆட்கள் இருந்தால், யந்திரங்களைப் புகுத்தல் தீமையாகும். நம் கிராமங்களில் வசித்துவரும் கோடிக்கணக்கான மக்கள் ஓய்வு பெற எப்படி வசதி செய்யலாம் என்பதல்ல நமது பிரச்னை. அவர்கள் சோம்பிக் கிடக்கும் நேரத்தை மொத்தமாகச் சேர்த்தால் வருஷத்தில் ஆறு மாதம் ஆகும். இந்த நேரத்தை அவர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதே பிரச்னை.' *

'இந்தியாவின் ஏழு லட்சம் கிராமங்களிலும் சிதறியிருக்கும் கோடிக்கணக்கான கிராமவாசிகளாகிய உயிருள்ள யந்திரங்களுக்குப் போட்டியாக உயிரற்ற யந்திரங்களை ஏற்படுத்தக் கூடாது' என்றும் அவர் சொல்லுகிறார். 'பலரைப் பறித்துச் சிலரைக் கொழுக்க வைப்பதற்கு உதவியான' யந்திரங்களுக்கு அவர் சலுகை காட்டமாட்டார்.

யந்திரங்களைப் புதிதாகச் சிருஷ்டிப்பதையோ, அவைகளில் சீர்திருத்தங்கள் செய்வதையோ காந்திஜி எதிர்க்கவில்லை. 'எல்லோருக்கும் பயன்படக்கூடிய ஒவ்வொரு புது சிருஷ்டியையும் நான் பாராட்டுவேன்' என்பது அவர் வாக்கு. குடிசைக் கைத்தொழில்களில் அபிவிருத்தி உண்டாகும்படி ஒரு சிறு யந்திரம் சீர்திருத்தம் செய்யப்பட்டு, அடிமைத்தனம் இல்லாமல் ஒரு மனிதன் அந்தக் கருவியை உபயோகிக்க முடிந்தால்,

---

* 'ஹரிஜன்'; 16-11-1934.

அது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் 'உழைப்பைக் குறைக்கக்கூடிய கருவிகளில்' (தொழிலாளரின் தொகையைக் குறைக்கக்கூடிய கருவிகளில்) தற்காலம் உள்ள மோகத்தை அவர் ஆதரிக்கவில்லை :

> 'ஆயிரக் கணக்கானவர்கள் வேலையில்லாமல் நடுத் தெருக்களில் பட்டினி கிடந்து சாகும்படி ஏற்படுகிற அளவுக்கு மனிதர்கள் "தொழிலாளர் தொகையைக் குறைத்துக்கொண்டே" போகிறார்கள். மனிதவர்க்கத்தின் ஒரு பகுதியினருக்கு மட்டுமல்லாமல், எல்லோருக்குமே நேரத்தையும் உழைப்பையும் மிச்சப்படுத்த நான் விரும்புகிறேன். செல்வம் ஒரு சிலருடைய கையிலே குவியாமல் எல்லோரிடமும் பரவவேண்டும் என்று நான் விரும்புகிறேன். கோடிக்கணக்கானவரின் முதுகுகளின்மீது சிலர் சவாரி செய்வதற்குத்தான் இன்று யந்திரங்கள் உதவி செய்கின்றன. இவற்றிற்கெல்லாம் பின்னால் தூண்டுதலாக இருப்பது உழைப்பைக் குறைக்கவேண்டும் என்ற தர்ம சிந்தனை அன்று—பேராசைதான். இந்த ஏற்பாட்டை எதிர்த்தே நான் என் முழு வல்லமையுடன் போராடுகிறேன்.' *

## வேலையில்லாமை

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தொழில்களை யந்திரமயமாக்கவேண்டியது அவசியமாக இருந்தது; அவைகளில் அந்தக் கண்டங்களில் ஏராளமான மூலதனம் இருந்தது, ஆனால் உழைப்பாளர் போதுமான அளவுக்கு இல்லை. அவைகள் தங்களுடைய இயற்கை வசதிகளை விருத்திசெய்து பூரணமாகப் பயன்படுத்திக்கொள்வதற்காக யந்திரங்களின் உதவியை நாடவேண்டியிருந்தது. ஆனால், இந்தியாவிலோ நிலைமைகள் மேலை நாடுகளின் நிலைமைகளுக்கு நேர் மாறாக இருக்கின்றன;

* 'யங் இந்தியா'; 13-11-1924.

இங்கே மூலதனம் குறைவு, தொழிலாளர் அதிகம். ஆகவே இப்பொழுது பிரச்னை உழைப்பைக் குறைக்கும் யந்திரங்களைக் கண்டுபிடிப்பதல்ல; வேலை யில்லாமல் சோம்பலில் கிடந்து பரிதவிப்பவர்களுக்கு வேலை தேடுவது தான் இங்குள்ள பிரச்னை. மேலைநாடுகளிலும்கூட, யந்திரம் பிரயோகத்தை எந்த அளவோடு நிறுத்தவேண்டுமோ அதற்கும் கூடுதலாக உபயோகிக்கப்பட்டதால், அது உபகாரமாக இருந்தது போய், உபத்திரவமாகவும், பெரிய அபாய மாகவும் மாறியிருக்கிறது. லட்சக் கணக்கான ஜனங்களை யந்திரம் வேலையில்லாமற் செய்து விரட்டிவிட்டது; அவர்கள் அரசாங்கத்திடம் 'பிச்சை' வாங்கி உண்ணும் படியும் கேவலமான நிலையில் உழன்று வருகிறார்கள். மனிதனுடைய மனம் எவ்வளவு கண்டுபிடிக்க முடியுமோ அந்த அளவுக்கு, அமெரிக்காவில் யந்திர உற்பத்தி முறை, பூரணத் தேர்ச்சியுடன் உச்சநிலை அடைந்திருக்கிறது. அமெரிக்க ஜனங்களின் உற்பத்திச் சக்தி உலகத்தில் முன்னணியிலுள்ள 14 தேசங்களின் அளவுக்கு நிகராக இருக்கிறது. ஜனத் தொகைப்படி சராசரிக் கணக்கில் பார்த்தால், அமெரிக்காவில் நபர் 1-க்கு உற்பத்தி இந்தியாவிலுள்ளதைவிட 25 மடங்கு அதிகம். இவ்வளவு இருந்தும், அங்கேயும் லட்சக்கணக்கான ஜனங்களுக்கு வேலையில்லை. தொழிற் பெருக்கமுள்ள மற்ற நாடுகளிலும் நிலைமை அதேபோலத்தான் இருக்கிறது. சர்வதேச சங்கத்தின் 1939 - 1940-க்குரிய வருஷாந்தரப் புள்ளி விவரப் பிரசுரத்தின்படி, தேசவாரியாக வேலையில்லாதவர் தொகை பின்வருமாறு:

| | | 1935 | 1939 |
|---|---|---|---|
| அமெரிக்கா [யு. எஸ். ஏ.] | ... | 74,50,000 | 62,40,000 |
| பிரிட்டன் | ... | 17,30,194 | 12,98,801 |
| ஜெர்மனி | ... | 3,48,675 | 2,84,132 |
| பிரான்ஸ் | ... | 4,65,875 | 4,04,604 |
| ஜப்பான் | ... | 3,56,044 | 2,37,371 |

1931-ம் வருஷத்து ஜனத்தொகைக் கணக்குப்படி இந்தியாவில் யாதொரு தொழிலும் இல்லாதவர்களின்

தொகை குறைந்தபட்சம் 2-கோடி. இவர்களைத் தவிர, சொந்த நிலமே இல்லாமல், அல்லது லாபகரமற்ற நிலங்கள் வைத்திருப்போராகக் கோடிக் கணக்கான ஜனங்கள் அரைகுறை நேரத்திற்கு மட்டும் வேலை பெற்றிருந்தார்கள். மேலைநாடுகளில் கணக்கிடும் முறைப்படி பார்த்தால், இந்திய ஜனத் தொகையில் 100-க்கு 50 பேர் வேலையில்லாதாராகவே மதிக்கப்பட வேண்டும் என்பது என் அபிப்பிராயம். நம் தேசத்து மக்களில் 100-க்கு 90 பேர் விவசாயத்திலும் அதைச் சேர்ந்த தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். 100-க்கு 10 பேர் மற்றத் தொழில்களில் உள்ளனர்; இவர்களில் சுமார் இருபது லட்சம் பேரே பெரிய யந்திரத் தொழில்களில் வேலை செய்கின்றனர். இவ்விஷயம் பலருக்கும் தெரிந்ததுதான். தேசத்தின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு இத்தொழில்களை இன்னும் அதிகப்படுத்தினாலும், மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 5 பேருக்கு மேல் இவைகளில் வேலை கொடுக்க இயலாது. பெருவாரியாக யந்திரத் தொழில்களில் ஈடுபட்டிருப்போரைவிட ஐந்து மடங்கு அதிகமான உழைப்பாளர்கள் சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் பின் கண்டபடி கணக்கிட்டிருக்கிறார்:

| | |
|---|---|
| பெரிய யந்திரத் தொழில்களிலுள்ள தொழிலாளர் | ... 14,83,000 |
| சிறு தொழில்களிலுள்ள தொழிலாளர் | ... 2,28,000 |
| குடிசைத் தொழில்களிலுள்ள தொழிலாளர் | ... 61,41,000 |

இந்த விவரத்தைக் கவனிக்குமிடத்து, நூல்-நெசவு சம்பந்தமாக இந்திய ஆலைத் தொழிலிலும், கதர் உற்பத்தியிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் எண்ணிக்கைகளை ஒப்பிட்டுப் பார்த்தல் நலமாகும். 1943-44-ம் வருஷத்து 'இந்திய வருஷாந்தரப் புத்தகத்தின்'* படி, 1940-ல் பிரிட்டிஷ் இந்தியாவிலும், சுதேச

* வருஷந்தோறும் வெளிவரும் இப்புத்தகத்தில் இந்தியா பற்றிய பல புள்ளி விவரங்களும், அரசியல், பொருளாதாரம் போன்ற பல விஷயங்களும் குறிக்கப்பெற்றிருக்கும். இது 'டைம்ஸ் ஆப் இந்தியா' பிரசுரங்களில் ஒன்று.

சமஸ்தானங்களிலும் பஞ்சு ஆலைகளில் தினசரி வேலை செய்துவந்த தொழிலாளரின் சராசரி எண்ணிக்கை 4,30,165. அகில பாரத சர்க்கா சங்கத்தின் கணக்குப்படி, அதே வருஷத்தில் அச்சங்கம் மட்டும் செய்து வந்த கதர் உற்பத்தியில் மொத்தம் 2,69,445 நூற்பவர்களும் நெசவாளர்களும் வேலை செய்துவந்ததாகத் தெரிகிறது. இவர்களைத் தவிர தேசத்தின் பல பாகங்களிலும் கைத்தறி நெசவாளர்கள் சுமார் ஒரு கோடிப் பேர் தனியாக வேலைசெய்து வருகின்றனர். சென்ற 30-வருஷத்தில் இந்தியாவில் ஆலைத் தொழில் சுமார் நான்கு மடங்கு பெருகியிருந்த போதிலும், மொத்த ஜனத்தொகையில் ஆலைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களின் விகிதாசாரம் வரவரக் குறைந்துகொண்டே வருகிறது :

| வருஷம் | | விகிதாசாரம் | |
|---|---|---|---|
| 1911 | ... | 100-க்கு | 5·5 |
| 1921 | ... | ,, | 4·9 |
| 1931 | ... | ,, | 4·3 |
| 1941 | ... | ,, | 4·2 |

முதலாளித்துவ முறையிலோ அபேதவாத முறையிலோ இந்தியாவில் பெரிய யந்திரத் தொழில்களைப் பரப்பிவிடுவதால் மட்டும் வேலையில்லாக் கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிட முடியாது என்பதைக் காட்டுவதற்கு இந்தப் புள்ளி விவரங்களே போதுமானவை. மேலைநாட்டு முறையில் இந்தியாவை ஆலைத் தொழில் மயமாகச் செய்வதற்கான திட்டங்களைக் காந்திஜி தீண்டிக்கூடப் பார்க்க மறுப்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம்.

## விநியோகிக்கும் பிரச்னை

வேலையில்லாத பிரச்னையைத் தீர்ப்பது ஒருபுறம் இருக்க, பொருள்களை விநியோகிக்கும் முறையைக் கவனித்தும் காந்திஜி குடிசைத் தொழில்களையே விரும்புகிறார். அவர் கருத்து இதுதான் :

'மனித சமூகத்தின் தேவைகள் எல்லாவற்றையும் யந்திரங்கள் பூர்த்தி செய்துவிடும் என்று வைத்துக்கொண்டே பார்ப்போம். அப்போதும், பொருள் உற்பத்தி குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே குவிக்கப்படும். அதனால் உற்பத்தியான பொருள்களை ஒழுங்குபட வினியோகிப்பதற்கு (நேர்முகமாக இல்லாமல்) ஒரு சுற்று வழியைக் கைக்கொள்ள வேண்டியிருக்கும். பொருள்கள் தேவையுள்ள இடங்களில், ஆங்காங்கே உற்பத்தியும் வினியோகமும் சேர்ந்து நடைபெற்றால், வினியோகம் தானாகவே ஒழுங்குபடுகிறது, பித்தலாட்டத்திற்கு இடம் குறைகிறது, (லாபமடிக்கும் நோக்கத்துடன்) பின்னால் விலையில் ஏற்படக் கூடிய உயர்வு - தாழ்வை உத்தேசித்துச் செய்யும் சூதாடித்தனமான போக்கிற்கு இடமில்லாமலே போகிறது.' *

'பொருள் உற்பத்தி அந்தந்த ஸ்தலத்தில் நடந்தால், அதாவது உற்பத்தியும் வினியோகமும் சேர்ந்து நடந்தால், வினியோகத்தைச் சமமாகச் செய்யமுடியும்' என்று காந்திஜி சொல்லுகிறார்.

அபேதவாதிகளின் முறைப்படி வினியோகிப்பதைக் காந்திஜி ஆதரிக்கவில்லை :

'இப்பொழுது சோவியத் ரஷ்யாவில் நடப்பது போல், தொழில்களை அரசாங்கமே நடத்துவது பற்றி, அதாவது, பொருள் உற்பத்தியையும் வினியோகத்தையும் அரசாங்கம் தன் அதிகாரத்தில் வைத்துக்கொண்டு ஒழுங்குபடுத்தும் பொருளாதார முறையைப் பற்றி நான் அபிப்பிராயம் சொல்ல வேண்டும் என்று கேட்கிறீர்கள். சரிதான். அங்கு நடப்பது ஒரு புதிய பரீட்சை. அது முடிவில் எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்பது எனக்குத் தெரியாது. அது பலாத்காரத்தை அடிப்

* 'ஹரிஜன்', 9-11-1934.

படையாக் கொண்டிராவிட்டால் அதனிடம் நான் மிகுந்த பிரேமை கொண்டிருப்பேன். ஆனால் இன்று அது ஹிம்ஸையை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், அது நம்மை எங்கே, எவ்வளவு தூரம் கொண்டுபோய் விடும் என்பது எனக்குத் தெரியவில்லை.' *

பிரசித்திபெற்ற ஒரு பொருளாதார நிபுணர் கூறுவது போல், 'பெரிய யந்திர ஸ்தாபனங்கள் தனி நபர்களின் உடைமையாக இருந்தால், அமோகமான தொழில் வளர்ச்சியும் ஏகபோக உரிமைக்கான போட்டியும் ஏற்படுகின்றன; ஆனால் அவை பொதுவுடைமையாக இருந்தால், வேறொரு பிரம்மாண்டமான அசுரனைச் சிருஷ்டித்துவிடும்; அந்த அசுரனின் சக்தி பச்சாத்தாபம் இல்லாமலே கொடுமையாகத் துர்விநியோகம் செய்யப்படும்.' சோஷலிஸ விநியோகத்தில் ரஷ்யாவில் நடப்பதைப் போன்ற அடக்குமுறையைக் காந்திஜி விரும்பவில்லை. குவியல் - உற்பத்தி முறையில் பொருள்களைத் தயாரித்து, பிறகு அவற்றைச் சமமாக விநியோகிப்பது என்ற முறையினால், பொருளாதார நிர்வாகத்தில் புது அதிகாரவர்க்கம் தோன்றி வளர்ச்சியடைகிறது; அந்த வர்க்கம் ஒரு சிறு கூட்டத்தின் சர்வாதிகாரமாக மாறும் இயல்புடையது.

ஆகவே காந்திஜி, பொருள்களைப் பெருவாரியான முறையில் ஏராளமாக உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, பரவல் - உற்பத்தி முறையில் சிறு தொழில்களின் மூலம் பெருவாரியான ஜனங்கள் பொருள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். கதர் உற்பத்திபற்றி அவர் குறிப்பிடுகையில் கூறுவதாவது:

'அது பெருவாரியான உற்பத்திதான், ஆனால் ஜனங்கள் தங்கள் சொந்த வீடுகளில் செய்யும் பெருவாரியான உற்பத்தி. ஒவ்வொரு நபரும்

* 'ஹரிஜன்'; 2-11-1934.

உற்பத்தி செய்வதைக் கோடிக் கணக்கில் பெருக்கினால், அளவிடுவதற்கு அரிதான பெருவாரியான உற்பத்தியாகத்தானே இருக்கும்? ஆனால் நடைமுறையில் "பெருவாரியான உற்பத்தி" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதாவது, சாத்தியமான வரையில் குறைந்த அளவு நபர்களைக் கொண்டு நுணுக்கமான பெரிய யந்திர சாதனங்களின் மூலம் செய்யும் உற்பத்தி. இந்த வழி தவறானது என்று நான் முடிவுகட்டியிருக்கிறேன். கோடிக்கணக்கான வீடுகளில் பரப்புவதற்கு எளிதான மிகச் சாதாரணமான அமைப்பிலேயே யந்திரம் இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்.' *

## தேசப் பாதுகாப்பு

வெளிநாட்டாரின் தாக்குதலிலிருந்து தேசத்தைக் காப்பாற்றுவதற்கான பாதுகாப்புத் தேவைகளைக் கொண்டு கவனித்தாலும், தொழில்களைப் பரவலாகவும், கிராமாந்தரங்களில் நடைபெறும்படியும் அமைத்தல் மிகவும் முக்கியம். குவியல் முறையிலுள்ள தொழில்கள் விமானத் தாக்குதலுக்கு எளிதான இலக்குகள்; தொழிற் பெருக்கமுள்ள சில ஸ்தலங்களை அழித்துவிட்டால், தேசத்தைப் பாதுகாப்பது அதிகக் கஷ்டமாவதுடன், தேசத்தின் பொருளாதார வாழ்வு முற்றிலும் தடைப்பட்டு ஸ்தம்பித்து நின்றுவிடும். இந்தக் காரணத்தினால், தொழிற் பெருக்கமுள்ள பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான் போன்ற தேசங்கள் தங்கள் பொருளுற்பத்தியைப் பரவல் முறையில் பிரித்தமைத்து, பொருளாதார முனையில் தங்களுக்குப் பலவீனம் ஏற்பட்டுவிடாதபடி காத்துக்கொள்ள இப்பொழுது திட்டம் வகுத்து வருகின்றன. வலிமை மிகுந்த ஜப்பானியத் தாக்கலைச் சீனா வெற்றியுடன் சமாளித்து வருவதன் ரகசியம் என்ன

* 'ஹரிஜன்'; 2-11-1934.

வென்றால், அது வியக்கத் தக்க முறையில் 'கூட்டுறவுத் தொழில் ஸ்தாபனங்களை' நாடெங்கும் நிறுவியிருப்பது தான். இந்தியா எதிர்காலத்திற்கு வேண்டிய திட்டத்தை இனிமேல்தான் தயாரிக்கப் போகிறது; ஆகையால் மற்ற நாடுகள் செய்த தவறுகளை நாமும் திரும்பச் செய்துகொண்டிருப்பது அறிவீனமல்லவா? பம்பாய், ஆமதாபாத் போன்ற பெரிய நகரங்களில் நெசவாலைகளைக் குவிப்பதைவிட ஒவ்வொரு கிராமத்திலும் குடிசைகளில் கதர் உற்பத்தியைப் பெருக்குவது மேலானது அல்லவா? காந்திஜி கூறுவதாவது:

'1,900 மைல் நீளமும், 1,500 மைல் அகலமும் உள்ள இந்தியாவின் பல பாகங்களிலும் சிதறிக் கிடக்கும் ஏழு லட்சம் கிராமங்களிலும் வசிக்கும் கோடிக் கணக்கான மக்கள், தங்கள் உணவைத் தயாரிப்பது போலவே தங்களுக்குத் தேவையான உடையையும் தாங்களே தயாரித்துக்கொள்வது எந்தக் காலத்திலும் மேலானது, அபாயத்திலிருந்து ரட்சிப்பது. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களின் உற்பத்தியில் இந்தக் கிராமங்களுக்கு ஆதிக்கமில்லாவிட்டால், இவைகள் பண்டைக் காலத்திலிருந்தே அனுபவித்து வரும் சுதந்திரத்தைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள முடியாமற் போகும்.'*

## உற்பத்திச் செலவு

தொழில்களைப் பெரிய அளவில் யந்திர மயமாக்க வேண்டும் என்று சொல்பவர்கள், கையால் உற்பத்தி செய்யும் பொருள்களைவிட ஆலைகளில் உற்பத்தி செய்யும் பொருள்களின் அடக்கவிலை அதிகக் குறைவாயிருப்பதாக வாதிக்கிறார்கள். ஆலைகளுக்கு வெளியிலும் உள்ளேயும் கையாளப்படும் சில சிக்கன முறைகளால் ஆலைப் பொருள்களின் உற்பத்திச் செலவு குறைவாக இருப்பது

* 'யங் இந்தியா'; 2-7-1931.

இதற்குக் காரணமாம். ஆனால் இது தவறான வாதமே. இது சம்பந்தமாக டாக்டர் கியான்சந்த் மிகவும் பொருத்தமாகக் குறிப்பிட்டிருக்கும் விஷயம் வருமாறு:

இந்த வாதத்தில், அடக்கவிலையை நிர்ணயிக்கும் முறையும் தவறு, அடக்கவிலை குறைவு என்று யூகித்திருப்பதும் தவறு. மேலும் இது தவறான அளவைகளைக் கொண்டு மதிப்பிட்டுக் கூறியதாகும். ஏனெனில், ஜன சமூகத்தை மனத்தில் கொண்டு பார்த்தால், யந்திர மயமாக்குதல் மிக அதிகமான பொருட் செலவுக்குக் காரணம். யந்திர மயமாக்குதல், வசிப்பதற்கு லாயக்கற்ற இருளடைந்த குடிசைகளைப் பெருக்குகிறது, வாழ்க்கையிலும் வேலையிலும் இழிவான நிலைமைகளை உண்டாக்குகிறது. யந்திர முறையில் அமைப்பும் உற்பத்திச்சாலைகளை நிர்வகித்து நடத்துவதற்காக ஏற்படுத்தும் அமைப்பு, சமூகத்தினால் சகிக்கமுடியாத வடுக்களையும் நிர்ப்பந்தங்களையும் உண்டாக்குகிறது. ஆகையால் அந்த அமைப்பு நீடித்து நிலைத்திருக்கமுடியாமல் அடிக்கடி முறிந்து போய், அபாயகரமான குழப்பங்களுக்குக் காரணமாகிறது. ஆலைத் தொழிலின் உற்பத்திச் செலவை மதிப்பிடுவதில் இவைகளைப் பொருள் சேர்த்துப் பார்க்கவேண்டும். [illegible]

[illegible]

மத்திய மாகாணத்தில் தொழில் நிலைமையைப் பரிசோதனை செய்து, ஆசிரியர் குமரப்பா, தொழில் பரிசீலனைக் கமிட்டிக்காகத் தயாரித்த தமது அறிக்கையில் குறிப்பிடுவதாவது:

'ஆவியால் உற்பத்தி முறை, தனக்குத் தேவையுள்ள மூலப் பொருள்களைத் தொலையிலுள்ள இடங்களிலிருந்து சேகரிப்பதாலும், குறிப்பிட்ட ஓரிடத்திலேயே உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்வதாலும், அது போக்கு - வரத்து வசதிகளையும் மூலப் பொருள்களின் உற்பத்தி வசதிகளையும் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்தக் காரியங்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையிலும் தொழிலிலும் தலையிடுவதாக இருப்பதால், இவைகளைத் தனி மனிதரின் ஆதிக்கத்திற்கு விட்டுவிட முடியாது. இத்தகைய அதிகாரங்கள் இல்லாமல் பெருவாரியான உற்பத்தி நடைபெற முடியாது........ஆதலால், ஆலைத் தொழில் உற்பத்தியில் செலவு குறைவாக இருப்பது உண்மையாயினும், உண்மையில், அந்த உற்பத்தி முறையின் செலவினங்களில் ஒரு பகுதி தேசத்தின் மொத்த வரி வருமானத்திலிருந்து கொடுக்கப் படுவதாலேயே அது குறைவாகக் காணப்படுகிறது. ஆகவே, ஆலைத் தொழில் க்ளின் மூலம் உற்பத்தியாகும் பொருள்கள் அதிக மலிவாயிருப்பதாக விவாதிப்பது அறியாமையேயாகும்.'

இதனால்தான் காந்திஜி, ஆலைத்துணி உற்பத்தியை உதாரணமாகக் கொண்டு, 'ஒரு கஜம் கதர், ஒரு கஜம் மில் துணியைவிட விலை கூடுதலாக இருந்தாலும், கதரின் சகல அம்சங்களையும், அதனால் கிராம வாசிகளுக்கு ஏற்படும் நன்மைகளையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கும் பொழுது, அதுவே காரியசாத்தியமான, மிகச் சிக்கனமான முறையாகும்; வேறு எதுவும் அதற்கு நிகராகாது' *

* 'ஹரிஜன்' ;20-6-1936.

என்று உறுதி கூறுகிருர். இவ்வாறே கையால் குத்திய அரிசி மில்லில் தீட்டிய அரிசியைவிட விலை அதிகமாக இருக்கலாம், ஆனல் தீட்டப்பட்ட மில் அரிசியால் ஜன சமூகத்தின் ஆரோக்கியத்தில் ஏற்படும் நஷ்டங்களையும் சேர்த்துப் பார்த்தால், அந்த அரிசியை மலிவு என்று சொல்ல முடியாது. இது போலவே தான் செக்கில் ஆட்டும் எண்ணெய்க்கும் மில்-எண்ணெய்க்கும் உள்ள வித்தியாசம். மேலும், பெரிய ஆலைத் தொழில்கள் ஒரே இடத்தில் குவிந்திருப்பதாலேயே அவைகளின் செலவுக்ளில் அதிகச் சிக்கனம் செய்ய முடிகிறது என்பதில்லை. செலவுகள் குறைவதற்குப் பெரும் பகுதி காரணமா யிருப்பவை, மூலப் பொருள் களை மொத்தமாக வாங்குவதும், உற்பத்தியான பொருள் களை மொத்தமாக் வெளியே அனுப்புவதும், அதிக மூல தனம் கிடைப்பதற்கு உள்ள வசதிகளும், ரயில் கட் டணங்களில் கிடைக்கும் சலுகையும், அரசாங்கத்தின் உதவி நிதிகளும், மற்றும் பல சௌகரியங்களுமே; இந்தச் சௌகரியங்கள் எல்லாம் சிறு அளவிலுள்ள தொழில்களுக்கோ, குடிசைத் தொழில்களுக்கோ இப் பொழுது கிடைப்பதில்லை. ஆனல் அரசாங்கமே, திட்ட மான முறையில், கிராமக் கைத்தொழில்களை ஏற்பாடு செய்வதாளுல், இத்தொழில்கள் ஆலைத்தொழில்களுடன் வெற்றிகரமாகப் போட்டி போட முடியும். வீட்டில் வைத்து உபயோகிக்கக் கூடிய மின்சார விசைத்தறிகள் மூலம் இந்தியாவில் ஏராளமான ஜவுளியை உற்பத்தி செய்ய முடியும் என்பதைப் பற்றி ஸர் விக்டர் ஸஸ்ஸூன் குறிப்பிட்டிருக்கிருர். அகில இந்திய ஜவுளி மில்காரர் களின் முதலாவது மகாநாட்டில் அவர் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது :

'சிறு மின்சார மோட்டார்களையுடைய லேசான மின்சார விசைத்தறிகளை உற்பத்தி செய்யும் தொழில் இந்த நாட்டில் அபிவிருத்தியடைவது மிகவும் சாத்தியமானதாகும். அப்படி உற்பத்தியாகும் பொழுது சொற்ப மூலதனமுடைய முதலாளி

கூட இந்தத் தறிகளிலும் மோட்டார்களிலும் சில வற்றை எளிதில் வாங்கிக் கொள்ள முடியும்...... இத்தகைய தறிகள் அமைந்த சிறு தொழிற் சாலைகள் துணி நயத்திலும் விலையிலும் எந்தத் தேசத் துடனும் போட்டியிட முடியும். அதிலும், இத்தகைய தொழில்கள் ஒரு கூட்டுறவு இயக்கமாக நடத்தப் பட்டால் மேலும் அதிகப் பயனுள்ளதாகும்.'

ஸர் விக்டர் முதலாளித்துவ முறையில் மேற்கூறிய பரவல் - தொழில் உற்பத்தி நடைபெறும் என்று எதிர் பார்த்திருக்கிறார். இந்த முறை விரும்பத்தக்கதன்று. பரவல் முறையில் அமைக்கப்படும் தொழிற்சாலைகள் சுயேச்சையாக நடைபெற்றாலும், சீனாவிலுள்ளவை போன்ற 'கூட்டுறவுத் தொழிற் சங்கங்களால்' ஒன்றோ டொன்றை இணைத்துவிடலாம். பரவல் முறையில் உற் பத்தியாகும் துணியின் நயத்தையும் விலையையும் ஆலைத் தொழில் உற்பத்தியுடன் ஸர் விக்டர் ஒப்பிட்டுக் கூறிய அபிப்பிராயம் மிகவும் குறிப்பிடத்தக்கது. தற்கால உலகத்தில், உச்ச நிலையிலுள்ள யந்திரத் தொழில் முதலாளிகளில் ஒருவராகிய ஹென்றி போர்டு கூட, 'பெரிய தொழிற்சாலை அமைப்பது சிக்கன முறை அல்ல என்பது பொதுவான ஒரு விதி' என்று ஒப்புக்கொண் டிருக்கிறார். 'பெரிய எடுப்பில் தொழில் நடத்துவோர், பொதுஜனங்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, தொழில் களை நாடெங்கும் சிதறியிருக்கும்படி அமைக்கவேண்டும்; ஏனென்றால், அதனால்தான் உற்பத்திச் செலவுகள் மிகக் குறைந்த அளவில் நிற்கும்; அத்துடன் உற்பத்திக் காகச் செலவழிக்கும் பணத்தையும் தொழிலாளரிடையே வினியோகிக்க முடியும்.'* இந்தப் பிரச்னைபற்றிய யந்திர சம்பந்தமான அம்சங்களையும், யந்திரம் வகுக்கும் முறை களையும் ரிசர்ட் கிரெக் தமது 'கதரின் பொருளாதாரம்' † என்ற நூலில் சம்பூரணமாக எழுதியிருக்கிறார்.

* 'My Life and Work - என் வாழ்க்கையும் வேலைகளும்.'
† 'Economics of Khaddar.'

## பிராணி நூலின் அத்தாட்சி

மனித வம்சவிருத்தி பற்றிய திருஷ்டியுடன் கவனித்தாலும், கிராம சமுதாயங்களைப் புனருத்தாரணம் செய்வது அவசியமாகும். முற்காலத்தில் மால்தூஸ் * என்பவர், ஜனத்தொகை அளவுக்கு மீறி அதிகரித்து விடுமே என்று பயந்து கொண்டிருந்தார்; ஆனால் தற்காலத்துப் பிராணி நூல் வல்லவர்களும், சமூக சாஸ்திர விற்பன்னர்களும், மனித சமூகமே நசித்துப் போய் விடுமோ என்று கவலைப்படக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், சென்ற சில வியாழவட்டங்களாகப் பல நாடுகளின் ஜனத்தொகை தொடர்ந்தாற் போல் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. நகரங்களில் வசிக்கும் செல்வர்களிடையே சந்தான அபிவிருத்திச் சக்தி நாட்டுப்புறத்திலுள்ள சாதாரண ஜனங்களிடையே இருப்பதைவிட மிகவும் குறைவாகவே இருக்கிறது என்பது சமூக சாஸ்திரத்தில் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ள விஷயம். ஆடம் ஸ்மித்தும், 'தேசங்களின் செல்வம்' † என்ற நூலில், 'பெண்பாலரின் ஆடம்பர வாழ்க்கை, இன்பம் அனுபவிக்கும் ஆசைத் தீயை வளர்க்கிறது; ஆனால், பிள்ளைப் பேறு அடைவதற்குரிய சக்திகளை எப்பொழுதும் பலவீனப்படுத்துகிறது; பல சமயங்களில் அச்சக்திகளை அழித்துவிடவும் கூடும் என்று தெரிகிறது' என்று எழுதியிருக்கிறார். இதற்குப் பல வகையான காரணங்கள் உண்டு. ஜனநெருக்கமுள்ள நகரங்களில் வசித்தால், சந்தான விருத்தியில் பெற்றோருக்கு இயற்கையாக இருக்கவேண்டிய விருப்பத்திற்குப் போட்டியாகச் சில்லறைக் கவலைகளும் வேறு பலவித போகங்களும் மக்களின் மனத்தைக் கவர்ந்துவிடுகின்றன. 'குடும்பக் கட்டுப்'

---

* Malthus – (1766 - 1834) பிரசித்தி பெற்ற பொருளாதார நிபுணர். ஜனத்தொகை எவ்வளவு வேகமாக அதிகரிக்கிறதோ அதே வேகத்துடன் பொருளுற்பத்தியும் வாழ்க்கை வசதிகளும் அதிகரிப்பதாகத் தெரியவில்லை என்று ஒரு சித்தாந்தத்தை ஏற்படுத்தி, அவர் சில எச்சரிக்கைகள் விடுத்தார்.

† 'Wealth of Nations.'

என்ற அமைப்பு நிலைபெற முடியாதவாறு, சமூக உறவு பற்றிய வேறு பல புது அமைப்புகள் குறுக்கிடுகின்றன. நகர்ப்புறங்களில் 'யந்திர மயமான உற்பத்தி முறை, வாழ்க்கையையும் ஒரு யந்திரம் போல மாற்றும் இயல்புடையதாக இருக்கிறது. அதன் பயனாக, சம்போகம் பற்றிய இயற்கையான உணர்ச்சிகளும், சந்ததி பெறும் நோக்கமும் அழிவடைந்து போகின்றன. பிரபல பிராணி நூல் ஆராய்ச்சியாளராகிய ஆங்கில ஆசிரியர் லான்ஸ்லாட் ஹாக்பென் இந்த நிலைமையைப்பற்றி நுட்பமாக ஆராய்ந்து கூறுவதாவது:

'கிராமாந்தரங்களில் மிருகங்கள் குட்டி போடுவதும், தாவரங்களிலிருந்து வேறு புதிய தாவரங்கள் உற்பத்தியாவதும் அடிக்கடி நிகழும் விஷயங்களாதலால், குழந்தைகள் இவைகளைப் பார்த்து அறிந்துகொண்டு வளர்வதால், அங்கே உயிர் எந்த முறையில் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது என்பது இயற்கையான நிகழ்ச்சியாகவே கருதப்படும். நகரத்திலோ, திட்டப்படி முறையாக நடந்துவரும் யந்திரம் போன்ற வாழ்க்கையில் பிரஜா உற்பத்தி, தேவையில்லாது குறிக்கிடும் ஓர் ஆஸ்பத்திரி வேலையாகக் கருதப்படும். மக்கள் (ஆண்களும் பெண்களும்) தமக்குள் எவ்வித சம்பந்தங்கள் கொண்டிருக்க் வேண்டும் என்பதற்கு யந்திரமே வழிகாட்டியாகிவிட்டது; யந்திரம் குட்டி போடுவதோ, குஞ்சு பொரிப்பதோ இல்லை அல்லவா!' *

அளவுக்கு மிஞ்சி ஜனப்பெருக்கம் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி, பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று மால்தூஸ் கூறிய 'மாயக் கதை'யை இன்னும் நம்பிக்கொண்டிருக்கும் சமூக சாஸ்திர ஆராய்ச்சியாளர், முதலாளித்துவத்தை ஒழித்துவிட்டால் ஜனத்தொகைப் பிரச்னை தானே தீர்ந்துபோகும் என்று

---

* 'What is Ahead of Us?' - by Lancelot Hogben - 'வருங்காலத்தில் நமக்கு என்ன நேரும்?' - பக்கம் 184.

எளிதாக நம்புகிறார்கள். ஆனால், ஆசிரியர் ஹாக்பேன் எடுத்துக் காட்டுவது போல், நகரப் பிராந்தியங்களில் சந்தான விருத்திக்கான ஆற்றல் குறைந்திருப்பது முதலாளித்துவம் என்ற அமைப்பால் மட்டும் ஏற்பட்ட பலனல்ல; இதற்குப் பிரதானமான காரணம் நவீன யந்திரத் தொழில் முறையும், அதன் விளைவுகளுமே. ஆகவே பிராணி நூல் அறிஞர்கள், 'மனித சமூகம் அழிந்துவிடாமல் இருக்க வேண்டுமே' என்பதில் அக்கறை கொண்டு, 'கிராமத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்' என்று பிரசாரம் செய்யும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

## கிராமாந்தரப் பொருளாதார நிர்வாகம்

கிராமாந்தர விவசாய வாழ்வின் பொருளாதாரத் தத்துவங்களைக் கருத்தில் வைத்து நோக்குமிடத்தும், சுய-தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய சிறு கிராம சமுதாயங்களை அமைப்பது கஷ்டமான காரியமல்ல. எந்த விதமான தாவரங்களையும் எந்த இடத்திலும் வளர்த்து நம் இஷ்டம்போல் பலன் கொடுக்கும்படி செய்யும் ஆராய்ச்சி சமீப காலத்தில் விசேஷ வளர்ச்சியடைந்திருக்கிறது. இப்பொழுது எல்லாத் தேசங்களும் பலவகைப் பயிர்களும் தங்கள் நிலங்களிலேயே உண்டாகும்படி செய்துகொள்ள முடியும்; இதனால் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய கவலை இல்லை. பயிர்களைப் பற்றிய ஆராய்ச்சியின் பயனாக, நாடுகள் மட்டுமல்லாமல், அவைகளிலுள்ள சிறு பிராந்தியங்கள்கூடத் தமக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் தாமே விளைவித்துக்கொள்ள முடியும். கலிபோர்னியா நகரத்திலுள்ள ஆசிரியர் கெரிக் * உழவு இல்லாமலே விவசாயம் செய்யும் புதுமுறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இம்முறையை இன்னும் பரீட்சை பார்த்து முடியவில்லை. இது வெற்றிகரமாகிவிட்டால், தற்காலக் கிருஷி சாஸ்திரத்திலே இது பெரும் புரட்சியை உண்டாக்கிவிடும்;

* Prof. Gerick.

இதன் மூலம், குறுகிய அளவுள்ள இடத்தில், குறைந்த நபர்களைக் கொண்டு, அதிக உணவுப் பொருள்களை விளைவிக்க முடியும். இந்த விஷயத்தைப்பற்றி மேலும் விவரமாகத் தெரிந்துகொள்ள விரும்புவோர், டாக்டர் வில்காக்ஸ் எழுதிய 'சமூகங்கள் தத்தம் நாட்டிலேயே தங்கியிருக்க முடியும்' * என்ற புத்தகத்தைப் படிக்கலாம்.

புகழ்பெற்ற அமெரிக்க சமூக சாஸ்திர விற்பன்னரான லூவிஸ் மம்போர்ட் எழுதியுள்ள 'நாகரிகமும் உபகரணங்களும்', 'நகரங்களில் காணும் பண்பு' † என்ற நூல்களில், பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்கள் பயனுள்ளவையாக இருந்த காலம் போய்விட்டது என்றும், இனி அநாவசியம் என்றும் முடிவு கட்டியிருக்கிறார். சமீப காலத்து விஞ்ஞான அறிவு மிகவும் முன்னேறிப் பல புதுமைகள் சாதிக்கப்பட்டிருப்பதால், இப்போது நாட்டுப்புறங்களில் தோட்டங்களோடு கூடிய சிறு 'சோலை-நகரங்க'ளில் சிறு தொழிற்கூடங்களை § நிறுவினால், அவைகள் சமூகத்திற்கும் தொழில்களுக்கும் அடிப்படையான அமைப்புகளாக விளங்குவது சாத்தியமாகிவிட்டது என்பது அவருடைய அபிப்பிராயம். சில வருஷங்களுக்கு முன்பு கிரபாட்கினும் இதே உண்மையை வற்புறுத்திக் காட்டுவதற்காக, மிக விரிவான ஆராய்ச்சியுடனும், விஷயச் செறிவுடனும் இரண்டு புத்தகங்களை

---

* 'Nations Can Live at Home'— Dr. Willcox.

† 'Technics and Civilisation' and 'The Culture of Cities'— Lewis Mumford.

§ தொழிற்கூடம் (workshop) என்பது தொழில் செய்யும் வீடு அல்லது அறை; இது கிராமங்களில் விவசாயம் செய்யும் நிலங்களுக்கு அருகிலே இருக்கும். தொழிற்சாலை (factory) என்பது பெரிய யந்திரங்களுடன் ஏராளமான தொழிலாளரைக் கொண்டு வேலை நடத்தும் இடம்; இது அநேகமாக நகரங்களிலே இருக்கும்.

எழுதினார்: அவை 'உணவு சம்பாதித்தல்,' 'வயல்கள், தொழிற்சாலைகள், தொழிற்கூடங்கள்.' *

## சர்வதேச அமைதி

பரவலான கூட்டுறவுத் தொழில் முறையானது, பிராணி நூல் ஆதாரங்களின்படியும், சமூக சாஸ்திர ஆதாரங்களின்படியும் அவசியமாகிவிட்டதோடு, சர்வதேச அமைதிக்கும் நேசப்பான்மைக்கும் அது அவசியமாகிறது.

பெருவாரியான பொருள் உற்பத்தி—அது அரசாங்க ஆதிக்கத்தில் நடந்தாலும் சரி, தனி நபர்களால் நடத்தப் பெற்றாலும் சரி—வெளி நாட்டு மார்க்கெட்டுகளைத் தேடி அலையும் வெறிபிடித்த போட்டியில் கண்டிப்பாகக் கொண்டு சேர்த்துவிடுவதாக இருக்கிறது; இந்தப் போட்டி, உடனேயோ சிறிது காலத்திற்குப் பிறகோ, இரத்த வெறி கொண்ட யுத்தங்களிலும், கொடிய படுகொலைகளிலும் போய் முடிகிறது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளின் துயர அனுபவம் இதுதான். இவ்வாறு லாபம் தேடும் பேராசைதான் சென்ற யுத்தத்திற்கும், தற்கால யுத்தத்திற்கும் மூலகாரணம். பெரிய அளவில் அமையும் யந்திரத் தொழிலுக்கு இந்தப் போக்கு இயல்பாக உண்டு. சமீபத்தில் ஸோவியத் ருஷியாவால் ஏற்பட்ட அனுபவமும் கவலையையே உண்டாக்குகிறது. நேச நாடுகளுக்குள்ளே 'யுத்தப் பிற்கால மார்க்கெட்டுகள்' பற்றி, இப்பொழுதே தீவிரமான சர்ச்சைகளும் உஷ்ணமான விவாதங்களும் நடந்து வருகின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் மார்க்கெட்டுகளைப் பற்றி காமன்ஸ் சபையில் சமீபத்தில் நடந்த விவாதம் நமக்கெல்லாம் விஷயத்தை வெட்டவெளிச்சமாக்கிவிட்டது. இதனால்தான் தற்போதுள்ள 'சர்வதேசப் பொருளாதார அமைப்பை'க் காந்திஜி கண்டிக்கிறார். சர்வதேச வியாபாரம் என்பதை அவர் எதிர்க்க

* 'The Conquest of Bread' and 'Fields, Factories and Workshops'—Prince Kropotkin.

வில்லை; ஆனால் அது பல நாட்டார்களின் உண்மையான தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும், அதற்கு அடிப்படை பரஸ்பர நன்மையாக இருக்கவேண்டும் என்பதே அவர் அபிப்பிராயம். இவ் விஷயம் முன்னரேயே குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், ஏகாதிபத்தியங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண் டிருக்கும் இக்காலத்தில், இது நடைபெறவே முடியாது என்று சொல்லிவிடலாம். ஆகவே காந்திஜி, இந்தியா தன் பொருளாதாரத் திட்டத்தை அமைப்பதில், சமாதானத்தையும், தம் தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்வதையும் நோக்கமாகக் கொள்வதுடன், நாம் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்காக உலக மார்க்கெட்டுகளில் ஆசை கொள்ளாமலும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். 'இந்தியா யந்திரத் தொழில் மயமாகச் செய்யப்பட்டால், சுரண்டுவதற்கேற்ற வேறு நாடுகளைப் பிடிப்பதற்காக நாதிர்ஷா*வைப் போன்றவர்கள் நமக்கு அவசியமாயிருப்பார்கள் என்பது உங்களுக்குப் புலப்படவில்லையா? ஆதலால், பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா, இத்தாலி ஆகிய நாடுகளின் கடற்படைப் பலம், ராணுவ பலம் முதலியவற்றை எதிர்த்து நாம் போட்டியிட வேண்டியிருக்குமல்லவா? இந்தப் போட்டிகளை நினைக்கும்போதே என் தலை கிறுகிறுக்கிறது.' † தேசியத் திட்டக் கமிட்டியும், (காந்திஜியின் கருத்தை அனுசரித்தே) தன் நோக்கங்களைப் பின்கண்டவாறு விளக்கியிருக்கிறது: 'தேசம் முழுவதற்கும் உள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்; ஆனால் இம் முயற்சிகளின் பயனைப் பொருளாதார முறையிலுள்ள ஏகாதிபத்தியப் போட்டிச் சுழலில் இந்தியா சிக்கிவிடவும் கூடாது.' சீனாவில் நடைபெற்று வரும் 'கூட்டுறவுத் தொழில் இயக்க'த்தைப் பற்றி விவரிக்கையில் நிம் வேல்ஸ் ¶ அம்மையார் குறிப்பிடுவதாவது:

* நாதிர்ஷா-பாரசீக தேசத்து அரசன்; 1739-ல் இவன் இந்தியாவை ஆக்கிரமித்துச் சூறையாடினான்.

† 'ஹரிஜன்'; 29-8-1936.

¶ Nym Wales.

'(ஆ) ஓர் ஏகாதிபத்திய மோகங்கொண்ட வல்லரசு தாக்கிவிடக் கூடாது என்பதும், ஜப்பானியர்கள் பிற்காலத்தில் நாடுகள் பிடிப்பதற்கு அதை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளும்படி அது இருந்துவிடக் கூடாது என்பதும் முக்கியமான விஷயம். இதற்கு இடம் கொடாமல், நாட்டின் உட்பகுதிகளில் ஜனநாயக முறையில் தொழில்களைப் பெருக்கினால், இந்த அபாயம் நீங்கிவிடும். தேச நன்மைக்குத் தக்க ரீதியில் நிரவலாக அமைக்கப்படும் அத்தொழில்கள் வெளி நாடுகளுடன் போட்டியிடுவதாக இருக்கமாட்டா; ஆனால் அவை உள்நாட்டில் மக்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் (பொருள் வாங்கும் சக்தியைப் பெருக்கும்); இவ்வாறு தயாராகும் பொருள்களுக்கு உள்நாட்டிலேயே மார்க்கெட்டு ஏற்படும்; வெளி நாட்டு வர்த்தகமும் சமத்துவ முறையில் போட்டியின்றி நடைபெறும்.'

## இதர அத்தாட்சிகள்

இவ்வாறாக, குடிசைத் தொழில் முறையை ஆதாரமாகக் கொண்ட கிராமப் பொதுவுடைமை வெறும் காந்தீயப் பித்து அல்ல என்பது புலனாகிறது; பற்பல முறைகளைக் கொண்டு பரிசீலனை செய்தாலும், அது பொருத்தமாவும், காரண - காரியத் தொடர்புள்ளதாகவும் காணப்படுகிறது. சமீப காலத்தில், மேலைநாடுகளிலுள்ள முக்கியமான எழுத்தாளர், சிந்தனையாளரில் பலரும், நேர்முகமாகவும் குறிப்பாகவும் அதை ஆதரித்து வருகின்றனர். பிரிட்டிஷ் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கர்த்தாவான ஸர் வில்லியம் பெவிரிட்ஜ், இந்தியாவுக்கும் அதுபோன்ற ஒரு திட்டம் தேவை என்பது பற்றி விவாதிக்கும்பொழுது கூறியதாவது:

'இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்படக்கூடும்; ஆனால் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் காணப்படும் கோரமான நகரங்களைப் போல்

அங்கும் ஏற்பட்டுவிடாதபடி, பரவல் முறையில் தொழில் நாடெங்கும் முறையாகப் பிரித்து அமைக்கப்பட வேண்டியது அவசியம்.'

புகழ்பெற்ற பிரெஞ்சுப் பொருளாதார நிபுணரான ஹயாஸிந்த் டுப்ருல்,* 'மிகப் பெரிய தொழில் முயற்சிகளையும் பரஸ்பரம் இணைக்கப்பட்ட சுதந்திரமான சிறு சிறு ஸ்தாபனங்களைக் கொண்டதாக ஏற்படுத்த முடியும்' என்பதைக் காட்டியிருக்கிறார். அத்தகைய அமைப்பினால், சம்பந்தப்பட்ட தொழில்களில் உற்பத்தித் திறமை குறைந்துபோய்விடாது என்பதற்கும், அதிகரிக்கவும் கூடும் என்பதற்கும் அவர் காரணங்கள் காட்டியிருக்கிறார். பிரசித்திபெற்ற ஐரோப்பிய அறிஞரான கலேர்கி, 'மனிதனை எதிர்க்கும் சர்வவியாபக அரசாங்கம்' என்ற நூலில், யுத்தத்தால் தளர்ந்து நொந்துபோன உலகத்திற்குக் கதிமோட்சம் ஏற்புடுவதற்கு, 'விவசாயக் கூட்டுறவு ஸ்தாபனங்கள்' அமைப்பதே முடிவான நிலையான பரிகாரம் என்று யோசனை கூறியிருக்கிறார். 'பொருளாதாரப் புரட்சி' ஒன்று ஏற்படவேண்டியதன் அவசியத்தைப் பற்றி அவர் கூறுவதாவது:

'அதற்குச் சுதந்திரமான பொருளாதார அமைப்பும் கூட்டுறவு முறையும் அவசியம். அந்த அமைப்பு சுயேச்சையாக வேலை செய்யவும் சக்தி வேண்டும். சுதந்திரமான எத்தனை சிறு ஸ்தாபனங்களை அமைக்க முடியுமோ அத்தனையையும் அமைத்து, கூட்டுறவுத் தத்துவத்தின் மூலம் அவைகள் எல்லாம் ஐக்கியப்பட்டு நடைபெறும்படி செய்வதே பொருளாதாரப் புரட்சியின் நோக்கம். பொருளாதார அராஜகத்தையும், கூட்டுத் தொழில் முறையையும் † அது நிராகரிக்கிறது.

* Hyacinthe Dubreuil.

† நிலம் முதலியவைகளைச் சமுதாயப் பொதுவாகக் கொண்டு, எல்லோரும் சேர்ந்து உழைத்து, விளைவைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளும் முறை.

விவசாயக் கூட்டுறவு ஸ்தாபனங்களை மாதிரியாகக் கொண்டு, தொழில்களிலும் அது ஏற்பாடு செய்யும். இத்தகைய ஸ்தாபனங்களில், தனிச் சொத்துரிமையில் உள்ள நன்மைகளுடன், சகோதர பாவம், பரஸ்பர உதவி என்ற அம்சங்களும் ஒருங்கே சேர்ந்து அமையும்.'

நாட்டுப்புறத்தை அடிப்படையாய்க் கொண்ட பண்பாட்டின் (நாகரிகத்தின்) அவசியத்தைப்பற்றி, நம் நாட்டிலும், டாக்டர் ராதாகமல் முகர்ஜி * 'நவீன் இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னைகள்' என்ற நூலின் முன்னுரையில் வற்புறுத்தியிருக்கிறார் :

'இந்தியாவில் திட்டத்துடன் அமைக்கப்படும் பொருளாதார முறையின் நோக்கம் எதுவாக இருக்கவேண்டும்? பாஸிஸ நாடுகளைப் போல், பொருளாதாரத் துறையில் (பொதுஜன நன்மையைப் பிரதானமாகக் கருதாமல், சர்க்காரின் ஆதிக்கத்தை நிலைநாட்டி, பிறநாடுகளின் சம்பந்தமில்லாமலே வாழவேண்டும் என்ற லட்சியத்துடன்) எல்லாவிதப் பொருள்களையும் தம் நாட்டிலேயே தயாரிக்கவேண்டும் என்ற சித்தாந்தத்தையோ, ஆக்கிரமிப்புக் கொள்கையையோ கடைப்பிடிக்கலாகாது. ஜனநாயக நாடுகளில் (பிரிட்டன் அமெரிக்கா முதலியவற்றில்) ஒரு சிறு கோஷ்டியான முதலாளி வகுப்பினரின் சக்தியையும் சுபிட்சத்தையும் ஆதாரமாகக் கொண்ட ஒரு பொருளாதார ஏகாதிபத்தியக் கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது; அதுவும் இந்தியாவுக்கு ஏற்றதன்று. ஸோவியத் ரஷ்யாவில் காணப்படுவது போன்று, நாடெங்கும் ஒரே மாதிரியாக விளங்கும் - ஒரே அச்சில் வார்க்கப்பட்ட - வெறும் லோகாயதமான கலைப்பண்பும் நமக்குச் சரியானதன்று. இந்தியாவில் பொருளாதாரத் திட்டம்

* லக்ஷ்மணபுரி சர்வகலாசாலைப் பேராசிரியர்.

வகுப்பதில் இரண்டு நோக்கங்கள் இருக்க வேண்டும்: ஒன்று, அமைதி நிறைந்த விவசாயப் பண்பாட்டின் பொருளாதார மூலபலத்தை விரிவு படுத்துவதன் மூலம் தேசத்தின் தற்காப்புச் சக்தியை நன்கு அமைப்பது; மற்றது, பொருளாதார மாற்றங்களால் ஏற்படும் புது நிலைமைகளில், இந்தியா தன் புராதன ஒழுக்கங்களையும் சமூக தர்மங்களையும், பூரணமாகவும் சுயேச்சையாகவும் வளர்த்து மலரச் செய்வதற்கு வேண்டிய வசதி.'

இந்தியப் பொருளாதார அமைப்பில் குடிசைத் தொழில்களின் முக்கியத்தைப்பற்றி பம்பாய்த் திட்டக்காரர்களும் கவனிக்காமல் விட்டுவிடவில்லை :

'தொழில்களைப் புனர் நிர்மாணம் செய்வதில், பெரிய யந்திரத் தொழில்களுடன், சிறு அளவிலுள்ள தொழில்களும், குடிசைத் தொழில்களும் வளர்ச்சி பெறுவதற்குப் போதுமான இடமளிக்க வேண்டும் என்பது எங்கள் திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று. இவ்வாறு குடிசைத் தொழில்களையும் சிறு அளவிலுள்ள தொழிற்சாலைகளையும் வளர்ப்பதன் மூலம் பலருக்கு வேலை கிடைக்கும். இதிலுள்ள முக்கியம் இவ்வளவோடு நிற்கவில்லை; ஆரம்பதசையில் மூலதனத் தேவையை, முக்கியமாக வெளிநாட்டு மூலதனத் தேவையைக் குறைப்பதற்கும் இந்த முறை மிகவும் பயன்படும்.'

திட்டம் வகுத்தவர்கள் இந்த அபிப்பிராயங்களைக் கூறியிருந்த போதிலும், கிராமக் கைத்தொழில்களைப் பற்றிய அவர்களுடைய கருத்து தெளிவாகப் புலப்படவில்லை என்று என் மனத்தில் பட்டதை அப்படியே குறிப்பிடவேண்டியிருக்கிறது. பம்பாய்த் திட்டக்காரர்களின் நோக்கம் என்ன? சில சௌகரியங்களை உத்தேசித்து, திட்டத்தின் ஆரம்பதசையில் மட்டும் இவைகளுக்கு (சிறு அளவிலுள்ள தொழிற்சாலைகளுக்கும்

குடிசைத் தொழிலுக்கும்) இடம் கொடுக்கலாம் என்பது அவர்களது கருத்தா? அல்லது, தேசத்தின் பொருளாதாரம் செழுமையான முறையில் அமைவதற்கு இவை வளர்வது விரும்பத்தக்க ஓர் லட்சியம் என்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? மூலதனத் தேவைகளைக் குறைப்பதற்காக, இடைக்காலத்திற்கு மட்டும் இவற்றை வளர்த்துவிட்டு, பிறகு இவற்றிற்குப் பதிலாகப் பெரிய யந்திரத் தொழில்களைப் புகுத்துவது அவர்களது நோக்கமாக இருந்தால், அந்தத் திட்டத்தின் மனப் பான்மையிலேயே அடிப்படையான மாறுதல் அவசியம்.

## சீனாவிலே

யுத்தத்தால் நலிந்துபோன சீனாவிலே குடிசைத் தொழில் முறை உன்னதமாக வெற்றியடைந்திருக்கிறது. 'சீனா ஜனநாயகத்திற்குத் தயாராகிறது'* என்ற தமது புத்தகத்தில் நிம் வேல்ஸ் 'கூட்டுறவுக் கைத்தொழில் ஸ்தாபனங்கள்' (Industrial Co-operatives) வேலை செய்யும் முறைகளைப்பற்றி மிகவும் ரஸமான முறையில் விவரித்திருக்கிறார். (இந்த ஸ்தாபனங்களை 'இன்டஸ்கோ-Indusco' என்று சுருக்கமாக அழைப்பது வழக்கம்.) 1938-ம் வருஷத்திற்கு முன்பே ஜப்பானிய ராணுவ யந்திரம் தொழில்களில் 100-க்கு 80 வரை அழித்துவிட்டது; அதனால் ஆயிரக் கணக்கான தொழிலாளர் வசிக்க வீடில்லாமலும், பிழைக்கத் தொழிலில்லாமலும் திண்டாட வேண்டியதாயிற்று. சீனாவின் எதிர்காலம் என்ன ஆகப்போகிறதோ என்ற கவலையான நிலைமை ஏற்பட்டிருந்தது. தேசீய சரித்திரத்தில் மிக நெருக்கடியான அந்த நேரத்தில்தான் சில சீன இளைஞர்கள், ரேவி ஆலி† என்பவர் தலைமையில் கூடி, சீனாவின் மத்தியப் பிரதேசங்களில் கூட்டுறவு முறையில் 'கொரில்லாத்

* 'China Builds for Democracy.'

† Rewi Alley.

'தொழில்'களை* அமைக்க ஒரு திட்டம் வகுத்தனர். அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களே இப்பொழுது சீனாவின் செல்வமாகவும் பெருமையாகவும் விளங்குகின்றன. அவைகள் அந்நியரின் ஆக்கிரமிப்பு புகமுடியாதபடி தேசப் பாதுகாப்புக்கு அரண்களாக விளங்கியதோடு, தேசத்தின் பொருளாதார அமைப்பு முழுதும் விமான குண்டுகளால் தகர்த்தெறியப்பட்டுத் தூள் தூளாகச் சிதறிய நேரத்தில், தேசமக்களின் தினசரி உபயோகத்திற்குத் தேவையான சகல பொருள்களையும் அவைகளே தயாரித்துக் கொடுத்து, அவர்களின் ஜீவாதாரமாக விளங்கி வந்தன. சீனாவில் இப்பொழுது ஆயிரக் கணக்கான சிறு கூட்டுறவு-சமுதாயங்கள் முளைத்திருக்கின்றன. இவை பொருளாதாரத்தில் சுயேச்சையாக நடப்பவை, தம் தேவைகளைத் தாமே பூர்த்திசெய்து கொள்பவை. உணவு, உடை, காகிதம், ஸோப்பு, எண்ணெய், கண்ணாடிச் சாமான்கள், ரசாயனப் பொருள்கள், மருந்துகள், இரும்புச் சாமான்கள், யந்திரக் கருவிகள், தோல்-சாமான்கள், வைத்தியசாலைகளுக்கு வேண்டிய சாமக்கிரிகள், தளவாடங்கள் முதலிய வாழ்வுக்கு அவசியமான பொருள்களை யெல்லாம், இந்த ஸ்தாபனங்கள் மனித உழைப்பையும், சிறு யந்திரங்களையும் கொண்டு தயாரித்து வருகின்றன. இந்தக் கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் (பொருள்களை உற்பத்தி செய்வதோடு) சிசு சம்ரட்சணை

---

* போர்களில் பெரிய படைகள் அழிந்துபோனால், மிஞ்சியுள்ள சில வீரர்களும், ஜனங்களில் சிலரும் சிறு படைகளாகச் சேர்ந்து, கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு, எதிரிகளை அடிக்கடி ஹிம்ஸித்து அழிக்கும் முறை 'கொரில்லாப் போர்' என்று சொல்லப்படுகிறது. கொரில்லாப் படைகளின் விசேஷங்கள்: அவை தமக்கு அதிக நஷ்டமில்லாமல் எதிரிகளுக்கு அதிக நஷ்டத்தை விளைவிக்க முடியும், அவை நினைத்தவுடன் எங்கு வேண்டுமாயினும் போக முடியும், அவைகளை எதிரிகள் கண்டுபிடித்து அடியோடு அழித்துவிட முடியாது. இந்த மூன்று அம்சங்களும் தொழில்களுக்கும் உபயோகமானதால், சீன வாலிபர்கள் 'கொரில்லாத் தொழில்'களை அமைத்தார்கள்.

நிலையங்களையும், பகல் பள்ளிக்கூடங்களையும், இராப் பள்ளிக்கூடங்களையும், வைத்தியசாலைகளையும், பொழுது போக்கு மாடங்களையும் நடத்தியும் வருகின்றன. 1940-ல் இந்த 'இண்டஸ்கோ' சங்கங்களின் எண்ணிக்கை 1,500 ஆக இருந்தது; 1942-ல் சுமார் 6,000; 1943-ல் 10,000 ஆக உயர்ந்துவிட்டது. இவைகள் நடத்தும் தொழில்களில் மிகவும் அதிசயிக்கத் தக்க விஷயம், மாதந்தோறும் உற்பத்தியாகும் பொருள்களின் அளவு. இவைகளில் மொத்தம் எவ்வளவு மூலதனம் முடக்கப்பட்டிருக்கிறதோ, அந்தத் தொகைக்கு இரண்டு மடங்கு பெறுமதியுள்ள பொருள்களை இவை மாதந்தோறும் உற்பத்தி செய்கின்றன. யுத்த சம்பந்தமான நிலைமைகள் இதற்குக் காரணமாக இருக்கலாம்; எனினும் இது, ஆச்சரியப்படத் தக்க விஷயந்தான். இந்தச் சங்கங்கள் யுத்தகாலத்தோடு, பிற்காலத் தொழில் அபிவிருத்திக்கும் சீனாவுக்கு மிகமிக அவசியமானவை. 'சீனாவுக்கு, இன்றுமட்டுமல்லாமல், பிற்காலத்திலும், காரியசாத்தியமாயும் முதல் தரமாயும் உள்ள தொழில்களை அளிக்கக்கூடிய வல்லமை இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்டு என்று சீனத் தொழில் நிபுணர்களும், இவைகளைப் பார்வையிட்டு நன்கு பரிசீலனை செய்த அநேக அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்' என்று நிம் வேல்ஸ் எழுதியுள்ளார். 'யுத்தங்களும் சமூகப் புரட்சிகளும் சகஜமான விஷயங்களாகப் போய்விட்ட இந்தச் சகாப்தத்தில், சீனாவின் உள்-பிரதேசங்களில் அதிக வல்லமையும் ஜீவசக்தியும் கொண்டு முன்னேறி வரும் இந்த இயக்கத்தைச் சாமானியமாக எண்ணிவிடக் கூடாது. இதிலிருந்து பெரிய நன்மைகள் ஏற்படக் கூடும். யுத்தகளத்தின் நடுவிலே, கைத்தொழிலை ஜனநாயக முறையில் புனர்நிர்மாணம் செய்தல் என்பது, சீனாவிடம் அனுதாபமுள்ளவர்களையும், சமூக மாறுதலிலும் பொருளாதார மாறுதலிலும் சிரத்தையுள்ளவர்களையும் வசீகரித்திருக்கிறது.' 1944, மே மாதத்திய 'ஆசியாவும் அமெரிக்கா கண்டமும்'* என்ற பத்திரிகையில் எட்கார்

* 'Asia and the Americas.'

ஸ்நோவும் * 'சீனாவின் கொரில்லா-கைத்தொழில்' என்ற தலைப்புள்ள கட்டுரையில் இதே அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறார்:

> 'யுத்தத்தின் கடைசி நிலையில் வெற்றியடைய இது (கூட்டுறவுத் தொழில் இயக்கம்) உதவி செய்வதோடு, சந்தர்ப்பம் அளித்தால், இதை நிறுவிய மூல புருஷர்கள் நம்பியவாறே, கூலியற்ற ஜனநாயக முறையில், எதிர்கால வாழ்வுக்கு இதுவே நல்ல பொருளாதார அடிப்படையாக அமையும்.'

சீனாவின் 'இண்டஸ்கோ' இயக்கத்திலிருந்து இந்தியாவும் மிகுந்த பயனடைய முடியும். பண்டித நேரு நிம் வேல்ஸின் நூலுக்கு எழுதிய முன்னுரையில், இது சம்பந்தமாக எழுதியிருக்கும் முக்கிய விஷயம் வருமாறு:

> 'சீனாவைப் போல, இந்தியாவும் ஏராளமான உழைப்பாளர்களைப் பெற்றிருக்கிறது; இங்கும் ஏராளமான ஜனங்கள் வேலையில்லாமலும், சொற்ப வேலையுடனும் இருக்கிறார்கள். ஐரோப்பாவில் ஜனப் பெருக்கமுள்ள சிறு நாடுகள் நாளடைவில் தொழிற் பெருக்கமடைந்தன. அவைகளோடு (சீனா, இந்தியா போன்ற நாடுகளை) ஒப்பிட்டுப் பேசுவதில் பயனில்லை. நம் ஜனங்களுடைய உழைப்புச் சக்தியை வீணாக்குவதாகவோ, அல்லது வேலையில்லாமல் ஜனங்களைத் திண்டாடச் செய்வதாகவோ உள்ள எந்தத் திட்டமும் கெடுதல்தான். உழைப்பாளருடைய சக்தியை அதிகமாய்ப் பயன்படுத்திக்கொண்டு, யந்திரங்களைக் குறைவாக உபயோகிப்பது அதிக லாபகரமாக இருக்கும். இவ்விஷயத்தில் மானுட தர்மம் ஒருபுறமிருக்க, வெறும் பொருளாதார முறையில் பார்த்தாலும், லாபமுண்டு. சொற்ப வருமானத்தில் ஏராளமான ஜனங்களுக்கு வேலை தேடிக் கொடுப்பது, (சிலருக்கு மட்டும் வேலை

* Edgar Snow.

கொடுத்துவிட்டு) அவர்களில் பெரும் பகுதியினருக்கு ஒரு வேலையுமே கிடைக்காதபடி வைப்பதைவிட மேலானது. பற்பல குடிசைத் தொழில்களின் மூலம் உற்பத்தியாகும் பொருள்களின் மொத்த மதிப்பு, அதே பொருள்களைத் தயாரிக்கும் சில பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாவதைவிட அதிகமாக இருக்க முடியும்.'

ஜப்பானிலே

ஜப்பானும் சிறு குடிசைத் தொழில்கள் நிறைந்த நாடு என்பது பிரசித்தமாகத் தெரிந்த விஷயம். ஜப்பானில் பல முறைகளிலுள்ள தொழில் ஸ்தாபனங்களின் பாகுபாடுகளைப் பற்றி கெந்தர் ஸ்டீன் ('ஜப்பானில் தயாரானது'* என்ற நூலில்) கொடுத்திருக்கும் உத்தேசமான புள்ளி விவரங்கள் வருமாறு :

மொத்தத் தொழில்கள் 100 என்றல் அவற்றில்

| | | |
|---|---|---|
| மிகச் சிறிய தொழில்கள் | ... | 10 |
| சிறு தொழில்கள் | ... | 29 |
| நடுத்தரத் தொழில்கள் | ... | 35 |
| பெரிய தொழில்கள் | ... | 26 |

இந்தக் 'குட்டி'த் தொழில் ஸ்தாபனங்கள், ஜனங்களின் அன்றாட உபயோகத்திற்கான (ஜவுளி, ஸோப்பு போன்ற) பொருள்களை உற்பத்தி செய்வதோடு, யந்திரங்களையும் செய்கின்றன. ஜப்பானில் தயாரிக்கப்படும் யந்திரங்களில் 100—க்கு 34 தான் பெரிய தொழிற்சாலைகளில் தயாராகின்றன என்று சொல்லப்படுகிறது. 'ஜப்பானியத் தொழில் : அதன் சமீப கால வளர்ச்சியும், தற்கால நிலைமையும்'† என்ற தமது புத்தகத்தில் ஆசிரியர் ஆலன் கூறுவதாவது :

* 'Made in Japan'—By Guenther Stein.

† 'Japanese Industry : Its Recent Development and Present Condition'—by Prof. Allen.

ஜப்பானின் தொழில்கள் பலவற்றிலும் சிறு தொழில் ஸ்தாபனங்களே மிகுதியாக இருப்பது, பொருளாதாரத்தில் அந்த நாட்டின் பலவீனத்திற்கு அறிகுறி அல்ல என்றும், அங்கேயுள்ள பொருளாதார நிலைமைகளுக்குத் தக்கபடி தொழில் முறைகள் பொருத்தமாக வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதையே அது காட்டுகிறது என்றும் நாம் தீர்மானிக்கலாம்... அந்நாட்டில் மூலதனம் கிடைப்பது சிறிது அரிதாகவும் கஷ்டமாகவும் இருக்கிறது; ஆனால் தொழில் செய்வதற்கு, குறைந்த கூலியில் வேலை செய்யக்கூடிய உழைப்பாளர் ஏராளமாக இருக்கின்றனர்.'

இந்தியா விஷயமும் இப்படித்தான் இருக்கிறது. ஆனால், ஜப்பானிலுள்ள இந்தச் சிறு தொழில் ஸ்தாபனங்கள் சில பெரிய முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றன; சீனாவிலுள்ள கூட்டுறவு - சமுதாயங்களைப் போன்ற பொது ஸ்தாபனங்களால் அவை நிர்வகிக்கப்படவில்லை என்பது துரதிர்ஷ்டந்தான். இது விரும்பத்தக்க முறையன்று. ஏனெனில் குடிசைத் தொழில்களிலுள்ள உழைப்பாளிகள், தமக்குத் தாமே யஜமானர்களாக இல்லாமல், முதலாளிகளுடைய பிடியில் சிக்கி, அவர்களுடைய சுரண்டலுக்கு உட்பட்டிருக்கின்றனர்.

## மற்ற நாடுகளில்

ஸோவியத் ரஷ்யாவிலுள்ள 'சொந்த-உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்க'ளும் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்றன. இவைகளுக்கு 'இன்காப்ஸ்' என்று பெயர். ஸோவியத் அரசாங்கத்தின் கீழே, 1919-ம் வருஷத்திலிருந்து, அதிலும் முக்கியமாக 1932-க்கு அப்பால், இந்தச் சொந்த - உற்பத்தியாளர் கூட்டுறவிகள் * எப்படிப் புதுப்பித்து

* கூட்டுறவு ஸ்தாபனங்கள் – Co-operatives.

ஆதரிக்கப்பட்டன என்பது ஸிட்னி வெப்பும், அவர் மனைவி பீட்ரிஸ் வெப்பும் எழுதியுள்ள 'ஸோவியத் கம்யூனிஸம்: ஒரு புது நாகரிகம்'* என்ற நூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. 'இத்தகைய ஸ்தாபனத்தில், அங்கத்தினர்கள் சம்பளமோ கூலியோ பெறுவதில்லை; வேலை செய்ய வேண்டியதைப் பற்றிய ஒப்பந்தம் எதுவுமே கிடையாது. பொருளுற்பத்திக்கான கருவிகள் தனி அங்கத்தினருடைய உடைமையாகவோ, கூட்டு - உடைமையாகவோ இருப்பவை. இத்துடன், அங்கத்தினர்கள் உழைத்து உற்பத்தி செய்யும் பொருள்களும் எல்லோருக்கும் சொந்தமாகும்.' 1932-ம் வருஷ ஆரம்பத்தில் ஸ்தூலமாக அமைக்கப்பட்டிருந்த இத்தகைய கூட்டுறவு சங்கங்கள் சுமார் 20,000 இருந்தன; இவைகள் 30,000 தொழிற்கூடங்களை நடத்திவந்தன; 70 அல்லது 80 லட்சம் ஜனத்தொகையுள்ள பிராந்தியங்களிலிருந்து 23,50,000 ஆண்களும் பெண்களும் இந்தச் சங்கங்களில் அங்கத்தினராக இருந்தனர்; சங்கங்கள் உற்பத்தி செய்த பொருள்களின் மொத்த மதிப்பு 450 கோடி ரூபிள். †

யுத்த காலத்தில் பரவலாக இருக்கும் தொழில் ஸ்தாபனங்களைத் தாம் நிர்வாகத்தைத் தாமே கவனிக்க வேண்டிய அவசியம் இருப்பதால், 'கை ஆட்சியுள்ள கூட்டுறவுத் தொழிற்கூடங்கள்' அமைப்பது பற்றி இங்கிலாந்தில்கூட இப்பொழுது எண்ணம் பிறந்திருக்கிறது. 'டிரேட் யூனியன்'களே சிறு தொழில் ஸ்தாபனங்களை அமைத்து, உற்பத்தியை வேகமாக நடக்கும்படி நிர்வகிப்பது எளிதான காரியமே, பணக்காரரின் மின்னல் - பணமெடுப்பிலிருந்து அவைகளே அந்த யூனியன்களே காத்துக்கொள்ளவும் முடியும். இப்பொழுது இங்கிலாந்தில் சுமார் 44 கூட்டுறவுத் தொழிற்

* 'Soviet Communism: A New Civilisation' — by Sidney and Beatrice Webb.

† பணமுடைய மதிப்புப்படி சுமார் 700 கோடி ரூபாய். ரூபிள் என்பது ரஷ்ய வெள்ளி நாணயம்.

சாலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்காவில் (யு. எஸ். ஏ.) பொருள்களை வாங்கவும், விற்கவும், கடன் கொடுக்கவுமே இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்ததில் திருப்திகொண்டு இருந்துவிடாமல், 'சொந்த — உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்கள்' நிறுவுவது பற்றியும் இப்பொழுது கவனம் செலுத்தப் படுகிறது. அங்கே கூட்டுறவு - விவசாயப் பண்ணைகளும், கூட்டுறவு - சுகாதார சங்கங்களும், கூட்டுறவு - இன்ஷூரன்ஸ் சங்கங்களும் இருக்கின்றன. 1936-ல் 8,30,000 அங்கத்தினரைக் கொண்ட 4,100 கூட்டுறவிகள் இருந்ததாகத் தொழில் இலாகாவின் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. யுத்த கால அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஆஸ்டிரேலியாவும் நியூஜீலந்தும் கூட்டுறவுத் தொழில் முறையை உபயோகித்து வருகின்றன. ஜெர்மனியில்கூட, ஜனங்கள் அனைவருக்கும் வேலை கொடுப்பதற்காக, ஹிட்லர் அநேகம் குடிசைத் தொழில்களை ஆரம்பிக்கும் அவசியம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

## முடிவுரை

இவ்வாறாக, உலகப் பொருளாதார அபிப்பிராயம் 'பரவல் - தொழில் முறை'யையும், 'குடிசைப் பொதுவுடைமை'யையும் நோக்கி வந்துகொண்டிருக்கிறது. இந்த முறை புராதன காலத்திலிருந்தே இந்தியாவில் இருந்துவந்தது. இதைப் புனருத்தாரணம் செய்து புத்துயிர் பெறும்படி செய்யவேண்டும்; அப்படிச் செய்வதில் தற்கால நிலைமைகளுக்கு ஏற்ற அவசியமான மாறுதல்களைச் செய்துகொள்ள வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். பல வருஷங்களாக விஷ வித்துக்களை விதைத்துக்கொண்டிருந்ததன் பயனாக இப்பொழுது விஷக் காட்டை அறுவடை செய்துகொண்டிருக்கும் மேலை நாடுகளைப் பார்த்து நாம் காப்பியடிக்கக் கூடாது. இந்தியா, தன் மேதைக்கும் கலைப்பண்புக்கும் பொருத்தமான ஒரு பொருளாதார அபிவிருத்தித்

திட்டத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். அதைப் பார்த்து மற்ற நாடுகளும் பின்பற்றக்கூடும். அத்தகைய சுதேசி அமைப்பு முறை பற்றி, தேவையான முக்கிய விஷயங்களோடு, டாக்டர் அன்னிபெஸன்ட் அம்மையார் 'இந்திய சாம்ராஜ்ய மசோதா' (Commonwealth of India Bill) ஒன்றை முதன் முதலாகத் தயாரித்திருந்தார். கிராம சமுதாயங்களையும் கிராமத் தொழில் முறையையும் அடிப்படையாகக் கொண்ட அந்தப் பொருளாதாரத் திட்டத்தைக் காந்திஜியும் அநேகமாக அப்படியே ஆதரிக்கிறார்.

காந்தியப் பொருளாதாரக் கருத்துக்களின் அடிப்படையான தத்துவங்களை ஆராய்வதற்கும், விளக்குவதற்கும் இந்த நூலில் இத்தனை பக்கங்களை உபயோகித்திருப்பதற்கு நான் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியம் இராது, ஏனெனில், காந்தீயத் திட்டம் மதிப்புகளை அளப்பதற்குப் புதிய அளவுகோல்களைக் கொண்டது. திட்டத்தின் மூலம் இத்தனை கோடி ரூபாய் வரவு-செலவாகும் என்று புள்ளி விவரம் கூறுவதை விட், அந்த மதிப்புகளை விளக்கமாக எடுத்துக் கூறுவது மிகமிக அவசியமாகும்.



[ பாகம் II ]

# VI

## பொருளாதாரத் திட்டம்

### நோக்கம்

இந்தியா ஏழையான தேசம், இங்கே ஜனங்களில் நூற்றுக்கு 90 பேர் விவசாயத்திலும், அதோடு சேர்ந்த இதர தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். நாட்டுப்புறங்களில் வசிக்கும் ஜனங்கள் பரம தரித்திரத்தோடு, ஆழ்ந்த அறியாமையிலும் மூழ்கியிருக்கின்றனர். ஆதலால், திட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவென்ருல், 10 வருஷ காலத்திற்குள், இந்திய மக்கள் வாழ்வுக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதிலும், கலாசார நிலையிலும் 'இன்றியமையாத ஓர் அளவுக்காவது'* உயரும்படி செய்வதுதான். இந்தத் திட்டம் நாட்டுப்புறங்களின் க்ஷேமத்தை மிக முக்கியமாகக் கருதுவதால், விவசாயத்தையும், குடிசைகளில் செய்யும் துணைத் தொழில்களையும் சாஸ்திரீய முறையில் அபிவிருத்தி செய்தல் மிக அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. ஆனல் திட்டம் வகுப்பதில் தேசீய வாழ்வின் மற்ற அம்சங்களைப் புறக்கணிக்கவும் கூடாது. எனவே, மூலாதாரமான (கருவிகள், யந்திரங்கள் முதலியவைகளை உற்பத்தி செய்வது போன்ற) அடிப்படைத் தொழில்களை அமைப்பதிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. தேசீயப் பொருளாதார வாழ்வில் சம்பந்தப்பட்ட எந்த அம்சத்தையும் இதில் சேர்க்காமல் விட்டுவிடவில்லை என்றே சொல்ல வேண்டும். ஆயினும், ஜனங்களின் சுகஜீவனம், ஒழுக்கம், கலைஞானத் தேர்ச்சி ஆகிய மூன்றும், தமக்குள் யாதொரு

---

* 'இன்றியமையாத ஓர் அளவு' என்பதை அடிப்படை வாழ்க்கைத்தரம் என்று சொல்லலாம்; அந்த அளவுக்கு மேற்போனல் நல்லதுதான் – ஆனல், அதற்குக் கீழே இறங்கிவிடக் கூடாது.

முரண்பாடும் இல்லாமல், ஒருங்கே இசைந்து அமையும்படி செய்வதே வாழ்க்கையின் பல பகுதிகளையும் அளாவிய திட்டம் வகுப்பதற்கு மூலாதாரமான கொள்கையாகும். இவ்விஷயம் முன் அத்தியாயங்களிலும் விளக்கப்பட்டிருக்கிறது.

## அடிப்படை வாழ்க்கைத்தரம்

சுகஜீவனத்திலும் கலைஞானத் தேர்ச்சியிலும் கணிசமான குறைந்தபட்ச அளவு ஒன்றைக் குறிப்பதானால், வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவைகளும், மற்றும் இன்றியமையாத சில சௌகரியங்களும் பூர்த்தி செய்யப்படுவதாகவே கொள்ளவேண்டும். அந்த அத்தியாவசியமான தேவைகள் வருமாறு:

(1) உடலுக்கு அவசியமான புரோட்டீன்கள்,* கார்போ - ஹைட்ரேட்டுகள்,† நிணபதார்த்தம்,‡ உலோகங்கள், ஜீவசத்துகள் (விட்டமின்கள்)¶ ஆகியவை போதுமான அளவு நிறைந்துள்ள ஆரோக்கிய உணவு.

(2) சீதோஷ்ண நிலைமைகளால் ஏற்படும் கஷ்டங்களிலிருந்து உடலைப் பாதுகாத்துக் கொள்ளப் போதுமான உடைகள்.

(3) ஒவ்வொரு நபருக்கும் *100 சதுர அடியுள்ள மனை வீதம் குடியிருப்பு வசதி.

---

* புரோட்டீன் — ஆகாரத்தில் முதன்மையாகக் கருதப்படும் ஊன் வளர்க்கும் வஸ்து.

† கார்போ - ஹைட்ரேட்டு — பிராணவாயு, ஜலவாயுக்களோடு கரி சேர்ந்து உண்டாகும் பொருள்கள்; உடலுக்கு உஷ்ணமளிக்கும் சர்க்கரை போன்ற பொருள்களில் இது மிகுதி.

‡ நிணபதார்த்தம் — கொழுப்பு.

¶ விட்டமின் — ஜீவசத்து, வாழ்வுக்கு இன்றியமையாதது; இதுவரை ஏ, பி, ஸி, டி, இ என்று ஐந்து விட்டமின்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

(4) பள்ளிக்குப் போகும் வயதுள்ள ஒவ்வொரு பையனுக்கும் பெண்ணுக்கும் இலவசமான கட்டாய அடிப்படைக் கல்வியும், வயது முதிர்ந்த ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தலும்.

(5) வைத்திய வசதிகள் — போதுமான உபகரணங்கள் எல்லாம் அமைந்துள்ள மருந்துச்சாலையிலோ, வைத்தியசாலையிலோ, ஒவ்வொரு நபரும் எளிதில் உதவி பெறுவதற்கு வசதிகள். ஸ்திரீகளுக்குப் பிரசவ ஆஸ்பத்திரிகள் போதுமான அளவு இருக்கவேண்டும்.

(6) தபால், பாங்கி, இன்ஷூரன்ஸ் போன்ற பொது நன்மைக்கான சௌகரியங்கள் சகல பிரஜைகளுக்கும் கிடைக்கவேண்டும்.

(7) விளையாட்டு மைதானங்கள், ஆடல் - பாடல்கள், நாட்டுக்கு ஏற்ற நாடகசாலைகள், பஜனை மடங்கள் முதலிய பொழுதுபோக்கு முறைகளுக்கு வசதிகள் அமைத்தல்; இவைகள் நாட்டுப்புறங்களில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

## உணவு

உணவு, உடை பற்றிய தேவைகளைச் சற்று விவரமாக ஆராய்ந்து கவனிப்பது நலம்.

இந்திய மக்களில் பெரும்பாலாருடைய உணவில் ஆரோக்கியத்திற்கு அவசியமான பொருள்கள் போதுமான அளவில் (சமநிலையில்) இல்லை என்பதும், உடலுக்குத் தேவையான அளவு உஷ்ணமளிக்கும் கலோரிகள் * அதில் மிகவும் குறைவு என்பதும் பலரும்

*கலோரிகள் - உடலின் உஷ்ணத்தைக் 'கலோரிகள்' என்ற அளவையைக் கொண்டு மதிப்பிடுவது வழக்கம். 'இன்ன உணவு இத்தனை கலோரிகள் கொடுக்கும்' என்ற மாதிரியில் இச்சொல் உபயோகிக்கப்படும்.

அறிந்த விஷயங்களே. வயதுவந்த ஒரு நபருக்குத் தினசரி தேவையாயுள்ள உணவில், சகல சத்துக்களும் போதுமான அளவு இருக்க வேண்டுமானல், அதில் கீழ்க்கண்ட பொருள்களில் ஒவ்வொன்றுக்கும் எதிரில் குறித்துள்ள சுமாரான அள்வுப்படி சேர்ந்திருக்க வேண்டும் என்று டாக்டர் அய்க்ராய்ட் கணக்கிட்டிருக்கிருர் :

| | போதுமான சத்து நிறைந்த உணவு | | சாதாரணமான சத்துக் குறைந்த உணவு | |
|---|---|---|---|---|
| தானியங்கள் (அரிசி, கோதுமை, சோளம் போன்றவை.) ... | 15 | அவுன்ஸ் | 20 | அவுன்ஸ் |
| பயறு வகைகள் (துவரை, உளுந்து போன்றவை.) ... | 3 | ,, | 1 | ,, |
| காய்கறிகள் ... | 6 | ,, | 2 | ,, |
| கீரைகள் ... | 4 | ,, | 2 | ,, |
| கொழுப்புகள் எண்ணெய்கள் ... | 2 | ,, | 5 | ,, |
| பழங்கள் ... | 2 | ,, | ... | |
| பால் ... | 8 | ,, | 2 | ,, |

[அவுன்ஸ் என்பது ஒரு ராத்தலில் 16-ல் ஒரு பாகம்.]

மேலே குறிப்பிட்ட பட்டியல்படி சத்து நிறைந்த உணவிலிருந்து சுமார் 2,600 கலோரிகள் கிடைக்கும்; சாதாரண ஆரோக்கியத்திற்கு இத்தனை கலோரிகள் அவசியம். சத்துக் குறைந்த சாதாரண உணவில் 1,800 கலோரிகளே கிடைக்கும். அவ்வளவு கூட இருக்குமா என்பதும் சந்தேகம்தான். இந்தத் தேசத்தில் ஒவ்வொரு நபருடைய சராசரி வருமானம் நம்ப முடியாத அளவு சொற்பமாக இருக்கிறது; போதுமான சத்து நிறைந்த உணவைப் பெறுவதற்கு ஜனங்களின் வறுமை இடம் கொடுக்காது. மேலும், நமது தேசத்தில் இப்பொழுது கிடைத்துவரும் உணவு தேச மக்களின் ஆரோக்கிய நிலைக்குப் போதுமானதா யில்லை. இதனால்தான் விவசா

யத்திற்காக முறையான திட்டம் தயாரித்து, விஞ்ஞான முறையில் அதை அபிவிருத்தி செய்தல் மிகவும் அவசியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது. பொருள்களின் விளைவை மட்டும் அதிகரிக்கச் செய்தால் போதாது; புஷ்டியளிக்கக்கூடிய தானியங்கள், பயிர் வகைகளை விசேஷமாகச் சாகுபடி செய்யத் திட்டம் தயாரிக்க வேண்டும். விளைவை விற்றுக் காசாக்குவதே முக்கிய நோக்கமான ஒரு விவசாயக் கொள்கையை அனுஷ்டிப்பது ஒழியவேண்டும். ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் என்னென்ன உணவுப் பொருள்கள் தேவை என்பதைக் கவனித்து, 'உணவுக்கான பயிர்'களைச் சாகுபடி செய்யும்படி திட்டம் போடவேண்டும்.

<u>உடை</u>

வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களில் உணவுக்கு அடுத்தது உடை. ஜனங்களுக்கு எவ்வளவு துணி தேவை என்பது பல மாகாணங்களிலுமுள்ள சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்து வித்தியாசப்படும். இந்தியாவில் 1936-37-ல் ஒவ்வொரு நபரும் உபயோகித்திருக்கும் துணி சராசரி 15·5 கஜம். மற்றும் சில நாடுகளில், 1929-ம் வருஷம் ஒவ்வொரு நபரும் உபயோகித்த துணி பற்றிய சராசரிக் கணக்கு கீழே குறிக்கப்பட்டிருக்கிறது:

| | |
|---|---|
| அமெரிக்கா (யு. எஸ். ஏ.) | ... 64 கஜம் |
| ஜெர்மனி | ... 34 ,, |
| ஜப்பான் | ... 21·4 ,, |
| எகிப்து | ... 19.1 ,, |

இந்தியாவில் ஒவ்வொரு நபருக்கும் சாதாரணமாக உடைக்குத் தேவையான துணி 30 கஜம் என்று காங்கிரஸ் தேசீயத் திட்டக் கமிட்டியினரும், பம்பாய்த் திட்டக்காரரும் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால், இந்தியா மிகவும் எளிய தேசம்; இங்கே 'பொருளுடையா'ருக்கும் 'பொருளில்லா'ருக்கும் இடையிலுள்ள வேற்றுமை அற்பமன்று. இந்நிலையில் மேலே கூறிய முறையில் சராசரி

யாகப் பார்க்கப்படும் கணக்குகள் கவைக்கு உதவ மாட்டா ; அவற்றை மட்டும் நம்பினால் ஏமாற்றமாகவும் முடியும். ஆதலால், நாட்டுப்புறங்களிலுள்ள மக்களில் 100-க்கு 90 பேர்களுக்குச் சராசரியாகத் தலைக்கு 20 கஜத்திற்குக் குறையாமல் துணி வேண்டியிருக்கும் என்று வைத்துக் கொள்ளலாம். அந்த 20 கஜத் துணியும் ஒரு வருஷத்திற்காவது ஈடுகட்ட வேண்டும். துணி ஆறு மாதந்தான் நிற்கக் கூடியது என்றால், மேலே குறித்த அளவை இரட்டிப்பாக்கிக் கொள்ள வேண்டும்.

## சராசரி வருமானம்

இந்தியாவில் ஒவ்வொரு நபருடைய சராசரி வருஷ வருமானத்தைக் கணிப்பதற்கு அடிக்கடி செய்யப்பெற்ற முயற்சிகளில், வருமானம் பற்றிய மதிப்புகள் பல ரகமாக இருக்கின்றன. இந்த விஷயத்தில் முதன் முதலில் முயற்சி செய்தவர் தாதாபாய் நௌரோஜி ; அவர் மதிப்பிட்ட நபர்வாரியான வருஷ வருமானம் ரூ. 20. 1931-32-ல் கடைசியாக மதிப்பிட்டவர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ். அவரது மதிப்புப்படி பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு நபரின் சராசரி வருஷ வருமானம் ரூ. 65.

இத்தகைய கணக்குகளிலிருந்து பொருளாதார விவரங்களைப் பற்றிய உண்மையான நிலைமையை நாம் தெரிந்துகொள்ள முடியாது. ஏனெனில், இந்தக் கணக்குகளில் லட்சாதிபதிகள் கோடீசுவரர்களுடைய எல்லையில்லாத வருமானங்களும், கோடிக்கணக்கான ஏழை மக்களுடைய நம்பமுடியாத அளவு குறைந்துள்ள அற்ப வருமானங்களும் ஒன்றுசேர்த்துப் பார்க்கப்படுகின்றன. நதியின் ஆழத்தைப் பார்ப்பதற்கு, ஒருவன், கரையோரமாயுள்ள ஆழத்தையும், நடுமத்தியிலுள்ள ஆழத்தையும் தெரிந்துகொண்டு, சராசரி ஆழம் எவ்வளவு ஆகிறது என்று கணக்குப் பார்த்து, நதியைக் கடந்து செல்ல ஆரம்பித்துப் பின் அதிலே மூழ்கிப் போனான் என்று கதை உண்டு ; இவனுடைய அறியாமையைப் போன்றதுதான் மேற்கூறிய சராசரி வருமான மதிப்பும்.

வருமானத்தில் செல்வர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் மிகவும் அதிகம். சகலருடைய வருமானத்தையும் ஒன்றுசேர்த்தால் இந்தியரின் மொத்தமான தேசிய வருமானத் தொகை தெரியும். இந்த மொத்த வருமானத்தில் 35 சத விகிதமுள்ள தொகை (100-ல் 35 பாகம்) ஜனத்தொகையில் 100-ல் ஒருவரிடம் தங்கிவிடுகிறது. வருமானத்தில் 33 சத விகிதம் ஜனத்தொகையில் 32 சத விகிதத்தினருக்கும், வருமானத்தில் 32 சத விகிதம் ஜனத்தொகையில் 67 சத விகிதத்தினருக்கும் உரியது என்று தெரிகிறது.* ஆகவே, இப்பொழுது கணக்குப் பார்க்கும் முறைப்படி, சராசரி வருமானம் கூடுகிறது என்றால், ஜனங்களில் பெரும்பாலோருடைய வாழ்க்கை சிறிதும் பாதிக்கப்படாமல், பணக்கார வகுப்பினருடைய வருமானங்களை மட்டும் தக்க அளவுக்கு உயர்த்துவதாக ஆகிவிடக்கூடும். ஆகவே, 'சராசரி வருமானத்தை உயர்த்துவது' என்று சொல்லும் புள்ளி விவரங்கள், கணிதத்தில் செய்யும் ஜாலவித்தை தவிர வேறில்லை; உண்மையான நிலைமைக்கும் இவைகளுக்கும் சம்பந்தமே யில்லை.

மத்திய மாகாணத்தில் (1942-ம் வருஷம்) தொழில் பரிசீலனைக் கமிட்டிக்காகத் தயாரித்த தமது அறிக்கையில் ஆசிரியர் ஜே. ஸி. குமரப்பா குறிப்பிடுவதாவது:

> 'எங்கள் பரிசீலனை மிகவும் விரிவாக நடைபெற்றது. 606 கிராமங்களின் நிலைமையை ஆராய்ந்தோம். எங்கும் ஜனங்களின் வருமானங்கள் மிகவும் குறைவான நிலையிலேயே இருந்த விஷயம் எங்களுக்குத்

---

* 100 பேருடைய வருமானம் ரூ. 6,000 என்று வைத்துக் கொண்டால், இது ஒவ்வொருவருக்கும் சமமாக இருக்குமானால், ஒரு நபரின் வருமானம் 60 ரூபாயாக இருக்கும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. 100 பேரில் ஒரு நபரின் வருமானமே ரூ. 2,100 ஆக இருக்கிறது; பாக்கி 99 பேரில், 32 பேருக்குச் சராசரி வருமானம் சுமார் 62 ரூபாயாகவும், 67 பேருக்குச் சராசரி வருமானம் 29 ரூபாயாகவும் இருக்கிறது.

தெளிவாயிற்று. நெசவுத் தொழில் போன்ற நுணுக்கமான தொழில்களில்கூட ஒரு குடும்பத்தின் வருஷ வருமானம் ரூ. 50 முதல் ரூ. 70-க்கு மேற்பட்டிருக்கவில்லை; இந்தத் தொகையையும் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஈவு வைத்தால், தலைக்கு ரூ. 12 தான் வரும். ஒரு கிராம வாசி நாள் ஒன்றுக்கு 1-அணு வீதம் வருஷ முழுதும் சம்பாதிக்க முடிந்தால், அதுவே பெரிய அதிர்ஷ்டம் - சுபிட்சம் - என்று அவன் எண்ணிக் கொள்ளுகிறான். இந்த மாகாணம் முழுதிலுமே ஒரு நபரின் சராசரி வருஷ வருமானம் சுமார் ரூ. 12 என்றே சொல்லலாம். இந்த மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லாக்களையும் பார்வையிட்டு, பலவகைத் தொழில்களிலும் கிடைக்கும் வருமானங்களை விசாரித்ததில், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான தகவல்கள் கிடைத்தன; அவைகளைப் பரிசீலனை செய்ததில் நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம். இந்தக் கணக்கை எவரேனும் நம்பத் தயாராயில்லை என்றால், அவர் ஏதாவது ஒரு கிராமத்திற்குப் போய், ஜனங்களின் நிலைமையைத் தாமே நேரில் பார்த்துக் கொள்ளலாம்.' (தொகுதி 1, பாகம் 1, பக்கம் 6.)

மற்ற மாகாணங்களோடு ஒப்பிட்டால் மத்திய மாகாணம் அதிக ஏழைமையான மாகாணமாதலால், கிராமாந்தரங்களில் வசிக்கும் இந்திய மக்களில் 100-க்கு 90 பேருடைய சராசரி வருஷ வருமானம் சுமார் ரூ. 18 என்று நாம் தீர்மானிக்கலாம். இந்த வருமானம் மிகவும் குறைவானது என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வளவு குறைவான வருமானம் காரணமாக, கிராமங்களிலுள்ள வாழ்க்கைத்தரம் மிகமிக்க் குறைந்திருக்கிறது, ஜனங்கள் கடன்களில் மூழ்கியிருக்கிறார்கள். இவ்விஷயம் சம்பந்தமாக, மற்ற நாடுகளிலுள்ள சராசரி வருமானங்களையும் இங்கே குறிப்பிடுவது நலம்:

| தேசம் | | வருஷம் | ஒரு நபரின் சராசரி வருமானம் |
|---|---|---|---|
| பிரிட்டன் | ... | 1931 | ரூ. 1,013 |
| அமெரிக்கா (யு. எஸ். ஏ.) | ... | 1932 | 1,186 |
| ஜெர்மனி | ... | 1925 | 520 |
| ஜப்பான் | ... | 1925 | 176 |
| ஸோவியத் ரஷ்யா | ... | 1925 | 133 |

இந்தியாவின் சராசரி வருமானம் வருஷம் 1-க்கு ரூ. 65 என்று டாக்டர் ராவ் கூறுவது சரியான மதிப்பு என்று வைத்துக் கொண்டாலும், அது மற்ற நாடுகளிலுள்ளதைவிட மிகமிக் குறைவாக இருக்கும் பரிதாபம் நன்கு புலனாகிறது.

## அவசியமான குறைந்தபட்ச வருமானம்

யுத்தத்திற்கு முந்திய விலைவாசிகளைக் கொண்டு கணக்கிட்டால், டாக்டர் அய்க்ராய்ட் (உணவு ஆராய்ச்சி நிபுணர்) குறிப்பிட்டுள்ள அளவில் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 6 தேவைப்படும்.

நாட்டுப்புறங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வருஷத்திற்கு ரூ. 60 வேண்டியிருக்கலாம். கிராமங்களில் ஒரு நபருக்குத் தேவையான 20 கஜம் துணிக்கு, கஜத்திற்கு 3 அணு வீதம் ரூ. 3-12-0 அல்லது ரூ. 4 தேவைப்படும். வீடு பழுது பார்க்கவும், மருந்துகளுக்கும், மற்றும் சில்லறை விஷயங்களுக்குமாக வருஷம் ஒன்றுக்குத் தலைக்கு ரூ. 8 தேவை யிருக்கும். இந்தத் தொகைகள் எல்லாவற்றையும் சேர்த்தால் ஒரு நபரின் வருஷச் செலவு குறைந்தது ரூ. 75 ஆகும். முன்னலேயே குறிப்பிட்டிருக்கிறபடி நாட்டுப்புறங்களில் தற்காலச் சராசரி வருமானம் ரூ. 18 தான். செலவுக்கு வேண்டிய வருமானம் முழுவதையும் பெறவேண்டுமானல், ஜனத்தொகையில்

100-க்கு 90 பேருக்கு இப்பொழுதுள்ள வருமானம் நான்கு மடங்கு அதிகரிக்கும்படி செய்யவேண்டும். கிராமங்கள் தம் தேவைகளை யெல்லாம் தாமே அநேகமாகப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய நிலையில் அவைகளைக் கூட்டுறவு-சமுதாயங்களாக அமைத்து, விவசாயத்தையும் குடிசைத் தொழில்களையும் விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்ய முற்பட்டால்தான் இந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியும்.

## கிராம சமுதாயங்கள்

இந்தியாவை அமைதியான ஜனநாயக அடிப்படைகளின் மீது புனர் நிர்மாணம் செய்து அமைக்கவேண்டுமானால், முற்காலத்தைப் போல், சுய ஆட்சியுள்ள கிராம சமுதாயங்கள் அல்லது கிராமப் பஞ்சாயத்துகளை நிறுவ வேண்டியது அவசியம்; தற்கால நிலைமைகளுக்குத் தக்கபடி அவைகளில் வேண்டும் மாறுதல்களைச் செய்து கொள்ளலாம். இந்தப் பஞ்சாயத்துகள், குறிப்பிட்ட அதிகாரங்களை மட்டும் பெற்றிருக்கும் தற்போதுள்ள லோகல் போர்டுகள் அல்லது ஜில்லா போர்டுகளைப் போலில்லாமல் முழுதும் மாறுபட்டிருக்கும். அவைகள் உள்ளூர் நிர்வாக சம்பந்தமாகப் பூரணமான அதிகாரம் பெற்றிருக்கும்; உணவு, உடை, கட்டட வேலைக்கான சாமக்கிரிகள் போன்ற வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களைத் தாமே தயாரித்துக்கொள்ளும் அளவுக்குக் கூடியவரை நிறைவு பெற்றிருக்கும். நாடெங்கும் ஏகோபித்த கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பதற்காகவும், பொது நலன்களைக் கவனிப்பதற்காகவும், தாலுகா, ஜில்லா, சில ஜில்லாக்கள் சேர்ந்த 'டிவிஷன்', மாகாணம், தேசம் ஆகியவற்றுடன் இந்தக் கிராமப் பஞ்சாயத்துகள் இணைக்கப்பட்டிருக்கும். கிராம சமுதாயங்களில் வயதுவந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை இருக்கும், நேர் முகமாக நபர்கள் கூடித் தேர்தலை நடத்துவார்கள். ஆனால், தாலுகா, ஜில்லா, மற்றும் மேலுள்ள சபைகளுக்கு, முதலில் தேர்ந்தெடுக்கும் பஞ்சாயத்தார்

களே அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இதுவே பொது விதியாக இருக்கும். பரவல் முறையில் அமைக்கப் படும் இத்தகைய பொருளாதார - அரசியல் ஸ்தாபனங் களின் சிலாக்கியங்களைப் பற்றி முன் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு நாம் திட்டம் வகுப் பதில் அடிப்படையாக இருப்பது கிராம ஸ்தாபனம்; பொருளாதாரப் புனருத்தாரணம் என்பது அடியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும்; தலையிலிருந்து கீழ் நோக்கி வருவதாக இராது.

## கிராமப் பஞ்சாயத்துகளின் வேலைகள்

கிராமப் பஞ்சாயத்துகளின் வேலைகள் இவை:

(1) கிராமத்தின் சார்பாக நிலவரியை நிர்ணயிப் பதும் வசூலிப்பதும். நில அனுபோகத்தைப் பற்றிக் கூறுமிடத்துப் பின்னால் இவ்விஷயம் விரிவாக விளக்கப்படும்.

(2) ஸ்தலப் போலீஸின் உதவியைக் கொண்டு கிரா மத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலவச் செய்தல்.

(3) உள்ளூர் வழக்குகளை விசாரித்து மத்தியஸ்தம் செய்தும், கட்சிக்காரர்களுக்குள் சமாதானம் ஏற்படும்படி செய்தும் நீதி பரிபாலனம் செய்தல். தற்காலத்திலுள்ள வழக்காடும் முறை மிகவும் சுற்றுக்கவும், அதிகச் செலவுக்குக் காரணமாகவும் இருப்பதுடன், கிராமங்களில் சமூகத்திலுள்ள நேசப்பான்மையையும், யோக்கியப் பொறுப் புணர்ச்சியையும் வேரோடு வெட்டி வீழ்த்தி விட்டது.

(4) அடிப்படைக் கல்விக்கும்,* முதியோர் கல் விக்கும் ஏற்பாடு செய்தல். பள்ளிக்கூடங்கள்

---

* ஒவ்வொரு குழந்தைக்கும் அத்தியாவசியமான அள வுக்கு எழுதவும், படிக்கவும், பிழைப்புக்கு ஏற்ற சில தொழில்களில் பயிற்சி பெறவும் கற்பித்தல்: காந்திய முறை யில், எழுதப் படிக்கக் கற்பிப்பதும் தொழில் மூலமே செய்யப்படும். இந்நூலில் 52-53-ம் பக்கங்களைப் பார்க்கவும்.

பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தில் இருக்க வேண்டும்.

5) மருந்துச் சாலைகள், சிறு சிகிச்சை ஸ்தலங்கள், பிரசவ மருத்துவ சாலைகள் முதலியவை அமைத்து உதவி புரிதல்.

(6) சுகாதாரப் பாதுகாப்பு, பொதுக் கட்டடங்கள், ரஸ்தாக்கள், குளங்கள், கிணறுகள், மற்றும் பொது இடங்களைப் பராமரித்தல்.

(7) கூட்டுறவு முயற்சிகளால் கிராம விவசாயத்தை அபிவிருத்தி செய்தல்.

(8) பஞ்சாயத்துகளின் மேற்பார்வையில் கடன் வசதிகள் அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களையும், மற்றும் தொழில்களுக்கான கூட்டுறவுச் சங்கங்களையும் அமைத்து, கிராமத்தின் வியாபாரம், தொழில் ஆகியவைகளை ஒழுங்குபடுத்தல்.

(9) மூலப் பொருள்களையும் ஜனங்களுடைய உபயோகத்திற்கு வேண்டிய பொருள்களையும் கூட்டுறவு முறையில் வாங்குவதற்கும், விளைபொருள்களையும், கிராமக் கைத்தொழில்களில் தயாராகும் பொருள்களையும் கூட்டுறவு முறையில் விற்பதற்கும் ஏற்பாடு செய்தல்.

இந்தியாவில் நடைபெறும் கூட்டுறவு இயக்கம் எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை; ஏனெனில், இந்த இயக்கம் இந்திய மண்ணில் வேரூன்றிக் கீழிருந்து மேலே வளராது, மேலேயுள்ள அரசாங்கத்தால் கிராமவாசிகளின் மீது சுமத்தப்பட்டதாகும். பல மாகாணங்களில் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்துச் சட்டங்கள் குறுகிய திருஷ்டியுடனும், பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்காமல் கட்டுப்படுத்தியும் இருப்பதால், அவைகளாலும் திருப்திகரமான பயன்கள் ஏற்படவில்லை. கிராம சமுதாய அமைப்பைப் புனருத்தாரணம் செய்வதற்கான ஏற்பாடுகளை இடைவிடாமல் நடத்த வேண்டியதுதான் என்றாலும், அது நிதானமாகவே நடைபெற வேண்டி

யிருக்கும் என்பது உண்மைதான். காரியாம்சத்தில் இறங்கும்பொழுது பல கஷ்டங்கள் ஏற்படலாம். தற்காலத்திய ஜாதிப் பிரிவினைகளும், தனிப்பட்ட நபர்களுடைய சுயேச்சை விருப்பமும் பஞ்சாயத்துகள் அமைதியாக வேலை செய்வதற்குத் தடைகளை உண்டாக்கலாம். ஆயினும் பஞ்சாயத்துகளை மீண்டும் நிறுவுவதிலேயே இந்திய சமூகத்தின் நம்பிக்கை நிறைவேற முடியும், சுபிட்சமும் ஏற்படும்.

# VII

## விவசாயம்

பொருளாதாரப் புனருத்தாரணத்திற்கான எந்தத் திட்டத்திலும், இந்திய மக்களின் மூலாதாரத் தொழிலாகிய விவசாயத்தின் அபிவிருத்தியே முதன்மையான விஷயமாக இருக்கவேண்டும். மேலும் விவசாயத்திற்கும் மற்றத் தொழில்களுக்கும் முரண்பாடு எதுவும் கிடையாது, இவை ஒன்றுக்கொன்று உதவி செய்பவை. தொழில்கள் வேறு விவசாயம் வேறு என்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவைகளாகக் கருதிக் கொண்டு, பின்னல் அவைகள் என்ன விகிதாசாரப்படி நடைபெற வேண்டும் என்று நிர்ணயிப்பதன் மூலம் 'சமநிலையான பொருளாதார அமைப்பு' ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது பொருத்தமான மனப்பான்மை யல்ல. தொழில்களுக்கு வேண்டிய கருவிகளையும் யந்திரங்களையும் தயாரிக்க உதவும் பெரிய மூலாதாரத் தொழில்களை மட்டும் தனியே அமைக்கலாம்; ஆனால் மற்றத் தொழில்கள் விவசாயத்தின் துணை முயற்சியாகவே சேர்ந்திருக்கும்படி அமைத்து, நிலங்களின் அருகாமையில் விவசாயத் தொழிற்கூடங்களுக்கு அடுத்தாற் போலவே குடிசைத் தொழிற்சாலைகளையும் நிறுவி, தொழில்களும் விவசாயமும் ஒன்றுசேர்ந்து பூரண வளர்ச்சியடையும்படி செய்வதே பொருளாதாரத் திட்டத்தின் நோக்கமாக

இருக்கவேண்டும். இவ்வாறு உழைப்பை ஒன்றுசேர்ப்பது தேச மக்களின் உடல் நலத்திற்கு அனுகூலமா யிருப்பதுடன், தேசியப் பொருளாதார அமைப்பும் உண்மையான சமநிலையுள்ளதாயும் நன்மை புரிவதாயும் அமையும்.

இந்தியாவில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் பொழுது கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

(1) ஜனங்கள் அனைவருக்கும் போதுமான அளவு புஷ்டி தரும் உணவு அளிப்பதே முதல் நோக்கமா யிருக்கவேண்டும்.

(2) தேசத்தின் பல பாகங்களிலும், சீதோஷ்ண நிலைக்கும் நிலங்களின் தன்மைக்கும் தக்கபடி சாகுபடி செய்யும் பயிர்கள் பற்றிய திட்டங்கள் வித்தியாசப்படும்.

(3) உணவுப் பொருள்கள், தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட வரையில் தேசம் (வெளி உதவியை எதிர்பாராமல்) கூடியமட்டும் நிறைவு பெற்றிருக்க வேண்டும்; தேவையானவை போக மிஞ்சும் விளைபொருள்களையே மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

(4) நாட்டின் பல பிராந்தியங்களிலும்கூட, உணவுப் பொருள்களிலும் மூலப் பொருள்களிலும் ஒவ்வொன்றுமே சுய-தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்படி முயற்சி செய்ய வேண்டும்; போக்குவரத்து வாகனங்கள் (ரயில் வாகன முதலியவை) போதுமான அளவில் இல்லாமல் திணறும் நிலைமையைத் தவிர்ப்பதற்கும் இது அவசியம்.

(5) இப்பொழுது ஸ்தலத் தேவைகளைக் கவனியாமல் தொலைவிலுள்ள மார்க்கெட்டுகளுக்காக விவசாயம் நடத்துவது, அதாவது 'விற்பனைக்காக விவசாயம்' என்ற முறை, படிப்படியாக ஒழியவேண்டும்.

(6) விவசாய அபிவிருத்திக்குரிய பரீட்சைகளைச் செய்து பார்ப்பதற்கான பண்ணைகளை அரசாங்கமே ஏற்படுத்த வேண்டும்; இந்தப் பண்ணைகளே குடியானவர்கள் பின்பற்றக்கூடிய மாதிரிப் பண்ணைகளாகவும் இருக்கவேண்டும்.

## உணவுத் தட்டுப்பாடு

டாக்டர் ராதாகமல் முகர்ஜியின் கணக்குப்படி, இந்தியா உணவுப் பொருள்களில் (போதிய அளவில்லாமல்) குறைவுற்ற நாடாக இருக்கிறது. கணக்கின் விவரங்கள் வருமாறு: *

1935-ல் இந்தியாவின் ஜனத்தொகை 32 கோடி 90 லட்சம்.
,, ,, உணவுக் குறைவு 41 கோடி 10 லட்சம் [கலோரிகள்.
,, ,, உணவில்லாதவர்களின் சராசரி [எண்ணிக்கை 4 கோடி 80 லட்சம்.†

சமீபத்தில் ஏற்பட்ட வங்காளப் பஞ்சம் மனிதரால் ஏற்பட்ட விபரீதமாக இருந்தபோதிலும், இந்த நாட்டில் உணவுப் பொருள்களின் விளைவை அதிகப்படுத்த வேண்டியது உடனடியான அவசியம் என்பதை அது வற்புறுத்தி யிருக்கிறது. மற்ற நாடுகளில் ஒவ்வோர் ஏக்கர் நிலத்திலும் சராசரியாக விளைவதைப் பார்க்கிலும் இந்தியாவில் மிகவும் குறைவாகவே யிருக்கிறது. அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்க புள்ளி விவரங்கள் வருமாறு: ‡

* 'Food Planning for 400-Millions — 40 கோடி மக்களுக்கு உணவுத் திட்டம்'; பக்கம் 26.

† 'Statistical Year Book of the League of Nations, 1933-1934 - சர்வதேச சங்கத்தின் வருஷாந்தரப் - புள்ளி விவரப் புத்தகம், 1933-34.'

‡ வெளிநாடுகள் பற்றிய கணக்கு ஒருவேளை உள்ள விளைவுக்குக் குறைவா யிருந்தாலும், கூடுதலாக இருக்காது.

(ஒவ்வோர் ஏக்கரின் விளைவும், ராத்தல் கணக்கில்)

| தேசங்கள் | கோதுமை | அரிசி | கரும்பு | பருத்தி |
|---|---|---|---|---|
| எகிப்து | 1,918 | 2,998 | 70,302 | 535 |
| ஜப்பான் | 1,713 | 3,444 | 45,534 | 196 |
| யு. எஸ். ஏ. | 812 | 2,185 | 43,270 | 268 |
| சீனா | 989 | 2,433 | —— | 204 |
| இந்தியா | 660 | 1,240 | 34,944 | 89 |

## நில அனுபோகமும் நில வரியும்

இந்தியாவில் சாகுபடி செய்யும் பலவகைப் பயிர்களிலும் நிலத்தின் விளைவை அதிகரிக்கச் செய்வதற்குச் சில சீர்திருத்தங்களும் மாறுதல்களும் மிக்வும் அவசியம். இவைகளில் முதலாவது கவனிக்கவேண்டிய சீர்திருத்தங்கள் நிலங்களைத் தேசீயப் பொதுவாக்குவதும் (nationalisation), நிலங்களின் அனுபோகத்தை ஒவ்வொரு கிராமத்திற்கும் பொதுவாக விட்டுவிடும் மௌஜாவாரி ஏற்பாடும். ஜமீன்தாரி முறை பழைய நிலப் பிரபுத்துவ * முறையின் சின்னமாக இருப்பதால், அது இக்காலத்திற்கு ஏற்றதன்று. ரயத்துவாரி முறை (ரயத்து-குடியானவன்) இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட காரணம்

* அரசனுக்குக் கீழ்ப்பட்டு ஜமீன்தார்களும், பண்ணையார்களும் நிலங்களை உடைமையாகக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குக் கீழே ஏராளமான குடியானவர்கள் விவசாயம் செய்து, விளைவில் பெரும் பகுதியை அவர்களுக்கு அளிப்பார்கள். அந்தப் பகுதியிலிருந்து அரசனுக்கு ஒரு பகுதி கொடுக்கப்படும். யுத்த காலங்களில், ஜமீன்தார்களும் பண்ணையார்களும் தங்கள் படைகளை அரசனுக்கு உதவியாக அனுப்புவார்கள், தாமும் நேரில் சென்று உதவுவார்கள். இந்த முறையே 'நிலப் பிரபுத்துவ முறை - feudalism' என்று சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. இந்த முறைக்கு அடுத்த படியாகத்தான் 'முதலாளித்துவ முறை' வந்திருக்கிறது. தமிழில் வெளியாகும் ஆங்கில - சரித்திரப் பாடப் புத்தகங்களில் இது 'உம்பளிக்கை ஏற்பாடு' என்று சொல்லப்படுகிறது.

என்னவென்றால், குடியானவர்களிடம் அரசாங்கம் நேரிடையாகச் சம்பந்தம் வைத்துக்கொண்டு, எவ்வளவு கூடுதலாக நிலவரி வாங்க முடியுமோ அவ்வளவையும் வசூலிக்கவேண்டும் -என்பதே. ஆகவே மௌஜாவாரி முறையை ஏற்படுத்துவது நலமாகும்: இதன்படி நிலவரி அணைத்தையும் சர்க்காருக்குச் செலுத்தவேண்டியதற்குக் கிராம சமுதாயம் முழுதுமே பொறுப்பாகும். பற்பல குடியானவர்களும் தாங்கள் பயிர் செய்யும் நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய மேல்வார விகிதங்களை, இப்பொழுதுள்ளபடி 'ரெவினியூ இலாகா' அதிகாரியால் அல்லாமல், சமுதாயமே நிர்ணயிக்கும்படி விடவேண்டும். இந்தியாவின் புராதன கிராம சமுதாயங்கள் குலைந்துபோனதற்கு ரயத்துவாரி முறை ஒரு நேரடியான காரணம். மௌஜாவாரி (கிராம சமுதாயவாரி) முறையை ஏற்படுத்துவதால், இந்திய நாட்டின் கிராமாந்தர வாழ்க்கையில் பொதுநல ஐக்கிய உணர்ச்சி மீண்டும் நிலைபெறும். கிராமப் பஞ்சாயத்துகள் (சமுதாயங்கள்) கிராம நிலங்களைத் தனிப்பட்ட குடியானவர்களுக்குக் குத்தகைக்குப் பிரித்துக் கொடுக்கும்; நிர்ணயிக்கப்பட்ட குத்தகைகள் (மேல்வார விகிதங்கள்) முறையாகச் செலுத்தப்பட்டு வந்தால், குத்தகைக் காலம் நீடித்திருக்கும்—(அதாவது குடியானவன் தன் கடமையைச் சரிவரச் செலுத்தி வருமளவும் அவன் நிலத்தின் சொந்தக்காரன் போலவே நிலப் பாத்தியதையை அனுபவித்து வரலாம்.) தற்போதுள்ள மேல்வார (குத்தகை) அளவையும், நிலவரியையும் மிகவும் குறைக்கவேண்டியது அவசியம். குத்தகைப் பாக்கி ஏற்பட்டால், மற்ற ஸிவில் கடன்களை வசூலிப்பதுபோல் வாங்கவேண்டுமே யல்லாமல், குடியானவர்களிடமிருந்து நிலங்களைப் பறித்துவிடக் கூடாது. குத்தகை ரொக்கப் பணமாக இல்லாமல், புராதன இந்தியாவில் நடைபெற்று வந்ததுபோல், கூடியவரை தானியமாக வாங்கப்பட வேண்டும், அல்லது ஒரு பகுதியாவது தானியமாயிருக்கவேண்டும்; குத்தகை ஒரே அளவாக—மொத்த விளைவில் ஆறில் ஒரு பங்கு, அல்லது எட்டில் ஒரு பங்கு என்ற முறையில்—நிர்ணயிக்கப்பட வேண்டும். தானிய

மாக வசூலிப்பது சர்க்காருக்கு நிச்சயமாக இடைஞ்சல் தான். ஆனால் குடியானவன் நிலையில் அதைக் கவனித் தால், அது அவனுடைய சிக்கனத்திற்கு உகந்ததாகவும், பொருத்தமாகவும், வசதியாகவும் இருக்கும். ஏனெனில், விளைவின் அளவில் கூடுதல் குறைவுக்குத் தக்கபடியே அவன் குத்தகை கொடுக்கவேண்டியிருக்கும். குத்தகைத் தொகையை ரொக்கமாகச் செலுத்துவதற்காக, கிராம வாசிகள் தங்கள் விளைபொருள்களை விற்பது சகஜமாக நடைபெறும் விஷயம். கட்டாயமாக இப்படி விற்க நேரு வதால், விலைவாசிகளில் குறைவு ஏற்படுகிறது; (முதலில் [illegible] வியாபாரிகளே) பிறகு கூடுதல் விலைக்கு [illegible]. தானியமாகக் கட்டு வதால் [illegible] லேவாதேவிக்காரர்களுடைய கையில் [illegible] முடியும்.

[illegible]

[illegible] ஜமீன்தார்கள், தாலுகாதார்கள், [illegible] [illegible] நில உரிமைகளை [illegible] நிலங்களைத் [illegible] செய்யப்பட்டது. [illegible] சர்க்காருக்கும் இடையிலே தரகர்கள் இருக்க மாட்டார்கள். அவர்கள் தாமே உழுது பயிர்செய்கிற [illegible] அவர்களுக்கு நீண்ட கால குத்தகைக்கு நிலம் சர்க்காரால் கொடுக்கப்படும். அது [illegible] பாரம்பரியமாக [illegible]. அவர் தாமே உழுது பயிரிடுவதாக [illegible] வேறு யாருக்கும் அதைப் பாத்தியப்படுத்த முடியாது. தங்கள் [illegible] நிலங்களை [illegible] கொண்டு, தாமே பயிரிடாமல், [illegible] [illegible] இருக்கக் கூடிய [illegible] இனி [illegible], [illegible], இப்போது [illegible] உரிமைகளைப் படிப் படியாக [illegible] [illegible] [illegible]

மதிக்கப்படும். நிலங்களின் பேரிலுள்ள உரிமைகள் சம்பந்தமாக நிலச்சுவான்கள் வைத்துக் கொண்டிருக்கும் தஸ்தாவேஜுக்களை நன்கு பரிசீலனை செய்து, அவர்களுக்கு நியாயமான நஷ்ட ஈடும் கொடுக்கலாம். அநேக நிலங்கள் ஜமீன்தார்களின் கைக்குப் போன விவரத்தை ஆராய்ந்தால், சட்டத்தின் கோளாறும், அக்கிரம லேவாதேவியும் அதற்குக் காரணம் என்பதைக் காணலாம். இப்பொழுது அத்தகைய நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு (அவைகளைப் பொதுவாக்குவதற்கு ஈடாக) எவ்வித உதவியும் செய்ய வேண்டியதில்லை. நிலத்தைப் படிப்படியாகத் தேசியப் பொதுவாக்குவதற்கு, அதிகமான வாரிசு வரிகள் அல்லது மரண வரிகளை விதிக்கலாம். எந்த நிலத்தையாவது ஒருவருடைய வாரிசு அடைய நேரும்பொழுது, அந்த நிலத்தின் விலை மதிப்பில் பாதிக்குக் குறையாமல் வரியாகக் கட்ட வேண்டும் என்று விதி செய்ய வேண்டும். இம்மாதிரியாக, நிலங்கள் சொந்த உடைமையாக இருப்பது சுமார் இரண்டு தலைமுறைகளில் தானாகவே ஒழிந்துவிடும்படி செய்யப்படும்.

### நிலச் சிதைவு

வாரிசுகளுக்குச் சொத்தில் சம-பாகம் அளிக்கும்படி இந்தியச் சட்டம் அமைந்திருப்பது காரணமாக நிலங்கள் துண்டு துண்டாகப் பிரித்துச் சிதைக்கப்படுவதால், இந்திய விவசாயத்தில் மகசூலைப் பெருக்குவதற்கு அதுவே பெருந் தடையாக இருக்கிறது. நிலத்தைச் சிறு பிரிவுகளாகப் பிரிப்பதால் ஏற்படும் அசௌகரியங்கள் மிகத் தெளிவாய்த் தெரிந்திருப்பதால் அவற்றை இங்கே விவரிக்க வேண்டியதில்லை. தற்போது இந்தியாவின் பாகங்கள் எல்லாவற்றிலும் ஒரு குடியானவனுடைய சராசரி நில அளவு 3 ஏக்கருக்கு மேலில்லை. குடியானவர்களில் ஒரு நபருக்கு உரித்தாயுள்ள ஏக்கர்களைப் பற்றி, 1921-ம் வருஷத்து ஜன கணித அறிக்கையில் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பம்பாய் | ... | 12·2 | வங்காளம் | ... | 3·1 |
| பஞ்சாப் | ... | 9·2 | பீஹார் - ஒரிஸா | ... | 3·1 |
| மத்திய மாகாணம் | ... | 8·5 | அஸ்ஸாம் | ... | 3·0 |
| சென்னை | ... | 4·9 | ஐக்கிய மாகாணம் | ... | 2·5 |

மற்ற நாடுகளில் குடியானவனுடைய நிலத்தின் சராசரி விஸ்திரணத்தைத் தெரிந்துகொள்வது நலமாகும்:*

| | | ஏக்கர் | | | ஏக்கர் |
|---|---|---|---|---|---|
| யு. எஸ். ஏ. | ... | 145 | ஜெர்மனி | ... | 21·5 |
| டென்மார்க் | ... | 40 | பிரிட்டன் | ... | 20·0 |

நிலங்களைச் சிதைப்பதால் ஏற்படும் தீமைகளைக் குறைப்பதற்கு, கீழ்க்கண்ட பரிகாரங்கள் ஆலோசனைக்கு உரியவை :

(1) பஞ்சாப், மத்திய மாகாணம், பரோடா ஆகிய இடங்களில் செய்திருப்பதுபோல், குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தங்கள் நிலங்களைத் தாங்களாகவே ஒன்றுசேர்த்துக் கொள்ளல்.

(2) பலவேறு சிறு வயல்களில், சேர்ந்தாற்போல் இருப்பவைகளின் வரப்புகளை எடுத்துவிட்டு, கூட்டுறவு முறையில் ஒன்று சேர்த்துப் பயிர் செய்தல். ஸோவியத் ரஷ்யாவில் மாபெரும் அளவில் நடத்தப்படும் கூட்டுப்பண்ணை முறையோடு இதைக் குழப்பிவிடக் கூடாது. இவ்வாறு கூட்டுறவுப் பயிர் செய்வதில், நிலங்கள் தனி நபருடையவை என்பதால் ஏற்படும் நன்மைகளும், பயிர் மட்டும் கூட்டுப்பயிரா யிருப்பதால் ஏற்படும் நன்மைகளும் ஒருங்கே கிடைக்கும்.

(3) தற்போதுள்ள வாரிசு - பாத்தியதை முறையை மாற்றியமைத்தல். உதாரணமாக, குறித்த ஓர் அளவுக்கு மேல் நிலத்தைப் பிரிக்கக் கூடாது.

* 'The Indian Rural Problem': Nanavati and Anjaria - 'இந்தியக் கிராமாந்தரப் பிரச்னை': நாணவதியும் அஞ்சேரியாவும் எழுதியது, பக்கம் 40.

குறைந்தபட்சமான குறித்த அளவு 20-ஏக்கர் என்று தீர்மானிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். 20-ஏக்கர் நிலமுள்ள ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்து, அவர்கள் பாகம் செய்துகொள்ள விரும்பினால், இருவரில் ஒருவன் மற்றவனுடைய நிலத்தையும் விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும். நிலத்தை 10 ஏக்கர் வீதம் இரண்டு துண்டுகளாகப் பிரிக்கக் கூடாது.

(4) லாபகரமா யில்லாத நிலங்களுக்குத் தாற் காலிகமாகக் குத்தகைப் பாட்டம் எதுவும் வாங்காமல் இருக்கவேண்டும்.

## கிராமங்களின் கடன்சுமை

நாம் விசேஷமாகக் கவனிக்க வேண்டிய மற்றொரு பிரச்னை கிராமங்களை நசுக்கிவரும் கடன்சுமை. கிராமங் களில் இயற்கையாக இருந்துவரும் லேவாதேவிக் காரர்கள் இந்தியக் கிராமாந்தர வாழ்க்கையில் முக்கிய மான ஒரு பகுதிக்குக் காரணமாக இருந்திருப்பினும், அவர்களுடைய அளவற்ற பேராசையையும் அநியாய வட்டி வாங்கும் முறையையும் மிகவும் அழுத்தமாகக் கண்டிக்க வேண்டியது அவசியம். மத்திய பாங்கி விசாரணைக் கமிட்டியின் கணக்குப்படி, 1929-ல் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் விவசாயக் கடன்சுமை சுமார் ரூ. 900 கோடி. இந்திய ரிசெர்வ் பாங்கியின் விவசாயக் கடன் இலாகா, 1937-ல் கிராமங்களின் கடன்சுமை ரூ. 1,800 கோடி என்று மதிப்பிட்டது. லேவாதேவிக் காரருடைய வட்டிக் கொடுமை ஒருபுறமிருக்க, லாபகர மற்ற நிலங்களைக் கட்டிக்கொண்டு துயர்ப்படுவதும், குடிசைகளில் செய்யக்கூடிய துணைத் தொழில்கள் இல்லாமையும், அரசாங்கத்தின் வரிவிதிப்புக் கொள் கையும், விளைவுக் குறைவும் இந்தக் கடன் ஏறுவதற்குக் காரணங்களா யிருக்கின்றன.

இந்திய விவசாயி இப்பொழுது அனுபவித்து வரும் துன்பத்திலிருந்தும், வற்றாத வறுமையிலிருந்தும்

அவனைக் கைதூக்கி விடவேண்டுமானால், இந்தக் கடனை ஒருபடியாகத் தீர்த்துவைக்க வேண்டியது மிக அவசரமான விஷயம். இந்த வகைக்காகப் பல மாகாணங்களிலும் முயற்சிகள் நடந்திருக்கின்றன: விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டங்களும், கடன் சம்பந்தமான மத்தியஸ்த சபைகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் இவையெல்லாம் ஆரம்ப வேலைகளே; அந்தப் பெரிய பிரச்னையின் ஒரு சிறு பகுதியைக் கூட இவை தீர்த்து விட முடியாது. அதிகத் தீவிரமாகவும் விரிவாகவும் திட்டம் வகுக்க வேண்டியது அவசியம். அதற்கான சில ஆலோசனைகள் கீழே கொடுக்கப்படுகின்றன:

(1) கடன்களைப் பற்றிய கணக்கு விவரங்களையெல்லாம் விசேஷ நீதிபதிகளைக் கொண்டு கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டும்; கள்ளக் கடன்களையும் அக்கிரமக் கடன்களையும் தாட்சிணியமில்லாமல் தள்ளுபடி செய்ய வேண்டும். மற்றக் கடன்களையும் கண்டிப்பான முறையில் சரி பார்த்துத் தொகையைக் குறுக்க வேண்டும்.

(2) எந்தக் கடனாவது 10 வருஷத்திற்கு மேற்பட்டிருந்து, அதற்கு வட்டி தவறாமல் செலுத்தப்பட்டு வந்திருந்தால், அந்தக் கடன் முழுதும் செலுத்தப்பட்டதாகவே கருதவேண்டும்.

(3) சர்க்காரும் கிராம ஜனங்களின் கடன் நிவாரணத்திற்காக உதவி செய்யவேண்டும். 20 வருஷத் தவணை வைத்து, சம்பந்தப்பட்ட லேவாதேவிக்காரர்களுக்கு 'அரசாங்கக் கடன் பத்திரங்கள்' கொடுக்க வேண்டும். குடியானவர்கள் அந்தக் கடன் தொகையை 20 வருஷ காலத்தில் 20 தவணைகளாகச் சர்க்காரிடம் கட்டுவதற்கு வசதி செய்யவேண்டும்.

(4) கிராமப் பஞ்சாயத்துகள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நில அடமான பாங்கிகள் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு நீண்டகாலத் தவணையில் கடன் கிடைக்கும் [illegible]கரியங்களை

அமைக்கவேண்டும். புதிய கடன்களுக்கு அரை வட்டிக்கு (6%-க்கு) மேல் வாங்கக் கூடாது.

(5) தனி நபர்களின் லேவாதேவியைத் தடுத்துவிட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது சில அடமான பாங்கிகள் மட்டுமே இந்த வேலையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

(6) கடன்களைச் செலுத்த முடியாமல் அவற்றிற்காக நிலங்களைக் கொடுத்துவிடும் வழக்கத்திற்குத் தக்க தடைகள் விதிக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலைமை சிறிது சௌகரியமாகக் காணப்படுகிறது; ஏனெனில், விளை பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன, பணப் புழக்கமும் அதிகமாயிருக்கிறது. இக்காரணங்களால் விவசாயிகள் தங்களுடைய நாட்பட்ட கடன்களை ஓரளவு தீர்ப்பதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இது தாற்காலிகமாக ஏற்பட்ட ஓர் அனுகூலத்தைத் தவிர வேறில்லை; இந்த நிலைமை நீடித்து நிற்கக் கூடியதல்ல. கடன் பிரச்னையை முழுதும் தீர்த்து வைப்பதற்குப் பல வருஷங்கள் பிடிக்கும். ஆகவே அதற்கு ஏற்றாற்போல் நீண்ட காலத் திட்டம் ஒன்றை முறையாக வகுக்கவேண்டிய அவசியம் என்றுமே இருந்து வருகிறது. உண்மை என்னவென்றால், கடன் சுமை என்பது தனியாகத் தீர்த்துவிடக்கூடிய பிரச்னையாயிராமல், இந்தியாவின் வறுமை என்ற பெரிய பிரச்னையோடு இணைந்திருக்கிறது. கிராமங்களின் கடன் சுமையைக் குறைப்பதற்கும், கடன் ஏற்படாமலே தடுப்பதற்கும், குடியானவர்களின் பொருளாதார நிலைமை மேம்படச் செய்யவேண்டும். அதற்கு முதல்தரமான இரண்டு வழிகள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதும், கிராமங்களில் செய்யக்கூடிய துணைத் தொழில்களைப் புனருத்தாரணம் செய்வதும்.

இப்போது தரிசாய்க் கிடக்கும் பூமியில் பயிரிட லாயக்கான நிலங்களாகச் சுமார் 17 கோடி ஏக்கர்கள் இருக்

கின்றன. இவைகளையும் உழுது பயிரிட்டால் விவசாய விளைபொருள்களைப் பெருக்க முடியும். எனவே முதலில் சாகுபடி செய்யும் நிலங்களை அதிகப்படுத்துவது நலம். தரிசு நிலங்களைப் பண்படுத்துவதில் சில கஷ்டங்கள் உண்டு. அந்தக் கஷ்டங்களில் சில: மூலதனம் கிடைப்பதன் அருமை, விபரீதமான சீதோஷ்ண நிலை, குறைந்த செலவில் போதுமான போக்கு-வரத்துச் சாதனங்கள் இல்லாமை, நீர்ப்பாசன வசதிகளின் குறைவு ஆகியவை. ஆகவே தரிசுகளைத் திருத்திக் கழனிகளாக்கும் வேலையைத் தனிப்பட்ட விவசாயிகளிடம் ஒப்படைக்க முடியாமலிருக்கிறது. இந்த முக்கியமான வேலையை அரசாங்கமே மேற்கொண்டு, ஆரம்பச் செலவுகளுக்கு வேண்டிய மூலதனத்தையும் அதுவே போட வேண்டும்.

சாகுபடி நிலங்களை விஸ்தரிப்பது மட்டும் போதாது; இருக்கிற நிலங்களில் மேல்மட்டத்திலுள்ள சாரமான மண்ணை மழைநீரும் வெள்ளமும் கரைத்துக்கொண்டு போகாமல் பாதுகாக்கவும் வேண்டும். இந்த விஷயம் இதுவரை அலட்சியமாக விடப்பட்டிருப்பதே தவறு. இந்த நஷ்டத்தை முன்னதாகத் தடுக்காவிட்டால், கோடிக்கணக்கான ஏக்கர்கள் நீரால் கரைக்கப்பட்டு, விவசாயத்திற்கு நிரந்தரமாக லாயக்கில்லாமலே போய் விடும். இதைத் தடுப்பதற்குக் காடுகள் வளர்த்தலும், சாய்வான சமநிலப் பரப்புகளைச் சம-மட்டமான பல தட்டுகளாக அமைப்பதும் அவசியம்.

## நீர்ப்பாசன வசதிகள்

மிக விஸ்தாரமாகச் சாகுபடி செய்வதை அதிகரிப்பதற்கு இந்த முறைகளைக் கையாளுவதுடன், இப்பொழுது பயிரிடப்படும் நிலங்களில் அதிக விளைவு டாகும்படியும் (ஒரே விஸ்தீரணத்தில் இப்போதை அதிக மாகூல் இருக்கும்படியும்), ஆராய்ச்சி முடிவுகளை பயன்படுத்தியும் விவசாயம் செய்யவேண்டும். இதற் இப்பொழுதுள்ள நீர்ப்பாசன வசதிகளை இன்

அதிகமான இடங்களுக்கும் கிடைக்கும்படி விஸ்தரிக்க வேண்டும். 1939-40-ல், மொத்தம் சாகுபடி செய்யப்பட்ட 24 கோடி 40 லட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களில், 5 கோடி 49 லட்சம் ஏக்கருக்கு மட்டுமே நீர்ப்பாசன வசதிகள் இருந்தன — 2 கோடி 90 லட்சம் ஏக்கருக்கு வாய்க்கால்கள் மூலமும், 59 லட்சம் ஏக்கருக்கு ஏரிகள் குளங்கள் மூலமும், 1 கோடி 35 லட்சம் ஏக்கருக்குக் கிணறுகள் மூலமும், 65 லட்சம் ஏக்கருக்கு வேறு வழிகளிலும் நீர் பாய்ச்சப்பட்டு வந்தது. இந்தக் கணக்குப்படி பார்த்தால், மொத்தம் விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பில் 100-க்கு 23 பகுதியே தண்ணீர் வசதிகளைப் பெற்றிருக்கிறது என்றும், பாக்கியுள்ள (77) பகுதி மானு மாரியாய்ப் பருவகாலத்து மழையை நம்பியே பயிரிடப் படுகிறது என்றும் தெரிகிறது. ஆகையால் இவ்விஷயத்தில் சர்க்காரின் பொறுப்பு மிக அதிகம்; அதிகச் செலவில்லாத முறைகளில் பாசன வசதிகளை அதிகப்படுத்துவதற்குக்கூட ஏராளமான தொகையைச் செலவிட வேண்டியிருக்கும்.

## விவசாயத்தைத் திறம்பட அமைத்தல்

மேலே குறித்த சீர்திருத்தங்களைச் செய்வதுடன், கீழ்க்கண்ட முறைகளின் மூலம் விளைவு அதிகரிக்கும்படி செய்து விவசாயத்தைத் திறம்பட அமைக்க முடியும்:

(1) உரங்கள் — நமது நாட்டில் சாகுபடி செய்யும் நிலங்கள் படிப்படியாகப் பூ-சாரத்தை (செழுமையை) இழந்து வருகின்றன என்பது கீழ்க்கண்ட கணக்கிலிருந்து தெளிவாகிறது.* ஏக்கர் 1-க்கு எத்தனை ராத்தல் விளைகிறது என்ற விவரம் காட்டப்படுகிறது:

* 'இந்தியாவில் முக்கியமான பயிர்களின் நில விஸ்தீரணமும் விளைவும் பற்றிய கணக்கு, 1940-41.'

| | நெல் | | | கோதுமை | | |
|---|---|---|---|---|---|---|
| | வங்காளத்தில் | பீஹாரில் | மத்திய மாகாணத்தில் | பம்பாயில் | வங்காளத்தில் | மத்திய மாகாணத்தில் |
| 1931 – 32 | 961 | 912 | 718 | 430 | 525 | 429 |
| 1940 – 41 | 652 | 519 | 419 | 385 | 451 | 397 |
| குறைவு | 309 | 393 | 299 | 45 | 74 | 32 |

ஆகவே நிலங்களின் செழுமையைப் புதுப்பித்தல் மிகவும் அவசியம். துரதிர்ஷ்டவசமாக நம் கிராமங்களில் தொழுக்களில் சேரும் எருவில் பெரும் பகுதியை வறட்டியாகச் செய்து எரித்து விடுகிறார்கள், அல்லது அதைக் கூட்டி வைக்காமலே வீணாக்கி விடுகிறார்கள். எரிப்பதற்கு வேறு பொருள்கள் கிடைக்கும்படி செய்து இந்த வழக்கத்தைக் கைவிடும்படி செய்யவேண்டும். கிராமங்களுக்கு அருகிலுள்ள காலி நத்தங்களில் விறகுக்கு உபயோகமாகக் கூடிய மரங்களை நடவேண்டும். நதிகள், ஓடைகள், கால்வாய்களின் கரைகளில் மரங்களை ஏராளமாக வைத்து உண்டாக்கினால், தேவையான விறகு கிடைப்பதுடன், கரையோரமுள்ள கழனிகளை வெள்ளம் பாழாக்காமலும் தடுக்கலாம். கால்நடைகளின் மூத்திரம் தேக்கி வைக்கப்படாமல் வீணாக்கப்படுவதே வழக்கமாயிருக்கிறது; கக்கூசு உரத்தை நிலங்களுக்கு உபயோகிப்பதில் தற்காலத்தில்கூட வெறுப்பு இருந்து வருகிறது. கிராமங்களில் மலங் கழிப்பதற்கு நீளமான குழிகள் வெட்டிக்கொள்ளும் முறையை அனுஷ்டித்தால், அதனால் சேருகிற உரத்தின் மூலம் விவசாயிகள் நிலங்களை மிகவும்

செழுமையுண்டாகும்படி செய்யலாம். செத்துப் போன மிருகங்களின் எலும்புகள் இப்போது அநேகமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன; அவைகள் எவ்வளவு நல்ல உரமாகும் என்பதைக் குடியானவர்கள் உணர வில்லை.

செயற்கை உரங்களின் (ரசாயன உரங்களின்) உற்பத்தியிலும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்; இந்தத் தொழிலை மூலாதாரத் தொழில்களில் ஒன்றாக மதித்து, இதைச் சர்க்காரே தன் சொந்தத்தில் வைத்து நடத்திவர வேண்டும். ஆனால் பெரிய அளவில் இந்தச் செயற்கை உரங்களை உபயோகிக்க ஆரம்பிக்கு முன், கிராமங்களிலேயே கிடைக்கக்கூடிய சாணம், கக்கூசு உரம், எலும்புகள் ஆகியவைகளை எவ்வளவு அதிகமாகச் சேர்க்க முடியும் என்பதை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

(2) **கால்நடைகளை அபிவிருத்தி செய்வதா, அல்லது யந்திரங்களை உபயோகிப்பதா?** — இந்தியாவில் விவசாயத்தை யந்திர மயமாக்க வேண்டியது அதிக அவசியம் என்று அநேகமாக எல்லாப் பொருளாதார நிபுணர்களும் ஆலோசனை கூறியிருக்கின்றனர். ஆனால் யந்திரங்களைக் கொண்டு உழவு செய்வதிலுள்ள லாபங்களையும் விளைவுகளையும் நிதானிப்பதற்கு, யந்திரக் கலப்பைகள் (tractors - டிராக்டர்கள்) வைத்துக்கொள்வதில் ஏற்படும் செலவையும், உழவு மாடுகளை வைத்துக் கொள்வதில் ஏற்படும் செலவையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். செலவு இரண்டு பிரிவாக இருக்கும்: ஒன்று, உழவு இல்லாத காலத்தில் வைத்துப் பரிபாலிக்கும் (மாறாத) நிரந்தரமான செலவு; மற்றது, உழவு காலத்தில் ஏற்படும் (மாறும்) விசேஷச் செலவு. உழவு இல்லாத காலத்தில் யந்திரக் கலப்பைகளுக்காகச் செலவு

ஒன்றும் இல்லை, இருந்தாலும் மிகவும் சொற்பமாயிருக்கும்; உழவு காலத்தில்தான் செலவு அதிகமாகும். அதாவது இவைகளில் 'மாறும்' செலவு அதிகமாயும், 'மாருத' செலவு குறைவாயும் இருக்கும். உழவு மாடுகள் விஷயத்தில், 'மாறும்' விசேஷச் செலவு சுருக்கமாயும், 'மாருத' நிரந்தரச் செலவு மிக அதிகமாயும் இருக்கும். அதாவது, யந்திரக் கலப்பை, வேலை செய்யும்பொழுது செலவு அதிகமாயினும், சும்மா வைத்திருக்கும் பொழுது செலவு சுருக்கம்; உழவு மாடுகளுக்கோ வேலை செய்யும் காலத்திலும் சாதாரண காலத்திலுள்ள செலவே ஏற்படுகிறது, அந்தச் செலவு தொடர்ந்தாற் போல் எப்பொழுதும் உள்ளது. ஏனெனில் அவைகள் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் அவைகளுக்குத் தீனி போட்டு வளர்க்கவேண்டியிருக்கிறது. 'ஆகவே சுருக்கமான நேரத்தில் மிக அதிகமான வேலை செய்ய வேண்டியிருந்தால் யந்திரக் கலப்பைகளை உபயோகிப்பதே மிகவும் லாபகரமானது. கால் நடைகளோ என்ருல், வருஷம் முழுதும் இடைவிடாமல் நீடித்திருக்கும்படி வேலையைப் பிரித்து நடத்திஞல், அவைகள் யந்திரக் கலப்பைகளைவிட லாபகரமாயிருக்கும்.' *

இந்தியாவில் குடியானவர்களுடைய வயல்கள் சிறு அளவுள்ளவை; விவசாயத்தை யந்திர மயமாக்குவது லாபகரமான விஷயமன்று என்பதற்கு இதுவும் ஒரு காரணம். ஆயினும், இப்பொழுது உபயோகமாகும் கருவிகளைவிட மிக உயர்ந்த முறையில் புதுக் கருவிகள் மிகவும் அவசியமே; அதிலும் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதில் இவை இன்றியமையாதவை.

---

* நாட்டுப்புற வாழ்க்கை பற்றிய ஐரோப்பிய மகாநாடு. 1939 — தஸ்தாவேஜு எண் 5, பக்கம் 20.

(3) கோ சம்ரக்ஷணம் — பெருவாரியான யந்திரக் கலப்பைகளை இந்தியாவில் உபயோகிப்பது விரும்பத்தக்கதன்று; ஆதலின் நம் கால்நடைச் செல்வத்தை (ஆடு மாடுகளை) விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்தல் அவசியம். இந்த முறையில் கவனித்தால், பசு சம்பந்தமாக சர்க்கார் தன்னால் முடிந்த பாதுகாப்பு அனைத்தையும் அளிக்கவேண்டியது அவசியமாகும். ஏனென்றால் இந்தியா போன்ற விவசாய நாட்டின் பொருளாதாரத்தில் பசு முக்கியமான ஓர் தனி அம்சமாகும். பயிர் செய்வதற்கும், நீர் பாய்ச்சுவதற்கும், வண்டிப் போக்கு-வரத்திற்கும் தேவையான காளைகளைப் பசு குடியானவனுக்கு அளிக்கிறது; பயிர்கள் செழிப்பதற்கு உரம் கொடுக்கிறது; அவன் சுக சரீரத்துடன் இருப்பதற்குப் புஷ்டியளிக்கும் நல்ல பாலையும் கொடுத்து உதவுகிறது.

எருமை இந்தியாவின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அம்சமாக இல்லை. அதற்குரிய காரணங்கள் கீழே இருக்கின்றன:*

(அ) எருமைக் கடாக்கள் விவசாய வேலைகளுக்குக் கொஞ்சமும் பிரயோஜனமில்லை.

(ஆ) பசுவைப் பார்க்கிலும் எருமைக்கு நோய் வராமல் காத்துக்கொள்ளும் சக்தி குறைவு.

(இ) எருமையை அதிகமாய்க் கவனித்துக்கொண்டேயிருக்கவேண்டும்; அதற்கு மேய்வதற்குப் பெரிய புல்லுத் தரை வேண்டும், ஏராளமான தண்ணீரும் தேவை. இந்த வசதிகளெல்லாம் சாதாரணமான சிறு குடியானவனுக்கு இல்லை.

இந்தியாவில் பசுவை அபிவிருத்தியடையச் செய்வதும் பாதுகாப்பதும், ஆரோக்கியமுள்ள பொலி காளைகளை வளர்ப்பதும், பால் பண்ணைகள் ஆரம்

* 'ஹரிஜன்'; 24-10-1936.

பிப்பதும், மேய்ச்சல் தரைகள் அமைப்பதும், கால்நடைகளின் தீனிக்காகப் புல் முதலியவைகளைத் தனியே சாகுபடி செய்வதும் பொருளாதாரத் திட்டம் வகுப்பதில் மிக மிக முக்கியமான அம்சங்கள்.

(4) நல்ல கருவிகள்—இந்தியாவில் மேலநாட்டு முறைகளின்படி யந்திர மயமாக்கும் அவசியமில்லையென்றாலும், அதிகப் பயனுள்ள திருத்தமான கருவிகள் மிகவும் அவசியம் என்பதை எவ்வளவு வற்புறுத்தினாலும் தகும். இப்பொழுது குடியானவர் உபயோகிக்கும் கலப்பைகளும் பரம்புகளும் மிகப் புராதனமானவை; அவைகளை விடச் சிறந்த புதுக் கருவிகளையே இனி உபயோகிக்க வேண்டும்.

(5) நல்ல விதைகள்—'விதைத்தபடியே அறுவடை செய்வாய்' என்பது பிரசித்தமான பழமொழி. விவசாயப் பயிர்கள் அபிவிருத்தியடைய வேண்டுமானால், இப்போது உள்ளவைகளைப் பார்க்கிலும் உயர்தரமான விதைகள் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

(6) விவசாய இன்ஷூரன்ஸ்—அநேக ஐரோப்பிய நாடுகளில் நடப்பதுபோல், இந்தியாவிலும் பஞ்சம், வெள்ளங்கள், தண்ணீர்த் தட்டு, பனி, புழு விழுதல் போன்ற பயிர் நோய்கள், கால்நடைகளின் வியாதிகள் ஆகியவற்றால் ஏற்படும் நஷ்டங்களால் குடியானவர்கள் நொறுங்கிப் போகாமல் சர்க்கார் ஆதிக்கத்தில் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இன்ஷூரன்ஸுக்குக் குடியானவர்கள் கட்டிவர வேண்டிய சந்தாத் தொகையைத் தானியமாகவே கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும். விவசாய இன்ஷூரன்ஸ் சம்பந்தமான பொறுப்பு மாகாண சர்க்கார்களிடம் இருந்து வரவேண்டும்.

(7) கூட்டுறவு—மற்ற எல்லா விஷயங்களைப் பார்க்கிலும், இந்திய விவசாயத்தை முறையாக அபிவிருத்தி செய்வதற்கு மூலாதாரமாக நாம் நம்பவேண்டியது கூட்டுறவு முயற்சியைத்தான். நம்மில் ஒவ்வொருவருக்கும் மற்றவர் எல்லோரும் உதவி, நாம் ஒவ்வொருவரும் மற்ற எல்லோருக்கும் உதவி' என்ற உணர்ச்சியைக் கிராம ஜனங்களிடையே வளர்க்க வேண்டும். கூட்டுறவுச் சாகுபடியிலும், கூட்டுறவு விற்பனையிலும், கூட்டுறவு சௌக்கிய வசதிகள் அமைப்பதிலும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவில் இதுவரை கூட்டுறவு இயக்கம் தோல்வியாகவே யிருக்கிறது; இதற்கு முக்கியமான காரணம் அது ஜனங்களின் சுய முயற்சியால் ஏற்படாமல் (அவர்கள் மேல் சுமத்தப்பட்டதாக) இருப்பதுதான். கூட்டுறவுக்குத் தலைசிறந்த உதாரணமாக விளங்கிவந்த கிராம சமுதாயங்களை மறுபடி நிர்மாணம் செய்வதால், இந்திய விவசாயம் மீண்டும் செழிப்படையும் என்பதில் சந்தேகமில்லை.

# VIII

## விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்கள்

### கால்நடை வளர்ப்பு

கால்நடைச் செல்வத்தில் இந்தியாவே உச்ச ஸ்தானம் வகிக்கும் தேசம். 1935-ம் வருஷத்துக் கணக்குப்படி (பர்மா, சுதேச சமஸ்தானங்களைச் சேர்த்து) இந்தியாவின் கால்நடைத் தொகை சுமார் 36 கோடி; இதில் காளைமாடுகளும் பசுக்களும் சேர்ந்து 16 கோடி 80 லட்சம், எருமைகள் 4 கோடி 70 லட்சம். ஆயினும் கால்நடை

களின் தரம் மிகவும் மட்டமாயிருக்கிறது, அதனால் அவை களின் பயனும் (முக்கியமாகப் பால் விஷயத்தில்) மிகவும் குறைவு. இந்தியாவில் கால்நடைகள் மட்டமான தரத்தில் இருப்பதன் காரணங்களில் சில பின்வருமாறு:

(1) கால்நடைகளின் தீனிக்காகப் பயிரிடப்படும் புல் முதலியவை குறைவு. மக்களின் உணவுக்கான தானியங்களையும், கால்நடைகளின் தீனிக்கான பயிர் வகைகளையும் மாற்றி மாற்றிப் பயிரிடும் 'கலப்புச் சாகுபடி' சரியானபடி விஞ்ஞான முறையில் நடைபெறுவது நலம். கிராம மேய்ச்சல் தரைகளையும் மீண்டும் சீர்ப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும்.

(2) ஆரோக்கியமுள்ள பொலிகாளைகள் இல்லாமையும், கால்நடைகள் முறையில்லாமல் வர்க்க விருத்தி செய்து கொள்ளும்படி விடுதலும்.

(3) கால்நடைகளை ஆதாரமாகக் கொண்ட பால் பண்ணைகள் அமைத்தல், தோல் பதனிடுதல், தோலாலும் எலும்பாலும் பல பொருள்கள் உண்டாக்கல் முதலிய உபதொழில்கள் இல்லாமை. இந்தத் தொழில்களை அபிவிருத்தி செய்தால், கால்நடைகளால் ஏற்படும் பயனும் அதிகரிக்கும், அவைகளுக்கு முன்னைவிட அதிகத் தீனியிட்டுப் பேணி வளர்க்கவும் முடியும்.

பால் பண்ணைகள் அமைத்தல்

பால் பண்ணைகளில் ஒரு வருஷத்தில் தயாரிக்கக்கூடிய பொருள்களின் விலை ரூ. 800 கோடிக்கு மேற்பட்டதாக மதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தத் தொழில் இந்தியக் குடியானவருடைய பொருளாதார நிலையை மேம்படுத்தும்; அத்துடன் ஜனங்களுக்குத் தேவையான அளவு சுத்தமான பால் கிடைக்கவும் வழி ஏற்படும். மொத்தம் உற்பத்தியாகும் பால் அளவில் இந்தியா

அமெரிக்காவுக்கு (யு. எஸ். ஏ.) இரண்டாவதாக இருக்கிறது. இந்தியா பிரிட்டனைப் பார்க்கிலும் 4 மடங்கு அதிகமாகவும், டென்மார்க்கை விட 5 மடங்கு அதிகமாகவும், ஆஸ்டிரேலியாவை விட 6 மடங்கு அதிகமாகவும் பால் உற்பத்தி செய்கிறது. இவ்வளவு ஏராளமான பால் உற்பத்தியாகியும், இந்தத் தேசத்தில் ஒவ்வொரு நபரும் உபயோகிக்கும் பால் (கணக்கெடுக்கப்பட்டுள்ள) மற்ற நாடுகளிலுள்ளதைவிடக் குறைந்த அளவில் இருக்கிறது.'* மற்ற நாடுகளில் ஒவ்வொரு நபரும் உபயோகிக்கும் பாலின் அளவு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

| | அவுன்ஸ் |
|---|---|
| நியூஜீலந்து ... ... ... | 56 |
| ஆஸ்டிரேலியா.. ... ... | 45 |
| டென்மார்க் ... ... ... | 40 |
| பிரிட்டன் ... ... ... | 39 |
| யு. எஸ். ஏ. ... ... ... | 35 |
| இந்தியா ... ... ... | 7 † |

டாக்டர் ரைட்டின் கணக்குப்படி, சில வருஷங்களில் இந்தியாவில் இப்பொழுதுள்ள பால் உற்பத்தியை இரட்டிப்பாக்க வேண்டும்.

ஆகவே இந்தியக் கிராமங்களிலும், நகரங்களிலும் கூட்டுறவு முறையில் பால் பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியம். இந்தியாவில் பால் பண்ணை நடத்தும் தொழிலைப் புனருத்தாரணம் செய்து பரப்பும் சிரமமான (ஆனால் முக்கியமான) வேலையை சேவா கிராமத்திலுள்ள 'அகில இந்திய கோ சேவா சங்கம்' காந்திஜியின் யோசனைப்படி செய்து வருகிறது. அந்தச் சங்கத்தின் கணக்குப்படி, சரியான பால் பண்ணை ஒன்று

* இந்தியாவில் கால்நடைகள், பால் பண்ணைகளின் அபிவிருத்தி பற்றி என். ஸி. ரைட் என்பவர் தயாரித்த அறிக்கை.

† 7 அவுன்ஸ் என்பதுகூட உண்மையில் இருப்பதைவிடச் சிறிது மிகைபடக் கூறிய மதிப்பேயாகும்.

லாபகரமாக நடக்க வேண்டியதற்கு அதில் 50 பசுக்கள் இருக்க வேண்டும். ஒரு கிராமத்திலுள்ள குடியானவர்கள் ஒரு கூட்டுறவுப் பால் பண்ணை அமைத்துக் கொண்டு, தத்தம் வீடுகளிலுள்ள பசுக்களை ஒன்று சேர்த்து, அவைகளை அடைப்பதற்கு ஒரு தொழுவைக் கட்டி, ஒரு பொலிகாளையையும் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். பண்ணையை மேற்பார்த்து நடத்த வேண்டிய பொறுப்பை ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் பார்த்து வரலாம், இதைச் சம்பளம் ஒன்று மில்லாமல் கௌரவ வேலையாகவே செய்துவரக் கூடும். பண்ணையில் பால் உற்பத்தியுடன், நெய், வெண்ணெய், பால் ஆடை முதலியவைகளையும் தயாரிக்கலாம். பாலிலிருந்து தயாரிக்கும் நெய் முதலிய பொருள்களில் கலப்புச் செய்யாதபடி தடுக்கும் விஷயத்தில் தேசீய அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

பாலைக் கவனித்தால், எருமையைவிடப் பசுவையே விரும்பவேண்டி யிருக்கிறது. அதற்குரிய காரணங்கள் வருமாறு :*

(1) அநேகமாக எருமை பசுவைவிட ஒரு வருஷம் கழித்தே பலன் கொடுக்கும் பக்குவமடைகிறது.

(2) பால் வற்றி மறுபடி ஈனுவது வரையுள்ள கறவையில்லாத இடைக்காலம் பசுவைவிட எருமைக்கு மூன்று மடங்குக்கு அதிகமாக நீடிக்கும்.

(3) நல்ல பசு எருமையைவிட அதிகமாகவும் பால் கொடுக்கும்.

(4) எருமை சீதோஷ்ணத்தால் அதிகமாகப் பாதிக்கப்படுவதால் அதன் பால் குறைகிறது; பசுவின் விஷயம் இப்படியில்லை.

எருமையை வைத்திருப்பதற்குச் சாதகமான ஒரே காரணம் என்னவெனில், அதன் பாலில் ஆவின் பாலைவிட நிண பதார்த்தம் (கொழுப்பு) அதிகம்; ஆனால்

---

* 'ஹரிஜன்'; 15-2-1942.

உயர்ந்த பசு இந்த விஷயத்திலும் அதைத் தோற்கடித்து விடும். மேலும் பசுவின் பாலில் எருமைப் பாலைவிட அதிகமான ஜீவசத்துகள் (விட்டமின்கள்) இருக்கின்றன:

| | ஏ | பி | ஸி | டி | இ |
|---|---|---|---|---|---|
| பசு | XXX | XX | X | X | X |
| எருமை | XXX | X | X | X | |

இவ்வாறு, எருமைப் பாலில் 'இ' என்ற ஜீவசத்தே இல்லை, அதைவிடப் பசுவின் பாலில் 'பி' என்ற ஜீவசத்தும் அதிகமாயிருக்கிறது.*

### தோல் பதனிடுதலும் தோலால் பொருள்கள் செய்தலும்

பால் பண்ணைகளைத் தவிர, ஒவ்வொரு கிராமமும், அல்லது சில கிராமங்கள் சேர்ந்து, செருப்புகள், பூட்ஸுகள், பிரயாணத்திற்கு எடுத்துச் செல்லும் பெட்டிகள் முதலிய தோலால் செய்யும் பல சாமான்களையும் தயாரிப்பதற்காக ஒரு தோல் பதனிடும் சாலையை அமைத்துக்கொள்ள முடியும். கிராமத்தில் இறந்துபோன கால்நடைகளின் தோல்களை இந்த வேலைகளுக்கு உபயோகிக்கலாம். இந்தியாவில் வருஷந்தோறும் 130 லட்சம் கால்நடைகள் இறப்பதாகக் கணக்கிடப்பட் டிருக்கிறது. இப்பொழுது ஒரு பிராணி இறந்துபோய்விட்டால், அது சொந்தக்காரனுக்கு ஒரு பாரமாகி விடுகிறது; ஏனென்றால் அதை அப்புறப்படுத்துவதற்குக்கூடச் சொற்பச் செலவு ஏற்படும். சக்கிலியர்கள் தோலை எடுத்துக்கொள்வார்கள். ஆனால் தோல் தவிர மற்ற உடல் முழுதும் பயனில்லாமல் வீணாவதுடன், அது ஊரைச் சுற்றி நாறும் பண்டமாகவும் ஆகிவிடுகிறது. சக்கிலியர்கள் சொந்தமாகத் தோலைப் பதனிடும் முறையும் செம்மையாக இல்லை. கிராமங்களில் தோல் பதனிடும் சாலைகளை ஆரம்பித்துச் செம்மையான நவீன முறையில் நடத்திவந்தால்,

* 'ஹரிஜன்'; 16-1-1937.

ஆலைகள் நம் கிராமங்களுக்கு உபதொழில்களாக அமையக்கூடும். செத்த மிருகங்களின் சோமம், எலும்புகள், கொம்புகள், பற்கள், குளம்புகள், தசை நார்கள், கொழுப்பு, ரத்தம், நரம்புகள் முதலியவைகளைக் கொண்டு உபயோகமான பல வஸ்துக்களைத் தயாரிக்க முடியும். வர்தாவிலுள்ள நால்வாடி ஆசிரமத்தின் பதனிடும் சாலையில் இந்த முறையில் பல பரீட்சைகள் செய்து பார்த்ததில் பயன் கிடைத்திருக்கிறது.

## பழ உற்பத்தி

பழ உற்பத்தி இந்தியாவில் மிகவும் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. கிடைத்திருக்கும் கணக்குகளைக் கொண்டு பார்த்தால், மொத்தம் 25 லட்சம் ஏக்கரில்தான் கனி வர்க்கங்கள் விருத்தி செய்யப்படுகின்றன. பலவித சீதோஷ்ண நிலைமைகளிலுள்ள பிரதேசங்களைப் பெற் றிருப்பதால், இந்தியாவில் உலகம் முழுதிலும் காணப் படும் எல்லாவிதமான பழங்களும் உண்டாகின்றன. ஆனால் கனி வர்க்கங்களைத் தற்காலம் பயிர் செய்பவர்கள் விஷயம் தெரியாதவர்களாயும் பயிற்சி யில்லாதவர்களா யும் இருக்கிறார்கள். விவசாயம் பால் பண்ணைகளுடன், கிராமங்களில் கனி வர்க்கங்களுக்கான தோட்டப் பயிர் களும் விருத்தி செய்யப்பட்டால், குடியானவர்களுக்கு அவ்வப்பொழுது புதிதாகப் பறித்த பழங்கள் உணவுக்கு உதவுவதுடன், அவர்களுடைய வருமானத்தையும் கொஞ்சம் கூட்டிக்கொள்ள வசதியாகும்.

பழங்களைப் பல நாள் இருக்கும்படி பக்குவம் செய்து டப்பாக்களில் அடைத்து வியாபார முறையில் தயா ரிக்கும் தொழிலும் நம் நாட்டில், முக்கியமாகக் கிராமாந் தரங்களில், மிக அதிகமாக வளர்ச்சி பெற வழியிருக்கிறது என்பதில் சந்தேகமே யில்லை. காய்கறிகள், கீரைக ளெல்லாம் மிகவும் புஷ்டி தரக்கூடியவை என்பது பற்றி

* இந்தப் பதனிடும் சாலை தற்சமயம் சர்க்காரால் கைப் பற்றப்பட்டிருப்பது வருந்தத் தக்கது.

எவ்வளவு சொன்னாலும் தகும். இப்பொழுது குடியான வர்கள் பூம்பயிர் செய்வது முறையாக இல்லாமல் கண்டபடி நடைபெற்று வருகிறது. இதை விருத்தி செய்வதற்கு ஏராளமாக இடமிருக்கிறது.

## காடுகளைப் பயன்படுத்தும் தொழில்கள்

நம் தேசத்தில் காடுகளாயுள்ள பிரதேசங்கள் மொத்தம் சுமார் 8 கோடி 90 லட்சம் ஏக்கர். இது பிரிட்டிஷ் இந்தியாவின் விஸ்தீரணத்தில் ஏழில் ஒரு பாகத்திற்கு ஈடாகும். காடுகளின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்குரிய தொழில்களாக என்னென்ன செய்யலாம் என்பது பற்றி இன்னும் முழுதும் ஆராயப்படவில்லை. காகித உற்பத்திக்குத் தேவையான மரக் கூழ், மற்றும் கற்பூரத்தைலம், எண்ணெய்கள், கோந்துகள், குங்கிலியம் போன்ற பொருள்கள், சாயங் காய்ச்ச உதவும் பொருள் கள் ஆகியவைகளைத் தயாரிக்கும் எத்தனையோ தொழில் களைக் காடுகளின் மூலம் செய்துவிட முடியும். இவைகளை யெல்லாம் பற்றி முறையான ஆராய்ச்சிகள் செய்ய வேண்டியது அவசியம்.

# IX

## குடிசைத் தொழில்கள்

கிராம சமுதாயங்களின் தினசரி உபயோகத்துக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் கூடியவரை தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இதுவே இந்தியாவில் தேசியத் திட்டம் வகுப்பதன் முக்கிய நோக்கமா யிருக்கவேண்டும் என்பது முந்திய அத்தியாயங்களிலும் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. சுய-தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றால், தொழில்களுக்குத் தக்க படி, சிலவற்றில் ஒரு கிராமமே தனியாகத் தன் தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும், சிலவற்றில் ஒரு

தாலூகா முழுதும் சேர்ந்தே பூர்த்தி செய்ய முடியும்: சில தொழில்களில் ஒரு ஜில்லாவோ, டிவிஷனோ, அல்லது ஒரு மாகாணம் முழுதுமோ சேர்ந்துதான் தன்னிலே தான் நிறைவு பெற்றிருக்க முடியும். இந்தியக் கிராமாந்தரப் பொருளாதார அமைப்பில் கீழ்க்கண்ட குடிசைத் தொழில்கள் முக்கியமான ஸ்தானத்தை வகிக்கவேண்டும்:

(1) கதர் — நூற்றலும் நெய்தலும் தொன்று தொட்டே இந்தியாவின் தேசியத் தொழில்களாக இருந்து வந்திருக்கின்றன. எகிப்து தேசத்தில் புராதன சமாதிக் கோபுரங்கள் (பிரமிடுகள் - Pyramids) சிலவற்றில் தைலமிட்டு அடக்கம் செய்யப்பட்ட பிரேதங்களின் மேல் மிக மெல்லிய இந்திய மஸ்லின் சுற்றப்பட்டிருக்கிறது; இந்தக் கோபுரங்கள் கி. மு. 2,000 வருஷத்திற்கு முன்பிருந்தே அமைக்கப்பட்டு வந்தவை. நூல் நூற்றலையும் நெசவையும் பற்றிய விவரமான குறிப்புகள் பல கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திர'த்தில் காணப்படுகின்றன. கையால் நூற்றுக் கையால் நெய்த இந்தியத் துணியின் மென்மை உலகமெங்கும் புகழ்ந்து பாராட்டப் பெற்றிருக்கிறது. ரோமாபுரியின் மகாராணிகள் இந்தியப் பட்டாடைகளை அணிவதில் ஆனந்தங் கொண்டார்கள். கி. பி. 78-ல் இந்தியாவின் துணி உற்பத்தியையும் வர்த்தகத்தையும் பற்றி பிளினி* எழுதியிருந்தார். வங்காளத்தில் (முக்கியமாக டாக்காவில்) தயாரான மஸ்லின்களை அவர் மிகவும் உயர்வாகப் புகழ்ந்திருக்கிறார். டாவெர்னியர்† என்ற பிரெஞ்சு யாத்திரிகர் 17-ம் நூற்றாண்டில் (1695-க்கும் 1676-க்கும் இடையில்) இந்தியாவுக்கு ஆறு முறை வந்திருந்தவர். அவர் எழுதியுள்ள 'இந்தியாவில் யாத்திரைகள்' என்ற சரித்திரத்தில், இந்தியாவில் பாரசீக நாட்டின் பிரதிநிதியாக வந்திருந்த மகம்மதலி பேக் தம் நாட்டிற்குத் திரும்பிச் சென்ற

* Pliny — கி. பி. முதல் நூற்றாண்டில் ரோமாபுரியில் வாழ்ந்திருந்த பேர்பெற்ற சரித்திர ஆசிரியர்.

† Tavernier.

பொழுது, பாரசீக மன்னராகிய ஷா ஸேபுக்கு அளித்த பரிசைப்பற்றி எழுதியிருக்கிறார். அப்பரிசு நவரத்தினங்கள் இழைத்த ஒரு தேங்காய்க் குடுக்கை; அது நெருப்புக் கோழியின் முட்டை அளவில் இருந்தது. 'அதைத் திறந்து பார்க்கையில், 60 முழ நீளமுள்ள ஒரு தலைப்பாகைத் துணியும், கையில் வைத்துக்கொண்டிருந்தால் என்ன வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாத முறையில் அவ்வளவு மென்மையான ஒரு மஸ்லினும் அதனுள் இருந்தன.' பிரிட்டிஷார் இந்தியாவில் பிரவேசித்ததற்கு முந்தின சமீப காலத்தில் கூட, நூற்றல் நெசவுத் தொழில் தேசமெங்கும் நடந்துவந்தது. அது விவசாயிகளுக்கு ஒழிவு நேரத்தில் செய்யக்கூடிய உதவித் தொழிலாக அமைந்து, விவசாய வருமானத்தோடு வேறு வருமானமும் தேடிக் கொள்ள உதவியாயிருந்தது. இந்த மாபெரும் தேசீயத் தொழில் கிழக்கு இந்தியக் கம்பெனியாரால் வேண்டுமென்றே எப்படித் தந்திரமாக அழித்து நிர்மூலமாக்கப் பட்டது என்ற வரலாறு கண்ணீரும் கம்பலையும் நிறைந்த ஒரு சோக சரித்திரம். கம்பெனி ஊழியர்களின் சொல்ல முடியாத கொடுங்கோன்மையில், டாக்கா நகரத்து மஸ்லின் நெசவாளர்களது கட்டை விரல்களை நறுக்கி விடும்படி கட்டாயப்படுத்திய கோரமான சரித்திரத்தை இந்தத் தேசம் எந்த நாளிலும் மறக்க முடியாது. ஆனால் தேசிய சரித்திர சம்பந்தமான இந்த விவரங்களை விரிவாக ஆராய்வது இந்நூலுக்குப் புறம்பான விஷயம். பிரிட்டிஷ் வியாபாரிகள் வருவதற்கு முன்னமே நம் தேசியப் பொருளாதார அமைப்பில் கதர்த் தொழில் உன்னதமான ஸ்தானத்தை வகித்து வந்தது என்பதை மட்டும் இங்கே குறிப்பிட்டால் போதும். பின்னால் அந்த வியாபாரிகளே துர்ப்பாக்கியமான இந்த நாட்டின் அதிபதிகளாகிவிட்டனர். இப்பொழுது நூல் நூற்றல் அநேகமாக முற்றிலும் நசித்துப் போய்விட்டது. மில் நூலைக் கைத்தறியில் நெய்வது இன்னும் சகஜமாக நடந்து வருகிறது. ஆனால் நெசவாளர் நூல்—மில்களை

எதிர்பார்க்க வேண்டியிருப்பதில் அபாயமுண்டு. மில் முதலாளிகள் ஒன்றுசேர்ந்து எந்த நேரத்திலும் நெசவாளரை அறவே ஒழித்துவிட முடியும்.

காந்திஜியின் இடைவிடாத தீவிர முயற்சிகளால், நம் தேசியக் கைத்தொழிலாகிய கதர் உற்பத்தி மறுபடியும் மெதுவாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. அகில பாரத சர்க்கா சங்கத்தின் வேலை பாராட்டத்தக்க முறையில் மிகுந்த பயனளித்திருக்கிறது. அச்சங்கத்தின் 1940-ம் வருஷத்து அறிக்கையின்படி, 13,450 கிராமங்களில் சிதறியிருந்துவரும் 2,75,000 நூற்பவர்களும் நெசவாளர்களும் சேர்ந்து 95,51,478 சதுர கஜம் கதரை உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. நூற்பவர்களும் நெசவாளர்களும் பெற்ற கூலியின் மொத்தத் தொகை ரூ. 34,85,609.

'ஆனால் கதரின் நோக்கம் நகர மக்களுக்கு மில் துணிகளோடு போட்டியிடக்கூடிய நாகரிகமான கதர் ஆடைகளை அளிப்பதல்ல; நோக்கம் அதுவாயிருந்தால் மற்றத் தொழில்களைப் போல் இதிலும் சில தொள்ளாளிகளுக்கு மட்டும் வேலை கிடைக்கும்; ஆனால் கதர்த் தொழில், விவசாயத்தோடு சேர்ந்த துணைத் தொழிலாக அமையவேண்டும் என்பதே குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமானால், வெளி உதவிகளை எதிர்பாராமல் கதர் நிலைக்கும்படி செய்யவேண்டும், அது கிராமங்களில் பரவ வேண்டும். கிராம ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய ரொட்டியையும் சோற்றையும் தாங்களே தயாரித்துக் கொள்வது போல், தங்கள் உபயோகத்திற்கு வேண்டிய கதரையும் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். தங்களுக்குப் போக மிஞ்சினதைத் தான் அவர்கள் விற்கலாம்.' *

---

* 'Economics of Khadi - கதரின் பொருளாதாரம்'; முகவுரை, பக்கம் XIV.

அகில பாரத சர்க்கா சங்கம் எனக்கு அளித்துள்ள கணக்கு விவரங்களின்படி, நம் கிராமங்கள் துணி விஷயத்தில் தாங்களே தேவையானதைத் தயாரித்துக் கொள்ள முடியும் என்பதுடன், அவைகள் நகரங்களுக்காகக் கூடுதலாகவும் கதர் உற்பத்தி செய்ய முடியும் என்பது யாதொரு சந்தேகத்திற்கும் இடமில்லாமல் நிரூபணமாகிறது. அந்த விவரங்கள் வருமாறு:

இந்தியக் கிராமத்தின் சராசரி ஜனத்தொகை 500 என்று கணக்கிடப்படுகிறது. ஒரு நபருக்கு 20 கஜம் வீதம் கிராமத்திற்கு ஒரு வருஷத்திற்குத் தேவையான கதர் 10,000 கஜம். ஒரு சதுர கஜம் துணி நெய்வதற்கு நாலு சிட்டம்* நூல் தேவைப்படும். இந்த விகிதப்படி கிராமம் முழுவதற்கும் தேவையுள்ள துணிக்கு 40,000 சிட்டம் தேவைப்படும். சாதாரணமாக 16-ம் நெ. நூலாக 3 மணி நேரத்தில் ஒரு நபர் ஒரு சிட்டம் நூல் நூற்க முடியும். ஆகவே கிராமத்தார் அனைவரும் மொத்தம் 1,20,000 மணி நேரம் நூற்றால் போதும். அவர்களில் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், அசக்தர்கள், நொண்டி - முடவர்களாக 100-க்கு 25 பேரைத் தள்ளி விட்டாலும், 375 பேர் கிராமம் அனைத்திற்குமாக நூற்க வேண்டியிருக்கிறது. அதாவது, ஒரு நபர் வருஷத்தில் 320 மணி நேரம் நூற்க வேண்டும். உடல் நலமுள்ள ஒவ்வொரு நபரும் தினம் ஒரு மணி நேரம் நூற்றால், எல்லோருமாகக் கிராமத்திற்கு வேண்டிய துணி பூராவையும் எளிதில் தயாரித்துவிடலாம். ஆனால், கிராமவாசிகள் விரும்பினால், அவர்களில் ஸ்திரீகளும், அடிப்படைப் பள்ளிக்கூடங்களிலுள்ள குழந்தைகளும் உள்ளிட்ட யாவரும் சேர்ந்து தினம் சராசரி இரண்டு மணி நேரம் நூற்கலாம். இவ்வாறு, துணி விஷயத்தில் இந்தியக் கிராமங்கள் சுய-நிறைவு பெறுவதுடன், நகரங்களின் உபயோகத்திற்காகக் கூடுதல் துணியும் தயாரிக்க முடியும்.

---

* ஒரு சிட்டம் 840 கஜம், எ[illegible] சிட்டம் 3,360 கஜம்.

கதர் உற்பத்திக்குத் தேவையான கருவிகள் மிகவும் மலிவானவை. நெசவு சம்பந்தமாகப் பார்த்தால், ஒரு நெசவுகாரன் வருஷத்தில் 6,000 கெஜம் நெய்ய முடியும். ஆகவே கிராமத்திற்குத் தேவையான துணி அனைத்தையும் நெய்ய ஏழு நெசவாளர் போதும்.

(2) காகிதம் செய்தல் — உணவு, குடியிருப்பு வசதி, துணி ஆகிய மூன்றுக்கும் அடுத்தபடியாகத் தற்கால வாழ்க்கையில், மிக் முக்கியத் தேவையாயிருப்பது காகிதம் என்று கருதப்படுகிறது. ஆகவே, காகித உற்பத்தியை ஒரு குடிசைத் தொழிலாகச் செய்வது மிகவும் முக்கியம். அகில இந்தியக் கிராமக் கைத்தொழிற் சங்கம் இந்தத் தொழிலைப் பல மார்க்கங்களிலும் புனருத்தாரணம் செய்து, நவீன விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்ய முயற்சி செய்துகொண்டு வருகிறது. காகித உற்பத்தி அதிகக் கருவிகள் இல்லாமல் சாதாரணமாகச் செய்யக்கூடிய தொழில்; பெண்களும் குழந்தைகளும் கூட வீட்டிலிருந்தே செய்யக்கூடியது. மில்லில் தயாராகும் காகிதத்துடன் கையால் செய்த காகிதம் போட்டியிட வேண்டும் என்பது நோக்கமில்லை. ஆனால் இந்தத் தொழிலைச் செய்துவந்தால், இதன் மூலமாய்க் கிராமவாசிகளுக்குக் கொஞ்சம் செல்வம் சேரக்கூடும் என்பதே கருத்து. கீழ்க்கண்ட பொருள்களைக் காகிதம் செய்வதற்கு உபயோகிக்கலாம்:— கழிவு பஞ்சு, கிழிந்த துணிகள், கோரை, சணல் நார், சாக்குத் துண்டுகள், வைக்கோல், மூங்கில், வாழை நார், கரும்பின் அடிக் கட்டைகளும் சக்கையும், கழிவு தாள், புல்.

(3) எண்ணெய் பிழிதல் — எண்ணெய் மில்கள் இந்நாட்டில் அதிகம் பரவியிருந்தாலும், பழைய உள்நாட்டுச் செக்குகள் போட்டியிட்டு இதுவரை நிலைத்துவிட்டன. இந்தத் தொழிலுக்கும் அதிகக் கருவிகள் தேவையில்லை. கிராமங்களில் செக்குகளை அதிகமாக உபயோகிக்கும்படி செய்தால், விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைப்பதுடன், பிராணிகளுக்கும் எண்ணெயும் அவர்களுக்குக் கிடைக்கும். விஞ்ஞானப் பரிசோதனைகள் செய்து

பார்த்ததில் மில் எண்ணெயைப் பார்க்கிலும் செக்கில் ஆட்டிய எண்ணெயில் அதிக ஜீவசத்துக்கள் (விட்டமின்கள்) இருக்கின்றன என்பது நிரூபணமாயிருக்கிறது. தற்சமயம் பல மாகாணங்களிலும் உபயோகத்திலிருக்கும் பலவிதமான செக்குகளையும் பார்த்து அவைகளைச் சீர்திருத்துவதற்கு அகில இந்தியக் கிராமக் கைத்தொழிற் சங்கம் முயற்சித்திருக்கிறது. செக்கில் ஆட்டிய எண்ணெயைவிட மில் எண்ணெய் பெருவாரியான உற்பத்தியால் மலிவாயிருந்தாலும், கிராமவாசிகள் தங்கள் நலனைக் கருதியாவது தங்களுடைய செக்கு — எண்ணெயையே உபயோகித்தால், அவர்களுடைய பணம் முதலாளிகளுடைய பைகளுக்குப் போய்ச் சேராததோடு, அவர்கள் இனத்தாருக்கு ஓர் உபதொழிலில் வேலை கொடுக்கவும் முடியும்.

அ. இ. கி. கை. சங்கம் 'மகன் தீபம்' என்று சொல்லப்படும் ஒரு புது விளக்கையும் கண்டுபிடித்துத் தயாரித்திருக்கிறது. அந்த விளக்குக்கு நல்லெண்ணெய் அல்லது ஆளி விதையின் எண்ணெய்தான் தேவை. செக்கின் மூலம் எண்ணெய் உற்பத்தி செய்தல் கிராமங்களில் அபிவிருத்தியாகும் பொழுது, 'ஹிரிகேன்' விளக்குகளுக்குச் சீமை எண்ணெய் (மண்ணெண்ணெய்) உபயோகிப்பதும் அவசியமில்லாது போகலாம்.

**(4) நெல் - குத்தல்** — மில்லில் தயாராகும் அரிசி வகையில் இருக்கவேண்டிய முக்கியமான சத்தை அதிகமாக இழந்து விடுகிறது என்ற விஷயம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணமாகி யிருக்கிறது. இந்திய சர்க்காரின் 'ஆரோக்கிய அறிக்கை — எண் 28' குறிப்பிடுகிறபடி, மில் - அரிசி இட்டப்படும் பொழுதே அரிசியின் மேல் பாகத்திலுள்ள புரோட்டீன், உலோக உப்புகள், ஜீவசத்துகள் (விட்டமின்கள்) முதலியவற்றை அதிகமாக இழந்து விடுகிறது. இந்தச் சத்துகள் அரிசியின் உட்புறத்தை விட, மேல் பாகத்திலேயே அதிகமாக ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஜீவசத்துக்களில் முக்கியமாக 'பி' சத்து குறைவாகிவிட்டால், உடலுக்கு மிகவும் அபாயமான

கேடுகள் ஏற்படுகின்றன. உடலில் நீர்வைத்தல் போன்ற 'பெரி பெரி' என்ற நஞ்சு நோய் தேசத்தில் அதிகமாக இருப்பதற்கு மில்லில் தீட்டிய அரிசியில் 'பி' ஜீவசத்து குறைவாயிருப்பதே பெரும்பகுதி காரணம். மில் அரிசியி லிருப்பதைவிட கைக்குத்தரிசியில் புரோட்டீன், பாஸ் வரம் என்ற பாஷாணம் (phosphorus), சுண்ணாம்புச் சத்து, அயச் சத்து ஆகியவை அதிகமாக இருக்கின்றன. தீட்டாத அரிசி சம்பந்தப்பட்ட வரையில், நெல்லை மில்லில் குத்துவதற்கும் கையால் குத்துவதற்கும் கூலி அநேக மாக ஒரே மாதிரிதான் இருக்கிறது. ஆகையால் சிக்க னத்தைக் கவனித்தாலும், கையால் நெல் குத்தும் தொழிலைப் பரப்பவேண்டியது அவசியமாகிறது.

துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் நெல் குத்தும் மில்கள் அதிகமாகப் பெருகியிருப்பது மிக்வும் கவலைப்பட வேண்டிய விஷயந்தான். அவைகள் மக்களின் ஆரோக் கியத்திற்கு உலைவைத்து விட்டதோடு, ஏராளமான ஜனங்களை வேலையில்லாமல் விரட்டியும் விட்டன. ஆதலால் சர்க்கார் நெல் குத்தும் மில்களை ஒழித்துவிட வேண்டும், அல்லது, குறைந்த பட்சம், அவைகள் அதிக மாய்ப் பரவாமலும், அவைகளின் விற்பனையைக் கட்டுப் படுத்தியும் வைக்க வேண்டும். மில்லில் தீட்டுவது இப் பொழுது நடப்பதைவிடக் குறைவா யிருக்கும்படியும் சர்க்கார் கவனிக்க வேண்டும். அரிசி நம் ஜனங்களில் கோடிக்கணக்கானவர்களுக்கு முக்கிய உணவாக இருப் பதால், இந்த முக்கியமான பிரச்னையை அரசாங்கம் அலட்சியம் செய்ய முடியாது. என் கருத்தைக் கீழேயுள்ள புள்ளி விவரங்கள் * மேலும் தெளிவாக்கக் கூடியவை:

| | | கைக்குத் தரிசி | மில் அரிசி | நஷ்டம் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| பாஸ்வரம் | இருப்பு | 0·23 | 0·13 | 54 |
| சுண்ணாம்புச் சத்து | ,, | 0·043 | 0·013 | 70 |
| (வங்காள அரிசிகளில்) இரும்புச் சத்து | ,, | 2·2 | 1·0 | 55 |

* 'Rice – அரிசி', அ. இ. கி. கை. சங்கம் வெளியிட்டது; பக்கம் 47.

(5) மற்றும் பலவகைக் குடிசைத் தொழில்களில் கீழ்க் கண்டவையும் சேர்ந்திருக்கும் :

கரும்பு, ஈச்ச மரம் அல்லது பனை ஆகியவற்றி லிருந்து வெல்லம் தயாரித்தல்; தேனீ வளர்த்தல், ஸோப்புச் செய்தல், மாவரைத்தல், கோழி முதலியவை வளர்த்தல், தச்சு வேலை, உலோக வேலைகள், இக்குச்சி தயாரித்தல், சட்டி பானைகள் செய்தல், பொம்மைகள் செய்தல், கத்தி முதலியவை தயாரித்தல், மூங்கில்கள் பிரம்பு களால் சாமான்கள் செய்தல், கயிறு திரித்தல், ஓடுகள் செங்கல்கள் செய்தல், கண்ணாடிச் சாமான் கள் வளையல்கள் தயாரித்தல்.

தேசீய அரசாங்கம் வெல்லம் தயாரிப்பதிலும் மாவரைப்பதிலும் முக்கிய கவனம் செலுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். மக்களின் ஆரோக்கியம் பற்றிய தேவைகளைக் கவனிக்குமிடத்து, சீனியைவிட வெல்லம் அதிகப் புஷ்டியுள்ளதென்றும், கையால் அரைத்த மாவு மில்லில் அரைத்த மாவைவிட அதிகப் புஷ்டியுள்ள தென்றும் விஞ்ஞான ரீதியாக ருசுப் படுத்தப்பட் டிருக்கிறது. ஆகையால், சீனி மில்களையும் மாவு மில் களையும் கட்டுப்படுத்தல் அவசியம்.

மேலேயுள்ள பட்டியலில் சாத்தியமான தொழில்கள் எல்லாவற்றையும் குறித்தாகிவிட்டது என்று சொல் வதற்கில்லை. கிராமங்களில் ஆங்காங்கு உள்ள நிலைமை களுக்கும் அவசியங்களுக்கும் ஏற்றாற் போல், இன்னும் அநேகம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியும்.

## அரசாங்க உதவி

தொழிற் பெருக்கத்திற்குத் திட்டம் போடும்போது சர்க்கார், குடிசைத் தொழில் அபிவிருத்தியை முக்கிய அம்சமாகக் கருத வேண்டும். கிராமாந்தரத் தொள்ளாளி களுக்கு (நெசவாளர், விசுவகர்மர் முதலியோர்களுக்கு) சர்க்கார் கீழ்க் கண்ட வழிகளில் உதவி செய்யவேண்டும் :

(i) கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும் வசதிகள் செய்தல். தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் வாங்குவதற்கும், அவைகளை முன்கூட்டிச் சேர்த்து வைப்பதற்கும், செய்து முடித்த பொருள்களை (விற்பனையாகும் வரை) வைத்திருக்கவும் தொழிலாளிகளுக்குப் பணம் தேவை.

(ii) அடிப்படைப் பள்ளிக்கூடங்களிலும் முதியோர் பள்ளிக்கூடங்களிலும் தொழில்களைப் பற்றிய கல்வி புகட்டுதல்.

(iii) குடிசைத் தொழில்களுக்கு உபயோகமாகும் கருவிகளை மேற்கொண்டு அதிகப் பயனளிக்கும்படி சீர்திருத்தவும், புதிய கருவிகள் தயாரிக்கவும் ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் அமைத்தல். அத்தகைய ஆராய்ச்சி மூலம் ஏற்படும் பயன்கள் கிராமப் பஞ்சாயத்துகள் மூலம் தொழிலாளிகளுக்கு உபயோகமாகும்படி செய்ய வேண்டும்.

(iv) கிராமங்களில் உற்பத்தியாகாத மூலப் பொருள்களைப் பொதுவில் மொத்தமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.

(v) கிராமங்களின் தேவைக்கு அதிகமாயுள்ள பொருள்களை நகரங்களில் லாபகரமாக விற்பனை செய்வதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு உதவி செய்தல்.

(vi) பெரிய தொழிற்சாலைகளின் மூலம் நடக்கும் தொழில்களால் போட்டி ஏற்படாமல் பாதுகாத்தல்.

(vii) கையால் செய்யப்பெற்ற பொருள்களுக்கு ரயில்களிலும் கப்பல்களிலும் குறைந்த கட்டணங்கள் மூலம் சலுகை காண்பித்தல்.

(viii) குடிசைத் தொழில்களுக்கு மானியங்கள் அளித்தல்; அவசியமானால் இந்த மானியங்களுக்காக மில்களுக்கு வரி விதிக்கலாம்.

# X

## மூலாதாரத் தொழில்கள்

இதுவரை கூறியவற்றிலிருந்து, இந்தத் திட்டத்தின் படி, ஜன உபயோகத்திற்கான பொருள்கள் பெரும்பாலும் குடிசைத் தொழில்களின் மூலமாகவே தயாராகும் என்பது தெரியவரும். ஆயினும் சுதந்திர இந்தியாவில், சில மூலாதாரமான அல்லது அடிப்படையான தொழில்களை அலட்சியம் செய்யலாகாது. இந்த மூலாதாரத் தொழில்கள் குடிசைத் தொழில்களுக்கு இடையூறு யில்லாமல், அவைகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவியாயிருக்கும். கீழ்க்கண்ட மூலாதாரத் தொழில்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும் :

1. தேசப் பாதுகாப்புக்கான தொழில்கள். *
2. மின்சார உற்பத்தி—தண்ணீரின் உதவியாலும், நிலக்கரியிலிருந்து உஷ்ணத்தின் உதவியாலும் மின்சார சக்தியைத் தயாரிக்கும் 'ஹைட்ரோ எலெக்டிரிஸிடி', 'தெர்மல் எலெக்டிரிஸிடி' உற்பத்தி.
3. சுரங்கத் தொழில், உலோகத் தொழில்கள், காட்டுப் பொருள்களைக் கொண்டு செய்யக்கூடிய தொழில்கள் — இரும்பு, உருக்கு, நிலக்கரி, உலோக எண்ணெய், தச்சு வேலைக்குரிய மரப் பொருள்கள் முதலியவை. உலோகக் கனி வெட்டுவதும் இவற்றுடன் சேர்ந்தது.
4. யந்திரங்களும் யந்திரக் கருவிகளும்—விவசாயத்திற்கும் குடிசைத் தொழில்களுக்கும் தேவை

* காந்திஜி போரையே ஒழித்துவிட வேண்டும் என்ற தீவிரக் கொள்கையுடையவராயும், அஹிம்சையில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவராயும் இருந்தபோதிலும், சுதந்திர இந்தியாவில் ஆயுத தளவாடங்களோடு கூடிய ராணுவப் பாதுகாப்பு அவசியப்படும் என்று அனுமதிக்கும் அளவுக்கு அவர் காரிய திருஷ்டியுடன் இருக்கிறார்.

மின்சார சக்திகளையும் உபயோகிப்பது தேசத்தின் பல பிராந்தியங்களிலும் ஆங்காங்கு உள்ள நிலைமைகளைப் பொறுத்திருக்க வேண்டும்.

அரசாங்கம் உடைமையாகக் கொண்டு நடத்த வேண்டிய தொழில்கள் — கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் தினசரி உபயோகமாகும் பெரும்பாலான பொருள்களைக் கிராமக் கைத்தொழில்களின் மூலம் உற்பத்தி செய்வதில் தனி நபர்களின் முயற்சிக்கும் கூட்டுறவு முயற்சிக்கும் போதுமான இடமிருக்கிறது; அவர்களே ஊக்கத்துடன் ஆரம்பித்து நடத்த ஏராளமான வசதிகள் உண்டு. ஆயினும், மூலாதாரமான அடிப்படைத் தொழில்களை அரசாங்கமே உடைமையாகக் கொண்டு, தேசம் முழுவதற்குமாகத் தானே நிர்வகித்து வரவேண்டும் என்பது இத் திட்டத்தின் அஸ்திவாரமாக விளங்கும் அம்சங்களில் ஒன்றாகும். மூலாதாரத் தொழில்கள் தேசம் பூராவுக்கும் உபயோகமா யிருக்க வேண்டியவை; எனவே அவை களைத் தனி நபர்களின் கையில் ஒப்படைத்துவிட முடியாது, அப்படிச் செய்யவும் கூடாது. குடிசைத் தொழில் கள் சர்க்காரின் உடைமையாக இல்லாவிட்டாலும், அவை களில் தனி நபர்களின் 'விசேஷத் தனி நல உரிமை' எதற்கும் இடமில்லை. ஆகவே இந்தத் திட்டத்தின்படி இந்திய முதலாளிகளோ, அந்நிய முதலாளிகளோ, தங்கள் நலன்களுக்காக இந்தியாவைச் சுரண்டுவதற்கு எவ்விதச் சந்தர்ப்பமும் இல்லாமற் போகிறது.

## இடைக்கால ஏற்பாடுகள்

பெரிய யந்திரத் தொழில்கள், மூலாதாரத் தொழில் கள் சம்பந்தமாக (இந்தத் திட்டப்படி தொழில்கள் புனருத்தாரணம் செய்து அமைக்கப்படும் வரை) இடைக் காலத்தில் அனுசரிக்க வேண்டிய பொதுக் கொள்கை கீழ்க்கண்ட முறைகளில் இருத்தல் வேண்டும்:

(1) தனி நபர்களின் சொந்தமாக இருக்கும் ஸ்தாப னங்கள் எல்லாவற்றையும் உடனே விலைக்கு வாங்க முடியாவிட்டால், அவைகளைச் சர்க்கார்

தாற்காலிகமாகக் கண்டிப்பான கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, பொருள்களின் விலைகள், லாபங்கள், தொழிலாளர் நிலைமைகள், குடிசைத் தொழில்களுக்குப் போட்டியாயிருத்தல் ஆகிய விஷயங்களைத் தீவிரமாக மேற்பார்த்து வர வேண்டும்.

(2) எந்த நிலைமையிலும் அத்தகைய தொழில்கள் தனி நபர்களின் ஆதிக்கத்தில் மேற்கொண்டு விரிவடையும்படி அனுமதிக்கக் கூடாது.

(3) அந்நியத் தொழில் ஸ்தாபனங்கள் அனைத்தையும் படிப்படியாகத் தேசிய சர்க்கார் விலைக்கு வாங்கிவிட வேண்டும். இடைக்காலத்தில், பூரணமாக இந்தியருடைய நிர்வாகத்திலும் ஆதிக்கத்திலும் இருந்துவரும் ஸ்தாபனங்கள் மட்டுமே நடந்துவர அனுமதிக்க வேண்டும். இப்பொழுது அந்நியக் கம்பெனிகள், விஷயமறியாத பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காகத் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் '(இந்தியா) லிமிடெட்' என்று சேர்த்துக்கொள்ளும் தந்திரக் கொள்கையை இனி அனுமதிக்கக் கூடாது.

(4) துணி, எண்ணெய், சர்க்கரை, காகிதம், அரிசி போன்ற ஜன உபயோகத்திற்கான பொருள்களைத் தயாரிக்கும் மில்கள், சர்க்கார் ஆதிக்கத்திற்கு அடங்கி, அதனுடைய கண்டிப்பான கட்டுப்பாட்டிற்கு இசைந்து நடப்பதால்தான் அவைகள் தொடர்ந்து நடந்துவர அனுமதிக்க வேண்டும். கிராமங்களில் அதே பொருள்களைத் தயாரிக்கும் குடிசைத் தொழில்களோடு மில்கள் போட்டியிட அனுமதிக்கக் கூடாது. ஜன உபயோகத்திற்கான இந்தப் பொருள்களில் கிராமக் கைத்தொழில்கள் போதுமான அளவு உற்பத்தி செய்ய முடியாமலிருக்கிற வரையிலுமே மில்கள் இருக்கலாம்.

# XI

## பொது நன்மைக்கான சௌகரியங்கள் *

தேசிய அரசாங்கம் குடிசைத்தொழில்களையும் மூலாதாரத் தொழில்களையும் அபிவிருத்தி செய்வதுடன், கீழ்க்கண்ட சர்வஜன வசதிகளின் நிர்வாகத்தையும் போதிய அளவில் கவனிக்க வேண்டும்:

(1) போக்கு - வரத்து வசதிகள், தபால் - தந்தி முதலிய சௌகரியங்கள்.

(2) பொதுஜன ஆரோக்கியமும், சுகாதாரமும்.

(3) கல்வி.

(4) பாங்கித் தொழிலும், இன்ஷூரன்ஸூம்.

(5) புள்ளி விவரங்கள் தயாரித்தலும் ஆராய்ச்சி செய்தலும்.

இவைகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

### போக்கு - வரத்து, தபால் - தந்தி வசதிகள்

இந்தப் பகுதியில் ரயில் பாதைகள், ரஸ்தாக்கள், உள்நாட்டு நதி, கால்வாய் மார்க்கங்கள், கடற்கரையோரங்களில் கப்பல் விடுதல், விமானப் போக்கு-வரத்து, தபால் - தந்தி வசதிகள் ஆகிய பிரச்னைகளைப் பற்றிக் கவனிப்போம்.

**ரயில் பாதைகள்** — 1942, மார்ச் 31-ம் தேதியில் இந்தியாவில் ரயில் பாதைகள் † மொத்தம் எத்தனை

* ரயில், டிராம், பஸ் போக்கு - வரத்து, மின்சார வசதி, தபால் - தந்தி முதலியவற்றிற்கு ஆங்கிலத்தில் 'Public Utilities' என்ற பொதுப் பெயர் உபயோகிக்கப்படுகிறது; அது 'பொது நன்மைக்கான சௌகரியங்கள்' என்று இங்கே குறிக்கப்படுகிறது.

† 57½ அங்குலத்திற்குக் கூடுதலான அகலமுள்ள பாதை பிராட் - கேஜ் (அகலப் பாதை) என்றும், 39·37 அங்குலமுள்ளது மீட்டர் - கேஜ் (ஒரு மீட்டர் அளவுள்ள பாதை என்றும், 57½ அங்குலத்திற்குக் குறைந்தது நாரோ - கேஜ் (ஒடுக்கப் பாதை) என்றும் சொல்லப்படுகின்றன.

மைல் நீளம் இருந்தன என்ற விவரம் கீழே கொடுக்கப் பட்டிருக்கிறது :

| | | |
|---|---|---|
| பிராட் - கேஜ் | ... | 20,648 |
| மீட்டர் - கேஜ் | ... | 15,968 |
| நாரோ - கேஜ் | ... | 3,860 |
| | மொத்தம் | 40,476 |

மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவிலுள்ள ரயில் பாதைகளின் அளவு மிகவும் குறைவு தான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும். ரயில் பாதைகள் அமைத்ததிலும் 'நிர்ணயமான ஒரு முறையில்லை; தேசத்திலுள்ள நாட்டுப்புறங்களின் பொருளாதார அவசியங்களை முறையாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி செய்யாமல், கண்டபடி ரயில் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை இந்தியாவில் ரயில் பாதைகளின் பிரதான நோக்கம், இந்நாட்டிலிருந்து மூலப் பொருள்களை வெளியேற்றியும், பிரிட்டிஷ் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்களை மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்கள்வரை கொண்டு கொடுத்தும், பிரிட்டிஷ் வர்த்தகத்திற்கு உதவி புரிவதாகவே இருந்திருக்கிறது. இந்திய வர்த்தகமும் தொழில்களும் நாசமடைவதற்கு இந்தக் கொள்கை பெரும் பகுதி காரணமாயிருக்கிறது.

சில சாமான்களுக்கு ரயில் கட்டணங்களைக் கூட்டியும், சிலவற்றிற்குக் குறைத்துச் சலுகை காட்டியும், எவைகள் அதிகமாய்ப் பரவ வேண்டும், எவைகள் குறைய வேண்டும் என்ற முறையில் பாரபட்சமான கட்டுப்பாடுகள் கவனமாக அமல் நடத்தப்படுகின்றன. நம் திட்டத்தின்படி ஆங்காங்கே சுய-தேவைப் பூர்த்தி ஏற்படும்படி செய்வதே நோக்கமாயிருப்பதால், இதனால் தேசப் போக்கு - வரத்துச் சாதனங்களுக்கு அதிகக் கஷ்டமில்லாமற் போகும். எனினும், தேசத்தின் சில பாகங்களில் இன்னும் அதிகமான ரயில் வசதிகளை அமைக்க வேண்டியிருக்கும்.

தேசிய சர்க்கார், இந்திய முதலாளிகள் அல்லது அந்நிய முதலாளிகளின் சௌகரியத்திற்கு ஏற்றபடி செய்யாமல், இந்தியப் பொது மக்களின் நன்மையை நாடி ரயில் போக்கு - வரத்தை நிர்ணயப்படுத்தி முறையாக நடந்து வரும்படி செய்யவேண்டும். ரயில் பாதைகள் குடிசைத் தொழில்களுக்கு இடையூறு செய்யாமல், அவைகளுக்குத் தேவையான மலிவான மூலப் பொருள்களைக் கொணர்ந்து கொடுப்பதற்கும், அவைகள் உற்பத்தி செய்யும் பொருள் களில் தேவைக்கு உபயோகமானவை போக மீத முள்ளவைகளை விற்பனை செய்வதற்கும் உதவி புரிய வேண்டும்.

ரஸ்தாக்கள் – *1938*, மார்ச் *31*-ம் தேதியில், இந்தியாவில் சுதேச சமஸ்தானங்களைச் சேர்த்து, நகர சபைகளின் ரஸ்தாக்கள் நீங்கலாக) ரஸ்தாக்கள் மொத்தம் 3,47,132 மைல் நீளமுள்ளவையாக இருந்தன. இந் நாட்டில் இன்னும் அதிகமான ரஸ்தாக்களை அமைப்பது அவசியம் என்பதைக் கீழ்க் குறித்துள்ள புள்ளி விவரத்தி லிருந்து தெரிந்து கொள்ளலாம் :

[ஒரு சதுர மைல் பிரதேசத்தில்
எத்தனை மைல் நீளம் ரஸ்தா இருக்கிறது என்று
ஒப்பிட்டுப் பார்க்கத் தக்க விவரம்.]

| | | |
|---|---|---|
| ஜப்பான் | — | 3·00 |
| பிரிட்டன் | — | 2·00 |
| ஜெர்மனி | — | 1·19 |
| யு. எஸ். ஏ. | — | 1·00 |
| பிரிட்டிஷ் இந்தியா | — | 0·18 |

இந்தியாவில் எந்த விதமான குறிப்பிட்ட திட்டமும் இல்லாமலே அநேகமாக ரஸ்தாக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ரயில் பாதைகள் செல்லும் அநேக இடங்களில் அவைகளை அடுத்தாற்போல, அதே வழியாக ரஸ்தாக்களும் அமைந்திருக்கின்றன; இப்படி இந்தியாவிலுள்ள கப்பி ரஸ்தாக்களில், 100 மைல் இருந்தால் அதில் 30 மைல் ரஸ்தாக்கள், ரயில் பாதையை ஒட்டியே செல்கின்றன. அவசியமில்லாத இந்த இரட்டை

மார்க்கங்கள் ஒருவேளை வர்த்தகம் ராணுவ சம்பந்தமான காரியங்களுக்காக ஏற்பட்டிருக்கலாம். எது எப்படியிருப்பினும், இந்திய சர்க்கார் ரஸ்தாக்கள் அமைத்த முறையில் கிராமாந்தரப் பொருளாதார நிலை கவனிக்கப்படவில்லை என்பது தெளிவான விஷயம்.

ஆகவே, இந்நாட்டில் இனி ஏற்படக்கூடிய ரஸ்தாக்களின் அபிவிருத்தி, முக்கியமாக ஏழைக் குடியானவருக்கும் கிராமத் தொள்ளாளிகளுக்கும் பொருளாதார சுபிட்சம் ஏற்படுவதற்கு உதவியாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை ஆதாரமாய்க் கொண்டால், கிராமங்களைப் பெரிய ரஸ்தாக்களோடு சேர்க்கும்படி கிளை ரஸ்தாக்கள் அமைப்பதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். இதனால் குடியானவன் தன் விளைபொருள்களைப் பக்கத்திலுள்ள நகரச் சந்தையில் கொண்டு போய்த் தக்க விலைக்கு விற்க முடியும். கிராமாந்தரங்களில் முக்கியமாக உபயோகமாகும் வாகனம் மாட்டு வண்டிதான். ஆகையால் அங்கெல்லாம் (கப்பி ரோடுகள்) பக்கா ரஸ்தாக்கள்தான் வேண்டும் என்பதில்லை. மேலும் வண்டிச் சக்கரங்களில் இரும்புப் பட்டைகளே போடப்படுவதால், அந்த ரஸ்தாக்கள் குடியானவர்களுக்கு அசௌகரியமாகவும் இருக்கும். நாட்டுப்புறத்து வண்டிகளுக்கும் ரப்பர்ப் பட்டைகள் போடவேண்டும் என்ற யோசனை தவறானது. ஏனெனில், கிராமவாசியின் நன்மையைக் கவனிக்கையில், அதனால் நஷ்டந்தான் ஏற்படும்.* உயர்ந்த ரஸ்தாக்கள் ஏற்பட வேண்டும் என்ற உற்சாகத்தில், கிராமங்களில் வண்டியடிப்பதும் ஓர் உபதொழில் என்பதையும், அங்கேயும் மோட்டார் பஸ்கள் செல்வதற்கான ரஸ்தாக்களை அமைத்துக் குடியானவர்களுக்குக் கிடைக்கும் கூடுதல் வருமானத்தைப் பறித்துவிடக் கூடாது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. கிளை ரஸ்தாக்கள் அமைக்கும் செலவில் மாகாண அல்லது ஜில்லா கவுன்சில்களோடு,

* 'ஹரிஜ'னில் இவ்விஷயம்பற்றி ஆசிரியர் குமரப்பாவின் கட்டுரையைப் பார்க்கவும்; 3–10–1936.

கிராமப் பஞ்சாயத்துகளும் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும்படி பொறுப்புக் கட்டவேண்டும்.

**உள்நாட்டு நதி, கால்வாய் மார்க்கங்கள்**—பாசன வசதிகளுக்காகப் புதிதாகக் கால்வாய்கள் அதிகரிக்கும் பொழுது, உள்நாட்டில் இவைகள் மூலமும் நதிகள் மூலமும் சாமான்களைக் கொண்டு செல்வதற்குரிய வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டும். இவற்றிற்கு ரயில்கள் மூலம் போட்டி ஏற்படதாபடி, ரயில் கட்டணங்களை ஒழுங்கு படுத்தவேண்டும். அரசாங்கமே சகல போக்கு-வரத்து சாதனங்களையும் சொந்தமாக்கிக் கொண்டு தானே நிர்வாகம் நடத்த ஆரம்பித்துவிட்டால், இத்தகைய போட்டிக்கே இடமில்லாமற் போகும். உள்நாட்டில் நீர் மார்க்கமான போக்கு-வரத்துச் சாதனங்களில் சர்க்கார் இதுவரை போதிய கவனம் செலுத்தவில்லை; ஏனெனில், ரயில்வேகளில் பிரிட்டிஷ் மூலதனங்களை லாபகரமான முறையில் முதலீடாகப் போட்டு வைக்க அதிக வசதிகள் இருக்கின்றன. நீர் மார்க்கங்களில் சாமான்களைக் கொண்டு செல்வது மலிவாதலால் இந்தியக் குடியானவர்களுக்கு அது அதிக லாபகரமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

**கடற்கரை யோரங்களில் கப்பல் விடுதல்**—கடலை ஒட்டி இந்தியாவில் 4,000 மைல் நீளமுள்ள கரை இருக்கிறது. இதனால், மலிவான முறையில் கரையோரமான கப்பல் போக்கு-வரத்தை இந்நாடு மிகவும் அபிவிருத்தி செய்ய வசதிகள் இருக்கின்றன. இந்தப் போக்கு-வரத்தை அதிகப்படுத்துவதற்கு, தற்போது இந்தியக் கப்பல் கம்பெனிகளுடன் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் அந்நியக் கப்பல் கம்பெனிகளை ஒதுக்கிவிட வேண்டியது அவசியம். இந்தியக் கப்பல் கம்பெனிகளையும்கூட நாளடைவில் சர்க்காரே விலைக்கு வாங்கித் தானே சொந்தமாக்கிக் கொண்டு, தேசத்தின் நன்மைக்காகப் போக்கு-வரத்தை ஒழுங்குபடுத்தி வரவேண்டும்.

கரையோரமாய்க் கப்பல் விடுவதோடு, இந்தியா புராதன காலத்தில் பெருமையுடன் நடத்திவந்த வர்த்தகக் கப்பல் போக்கு-வரத்தை மீண்டும் அபிவிருத்தி செய்யவும் வேண்டும். வெளி நாட்டு வர்த்தகத்திற்கு நாம் சிக்கன முறையில் போக்கு-வரத்துச் சாதனங்களைப் பெறுவதற்கு நம் சொந்தக் கப்பல்களையே நம்பியிருப்பதுதான் உசிதமாகும்.

**விமானப் போக்கு-வரத்து**—யுத்தப் பிற்காலத்தில் விமானப் போக்கு-வரத்து முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகிக்கக் கூடியது; அது விரிவடைவதை இந்தியா தடுக்க முடியாது. சாமான்கள் கொண்டு செல்வதற்கு விமானங்களின் உதவி அதிகமாயில்லாவிட்டாலும், பிரயாணத்திற்கும், தபால்கள் கொண்டு செல்வதற்கும் அவைகள் மிகுதியாக உபயோகிக்கப்படும். விமானப் போக்கு-வரத்தையும் சர்க்காரே சொந்தத்தில் நடத்தி வரவேண்டும், அங்ஙிலையில் அது பெரும்பாலும் நகரப் பிராந்தியங்களோடு நிற்கும்படி செய்ய வேண்டும்.

**தபால்-தந்தி வசதிகள்**—உள்நாட்டுத் தபால் போக்கு-வரத்தை இன்னும் சீர்திருத்தி விரிவாக்க வேண்டியது அவசியம். கிராமாந்தரங்களின் தேவைகளை விசேஷமாக அனுசரித்து, தபால், தந்தி, டெலிபோன் வசதிகளைக் கூட இன்னும் பெருக்க வேண்டும்.

## பொதுஜன ஆரோக்கியம்

இந்தியாவில் தற்போதுள்ள ஆரோக்கிய நிலை மிகவும் தாழ்வானது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். வைசூரி, டைபாய்ட் ஜுரம், சீதபேதி முதலிய குடல் நோய்கள், பேதி, மலேரியா என்ற குளிர் ஜுரம் போன்ற கொள்ளை நோய்கள் பல இடங்களிலும் பரவியிருக்கின்றன. 1919-ல் இந்தியாவில் ஏற்பட்ட 61,65,234 மரணங்களில், 14,11,614 குளிர் ஜுரத்தாலும், 48,103 வைசூரியாலும், 97,566 பேதியாலும், 2,60,300 சீதபேதி முதலியவற்றாலும்

ஏற்பட்டவை.* க்ஷயமும் பரவி வருகிறது, ஒவ்வொரு வருஷத்திலும் அதன் உக்கிரம் அதிகமாகி அதை எப்படிச் சமாளிப்பது என்ற பிரச்னை அபாயகரமான நிலையை அடைந்து வருகிறது. புஷ்டியுள்ள உணவு கிடைக்காததால் ஏற்படும் நோய்கள் எங்கும் மலிந்து கிடக்கின்றன. ஓர் ஆங்கிலப் பத்திரிகையாளர் சமீபத்தில் குறிப்பிட்டது போல், இந்தியா உண்மையிலேயே 'விஷக் கிருமிகளின் சொர்க்கமாக' இருந்து வருகிறது.

நம் தேச மக்களின் ஆரோக்கியம் எவ்வளவு தாழ்ந்த நிலையிலிருக்கிறது என்பதற்குக் கீழ்க்கண்ட புள்ளி விவரம் தக்க எடுத்துக் காட்டாகும்:

சராசரி எதிர்பார்க்கும் ஆயுள் (வருஷங்கள்)

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| யு. எஸ். ஏ. | ... | 60·60 | 64·50 |
| பிரிட்டன் | ... | 60·18 | 64·40 |
| ஜெர்மனி | ... | 59·86 | 62·81 |
| ஆஸ்டிரேலியா | ... | 63·48 | 67·14 |
| ஜப்பான் | ... | 46·92 | 49·63 |
| இந்தியா | ... | 26·91 | 26·56 |

இந்தியாவில் பொதுஜன ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்யும் வழிகள் இரண்டு தனிப் பிரிவுகளாக இருப்பவை:

(1) சுகாதாரப் பாதுகாப்பு,† தண்ணீர் வசதி, குடியிருப்பு வசதி, பிரசவ வசதி, சிசு சம்ரட்சணை போன்ற முன்கூட்டிப் பாதுகாத்துக் கொள்ளும் முறைகள்: இவை தடை முறைகள்.

(2) வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் மூலம் போதுமான அளவு மருத்துவ வசதிகள் கிடைக்கும்படி செய்து நோய்களைக் குணப்படுத்தல்: இவை சிகிச்சை ஏற்பாடுகள்.

---

* 'The Health of India' - by John B. Grant — 'இந்தியாவின் ஆரோக்கியம்' - ஜான் பி. கிரான்ட்; பக்கம் 3.

† சாக்கடைத் திட்டம், மலஜலங்களை அப்புறப்படுத்தல் முதலிய ஏற்பாடுகள்.

சுகாதாரம், தண்ணீர் வசதி, குடியிருப்பு வசதி — 'புத்திக் கூர்மைக்கும் தொழில் செய்வதற்கும் சம்பந்தமே இல்லாதபடி செய்துவிட்டதால், கிராம ஜனங்களின் க்ஷேம லாபங்கள் கொடுமையாக அலட்சியம் செய்யப் பட்டிருக்கின்றன. இதனுல், நாட்டில் பார்த்த இட மெல்லாம் அழகான கிராமங்கள் நிறைந்திருப்பதற்குப் பதிலாகக் குப்பை குவியல்களையே பார்க்கிறோம். அநேகம் கிராமங்களுக்கு அருகில் செல்வதே பயங்கரமான அனு பவமாகும்: ஒருவர் அங்கே செல்லும் பொழுது மூக்கைப் பிடித்து, கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று தோன்றும்: அவ்வளவு அசுத்தங்கள் சூழ்ந்து கிடக் கின்றன, துர்க்கந்தங்கள் மூக்கைத் துளைக்கின்றன.'* ஆகவே, கிராம ஜனங்களுக்குச் சுகாதாரம், ஆரோக்கியம், சுத்தமாக வாழ்தல் ஆகியவை பற்றிக் கிராமப் பஞ்சா யத்துகள் சரியான முறையில் போதனை செய்யவேண்டும். அடிப்படைக் கல்வியிலும், முதியோர் கல்வியிலும் இத் தகைய போதனை முக்கியமான ஒரு பகுதியா யிருக்க வேண்டும். குப்பைகளையும் செத்தைகளையும் போட்டு வைப்பதற்குக் குழிகள் தோண்டும் வழக்கத்தை வற் புறுத்திப் புகுத்த வேண்டும். இதனுல் கிராம சுகா தாரம் சீர்ப்படுவதுடன் வயல்களுக்கு வேண்டிய உயர்ந்த உரமும் கிடைக்கும். குழிகள் தோண்டிக் கக்கூசுகளாக அமைப்பதையும் போதித்து அதிகப்படுத்த வேண்டும். நகரப் பிரதேசங்களில் நகரசபைகளின் மூலம் செய்யப் படும் சுகாதார வேலைகளிலும், எவ்வளவோ சீர்திருத்தம் செய்து பொதுஜன ஆரோக்கியத்தைப் பெருக்கவேண்டி யிருக்கிறது.

நகரங்களிலும் கிராமங்களிலும் போதுமான தண்ணீர் கிடைக்கும்படி அதிக வசதிகளைச் செய்வதுடன் ஜல சப்ளை பற்றிய முறைகளையும் சீர்திருத்த வேண்டும். 1939-ல் பிரிட்டிஷ் இந்தியாவின் 1,471 நகரங்களில் 253 நகரங்களில் மட்டுமே முறையான தண்ணீர் வசதிகள் இருந்ததாகக

---

* 'Constructive Programme – நிர்மாணத் திட்டம்' – எம். கே. காந்தி; பக்கம் 12.

கணக்கிடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக இது போதாது. கிராமங்களின் நிலைமை இதைவிட மோசம். ஆபாசமான குட்டைகளிலும் கிணறுகளிலுமுள்ள தண்ணீர் குளிப்பதற்கும் குடிப்பதற்குங்கூட உபயோகிக்கப்படுகிறது; கால்நடைகளும் மனிதர்களும் தங்களுக்கு வேண்டிய தண்ணீரை அநேகமாகச் சரிசமத்துவமான முறையிலே பெறுகிறார்கள். இந்த வழக்கங்களின் பயனாகப் பல கொள்ளை நோய்கள் ஏராளமான உயிர்களைக் கொள்ளை கொண்டு போகின்றன.

இப்பொழுது உள்ளவைகளைவிட அதிக சுத்தமான காற்றோட்டமுள்ள வீடுகளின் அவசியத்தை அலட்சியம் செய்துவிடக் கூடாது. கிராம சபைகள் அல்லது பஞ்சாயத்துகளுக்கு ஆடம்பரமற்ற, ஆனால் வசதியான வீடுகள் கட்டும் மாதிரிப் 'பிளான்'களை அரசாங்கம் கொடுத்து உதவ வேண்டும். அவைகள் கிராமவாசிகளுக்கு வழி காட்டும். கூட்டுறவு முறையில் அமைக்கப்படும் 'மனை நிர்மாணச் சங்கங்கள்' இந்த வேலையில் மிக அதிகமாகச் சாதித்துவிட முடியும். கிராமவாசிகள், தங்களுக்குக் கூடுதலான வருமானம் கிடைக்கும்போது, குடியிருப்பு நிலைமைகளைச் சீர்திருத்தி அமைத்துக்கொள்ளும் செலவுகளை ஏற்றுக்கொள்ள முடியும்.

**பிரசவ வசதிகளும் சிசு சம்ரட்சணையும்** — இந்தியாவில் சிசு மரண விகிதம் மிக அதிகம் என்பதைக் கீழே கண்ட புள்ளிகள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கின்றன:

[பிறக்கிற 1,000 குழந்தைகளில் இறக்கிறவை இத்தனை என்ற விவரம்]

| | | |
|---|---|---|
| இந்தியா | — | 167 |
| ஜப்பான் | — | 114 |
| கனடா | — | 61 |
| ஜெர்மனி | — | 60 |
| பிரிட்டன் | — | 53 |
| யு. எஸ். ஏ. | — | 48 |
| ஆஸ்டிரேலியா | — | 38 |

மிக அதிகமாயுள்ள இந்த மரண விகிதம் ஏற்படுவதற்குப் பாலிய விவாக வழக்கம் ஓரளவு காரணமாயிருக்கலாம். ஆனால் தாயும் ஜீவசக்தி யிழந்து அவளால் குழந்தையும் பலவீனமாய்ப் போகிறது. ஆயினும் அடிப்படையான காரணம் சாதாரண ஜனங்களைக் கசக்கிப் பிழியும் வறுமைதான்.

இந்தியாவின் மரண விகிதத்தில் இரண்டாவது விசேஷம் என்னவென்றால், குழந்தை பெறக்கூடிய பருவமடைந்த ஸ்திரீகளின் மரணம் அதிகமா யிருப்பது: அநேகம் பெண்கள் பிரசவ காலத்தில் மரிக்கிறார்கள், அல்லது பிரசவத்திற்குப் பின்னால் க்ஷயரோகத்தால் பீடிக்கப்படுகிறார்கள்.

ஆகையால், ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற பொதுவான பிரச்னையுடன் நகரங்களிலும் கிராமங்களிலும் பிரசவ விஷயங்களைப் போதிப்பதற்கான மருத்துவசாலைகள் பலவற்றை அமைப்பது தேசீய சர்க்காரின் முக்கியமான கடமையாகும். இந்த மருத்துவசாலைகள் கர்ப்பம் பிரசவம் முதலிய விஷயங்களைப்பற்றி ஸ்திரீகளுக்கு முறையாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஸோவியத் ரஷ்யாவில் கர்ப்பிணிகளைப் பாதுகாத்துச் சம்ரட்சிக்கும் முறையே அநேகமாக உலகத்தில் தலைசிறந்த முறையாக இருக்கக் கூடும்.

தேகப் பயிற்சி ஸ்தலங்களும், பந்தய விளையாட்டுகளும் — சமூகத்தாரின் பொது ஆரோக்கியத்தை வளர்ப்பதே நோய்களைத் தடுப்பதற்கு மிகச் சிறந்த முறை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தேசத்தின் பல பாகங்களிலும் அநேகம் தேகப் பயிற்சி ஸ்தலங்களை ஏற்படுத்துவதன் மூலம் இதைச் சாதிக்க முடியும். அதிகச் செலவில்லாமலும், ஆரோக்கியத்திற்குத் துணையாகவுமுள்ள சுதேசி விளையாட்டுகள் பந்தயங்கள் முதலியவற்றைப் புனருத்தாரணம் செய்து பரப்ப வேண்டும்.

**வைத்தியசாலைகளும் குடிசை - மருந்துச்சாலைகளும்** — நோய் பரவாமல் தடுப்பதற்கு நல்ல வசதிகளோடு கூடிய அதிகமான வைத்தியசாலைகளை நகரங்களில் அமைக்க வேண்டும்; கிராமாந்தரங்களில் ஏராளமான குடிசை - மருந்துச்சாலைகளை அமைக்க வேண்டும். இந்த விஷயத்திலும் ஸோவியத் ரஷ்யா வழிகாட்டி யிருப்பதால், அதைப் பின்பற்றுவது நலம். இந்தியாவில் வைத்திய சாலைகளும் மருந்துச்சாலைகளும் சுமார் 7,000 தான் இருக்கின்றன. தொழில் நடத்திவரும் டாக்டர்களின் எண்ணிக்கை சுமார் 42,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது; அதாவது 9,000 நபர்களுக்கு ஒரு டாக்டர் இருக்கிறார். ஜப்பானின் ஜனத்தொகை அநேகமாக வங்காளத்தின் ஜனத்தொகையைப் போன்றதுதான்; ஆயினும் அங்கே இந்தியா முழுவதிலுமுள்ளதைவிட அதிக டாக்டர்கள் இருக்கின்றனர். ஜனத்தொகையில் 2,000 பேருக்கு ஒரு டாக்டர் வீதம் கணக்குப் பார்த்தாலும், இந்தியாவுக்கு 2,00,000 டாக்டர்கள் தேவை. 86,000 நபர்களுக்கு ஒரு தாதி (நர்ஸ்) வீதம், இந்தியாவில் மொத்தம் 4,500 தாதிகளே இருக்கின்றனர். பிரிட்டனுடைய ஜனத்தொகை இந்தியாவிலுள்ளதில் எட்டில் ஒரு பங்கா யிருந்த போதிலும், அங்கே 1,09,500 தாதிகளும், 61,420 டாக்டர்களும் இருக்கின்றனர்; அதாவது, 435 நபர்களுக்கு ஒரு தாதி வீதமும், 776 நபர்களுக்கு ஒரு டாக்டர் வீதமும் இருக்கின்றனர். எனவே, நர்ஸ்களுக்கும் டாக்டர்களுக்கும் பயிற்சி யளித்தல் மிக அவசரமான வேலை; கிராமாந்தரங்களின் தேவைகளை விசேஷமாகக் கருத்தில் வைத்துக்கொண்டு, இந்த வேலையை இந்தியத் தேசிய சர்க்கார் மிகுந்த சிரத்தையுடன் நிறைவேற்றி வைக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மருந்துச்சாலை இருக்க வேண்டும்; அது பஞ்சாயத்தின் நிர்வாகத்திலும், மாகாண சர்க்காரின் மேற்பார்வையிலும் இருந்து வரவேண்டும்.

**சிகிச்சை முறைகள்**—இந்தியாவில் வைத்திய வசதிகளை அபிவிருத்தி செய்வதில் இந்நாட்டுக்குச் சொந்தமான

ஆயுர்வேத யூனானி போன்ற சிகிச்சை முறைகளை ஆதரித்து வளர்ப்பதில் சர்க்கார் விசேஷ சிரத்தை காட்ட வேண்டும். கிராம ஜனங்கள் மேலைநாட்டு மருந்துகளுக்காக ஏராளமான பணம் செலவிட முடியாததால், அவர்களுக்கு விசேஷமாகப் பயன்படும் வகையில் இந்த உள்நாட்டு வைத்திய முறைகளை நன்றாக இடைவிடாமல் ஆராய்ந்து முறைப்படுத்த வேண்டியது சர்க்காரின் பொறுப்பு. ஆயுர்வேத யூனானி முறைகளோடு, ஹோமியோபதி,* 'பயோ-கெமிஸ்ட்ரி' (உயிர்-ரஸாயனம்), இயற்கை-வைத்தியம், முதலியவைகளையும் சர்க்கார் ஆதரித்து அபிவிருத்தி செய்யவேண்டும். இந்த முறைகள் அதிகச் செலவில்லாமல் சௌகரியமாயும் இருப்பதால், இந்திய நிலைமைகளுக்கு இவை மிகவும் ஏற்றவை. மேலைநாட்டு வைத்திய முறையை (அல்லோபதியை) முற்றிலும் ஒழித்துவிட வேண்டியதில்லை, ஒழித்துவிடவும் முடியாது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த முறைகள் எல்லாவற்றையும் கவனமாகப் பரிசீலனை செய்து சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல், பயன்படுத்திக் கொள்வதே விரும்பத் தக்கது.

## கல்வி

*1941*-ம் வருஷத்து ஜன சங்கியைக் கணக்குப்படி இந்திய ஜனத்தொகையில் 100-க்கு 12 பேரே படிப்புள்ளவர்கள். மற்றும் சில நாடுகளில் படிப்புள்ளவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | | வருஷம் | | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| பிரிட்டன் | — | 1921 | — | 76·1 |
| யு. எஸ். ஏ. | — | 1920 | — | 74·5 |
| கனடா | — | 1921 | — | 71·6 |
| ஜெர்மனி | — | 1925 | — | 80·5 |
| பிரான்ஸ் | — | 1926 | — | 80·1 |
| ஜப்பான் | — | 1925 | — | 71·7 |

* 'அல்லோபதி' என்று சொல்லப்படும் மேலை நாட்டு வைத்தியத்திற்கு மாறுபட்ட ஒரு வைத்திய முறை.

விரைவாக இந்தியாவில் கல்வியைப் பரப்பவேண்டியதன் அவசியத்திற்கு இதற்கு மேல் காரணம் கூறத் தேவையே யில்லை.

கல்வி விஷயத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வது நலம் :-

1. குழந்தைகள் கல்வி.
2. அடிப்படைக் கல்வி.
3. நடுத்தரக் கல்வி.
4. சர்வகலாசாலைக் கல்வி (உயர்தரக் கல்வி).
5. முதியோர் கல்வி.

**குழந்தைகள் கல்வி** — அடிப்படைக் கல்விக்கு முன்னதாகச் சிறு குழந்தைகளுக்குக் கல்விப் பயிற்சி அளித்தல் நம் நாட்டில் போதுமான அளவு கவனிக்கப்படவில்லை. காலஞ்சென்ற ஆசாரிய கிஜுபாய் அவர்களின் தளர்வில்லாத முயற்சிகளால் குஜராத் மாகாணத்தில் குழந்தைகள் கல்வி அபார முன்னேற்றம் அடைந்திருக்கிறது; இந்த முன்னேற்றம் அநேகமாக அந்த ஒரு மாகாணத்தில் மட்டுமே ஏற்பட்டிருக்கிறது. குடியிருக்கும் வீடுதான் குழந்தைகளுக்கு ஏற்ற முதல்தரமான பள்ளிக்கூடம்; ஆயினும் 3 முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கல்வியைப் போதுமான அளவு கவனிப்பதற்கு அநேகம் பெற்றோர்களுக்கு வசதியில்லை என்பதும் பிரத்தியக்ஷம். ஆதலால் நாடெங்கிலும் 'பால மந்திரங்கள்'* அமைத்துக் குழந்தைகள் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியம். மாண்டிஸோரி† முறை, கிண்ட

* பால மந்திரங்கள், அல்லது குழந்தைகள் - பள்ளிக்கூடங்கள்.

† மாண்டிஸோரி முறை ரோமாபுரியைச் சேர்ந்த டாக்டர் மேரியா மாண்டிஸோரி அம்மையாரால் 1900-ம் வருஷம் ஆரம்பிக்கப் பெற்றது. சிறு குழந்தைகளை அவர்களின் போக்கிலேயே விட்டு இயற்கையான சக்திகளை வளர்த்துக் கொள்ள உதவுவது இம்முறையிலுள்ள விசேஷ அம்சம்.

கார்ட்டன்* முறை ஆகியவைகளில் அதிகச் செலவு ஏற்படுவதால், இந்தியாவைப் போன்ற ஏழை நாட்டிற்கு அவை ஏற்றவையல்ல. இந்த முறைகளை இந்திய நிலைமைகளுக்குத் தக்கபடி மாற்றி அமைத்துக்கொள்வது சாத்தியமாகலாம்; அப்படிச் செய்வது எளிமையாக இருக்க வேண்டும், ஆனால் தக்க பயிற்சியளிப்பதாயும் இருக்க வேண்டும்.

**அடிப்படைக் கல்வி**—தற்கால ஆரம்பக் கல்வி ஒரு பரிகாசக் கூத்து; இந்தியக் கிராமங்களின் தேவைகளையோ, அல்லது நகரங்களின் தேவைகளையோ கூடக் கவனியாமலே அது அமைக்கப்பட் டிருக்கிறது. 'அடிப்படைக் கல்வி, குழந்தைகள் கிராமங்களைச் சேர்ந்திருந்தாலும் நகரங்களைச் சேர்ந்திருந்தாலும், அவர்கள் யாவரும் இந்தியாவுக்குப் பெருமையளிக்கும் சகல உன்னத விஷயங்களுடனும் தொடர்பு கொள்ளும்படி செய்கிறது. அது உடலையும் உள்ளத்தையும்கூடவே வளர்க்கிறது, குழந்தை தான் வாழும் இடத்திலுள்ள பண்பாடுகளில் பற்றுக் கொள்ளும்படி செய்கிறது; எதிர்கால மகோன்னத நிலையை உணர்ந்து, அந்நிலையை அடைவதற்காகத் தனக்குரிய பங்கைக் குழந்தை தன் பள்ளிக்கூட வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே எடுத்துக் கொள்ளும்படி அக்கல்வி முறை செய்கிறது.' †

அடிப்படைக் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்படுவதால், அது 7-வருஷ காலம் நீடிக்க வேண்டும் என்றும், அது 'மெட்ரிகுலேஷன்' பத்தாவது வகுப்புக்குரிய பொதுவான பாடங்களில் ஆங்கில பாஷை நீங்கலாகவும், வாழ்க்கைக்கு உபகாரமாயுள்ள சரியான தொழில் ஒன்றைச் சேர்த்தும், பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் வார்தா கல்வித்திட்டம் விதி செய்திருக்

* இன்டர்கார்ட்டன் முறையில் இளங் குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டி வித்தை கற்பிக்கப்படும்: இன்டர் கார்ட்டன் - குழந்தைகள் சோலை.

† 'Constructive Programme – நிர்மாணத் திட்டம்', பக்கம் 13.

றது. பையன்களும் பெண்களும் சகல அம்சங்களிலும் பூரணமான வளர்ச்சி யடைவதற்குக், கூடியவரை எல்லாவிதப் பயிற்சியும் லாபகரமான ஒரு தொழில் மூலமே அளிக்கப்பட வேண்டும். அதாவது, தொழிற் கல்வி இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் — மாணவன் அல்லது மாணவி தன் உழைப்பினால் உண்டாகும் பொருள்களை அளிப்பதன் மூலம் தான். (பள்ளிக் கூடத்திற்குச்) செலுத்த வேண்டிய சம்பளத்தைக் கொடுக்க வேண்டும்; அதே சமயத்தில் அவன் அல்லது அவள் தான் பள்ளியில் பெற்ற கல்வியின் மூலம் குண நலம் சிறந்து, பூரண மனிதனாகவோ, பெண்ணாகவோ வளர்ந்து மலர்வதற்குப் பயிற்சி பெறவும் வேண்டும். மனை, கட்டடங்கள், தளவாடங்கள் முதலிய செலவு களுக்கும் மாணவ மாணவிகளின் உழைப்பின் பயனைக் கொண்டே பணம் பெறவேண்டும் என்பது நோக்க மில்லை.* உழைபின் மூலம் கல்வி பெறுதல் என்பதை முக்கிய தத்துவமாகக் கொண்ட வர்தா கல்வித் திட்டம் உலகம் எங்கணும் கல்வி விஷயத்தில் சிரத்தை கொண்ட பிரமுகர்களால் ஆமோதிக்கப் பட்டிருக்கிறது. இந்தியா வைப் போன்ற ஏழை நாட்டிற்குப் பொது ஜனக் கல்விக்கு லாயக்கான முறை அது ஒன்றுதான் என்று இந்திய சர்க்கார்கூட ஒப்புக்கொண்டிருக்கிறது.

அடிப்படைக் கல்வியின் நிர்வாகப் பொறுப்பு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே இருக்க வேண்டும். நகரங் களிலும் அடிப்படைக் கல்விப் பள்ளிக்கூடங்கள் இருக்கும். ஆனால், அவைகளில் போதிக்கப்படும் அடிப் படைத் தொழில்கள் நாட்டுப் புறங்களில் போதிக்கப் படும் தொழில்களிலிருந்து மாறுபட்டிருக்கும்.

**நடுத்தரக் கல்வி** — நடுத்தரக் கல்வி அடிப்படைக் கல்வியின் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்; அடிப் படைப் பள்ளிகளில் முன்னால் பயின்ற தொழில் களில் மேலும் நுணுக்கமான முறைகளைப் பற்றி

---

* 'ஹரிஜன்'; 2-10-1937.

3 வருஷம் அதில் கற்பிக்க வேண்டும். கல்விப் படிகள் எல்லாவற்றிலும் ஒரு படியில் கற்பித்ததன் தொடர்ச்சியாக்வே அடுத்தபடி அமைய வேண்டும்; நடுத்தரக் கல்வியிலும் அதற்கு மேற்பட்ட படிப்பிலும்கூட இந்தப் பரஸ்பரத் தொடர்பு இருக்க வேண்டும்.

ஆயினும் இங்கே ஒரு விஷயத்தை வற்புறுத்த வேண்டியது அவசியம்: க்லாசாலைகளில் சேருவதற்குரிய பயிற்சி கொடுப்பதே நடுத்தரக் கல்வியின் நோக்கம் என்று கருதிவிடக் கூடாது; (கலாசாலைகளுக்குப் போய்த் தீரவேண்டும் என்ற அவசியம் இல்லாமல்) நடுத்தரக் கல்வியே பூரணமானதாக இருக்க வேண்டும்.

**சர்வகலாசாலைக் கல்வி** — இப்பொழுது இந்தியாவில் 18 சர்வக்லாசாலைகள் இருக்கின்றன; இவைகளில் பதிவாயிருக்கும் மாணவ மாணவிக்ள் மொத்தம் 1,76,291 பேர்.* 'நம் கலாசாலைகளில் அளிக்கப்படும் ஏராளமான கல்வி (என்று சொல்லப்படும் பொருள்) அத்தனையும் வீணானது; படித்த வகுப்பினரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருப்பது அதன் பலன்தான். மேலும், கலாசாலைகளில் மிகவும் சிரமப்பட்டுப் படிக்கும் துர்ப்பாக்கியம் எந்த மாணவ மாணவிகளுக்கு ஏற்பட்டிருக்கிறதோ அவர்களுடைய ஆரோக்கியத்தை, அதாவது உடல்நலம் மனநலம் இரண்டையும், அக்கல்வி பாழாக்கிவிடுகிறது.'† ஆகையால் தற்போதைய உயர்தரக் கல்வி முறையை அடியோடு மாற்றவேண்டியது அவசியம்.

சர்வகலாசாலைப் படிப்பு என்பது முக்கியமாக ஆராய்ச்சி வேலை‡ யாகவும், கற்ற விஷயங்க்ள் பலவற்

---

* ஸ்ரீ. ஜான் ஸார்ஜென்டின் அறிக்கை, அனுபந்த அட்டவணை 'டி'.

† 'ஹரிஜன்'; 9-7-1938.

‡ ஆராய்ச்சி வேலை - research work — சரித்திரம், சமூக சாஸ்திரம், அரசியல், பொருளாதாரம், தொழில்கள், பாஷைகள் ஆகிய பல விஷயங்களைப் பற்றியும் விஞ்ஞான முறையில் நுணுக்கமாக ஆராயும் வேலை.

றிலும் மேற்கொண்டு பூரணத் தேர்ச்சி பெறுவதாகவுமே இருக்க வேண்டும். சர்க்கார் ஊழியங்களுக்குத் தேவையான இளைஞர்களுக்கு ராஜாங்க சர்வகலாசாலைகளில் விசேஷப் பயிற்சி கொடுக்க வேண்டும். உதாரணமாக, வைத்தியர்கள், தாதிகள், உபாத்தியாயர்கள், எஞ்சினீர்கள், கிராமாந்தரங்களுக்கு வேண்டிய ஊழியர்கள் ஆகியவர்களைத் தயாரிப்பதற்குத் தேசிய சர்க்கார் பயிற்சிக் கல்லூரிகளை (டிரெய்னிங் காலேஜுகளை) ஆரம்பிக்க வேண்டும். மற்றக் கல்வித் துறைகளையெல்லாம் தனிப்பட்டவர்களின் முயற்சி வெற்றி பெறும்படி ஊக்கப்படுத்தி ஆதரித்து வரவேண்டும். ராஜாங்க சர்வகலாசாலைகளில் சில, பரீட்சைகள்மட்டும் நடத்தவேண்டியவை. பரீட்சைகளுக்கு விதிக்கும் பிரவேசக் கட்டணங்களின் மூலம் அவை தம் செலவுக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

**தாய் மொழி மூலம் கல்வி**—நம் தேசிய சக்தி மகத்தான அளவு பாழாய்ப் போவதைத் தவிர்க்க வேண்டுமானால், தாய் மொழி மூலமே கல்வியின் எல்லாப் படிகளிலும் (அடிப்படை, நடுத்தர, உயர்தரக் கல்வி அனைத்திலும்) கற்பிக்க வேண்டும். 'ஆங்கில பாஷையையே போதனைக் கருவியாக உபயோகித்து எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தின் மூலமே சொல்லித் தரும் முறையானது நம் சமூகத்தின் சக்தியை நிர்மூலமாக்கிவிட்டது, அது மக்களின் ஆயுளைக் குறுக்கிவிட்டது. படித்தவர்கள் பாமர ஜனங்களோடு ஒட்டாதபடி அது வேறுபடுத்திவிட்டது; கல்விச் செலவை அநாவசியமாக அதிகப்படுத்திவிட்டது. இதே முறை இன்னும் நீடித்து நடப்பதானல், சமூகம் தன் ஆத்மாவையே பறிகொடுத்துவிடும் (உன்னதமான தன் சொந்தப் பண்புகளையெல்லாம் இழந்துவிடும்). அந்நிய பாஷையின் மோகத்தில் மயங்கிக் கிடக்கும் நிலையிலிருந்து படிப்பாளிகள் எவ்வளவு சீக்கிரத்தில்தெளிவடைகிறார்களோ அவ்வளவுக்கு அவர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் நன்மையுண்டாகும்.' யுத்தப் பிற்கால உலகில்

* 'ஹரிஜன்'; 9-7-1938.

இந்தியர் அரசியல் சுதந்திரத்துடன் விளங்கும் என்று நாம் நம்பியிருப்போம். துரதிர்ஷ்டவசமாக ஆங்கில ஆதிக்கத்திலிருந்து நாம் விடுதலையடையாமல் இருந்துவிட்டாலும், குறைந்த பட்சம் ஆங்கில பாஷை மூலமே கல்வி என்ற கொடுமையிலிருந்தாவது நாம் விடுதலை பெறவேண்டும்.

இந்தப் பிரச்னையைப் பற்றி விரிவாக ஆராய்வதற்கு வாசகர் என்னுடைய 'The Medium of Instruction-போதனைக் கருவியான பாஷை' என்ற சிறு நூலைப் பார்க்கவும்.

முதியோர் கல்வி — வயதுவந்தவர்களுக்குக் கல்வி புகட்டுதல் என்றால், எழுதவும், படிக்கவும், கணக்குச் செய்யவும் சொல்லிக் கொடுப்பது போதாது. எழுதப் படிக்கத் தெரிவது வேறொரு பயனை அடைவதற்குரிய வழிதான்; அதுவே பயனாகிவிடாது. பொருளாதார நிலையிலும் கலாசார நிலையிலும் ஜனங்களை உயர்த்த வேண்டியதே முதியோர் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும்; பொருளாதார நிலையில் உயர்த்துவதன் அவசியம் என்னவென்றால், அன்றாடப் பொருளாதார வாழ்க்கையில் அவர்களுக்குள்ள சிரத்தையை அபிவிருத்தி செய்யாமல், கல்விக்காகவே கல்வி கற்க வேண்டும் என்று ஜனங்கள் நிரந்தரமாகக் கற்றுவர மாட்டார்கள்.

'வித்தை கற்பிப்பதில் பொருளாதார அம்சத்திலிருந்து ஆரம்பித்தல் பல வழிகளில் பார்த்தாலும் சிறந்ததாகவேயிருக்கும். மனிதனுக்கு அக்கறை மிகவும் அதிகப்படும் பொழுதுதான் நன்றாகப் படிக்கிறான்; அவனுடைய தேவைகளைப் பொறுத்தே அக்கறை ஏற்படுகிறது.'* ஆகவே, பொதுஜனங்களுக்கான கல்வி குறிப்பாகப் பொருளாதார நோக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும்; ஏதாவது ஒரு கைத்தொழில் அல்லது

* 'Masters of Their Own Destiny' - by M.M. Coady - 'அவர்களே அவர்களுடைய விதிக்கு யஜமானர்கள்' - எம். எம். கோடி; பக்கம் 112.

பணியின் மூலம் கல்வி கற்பதால் ஜனங்கள் தங்கள் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்துகொள்ளும் சக்தியைப் பெறும்படி அது செய்யவேண்டும். அடிப்படைக் கல்வியைப் போலவே முதியோர் கல்வியிலும் பயனுள்ள தொழில் செய்வதன் மூலமே கற்பிக்க வேண்டும். வயதுவந்தவர்கள் ஒரு கைத்தொழிலை நன்ருகக் கற்றுக்கொள்வதில், எழுத்து, படிப்பு, கணக்கு ஆகிய மூன்றிலும் தேர்ச்சி பெறுவதுடன், ஆரோக்கியம், சுத்தம், சுகாதாரம், சமூகத்தில் தங்களுக்குள்ள உரிமைகள், கூட்டுறவு முயற்சியின் பயன் ஆகியவைகளைப் பற்றியும் போதுமான அளவு தெரிந்துகொள்வார்கள்.

கிரியாம்சையில் பயன்படக்கூடிய பற்பல விஷயங்களைப் பற்றி அறிவிக்கும் மலிவான உபயோகமுள்ள நூல்களையும் படிப்பில்லாத முதியோர்களின் முன்னேற்றத்திற்காகக் கொடுக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். அத்தகைய பொருத்தமான புத்தகங்கள் இல்லாவிட்டால், அவர்கள் கற்றதை மறந்து, மறுபடி எழுத்தறிவில்லாமற் போய்விடுவார்கள். தேசத் தொண்டில் ஊறியுள்ள நல்ல உபாத்தியாயர்கள் எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றி அபிப்பிராய பேதமே இருக்க முடியாது.

நம் நாட்டு முறைப்படியுள்ள நாடகசாலை, ஜனங்கள் சேர்ந்து நடனம் செய்தல், நாடோடி இலக்கியம், பஜனை முதலியவற்றைப் புனருத்தாரணம் செய்தல் ஆகியவை முதியோர் கல்வியில் முக்கியமான அங்கமாக அமைய வேண்டும்.

## பாங்கித் தொழிலும் இன்ஷுரன்ஸும்

இந்தியாவில் பெரிய அளவில் எவ்விதப் பொருளாதாரத் திட்டத்தையும் நிறைவேற்றி வைப்பதில், பல காரியங்களை உத்தேசித்து நீண்ட காலத் தவணையில் கடன் வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஏராளமான மூலதனம் தேவைப்படும். இதனால் பாங்கித்

தொழிலை இன்னும் விரிவாக அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கும். அதைத் தனி நபர்களின் கையில் விட்டுவிடக் கூடாது. பொதுஜன நன்மைகளைக் கருதி, தேசிய பாங்கித் தொழிலைச் சர்க்காரே சொந்தத்தில் நிர்வகித்துக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். சீனாவில் 'குடியானவர்கள் பாங்கி' இருப்பது போல், இங்கும் கிராமாந்தரங்களுக்காகப் பாங்கித் தொழிலில் தனி இலாகா ஒன்று இருக்க வேண்டும். பொருளாதாரத் திட்டம் நிறைவேறி வருகையில், சகல வித இன்ஷூரன்ஸூம், முக்கியமாக விவசாய இன்ஷூரன்ஸூம், வளர்ச்சி பெறுவதற்கு ஏராளமான வசதியுண்டு. இந்தத் தொழிலையும், தனி நபர்களிடம் விடாமல், பொது நன்மைக்காகச் சர்க்காரே மேற்கொள்ள வேண்டும். தற்போதுள்ள இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் பாங்கிகளையும் சர்க்காரே வாங்கிவிட வேண்டியிருக்கும்; இல்லாவிடில், அவைகளுடைய வேலைகளைத் திட்டப்படுத்திக் கண்காணித்து வரவேண்டியிருக்கும்; என்னென்ன காரியங்களுக்கு மூலதனங்களை முடக்க வேண்டும் என்பதிலும், வட்டி விகிதங்களிலும் கண்காணிப்பு மிகவும் அவசியம். பெரும் பொருள் படைத்த முதலாளிகளும் பாங்கர்களும் தந்திரமாக ஜாலவித்தைகள் செய்வதை நிர்க்கதியாகப் பார்த்துக் கொண்டிராமல், தேசிய சமூகம் விழிப்படைந்து, தன் ஜீவாதாரமான உண்மைத் தேவைகளுக்குத் தக்கபடி தன் வீட்டைத் தானே நிர்வகிக்கும் நாளே விசேஷமான நல்ல நாளாகும்.

## புள்ளி விவரமும் ஆராய்ச்சியும்

பொருளாதார விஷயங்கள், தொழில்கள் சம்பந்தமான புள்ளி விவரக் கணக்கு*களைத் தொகுப்பதற்கு இப்போதுள்ள ஏற்பாடு மிகவும் குறைபாடுள்ளது.

---

* புள்ளி விவரக் கணக்கு – statistics – ஒரு விஷயத்தைப் பற்றி முறையாகச் சேகரிக்கப்பட்ட விவரக் கணக்கு, இங்கே ஜனங்களின் ஸ்திதியையும், கதியையும் பற்றிய விவரத் தொகுதி.

உதாரணமாக, உள்நாட்டு வர்த்தகம், பழங்கள் காய்கறிகளின் உற்பத்தி, பால் பண்ணைகள், கால்நடைச் செல்வம், குடிசைத் தொழில்கள் ஆகியவைபற்றித் தற்சமயம் போதுமான விவரம் இல்லை. கிடைக்கிற சில விவரங்களும் மிகவும் சரியானவை என்றோ, நம்பத் தக்கவை என்றோ கருதுவதற்கில்லை. தற்போதுள்ள புள்ளி விவரம் சேர்க்கும் ஸ்தாபனத்தைச் சீர்திருத்தி வைப்பது மிகவும் அவசியமான வேலை. இதையே பௌலி-ராபர்ட்ஸன் அறிக்கையும்* வற்புறுத்தியிருக்கிறது. எனவே, கிராமங்கள் முதலியவைகளை அளந்து மதிப்பிடுவதற்கும் புள்ளி விவரங்கள் தொகுப்பதற்கும் நேரடியாகத் தேசீய சர்க்காருக்கு உட்பட்ட ஓர் இலாகாவையும், எல்லா மாகாணங்களிலும் அதற்குக் கிளை ஸ்தாபனங்களையும் அமைத்தல் அவசியம்.

தற்காலம் விவரங்களைக் கணக்கிட்டுவரும் முறையையும் அடியோடு மாற்ற வேண்டும். கணக்கு விவரங்களில் சராசரி பார்க்கும் முறையில் பெரிய விபரீதங்கள் ஒருபுற மிருக்க, அது மிகுந்த ஏமாற்றமாகவும் போலியாகவும் இருக்கிறது என்பதை மட்டும் இங்கே குறிப்பிட வேண்டும். இதற்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம்:— தேசத்திலுள்ள 10 சதவிகிதத்தினரான ஒரு சிறு கூட்டத்தாருடைய வருமானங்களை மட்டும் அதிகப்படுத்திவிட்டு, ஒவ்வொரு நபருடைய சராசரி வருமானமும் உயர்ந்துவிட்டது என்று புள்ளி விவரங்களின் மூலம் நிரூபித்துவிட முடியும். ஆயினும் ஏழை மக்கள் எப்பொழுதும் போல் அஷ்டதரித்திரத்தில் ஆழ்ந்து தத்தளித்துக்கொண்டே யிருப்பார்கள். இது போலவே, இந்தியாவில் ஒவ்வொரு நபரும் சராசரியாக 16 கஜம் துணியை உபயோகிப்பதாகக் காட்டும் கணக்கும் அபத்தமானது, உண்மையை ஏளனம் செய்வதுமாகும். வருஷந்தோறும் சிறுபான்மையோர் நூற்றுக் கணக்கான கஜம் துணியை உபயோகிப்பதையும், பெரும்பான்மையோர்

*Bowley–Robertson Report.

நிர்வாணமாகவோ அரை நிர்வாணமாகவோ திரிவதையும் நாம் அறிவோம். ஆகவே நம் புள்ளி விவரங்கள் பிரத்தியட்ச நிலைமைகளோடு ஒட்டியும், பொருளாதார நிலைமைகளை நாம் உண்மையானபடி தெளிவாக உணர்ந்து கொள்ளும்படி காட்டுவனவாயும் இருக்க வேண்டும்.

இந்தியாவில் ஆராய்ச்சி வேலைக்குச் செய்திருக்கும் ஏற்பாடும் அறவே போதாது. உறுதியான அஸ்திவாரங்களின் மேல் ஜனசமூகம் முழுவதற்குமாக, விவசாயம், தொழில்கள், வர்த்தகம், போக்கு-வரத்து வசதிகள், பரிவர்த்தனை முறைகள், ஆரோக்கியம், கல்வி முதலியவைகளைப் பற்றி முறையாகவும் நுணுக்கமாகவும் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்து தரவேண்டும். ஆராய்ச்சி இலாகா நேரடியாகத் தேசீய சர்க்காரின் கீழே இருந்து வருவதுடன், பல மாகாணங்களிலும் அதற்குக் கிளைகளும் அமைக்க வேண்டும்.

# XII

## வர்த்தகமும் விநியோகமும்

### உள் நாட்டு வர்த்தகம்

தேசத்தில் ஆங்காங்குள்ள பிரதேசங்கள் தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் பொருளாதார அலகுகளாக அமைக்கப்படுவதால், வர்த்தகம் இன்றியமையாத ஒரு குறைந்த அளவுக்கு மட்டுமே தேவையாயிருக்கும். மொத்த உற்பத்தியில் அந்தந்த ஸ்தலங்களிலேயே எவ்வளவு கூடுதலாக உபயோகிக்க முடியுமோ அவ்வளவும் கிடைக்கும்படி உள்நாட்டு வர்த்தகம் நடத்தப்பட வேண்டும். இதனால் மத்தியிலுள்ள வியாபாரிகள் சுரண்டுவது நீங்கும்; விலைவாசிகளும் ஒரே நிலையாக நீடித்திருக்கும்; தேசத்தின் போக்கு-

வரத்துச் சாதனங்களுக்கும், பாங்கித் தொழிலுக்கும், நாணயச் செலாவணிக்கும் அதிகமான சிரமமில்லாதபடி செய்யலாம்.

சுய-நிறைவு பெற்ற அங்கங்களாக அமைக்கப்படும் பிரதேசத்தின் விஸ்தீரணம் ஒவ்வொரு பொருள் விஷயத்தில் ஒவ்வொரு விதமாக இருக்கும். சில பொருள்கள் விஷயத்தில், அல்லது சில வசதிகள் சம்பந்தமாக, ஒரு கிராமம் அல்லது தாலூகா சுய-நிறைவு பெற்ற அங்கமாக இருக்கும்; மற்றும் சில பொருள்கள் அல்லது வசதிகள் சம்பந்தமாக, ஒரு ஜில்லாவோ, மாகாணமோ அத்தகைய அங்கமாக இருக்கும். ஆயினும், சாதாரணமாய்ச் சுமாராகப் பெரிதாயுள்ள ஒரு கிராமம் அல்லது சுமார் 5-மைல் சுற்றளவிலுள்ள குக்கிராமங்கள் சேர்ந்த ஒரு தொகுதி, வாழ்க்கைக்கு அத்தியாவசியகமான உணவு, உடை, வீடு ஆகிய விஷயங்களைப் பொறுத்த மட்டிலாவது சுய-தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

இத்தகைய பொருளாதார அங்கங்கள் தற்போதுள்ள மாகாணங்களின் எல்லைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பதில்லை; இந்த எல்லைகள் யுக்திக்கே பொருத்தமில்லாமலும், எவ்வித முறையுமில்லாமலும் அமைக்கப்பட்டவை. பாஷ்வாரியாகவும் பொருளாதாரக் காரணங்களைக் கொண்டும் மாகாணங்களைப் பிரித்தமைக்க வேண்டும்.

பொருளாதார அங்கங்கள் பலவற்றிற்குள்ளும் கட்டுப்படுத்தப்பட்ட ஓரளவு வர்த்தகம் நடந்துவரும். இது முக்கியமாகக் கிராம-சமுதாயங்களின் கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டும், அவற்றின் மேற்பார்வையிலும் நடந்துவரும். அவைகளுடைய பரஸ்பர நன்மையைக் கருதியே இந்த உள்நாட்டு வர்த்தகம் நடைபெறும். இவ்வர்த்தகத்தை நடத்துவதற்குத் தனியார்களுக்கும் அதிகாரம் கொடுக்கலாம்; அப்படிக் கொடுப்பதில் விலைகள், அடையவேண்டிய லாப விகி

தங்கள், எந்தப் பிராந்தியங்களுக்குள் வர்த்தகம் நடத்தி வரவேண்டும் என்ற நிர்ணயம் ஆகிய விஷயங்களில் சர்க்காரே அதிகாரம் செலுத்த வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். ஒரு பிராந்தியத்திலுள்ள பொருள்தார அங்கம் எந்தச் சரக்குகள் அதனிடம் நிச்சயமாக மிஞ்சியிருக்கின்றனவோ அவைகளை, அல்லது அங்கு மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய அல்லது விளையக்கூடிய (வேறிடங்களில் உற்பத்தி செய்ய முடியாத) சரக்குகளை மட்டுமே ஏற்றுமதி செய்யலாம்; அதே போல, அதனால் உற்பத்தி செய்ய முடியாத, வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை மட்டுமே அது இறக்குமதி செய்துகொள்ளலாம். உதாரணமாக, துணி தயாரிப்பதற்கு அவசியமான பருத்தியை எல்லா இடங்களிலும் உற்பத்தி செய்ய முடியாது. ஆகையால், பருத்தி விளைவிக்கும் பிராந்தியங்கள் அது விளையாத பிராந்தியங்களுக்குப் பருத்தியை ஏற்றுமதி செய்வது அவசியம். தற்சமயம் வியாபாரத்திற்காகவே பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் பருத்தியைச் சாகுபடி செய்வது பற்றி மேற்கொண்டு ஆராய்ச்சிகளும் பரீட்சைகளும் செய்தால், தேசத்தின் மற்றப் பாகங்கள் பலவற்றிலும் அதைச் சாகுபடி செய்தல் சாத்தியமாகும்; பிராந்தியங்கள் கூடிய வரை சுய-நிறைவு பெறுவதற்குச் சாகுபடி செய்வதைப் பெருக்கவேண்டியது அவசியமாகிறது. 'சரக்குகளையும் ஜனங்களின் உழைப்பையும் பரிவர்த்தனை செய்து கொள்வதை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைக்க வேண்டும்; இதையே பொருள்தாரத் திட்டம் வகுப்பதன் நோக்கமாகக் கொள்ள வேண்டும்; அப்படியானால்தான் சமூகத்தின் சக்தி வீணில் விரயமாகாதபடி காத்துக்கொள்ள முடியும்.' * உற்பத்தியாளர் என்றும், உபயோகிப்பவர் என்றும் தொன்றுதொட்டே இருந்துவரும் பேதமும் படிப்படியாக மறையும். உற்பத்தி

---

* 'Principles of Planning'—by **K.T. Shah** — '**திட்டம் வகுக்கும் கொள்கைகள்**'—**கே. டி. ஷா; பக்கம் 80.**

யாளரே உபயோகிப்பவராகவும், உபயோகிப்பவரே உபத்தியாளராகவும் இருக்க முடியும்.

## விநியோகம்

ஒவ்வொரு ஸ்தலத்திலும் அல்லது பிராந்தியத்திலும் பொருள் உற்பத்தியும் உபயோகிப்பதும் சேர்ந்தாற் போல் நடைபெறும்படி செய்வதால், விநியோகம் செய்யும் பிரச்னை சுருக்கமாகிவிடுகிறது. குவியல் முறையில் அமைந்த ஓர் அபேதவாத அரசாங்கத்தில் விநியோக முறை தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பது போல் சுற்றாக அமைந்திருக்கும்; ஆனால் பரவலான குடிசைத் தொழில் முறையில் அந்த விநியோக முறை தேவையில்லை. உபயோகத்திற்குத் தக்க அளவில் உற்பத்தி, பட்சபாதமற்ற முறையில் தானாகவே நடைபெறும் விநியோகம் இவ்விரண்டும் இல்லாவிடில், தேசிய வருமானம் மிகவும் கூடிவிட்டது என்றாலும், அதனால் பணக்கார வகுப்பினரில் சிலர் மேலும் அதிகச் செல்வத்தைப் பெறுவதாகவே முடியும்.

சுய-நிறைவுள்ள சிறு சிறு பொருளாதார அங்கங்களாகப் பொருள் உற்பத்தி பரவல் முறையில் இருக்கவும், மூலாதாரத் தொழில்களையும், பொது நன்மைக்குரிய சௌகரியங்களையும் அரசாங்கமே சொந்தமாக வைத்துக் கொள்ளவும் இந்தத் திட்டத்தின்படி ஏற்பாடு செய்தால், மூலதனம் போட்டு லாபமடித்துவரும் முதலாளி வகுப்பிற்குத் தேசியப் பொருளாதார அமைப்பில் இடமேயில்லாமற் போகும். 'வட்டிகளும் லாபங்களும்' காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார இன்னல்கள் அநேகமாக மறைந்தொழியும். ஜனங்களின் வருமானங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகளும் குறையும்.

## நகரங்களின் நிலை

இந்தியாவில் கிராமாந்தர ஜனத்தொகையும் நகரங்களின் ஜனத்தொகையும் அமைந்திருக்கும் முறையைக்

கீழ்க்கண்ட புள்ளி விவரத்திலிருந்து தெரிந்துகொள்ள முடியும் :

| | 1941 | | 1931 | | சதவிகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஊர்கள் | ஜனத்தொகை கோடி | ஊர்கள் | ஜனத்தொகை கோடி | 1941 | 1931 |
| மொத்தம் ... | 6,58,595 | 38·90 | 6,66,924 | 33·81 | 100 | 100 |
| கிராமாந்தரங்கள் | 6,55,892 | 33·93 | 6,64,444 | 30·03 | 87 | 89 |
| நகர்ப்புறங்கள் ... | 2,703 | 4·97 | 2,480 | 3·74 | 13 | 11 |

ஆகவே மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 13 பேரே நகர்ப்புறங்களில் இருக்கின்றனர். 1941-ம் வருஷத்து ஜன சங்கியைப்படி லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள நகரங்கள் இந்தியாவில் சமார் 40-தான் இருந்தன. (மொத்த ஜனத் தொகையில் நகர ஜனத் தொகை மாகாணத்திற்கு மாகாணம் மிகவும் வித்தியாசப்படும்.) அஸ்ஸாம் மாகாணத்தில் மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 2·8 விகிதமே நகர்களிலுள்ளவர் தொகை, பம்பாய் மாகாணத்தில் 100-க்கு 26. இந்தியாவின் பெரிய மாகாணங்களில் பம்பாய் மாகாணந்தான் மிகவும் அதிகமாக நகர் - மயமாக விளங்குவது. இந்தக் கணக்கோடு வெளி நாடுகள் சிலவற்றின் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். பிரான்ஸில் நகர ஜனத் தொகை 100-க்கு 49, வட அயர்லாந்தில் 50·8, பிரிட்டனில் 80, யு. எஸ். ஏ. (அமெரிக்கா)யில் 56·2.*

நகர்ப்புறங்களில் அதிக ஜன நெருக்கத்தால் ஏற்படும் பிரச்னை நம் தேசத்தில் மிகவும் குறைவு. இந்திய

* 'Indian Year Book - இந்தியா பற்றிய வருஷாந்தரப் புத்தகம், 1943–1944.' ('டைம்ஸ் ஆப் இந்தியா' பிரசுரம்)

நகரங்களின் எதிர்காலத்தைப் பற்றி கீழ்க்கண்ட விஷயங்களை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்:

(அ) ஜன நெருக்கத்தையும், குவியல் முறையில் பொருள் உற்பத்தியையும் தவிர்க்க வேண்டும்; ஆகவே மேற்கொண்டு நகரங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதை ஆதரிக்கக் கூடாது.

(ஆ) ஆரோக்கியம், சுகாதாரம், பொழுது போக்குவதற்கு வசதிகள், கல்வி, வர்த்தகம், தொழில்கள் ஆகியவைகளைக் கவனித்து, 'அபிவிருத்தி டிரஸ்டுகள்' மூலம் திட்டம் வகுத்து, தற்போதைய நகரங்களைத் திருந்திய முறையில் அமைக்க வேண்டும்.

(இ) இப்பொழுதுள்ளது போல் பெருவாரியான தொழில்களையும், மூலாதாரத் தொழில்களையும் கூட நகரங்களில் சேர்ந்தாற் போல் அமைக்கக் கூடாது; பக்கத்துக் கிராமங்களில் அவைகளைப் பரவல் முறையில் பிரித்தமைக்க வேண்டும்.

(ஈ) அன்றாட உபயோகத்திற்கான பொருள்களில் கிராமங்களில் எளிதில் தயாரிக்கக் கூடியவைகளை நகரங்கள் உற்பத்தி செய்யும்படி அனுமதிக்கக் கூடாது. கிராமத் தொழில்களில் உற்பத்தியாகாத பொருள்களைத்தான் நகரத் தொழில்கள் உற்பத்தி செய்ய வேண்டும். நகரங்கள் முக்கியமாகக் கிராம உற்பத்திப் பொருள்களை விற்பதற்குரிய சந்தைகளாகவும் வினியோக ஸ்தலங்களாகவுமே இருக்க வேண்டும்.

(உ) கூடியவரை சுய-நிறைவு பெற்றிருக்க வேண்டும் என்ற கொள்கைப்படி பார்த்தாலும், நகரங்கள் தங்களுக்கு அவசியப்படும் பொருள்களுக்குப் பக்கத்துக் கிராமங்களை எதிர்பார்க்க வேண்டுமே யல்லாமல், தொலையிலுள்ள நகரங்களையும் மார்காணங்களையும் நம்பியிருக்கக் கூடாது. நகரங்களைச் சுய-நிறைவுள்ள பொருளாதார அங்கங்களாக அமைப்பதில், ஒவ்

வோர் அங்கமும் என்ன அளவில் இருக்க வேண்டும் என்ற விஷயம், அந்தந்த நகரத்தில் இப்போதுள்ள ஜனத் தொகையின் அளவைப் பொறுத்தது. பயிர்கள் தீய்ந்து போகும் பொழுதும், வெள்ளங்கள் முதலியவற்றால் சேதங்கள் ஏற்படும் பொழுதும், இந்தச் சிறிய பொருளாதார அங்கங்களைப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்.

ஆகவே இவை யெல்லாம் இப்பொழுதுள்ள முறையை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டும் என்பதையே வற்புறுத்தும். இப்பொழுது கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் பணம் போகிறது. இனி, இந்தத் திட்டப்படி, செல்வப் போக்கு நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு இருப்பப்படும்.

## வெளிநாட்டு வர்த்தகம்

திட்டம் வகுப்பதன் நோக்கம், கூடியவரை தேசம் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும் நிலையை அடைய வேண்டும் என்பதே. ஆகவே வெளிநாட்டு வர்த்தகம், பல நாடுகளிலும் தேவையானவை போக மிஞ்சியுள்ள பொருள்களைப் பரஸ்பர நன்மைக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்வதாகவே யிருக்கும். உள்நாட்டில் குறைவுபட்ட பொருள்களைப் பூர்த்தி செய்வதற்கும், நம் சமூகத்தின் உண்மையாக உணரப்பட்ட தேவைகளைத் திருப்தி செய்வதற்குமே இறக்குமதிகள் செய்யப்படும். தற்போதுள்ள வெளிநாட்டு வர்த்தக முறை பேராசையையும் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதால், ஏகாதிபத்திய வெறி தலைவிரித்தாடும்படி ஏற்படுகிறது; அது இரத்த வெள்ளம் பெருக்கும் யுத்தங்களில் வந்து முடிகிறது. இந்தத் திட்டப்படி இந்தியா பூலோகத்திலுள்ள வேறு எந்த மெலிந்த நாட்டையும் சுரண்டுவதற்கு உடந்தையாக இராது; தவிர, தன்னைப் பிற நாடுகள் சுரண்டுவதற்கும் இடம் கொடாது. அதே சமயத்தில், இந்தியா

வெளிநாட்டு வர்த்தகம் என்பதே கூடாது என்று ஒதுக்காது. உதாரணமாக், இங்கே தயாரிக்க முடியாது என்று ஏற்பட்டால், சில யந்திரங்களையும், மருந்துகளையும், சஸ்திர சிகிச்சைக்குரிய கருவிகளையும் இந்தியா (வெளிநாடுகளிலிருந்து) இறக்குமதி செய்யத் தயங்காது. அதேபோல, தான் மட்டுமே தயாரிக்கக்கூடிய பொருள்களை வேறு சில நாடுகள் கேட்டால், இந்தியா ஏற்றுமதி செய்ய மறுத்து அவைகளின் வேண்டுகோளை நிராகரித்து விடாது. இத்தகைய பரிவர்த்தனை இரண்டு கட்சிகளுக்கும் நன்மை புரியும், ஆதலால் இது விரும்பத் தக்கது. 'அந்நிய நாடுகளில் உற்பத்தியான சாமான்கள் அந்நியமானவை என்ற காரணத்தால் மட்டுமே அவைகளை ஒதுக்கிவிட்டு, ஒருவருடைய தேசத்தில் அந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய வசதிகள் இல்லாத நிலையிலும், அவைகளைத் தயாரிப்பதற்காகச் சமூகத்தின் நேரத்தையும் பணத்தையும் வீணாக்கிக்கொண்டேயிருந்தால், அது மகத்தான குற்றமாகும்; மேலும் அது சுதேசி இயக்கத்தின் தத்துவத்திற்கும் மாறுபாடாகும்.' * நம் சொந்த நாட்டில் எளிதாகத் தயாரிக்கக்கூடியனவாயும், ஏராளமான ஜனங்களுக்கு வேலை கொடுக்கக் கூடியனவாயுமுள்ள சில பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதும் மேற்சொன்னதைப் போலவே மகத்தான குற்றமாகும், அது அறிவீனமும்கூட. விவேகத்துடன் திட்டப்படுத்தும் உலகப் பொருளாதார அமைப்பில், மெலிந்த நாடுகளில் பொருள்களைக் கொண்டுபோய்த் திணித்தும், 'ஏகாதிபத்திய முறையில் விசேஷச் சலுகைகளை'ப் பெற்றும், சலுகைகளை நிறைவேற்ற ஏகாதிபத்திய வெறிகொண்டு கட்டாயப் படுத்தியும் பொருளாதாரக் கொள்ளை நடத்துவதற்கு இடமே இருக்கக் கூடாது.

உள் நாட்டு வர்த்தகத்திற்கு ஒரு நகரோ கிராம–சமுதாயமோ பிரதிநிதியாக இருப்பது போல், வெளி

---

* 'யங் இந்தியா'; 18-6-1931.

நாட்டு வர்த்தகத்திற்கு ஒரு தேசத்தின் சமூகமே பிரதிநிதியாக இருக்க வேண்டும். அதாவது, இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் தேசிய சர்க்காரின் ஆதிக்கத்தில், அதனாலேயே நடத்தப்பட்டுவரும் என்று இத்திட்டம் எதிர்பார்க்கிறது. தேசிய நலன்களைச் சொந்த நலன்களுக்கு மேலாக மதிக்க வேண்டும்; இந்த மனப்பான்மைக்கு முரணாகத் தனி வர்த்தகர்கள் கையில் அதை விட்டுவிடக் கூடாது.

சுங்கவரி யில்லாத 'சுயேச்சை வர்த்தக'க் கொள்கை இப்பொழுது மாண்டு மறைந்து போய்விட்டது. 'தன் உற்பத்திப் பொருள்களை நிர்க்கதியான ஜனங்களின் தலையில் கட்டிவிட்டுத் தனக்குத் தேவையானவைகள் வெளியிலிருந்து மிகவும் மலிவாகக் கிடைக்கவேண்டும் என்று விரும்பும் இங்கிலாந்துக்குச் "சுயேச்சை வர்த்தகம்" நன்மையாக இருக்கலாம். ஆனால் "சுயேச்சை வர்த்தகம்" இந்நாட்டின் குடிசைத் தொழிலை அழித்ததன் மூலம் இந்தியக் குடியானவர்களை அதோகதி யாக்கி விட்டது. மேலும், பாதுகாப்பில்லாமல் எந்தப் புதிய வர்த்தகமும் அந்நிய வர்த்தகத்துடன் போட்டியிட முடியாது.'* ஆகையால், இந்தியா சில சரக்குகளை இறக்குமதி யாகாமல் அறவே தடுத்துவிட வேண்டும், அல்லது அந்த அந்நியச் சரக்குகளுக்கு அதிக வரிகளை விதிக்க வேண்டும். 'இந்திய நலன்களுக்கும், ஆங்கில அல்லது ஐரோப்பிய நலன்களுக்கும் வேற்றுமை கற்பிக்கக் கூடாது என்று பேசுவது இந்தியாவின் அடிமைத் தனத்தை நீடித்திருக்கச் செய்வதாகும்.' ஒரு ராக்ஷசனுக்கும் குள்ள மனிதனுக்கும் இடையில் சமத்துவ உரிமைகள் என்றால் என்ன? சமபல மில்லாதவரிடையே சமத்துவத்தைப் பற்றி ஒருவர் யோசிப்பதற்கு முன்னால், அந்தக் குள்ளனை ராக்ஷசனுடைய வலிமைக்கு நிகராக உயர்த்த வேண்டியது அவசியம்.' †

* 'யங் இந்தியா'; 15-5-1924.
† 'யங் இந்தியா'; 26-3-1931.

# XIII

## உழைப்பாளர் நலன்கள்

விவசாயம், குடிசைத் தொழில்கள், பெருவாரியான உற்பத்தித் தொழில்கள், மூலாதாரத் தொழில்கள், பொது நன்மைக்குரிய சௌகரியங்கள் (ரயில், ரஸ்தா, தபால்-தந்தி முதலியவை) ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள உழைப்பாளருடைய நலன்களைக் கவனமாய்ப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கீழ்க்கண்ட விஷயங்கள் சம்பந்தமாகத் தக்க சட்டங்களை இயற்றி அமல் நடத்த வேண்டும்:

(அ) வாழ்க்கை நடத்தப் போதுமான கூலி அல்லது சம்பளம்.*

(ஆ) வேலை செய்வதில் ஆரோக்கியத்திற்கு அனுகூலமான நிலைமைகள்.

(இ) இவ்வளவுக்கு அதிகமாக இருக்கலாகாது என்று குறிப்பிட்ட அளவு வேலை நேரம்.

(ஈ) உழைப்பாளருக்கும் அவர்களை வேலைக்கு வைத்திருப்பவர்களுக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கத் தக்க மத்தியஸ்த சபைகளை நியமித்தல்.

(உ) வயோதிகம், நோய் நோக்காடு, தற்செயலாக ஏற்படும் ஆபத்து, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றால் ஏற்படும் பொருளாதாரக் கஷ்டங்களிலிருந்து உழைப்பாளருக்குப் பாதுகாப்பளித்தல். உழைப்பாளரிடமும் தொழில் ஸ்தாபனத்திடமும் சந்தா வசூலித்து அதைப் பாது

---

* ஆங்கிலத்தில் இது 'living wage' என்று சொல்லப்படும்: உழைப்பாளனும் அவன் குடும்பமும் தேவையான பொருள்களில் தட்டில்லாமல் வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான வருமானம் இருக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

கர்ப்பு நிதியாக அமைக்கும் 'இன்ஷூரன்ஸ்' முறையின் தத்துவத்தைப் பின்பற்றலாம்.

ஜீவாதார உரிமைகளைப் பற்றிக் காங்கிரஸ் செய்திருக்கும் தீர்மானப்படி, சர்க்கார் கீழ்க்கண்டவைகளைத் தன் பொதுக் கொள்கையாக அனுஷ்டிக்க வேண்டும் :

1. அடிமைத்தனத்திலிருந்தும், அதற்கு நிகரான பந்தனங்களிலிருந்தும் உழைப்பாளரை விடுவிக்க வேண்டும்.
2. உழைப்பாளரில் பெண்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்தல்; முக்கியமாகப் பிரசவ காலத்தில் போதுமான ரஜா (ஓய்வு) கிடைக்கும்படியான ஏற்பாடு.
3. பள்ளிக்குப் போகவேண்டிய வயதின்ரான குழந்தைகளைச் சுரங்கங்களிலோ தொழிற்சாலைகளிலோ வேலைக்கு அமர்த்தக் கூடாது.
4. குடியானவர்களும் தொழிலாளர்களும் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளச் சங்கங்கள் அமைக்கும் உரிமை இருக்க வேண்டும்.

உழைப்பாளர் நலன்களைப் பாதுகாப்பது சம்பந்தமாயும், தொழிலாளர் சங்கங்களாகிய 'டிரேட் யூனியன்'கள் சம்பந்தமாயும், காந்தீய முறையில் கிரியாம்சையில் எப்படி வேலை செய்யலாம் என்பதற்கு ஆமதாபாத்திலுள்ள நெசவாலைத் தொழிலாளர் சங்கம் சாதித்துள்ள வேலையைக் கவனமாக ஆராய்தல் நலமாகும்.

# XIV

## ஜனத்தொகைப் பிரச்னே

மற்றும் பல நாடுகளைப் போல் இந்தியாவும் ஜனத்தொகைப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்கிறது ; இதை

மறுக்கவேண்டிய அவசியமில்லை. ஆயினும், இந்திய அரசியல்வாதிகளும் பொருளாதார நிபுணர்களும், வெளி நாட்டு அரசியல்வாதிகளையும் பொருளாதார நிபுணர்களையும் போலவே இந்தப் பிரச்னையின் முக்கியத்தைத் தேவைக்கு மேல் பிரமாதமாக வற்புறுத்தி யிருக்கிறார்கள். இந்த நாட்டில் ஜனத்தொகை அளவுக்கு அதிகமாகப் பெருகியதே வங்காளப் பஞ்சத்திற்கு முக்கியமான காரணம் என்று ஸ்ரீ. ஏமெரி வியாக்கியானம் செய்திருக்கிறார். இந்தியாவில் ஜனத்தொகை பெருகுவதன் வேகம் 'உலகத்தில் எங்குமே இல்லாத அளவுக்கு உயர்ந்து விட்டது' என்று இப்பொழுது ஸ்ரீ. சர்ச்சிலும் அறைந்து கூறுகிறார். கீழே காட்டியுள்ள புள்ளி விவரங்களிலிருந்து இந்தக் கூற்றுக்கள் தவறானவை என்பது புலனாகும்:*

1881 முதல் 1931 வரை
ஜனத்தொகை வளர்ச்சியின் சத விகிதங்கள்

| | |
|---|---|
| பிரிட்டன் (இங்கிலாந்தும் வேல்ஸும்) | ... 50 |
| ஹாலந்து | ... 90 |
| ஆஸ்டிரேலியா | ... 166 |
| நியூஜீலந்து | ... 172 |
| ஜப்பான் | ... 74 |
| யு. எஸ். ஏ. | ... 186 |
| இந்தியா (பர்மா நீங்கலாக) | ... 35 |

யு. எஸ். ஏ., ஆஸ்டிரேலியா, நியூஜீலந்து போன்ற சில நாடுகளில் ஜனத்தொகை அதிகரித்திருப்பதற்குப் புதிதாக ஜனங்கள் குடியேறியிருப்பது ஒரு காரணமாகும் என்பதை இங்கே குறிப்பிட வேண்டியது அவசியம். எது எப்படி யிருப்பினும், அசாதாரணமான ஜனத்தொகைப் பெருக்கத்தைப் பற்றிய பிரச்னை எதுவும் இந்தியா

* 'The Measurement of Population Growth'—by R. R. Kueznski - 'ஜனத்தொகை வளர்ச்சியின் அளவு'—ஆர். ஆர். குவெஷன்ஸ்கி.

சம்பந்தப்பட்டவரை எழவில்லை என்பது தெளிவா யிருக்கிறது.

பொருளாதாரத் திட்டம் வகுப்பதில் ஜனங்களின் எண்ணிக்கையை ஓரளவு கட்டுப்படுத்துவது அவசியந் தான். இதற்காக மேலை நாடுகளில் கர்ப்பத் தடைக்குச் செயற்கை முறைகள் சர்வ சாதாரணமாகக் கையாளப் படுகின்றன. ஆனால் இயற்கைக்கு மாறுபாட்டான இத் தகைய முறைகளைப்பற்றி காந்திஜி கொண்டுள்ள அபிப் பிராயம் பலரும் அறிந்த விஷயந்தான். கர்ப்பத் தடை அவருக்குப் 'பயங்கரமான பாதாளப் படுகுழியாக' இருக் கிறது. 'செயற்கை முறைகளால் கர்ப்பத்தடை செய்தல் சில சந்தர்ப்பங்களில் நியாயமாகும் என்றே வைத்துக் கொண்டாலும், கோடிக் கணக்கான மக்களிடையே நடை முறையில் அது அறவே சாத்தியமா யிராது என்றே தோன்றுகிறது. கருத்தடை முறைகளால் கட்டுப்படுத்து வதைவிடப் புலனடக்கத்தால் ஜனத்தொகை அதிகரிப் பைக் கட்டுப்படுத்தும்படி அவர்களைத் தூண்டுவது எளிதான முறை என்று எனக்குத் தோன்றுகிறது.'

'செயற்கை முறைகள் தீயொழுக்கத்திற்கு ஊக்க மளிப்பது போல் ஆகின்றன. அவை ஆடவரையும் பெண் டிரையும் முறையில்லாமல் கண்டபடி நடக்கச் செய் கின்றன. செயற்கை முறைகளைக் கையாளுவதால் பல வீனமும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டே தீரும். எனவே நோயைப் பார்க்கிலும் சிகிச்சை படுமோசமா யிருக்கும்.'*

இந்தியாவின் ஜனத் தொகை அசாதாரணமாகப் பெருகிவிடாமல் தடை செய்வதற்கு, பொதுஜனங்கள் புலனடக்கத்தைக் கைக்கொள்ளும்படியும் இன்ப நுகர்ச் சியில் மிதமாக நடந்துகொள்ளும்படியும் போதிப்பது தான் காரிய சாத்தியமான விரும்பத் தக்க முறை. ஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இப்பொழுதுள்ள பெருக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தும்.

---

* 'Self - Restraint vs. Self - Indulgence' — by M. K. Gandhi – 'புலனடக்கமும் புலன்களின் போகமும்' - மோ. க. காந்தி; பக்கம் 51.

# XV

## நிதி நிர்வாகம், வரிவிதித்தல், நாணயச் செலாவணி

நிதி நிர்வாகத்திலும் வரி விதிப்பிலும் இப்போதுள்ள ஏற்பாடு அபாரச் செலவுள்ளதாயும், பாரபட்சமுள்ளதாயும் இருக்கிறது; ஆதலால் அதை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டும்.

சென்ற முப்பது வருஷங்களில் இந்தியாவில் சர்க்காரின் செலவு குறிப்பிடத் தக்க அளவு கூடியிருக்கிறது. செலவு கூடுவதைப்பற்றிக் காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே கூறியிருப்பது பொருத்தமாகும்:

> 'சர்க்காரின் செலவு கூடுவதால் வருத்தமோ பயமோ கொள்ளவேண்டிய அவசியமில்லை. எந்தக் காரியங்களுக்காகக் கூட்டப்படுகிறது என்பதையும், பொதுப் பணத்தை அப்படிச் செலவிடுவதால் ஏற்படும் பயன்கள் என்ன என்பதையும் பொறுத்தே இந்த விஷயத்தின் தாரதரங்களை நிர்ணயிக்க வேண்டும்.'

ரமேச சந்திர தத்தர் எழுதியிருப்பதாவது:

> 'வளம் பெருக்கும் மழையாகப் பூமிக்கே திரும்பக் கொடுப்பதற்காகச் சூரியன் பூமியிலுள்ள ஈரத்தை உறிஞ்சுவதைப் போன்றது அரசன் வசூலிக்கும் வரியும்......இப்பொழுது இந்திய நிலத்திலிருந்து உறிஞ்சப்படும் ஈரமெல்லாம், இந்தியா நீங்கலாகப் பெரும்பாலும் வேறு நாடுகளில் வளம் பெருக்கும் மழையாக வருஷிக்கப்படுகிறது.'*

இந்நாட்டின் சர்க்கார் நிதி நிர்வாகம், வரிவிதிப்பு சம்பந்தமான பலவேறு 'பிரச்னைகளையும் ஆராய்வ

---

* 'Economic History of India under British Rule - பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியாவின் பொருளாதாரச் சரித்திரம்.'

தற்கு இந்தச் சிறு நூலில் இடமில்லை. எனினும், மேற் கண்ட விஷயங்களை மட்டும் இங்கே முக்கியமாகக் குறிப் பிடுவது அவசியம்:

(அ) வரிவிதிப்புக் கொள்கை ஜனங்களைப் பாதிப்ப தில் ஏற்றத் தாழ்வில்லாமல் நீதியாக இருக்க வேண்டும்; ஏழையின்மீது முறையில்லாமல் பாரமான வரியை விதிக்கக் கூடாது.

(ஆ) இந்த நோக்கத்தைக் கொண்டு, நேர்முகமாக வசூலிக்கும் வருமான வரி, அமிதலாப வரி முதலிய வரிகளில் தரந்தரமாக அமைத்திருக் கும் விகிதங்களை இன்னும் அதிகமாகக் கூட்ட வேண்டும். (வருமானம் அதிகமாக அதிகமாக, வரி விகிதம் விருவிரென்று உயர வேண்டும்.)

(இ) உப்பு வரியை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.

(ஈ) லாகிரி வஸ்துக்களின்மீதுள்ள கலால் வரிகளி லிருந்து கிடைக்கும் வருமானத்தையும் தொலைக்க வேண்டும். வைத்திய உபயோகத் திற்கு அனுமதிப்பது தவிர, லாகிரி வஸ்துக் களையும் மதுவர்க்கங்களையும் அறவே தடுத்து விடவேண்டும்.

(உ) விவசாய வருமானங்களில் நியாயமான ஓர் அளவுக்கு மேற்பட்டவைகளுக்கு, வருமான மிகுதிக்குத் தக்கபடி படிப்படியாகக் கூடிவரும் முறையில் வரி விதிக்க வேண்டும்.

(ஊ) குறைந்தபட்சமான ஓர் அளவுக்கு மேலுள்ள சொத்துக்களின்மீது மரண வரிகள் அல்லது வாரிசு வரிகளைப் படிப்படியாகக் கூடிவரும் முறையில் விதிக்க வேண்டும்.

(எ) ஏழைக் குடியானவர்களுடைய கஷ்டங்களைக் கூடியமட்டிலும் பரிகரிப்பதற்காக, இப்பொழு துள்ள விவசாய வரியையும் மேல்வார விகிதத் தையும் தக்க அளவு குறைத்துவிட வேண்டும்.

லாபகரமா யில்லாத நிலங்களுக்கு மேல்வாரமே இல்லாமற் செய்யவேண்டும்.

(ஏ) விளைந்த தானியத்தையே வரியாகக் கட்டும் பழைய முறை, முக்கியமாகக் கிராமாந்தரங்களில், மீண்டும் அமலுக்கு வருவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

(ஐ) ராணுவச் செலவை ஒரே அடியாகக் குறைத்து, இப்பொழுதுள்ளதில் பாதியளவுக்காவது கொண்டுவந்துவிட வேண்டும்.

(ஒ) ஆரோக்கியம், கல்வி, ஆராய்ச்சி முதலிய பொது ஜன சௌகரியத்திற்கான காரியங்களுக்குச் செலவை அதிகப்படுத்த வேண்டும்.

(ஓ) 'ஸிவில் ஸெர்விஸ்' இலாகாக்களில்* சம்பளங்களுக்காக ஏற்படும் செலவை அதிகமாய்க் குறைக்க வேண்டும். விசேஷமாக நியமிக்கப்படும் நிபுணர்கள் முதலிய சிலரைத் தவிர, சர்க்கார் ஊழியர்களில் எவருக்கும் நிர்ணயமாகக் குறிப்பிட்ட ஒரு தொகைக்கு மேல் சம்பளம் இருக்கக் கூடாது; அந்தத் தொகை சாதாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 500-க்குக் கூடுதலாக இருக்கக் கூடாது.

இது சம்பந்தமாக, வெளி நாடுகள் பலவற்றில், சில முக்கியமான உத்தியோகங்களுக்கு அளிக்கப்படும் கீழ்க்கண்ட சம்பள விகிதங்களை ஆராய்வது நலம்:†

| | | வருஷத்திற்கு (£=பவுன்) |
|---|---|---|
| பிரிட்டிஷ் பிரதம மந்திரி | ... | £ 8,000 |
| பிரிட்டிஷ் (சாதாரண) மந்திரி | ... | £ 5,000 |
| யு. எஸ். ஏ. ஜனதிபதி | ... | £ 15,000 |
| யு. எஸ். ஏ. மந்திரி | ... | £ 3,000 |

* சாதாரண உத்தியோக வர்க்கம்.

† 'ஹரிஜன்'; 21-8-1937.

| | | |
|---|---|---|
| இந்திய கவர்னர்-ஜெனரல் (சம்பளம் £ 20,000-த்துடன் அலவன்ஸுகள் சேர்த்து) | ... | £1,30,000 |
| கனடிய கவர்னர்-ஜெனரல் | ... | £ 10,000 |
| ஆஸ்டிரேலிய கவர்னர்-ஜெனரல் | ... | £ 8,000 |
| தென் ஆப்பிரிக்க கவர்னர்-ஜெனரல் | | £ 10,000 |
| இந்திய மாகாண கவர்னர் (£ 6,000-லிருந்து £ 10,000 வரை வேறுபட்டிருக்கும்) | ... | £ 10,000 |
| யு. எஸ். ஏ. அரசாங்க கவர்னர் (£ 1,000-லிருந்து £ 5,000 வரை வேறுபட்டிருக்கும்) | ... | £ 5,000 |

## நாணயச் செலாவணி

நாணயச் செலாவணி முறையை அடியோடு மாற்றியமைத்தல் அவசியம். ரொக்கப் பணம் அல்லது பாங்கியில் சேமித்துள்ள பணம் இருப்போருக்கே இப்போது பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் இருக்கிறது. இந்த முறை ஒழியும் வண்ணம், சர்க்கார் நம் தேசிய நாணயச் செலாவணியை 'நிர்வகித்து' வரவேண்டும். சரக்குகளைப் பரிவர்த்தனை செய்வதற்கு நாணயம் ஓர் உபகரணமாகவே ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது நாணயம், தானே மிக முக்கியமான 'சரக்காக' மாறிவிட்டது; ஜனங்களின் சாந்தியையும் சந்துஷ்டியையும் குலைப்பதற்கு இதைத் தவிர வேறெதுவும் தேவையில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டது. தற்போதைய நாணயச் செலாவணியும், ராஜாங்க நிதி நிர்வாகமும் அமைந்துள்ள முறை எளிதில் புரிந்து கொள்ள முடியாதபடி சிக்கலான பல அம்சங்களைக் கொண்டிருக்கிறது. சீமையிலுள்ள பாங்க் ஆப் இங்கிலாந்து என்ற தலைமையான பாங்கியின் கவர்னரே, 'எனக்கு அது புரியவில்லை' என்று சொல்வதிலிருந்து, நாணயச் செலாவணி முறை எவ்வளவு தூரம் யாருக்கும் புரியாத மர்மமாக இருக்கிறது என்பதை நாம் உணரலாம். அறிவைத் திகைக்கச் செய்யும் இத்தகைய

மாய முறையைச் சாதாரண மனிதன் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்க வேண்டியிருக்கிறது. ஒரு குடியானவன் வருஷந்தோறும் ஒரே அளவுள்ள தானியத்தை விளைவித்து வந்தாலும், அவனுடைய செயலுக்குள் அடங்காத விலை மாற்றங்களும், நாணயச் செலாவணியின் 'வீக்கமும்' 'வற்றமும்' அவனை என்ன கதிக்கு உள்ளாக்கினாலும், அதற்கு அடங்கிக்கிடக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே நாணயச் செலாவணியைச் சிக்கலில்லாமல் மிகவும் எளிதாகவும், புத்திக்குப் பொருத்தமான முறையிலும் அமைக்க வேண்டும். சர்க்கார் அல்லது ஜனப் பிரதிநிதிகள் நாணயச் செலாவணியை முறைப்படுத்தி நிர்வகித்து வரும்பொழுது, பெரிய முதலாளிகளும் ஸ்டாக்-புரோக்கர்களும் * அதைத் துர்விநியோகம் செய்து கொள்ள இடம் கொடுக்கக் கூடாது. ஏற்றுமதி இறக்குமதிகளையும், வெளிநாடுகள் சம்பந்தமான பாங்கித் தொழிலையும் சர்க்கார் கட்டுப்படுத்தித் தன் ஆதீனத்தில் வைத்திருக்கும்; உள்நாட்டு வர்த்தகத்தின் அளவுக்குத் தக்கபடி நாணயச் செலாவணியைச் சர்க்காரே விரிவுபடுத்தியும் குறைத்தும் வரும். இம்மாதிரியாக உள்நாட்டு விலைவாசிகள் ஒரே நிலையாக இருக்கும்படி செய்யப்படும். ஸோவியத் ரூபிள் நோட்டுகளைப் போல, இந்திய நாணயச் செலாவணியும் சாமான் வாங்குவோர்களின் சகல வரவு செலவுகளிலும் ஒரு நிர்ணயமுள்ள முறையில் பயன்படுமாறு அமைக்கப்பட வேண்டும். பார்ஸல், கடிதம் எதற்காயினும், எவ்வளவு தூரத்திற்காயினும், ஒரே விகிதமும் ஒரே விதமான ஸ்டாம்பு முறையும் இருப்பது போலவே நாணயச் செலாவணியும் இருக்க வேண்டும்.†

---

*Stock-brokers—நாணயத்திற்கு ஈடாகவுள்ள சர்க்காரின் கடன் பத்திரங்களையும், கம்பெனிகளின் பங்குகளையும் வாங்கி-விற்றுக் கொடுக்கும் தரகர்கள்.

† வெப் தம்பதிகள் எழுதிய 'ஸோவியத் கம்யூனிஸம்.'

வெளிநாட்டு வர்த்தகம் தீராத அளவுக்குக் குறைக்கப்படுவதால், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகளும், வெளிநாட்டு விலைவாசிகளின் மாற்றங்களும் உள்நாட்டு நாணயச் செலாவணியை அதிகமாய்ப் பாதிக்க மாட்டா. வெளிநாட்டு வர்த்தகம் ஆதியில் இருந்தது போல், பரிவர்த்தனை முறைக்கு மாற்றப்பட வேண்டும்: அதாவது, இறக்குமதியாகும் சரக்குகளின் அளவுக்கு ஈடாக இங்குள்ள சரக்குகளை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

கிராமாந்தரங்களை அடிப்படையாக் கொண்ட தேசியப் பொருளாதார அமைப்பில் பரிவர்த்தனை முறையை மீண்டும் ஏற்படுத்துவதன் மூலம் உள்நாட்டு நாணயச் செலாவணியும் குறைந்த அளவுக்கு மாறி விடும். நிலங்களுக்கு மேல்வாரக் குத்தகையும் வரியும் விளைந்த பொருளாகவே கொடுப்பதிலுள்ள நன்மைகள் முன்னால் 'நில அனுபோகம்' பற்றிக் கூறுமிடத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. கிராமத் தொள்ளாளிகள், உபாத்தியாயர்கள், வைத்தியர்கள், சர்க்கார் சிப்பந்திகள், ஆகியோருக்கும் தானியங்களையே சம்பளமாகக் கொடுத்துவிடலாம்; இப்பொழுதும் பெரும்பாலான கிராமங்களில் அப்படியே செய்யப்பட்டு வருகிறது. கிராமவாசிக்குத் தேவையான உணவுப் பொருள்கள், துணி, பால் முதலிய பொருள்கள் இவ்வளவு இவ்வளவு கிடைக்கும் என்று குறிப்பிடுவதான ஒருவகைச் செலாவணி முறையை அமைக்கலாம். (உதாரணமாக—ஒரு ரூபாய் என்றால் அதைக் கொண்டு என்னென்ன பொருள்கள் வாங்கலாம் என்பதுபற்றி நிர்ணயமில்லை. ஒரு ரூபாயின் மதிப்பு என்னவென்றால் 16 அணா என்று தான் சொல்ல முடிகிறது. அவ்வாறில்லாமல், ஒரு ரூபாய் என்பது 4-படி அரிசி, அல்லது 4-கஜம் துணி, அல்லது 5-படி பால் என்று இருக்கலாம்.) இவ்வளவு தானியம் இவ்வளவு ஜவுளிக்கு அல்லது இதர பொருள்களுக்கு ஈடாகும் என்பதை அறியக்கூடிய ஒரு பட்டியல் விவரம் மட்டும் கிராமவாசியிடம் இருந்தால் போது

மானது. அவன் அவனிடமுள்ள விளைபொருள்களைக் கொண்டு வேண்டியதை வாங்கிக்கொள்வான். இது சம்பந்தமாக, வர்தா அருகிலுள்ள கோபுரியில் (நாணயத்திற்குப் பதிலாக) நூலைப் பரிவர்த்தனைக்குரிய பொருள்களைக் கொண்டு பரீட்சை செய்யப்பட்டதை ஆராய்வது நலமாகும்.*

# XVI

## ஆட்சி முறை

இந்தத் திட்டத்தின் அடிப்படை, உற்பத்தியைப் பரவல் முறையில் அமைத்தலே என்பது முன்னரே வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அவசியத்தை உத்தேசித்து இந்தத் தத்துவமே ஆட்சிமுறைக்கும் பொருந்தும்.

ஆட்சி முறையில் மிகச் சிறிய அளவிலுள்ள அங்கம் கிராமப் பஞ்சாயத்து; உள்ளூர் விஷயங்களில் சாத்தியமான அளவு அதற்குச் சுதந்திரம் இருந்துவரும். சில கிராமங்கள், சுமாராக 10 என்று வைத்துக்கொள்வோம், சேர்ந்து ஆட்சி முறையில் அடுத்த அங்கமாக விளங்கும்; அதைக் 'கிராமத் தொகுதிச் சங்கம்' அல்லது 'கிராம சங்கப் பஞ்சாயத்து' என்று அழைக்கலாம். இத்தகைய கிராமத் தொகுதிச் சங்கங்கள் பல சேர்ந்து ஆட்சிமுறையின் அடுத்த உயர்ந்த படியான அங்கமாக விளங்கும்: இது தற்போதைய தாலூகாவுக்கு ஈடாகும். பிறகு, அநேகம் தாலூகாக்களைச் சேர்த்து ஜில்லாச் சங்கங்கள் இருக்கும். நகரங்களுக்கு நகர சபைகள் இருக்கும். ஜில்லாச் சங்கங்களுக்கும் நகர சபைகளுக்கும் மேலே 'டிவிஷன்' சங்கங்களும், மாகாணச் சட்டசபைகளும் இருக்கும். மாகாணச் சட்டசபைகள் மத்திய சட்டசபைக்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைக்கும்; மத்திய சட்டசபையே தேசம் முழுவதற்கும் ஆட்சி முறையின் தலைமையான அங்கமாகவும், சட்ட மியற்றும் சபையாகவும் இருக்கும். தேர்தல்கள் சம்பந்தமாக,

* 'ஹரிஜன்'; 22-3-1942.

கிராமப் பஞ்சாயத்துகளில் வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை இருக்கும்; நேர்முகமாக ஜனங்கள் கூடித் தேர்தலை நடத்துவார்கள். ஆனால் மேலேயுள்ள சபைகளுக்கு மறைமுகமான தேர்தல் நடைபெறும்: அதாவது, ஒவ்வொரு கீழ்ச் சபையும் தனக்கு அடுத்தாற்போல் மேலுள்ள சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும். தாலூகா, ஜில்லா, 'டிவிஷன்', மாகாண, அகில இந்தியச் சபைகளோடு கிராமப் பஞ்சாயத்து இணைக்கப்பட்ட போதிலும், கிராமப் பஞ்சாயத்தே தேசீய ஆட்சி முறையின் அடிப்படை அங்கமாக விளங்கும்.

இந்தப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக, ஒரு மத்திய தேசீயத் திட்டக் கமிட்டியும், அதற்கு மாகாணங்களில் கிளை ஸ்தாபனங்களும் ஏற்பட்டபோதிலும், உயர்ந்த அளவு சுதந்திரத்துடன் கூடிய கிராம—சமுதாயங்களைப் புனருத்தாரணம் செய்வதே மிகவும் முக்கியமாக வற்புறுத்தப்படும்.

இனி ஏற்படுத்தவேண்டிய ஆட்சிமுறைக்கு இதுவரை கூறியுள்ள விவரம் மேலெழுந்தவாரியான வடிவத்தை மட்டுமே குறிக்கும். தேசத்திற்கு வேண்டிய அரசியலின் விரிவான அம்சங்களையெல்லாம் சிறு அளவிலுள்ள இந்நூலில் நிர்ணயித்துக் கூறவேண்டிய அவசியமில்லை.

# XVII

## வரவு செலவுத் திட்டம்

இதுவரை அடிப்படையான தத்துவங்களும், பொதுவான கொள்கை பற்றிய சில முக்கிய அம்சங்களுமே விவரித்து விளக்கப்பட்டிருக்கின்றன. இனி இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ள பண சம்பந்தமான விஷயங்களை ஆராய்தல் அவசியம்: அதாவது, மொத்த

முதலீட்டுச் செலவுகளையும், அவ்வப்பொழுது ஏற்பட்டுக் கொண்டே வரும் நடப்புச் செலவுகளையும்,* இவற்றிற்கான வருவாய் ஆஸ்பதங்களையும் உத்தேசமாக மதிப்பிட்டுக் கவனிக்க வேண்டும். இப் பகுதியில் குறிப்பிட்டுள்ள மதிப்புகள் எல்லாம் யுத்தத்திற்கு முந்திய விலைவாசிகளை அனுசரித்தவை.

## செலவு இனங்கள்

(அ) விவசாயம்—முதலில் விவசாயத்தை எடுத்துக் கொள்வோம். நிலங்களைத் தேசீயப் பொதுவர்க்குவதில் தனிப்பட்டவர்களிடமிருந்து நிலங்களைப் பெறுவதற்கு ஈடாக, அந்நிலங்களின் வருஷாந்தர மேல்வாரத்தைப் போல் 10 மடங்கு வீதம் கொடுப்பதற்கு, சுமார் ரூ 200 கோடி தேவைப்படும்.† சுமார் 17 கோடி ஏக்கர் விஸ்தீரணமுள்ள கழிவு நத்தங்களை விவசாயத்திற்கு லாயக்காகச் செய்வதற்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் மொத்த முதலீடாகச் சுமார் ரூ. 350 கோடி தேவைப்படும். நிலங்களின் சத்து-மண் மழையாலும் ஓடை நீராலும் கரைந்து போவதைத் தடுப்பதற்கு ரூ: 100 கோடி போதும். இந்தக் கடைசி இரண்டு இனங்களில் ஒவ்வொன்றுக்கும் வருஷா வருஷம் நடப்புச் செலவு சுமார் ரூ. 5 கோடியாகும்.

1938-39-ல் தற்போதுள்ள கால்வாய்களுக்காக அதுவரை ஏற்பட்டிருந்த முதலீட்டுச் செலவு ரூ. 153 கோடி. தற்போதுள்ள நீர்ப்பாசன வசதிகளை இரட்டிப்பாக்குவது என்று வைத்துக்கொண்டால், அந்த வேலைக்காக ரூ. 150 கோடி தேவையிருக்கும். கிணறுகள், குளங்கள்

---

* capital expenditure, non-recurring expenditure என்பவை முதலீட்டுச் செலவு என்றும், recurring expenditure என்பது, விவரமாகச் சொல்லப்படாத இடங்களில், சுருக்கமாக நடப்புச் செலவு, அல்லது வருஷாந்தரச் செலவு என்றும், capital என்பது மூலதனம் என்றும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன.

† 'திட்டம் வகுக்கும் கொள்கைகள்' – கே. டி. ஷா; பக்கம் 87.

முதலியவை அமைப்பதற்குச் சுமார் ரூ. 25 கோடி கூடுதலாகத் தேவையிருக்கும். இவைகளுக்கு வருஷந்தோறும் ஏற்படும் செலவு ரூ. 5 கோடியாகும். 10 வருஷகாலத்திற்குப் பரீட்சார்த்தமாக நடத்தும் விவசாயப் பண்ணைகளுக்குச் சுமார் ரூ. 100 கோடி செலவழிக்கலாம்; இந்தப் பண்ணைகளே கிராம ஜனங்களுக்கு மாதிரிப் பண்ணைகளாகவும் உதவிபுரியும். இவைகளிலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வருமானத்தையும் கணக்கில் சேர்த்துப் பார்த்தால், இந்தப் பண்ணைகளுக்காக வருஷந்தோறும் செலவிட வேண்டிய தொகை உத்தேசமாக ரூ. 25 கோடியாகும்.

குடியானவர்கள் நல்ல கருவிகளை வாங்கிக்கொள்ளவும், கால்நடைகளை அபிவிருத்தி செய்யவும், விவசாயத்தில் முன்னேற்றமான இதர முறைகளைக் கையாளவும் உதவியாக இருக்கும்படி, சர்க்கார் அதிக வட்டியில்லாமல் அவர்களுக்குக் கடன் கிடைக்க வசதிகள் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ. 4,000 வீதம், விவசாய அபிவிருத்திக்குத் தேவையான முதலீடு சுமார் ரூ. 250 கோடி. இந்தச் செலவு திரும்பத் திரும்ப ஏற்படுவதன்று; இதை 20 வருஷத்தில் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே, இந்தத் திட்டத்தின் கால அளவில் (10 வருஷத்தில்) விவசாயத்திற்குக் கீழ்க்கண்ட அளவில் மூலதனம் தேவைப்படும்:

(கோடிக்கணக்கான ரூபாய்)

| | முதலீட்டுச் செலவு | வருஷாந்தர நடப்புச் செலவு |
|---|---|---|
| நிலங்களைத் தேசீயப் பொதுவாக்கல் | 200 | ... |
| கழிவு நிலத்தைப் பண்படுத்தல் | 350 | 5 |
| சத்து-மண் கரைந்துபோகாமல் காத்தல் | 100 | 5 |
| நீர்ப்பாசன வசதிகள் | 175 | 5 |
| பரீட்சார்த்தப் பண்ணைகள் | 100 | 25 |
| கடன் வசதிகள் | 250 | ... |
| மொத்தம் | 1,175 | 40 |

இந்தச் செலவால், 10 வருஷ காலத்தில் விவசாய வருமானம் இரட்டிப்பாருமென்று உத்தேசிக்கப்படுகிறது.

**(ஆ) கிராமாந்தரத் தொழில்கள்** – குறைந்த வட்டியில் கடன் வசதியே கிராமாந்தரத் தொழில்களின் மிகப் பெரிய தேவை. விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்களையும் இதர குடிசைத் தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ. 5,000 தேவைப்படும் என்று உத்தேசிக்கப் படுகிறது. இந்தத் தொகை, 20 வருஷங்களில் திரும்ப அடைக்கப்பட வேண்டுமென்று நீண்டகாலக் கடனுக்க் கிராமப் பஞ்சாயத்துகள் அல்லது கூட்டுறவு - பாங்கிகளிடம் கொடுக்கப்படும். ஆகவே, கிராமாந்தரத் தொழில்களுக்கு இத்தகைய வசதிகள் செய்வதற்கு மொத்தமாக ஏற்படும் செலவு ரூ. 350 கோடி, இந்தச் செலவு திரும்பத் திரும்ப ஏற்படுவதன்று.

**(இ) பெருவாரியான உற்பத்தித் தொழில்களும் மூலாதாரத் தொழில்களும்** — இந்தியாவில் பெருவாரியான உற்பத்தித் தொழில்களைப் பரப்புவதற்குத் தேவையாகும் மூலதனத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறுவது கஷ்டமாயிருக்கிறது. இப்பொழுது நடந்துவரும் தொழில்களிலும் எவ்வளவு மூலதனம் முடக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய புள்ளி விவரங்களும் கிடைப்பதற்கில்லை. ஸர் எம். விச்வேச்வரையாவின் கணக்குப்படி,* இந்தியத் தொழில் ஸ்தாபனங்களில் மொத்தம் செலுத்தப்பட்டிருக்கும் மூலதனம் ரூ. 750 கோடி; இதில் 300 கோடி வெளிநாட்டு ஸ்தாபனங்களுடையது. பாக்கியுள்ள ரூ. 450 கோடியில், ரூ. 200 கோடி இந்தியர்களால் மூலாதாரத் தொழில்களில் முடக்கப்பட்டிருக்கிறது என்று நாம் யூகிக்கலாம். அந்நியத் தொழில் ஸ்தாபனங்களையும், இந்திய மூலாதாரத் தொழில்களையும் சர்க்கார் 10 வருஷ காலத்

* 'Prosperity through Industry – தொழில் மூலம் சுபிட்சம்': பக்கம் 7.

தில் விலைக்கு வாங்க வேண்டும். இதற்கு ரூ. 500 கோடி முதலீட்டுச் செலவாகும். தேசப் பாதுகாப்புக்குரிய தொழில்கள் உள்பட மூலாதாரத் தொழில்களை அபிவிருத்தி செய்ய, சர்க்கார் மேற்கொண்டும் ரூ. 500 செலவிட்டால், இந்த இனத்திற்கு மொத்தம் தேவைப்படும் மூலதனம் ரூ. 1,000 கோடியாகிறது.

(ஈ) பொது நன்மைக்கான சௌகரியங்கள்—

*1.* **போக்கு-வரத்து**—*1938-39*-ல் இந்திய ரயில்வேக்களில் முடக்கப்பட்டிருந்த மொத்த மூலதனம் ரூ. 850 கோடி. இந்த மூலதனத்தில் பெரும் பகுதி இப்பொழுது சர்க்காருக்குச் சொந்தமானது. 10 வருஷ காலத்தில் ரயில் பாதைகளின் மொத்த மைல் அளவை 100-க்கு 25 மடங்கு கூட்டுவதாக வைத்துக்கொண்டால், மேற்கொண்டு சுமார் 300 கோடி புது மூலதனம் தேவைப்படும். பாதைகளைப் பழுது பார்த்துவர வருஷத்திற்கு ரூ. 5 கோடி செலவாகிவரும்.

இப்பொழுதுள்ள மொத்த ரஸ்தாக்களின் நீளம் சுமார் 3,50,000 மைல். இத்துடன் இன்னும் 2,00,000 மைல் நீளத்திற்கு, ரஸ்தாக்கள் அமைத்தல் நலம்; இவை முக்கியமாகக் கிராமாந்தரங்களில் இருக்க வேண்டும்; கிராமாந்தரங்களில் கப்பி (கருங்கல்) ரஸ்தாக்கள் அவசியமில்லாததால் சாதாரண ரஸ்தாக்களே போதும். மைலுக்கு ரூ. 5,000 வீதம் இதற்கு மொத்தச் செலவு ரூ. 100 கோடியும், பழுது பார்க்கும் செலவு வருஷத்திற்கு ரூ. 5 கோடி வீதமும் ஆகும்.

அந்நியருக்கும் இந்தியருக்கும் சொந்தமாயுள்ள கப்பல் கம்பெனிகளைப் படிப்படியாக விலைக்கு வாங்குவதற்குத் தேவையான தொகை பெருவாரியான உற்பத்தித் தொழில்களுக்கும் மூலாதாரத் தொழில்களுக்குமாகக் குறிப்பிடப்பட்ட ரூ. 500 கோடியிலேயே சேர்ந்திருக்கிறது. கரையோரமாயுள்ள துறைமுகங்களையும் இருக்கிற கப்பல் வசதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பத்தில் ரூ. 25 கோடி போதும். வர்த்தகக் கப்பல்

போக்கு-வரத்தை விருத்தி செய்வதற்கு இந்தத் திட்டத்தின் கால அளவில் ரூ. 50 கோடி செலவிடலாம். கரையோரமாய்ப் போய்வரும் கப்பல்களையும், வெளிநாட்டு வர்த்தகத்திற்குரிய கப்பல்களையும் நிர்வகிப்பதற்கு ரூ. 5 கோடி வீதம் செலவாகும்.

ஜன செளகரியத்திற்கான விமானப் போக்கு-வரத்து, தபால்-தந்தி வசதிகளுக்கு ஆரம்ப முதலீட்டுச் செலவாகச் சுமார் ரூ. 25 கோடி ஆகக்கூடும்.

ஆகவே போக்கு-வரத்து வசதிகளுக்காக ஏற்படும் மொத்தச் செலவு கீழ்க்கண்டபடி யிருக்கும்:

(கோடிக்கணக்கான ரூபாய்)

| | | முதலீட்டுச் செலவு | வருஷாந்தர நடப்புச் செலவு |
|---|---|---|---|
| ரயில்வேக்கள் | ... | 200 | 5 |
| ரஸ்தாக்கள் | ... | 100 | 5 |
| கரையோரக் கப்பல் போக்கு-வரத்து, வர்த்தகக் கப்பல்கள் | | 75 | 5 |
| விமானப் போக்கு-வரத்து, தபால்-தந்தி | ... | 25 | — |
| மொத்தம் | ... | 400 | 15 |

2. **பொதுஜன ஆரோக்கியம்**—ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வைத்தியரும், பிரசவ மருத்துவத்திற்காக ஒரு தாதியும் வேலை பார்த்துவரும் மருந்துச் சாலை ஒன்று இருக்க வேண்டும். சுமார் 800 சதுர அடிப் பரப்பில் ஒரு சாதாரணக் கட்டடம் அமைப்பதற்கு ஏறத்தாழ ரூ. 600 பிடிக்கும். ஆரம்பத்தில் வேண்டிய சாமான்கள் மருந்துகளுக்கு ரூ. 500 தேவைப்படும். இந்த இனத்தில் செலவை மாகாண சர்க்கார்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது ரூ. 75 கோடியாகும். வைத்தியர், தாதி ஆகியோர் சம்பளம் உள்பட, செலவுகளில் பாதியைக் கிராமப் பஞ்சாயத்து கொடுத்துவர வேண்டும்; மறு பாதியை மாகாண சர்க்கார் கொடுத்துவர வேண்டும்.

ஒவ்வொரு மருந்துச்சாலைக்கும் வருஷத்திற்கு ரூ. 1,000 வீதம், தேசம் முழுதுக்கும் ஏற்படக்கூடிய மொத்தச் செலவில் பாதி ரூ. 35 கோடியாகும்.

நகரப் பகுதிகளில் 10,000 பேருக்கு ஒரு வைத்திய சாலை வீதம் சகல வசதிகளும் அமைந்த வைத்திய சாலைகள் அமைக்க வேண்டும். இப்படி இந்திய நகரங் களில் பொதுஜனங்களுக்கென்று குறைந்தது 5,000 வைத்தியசாலைகளாவது தேவை. இப்பொழுது இருப் பவை 2,000 என்று வைத்துக் கொண்டால், மேற் கொண்டு 3,000 வைத்தியசாலைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பிரசவ மருத்துவ வசதிகள் உள்பட, 40 கட்டில்களுடன் கூடிய ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் கட்டடம் அமைப்பதற்கு ரூ. 50,000 செலவாகும். இவ்வாறு தேவையுள்ள எல்லாக் கட்டடங்களுக்கும் மொத்தம் சுமார் ரூ. 15-கோடி வேண்டும். ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் வருஷாந்தரச் செலவு ரூ. 20,000 ஆகும். எனவே, மொத்த வருஷாந்தர நடப்புச் செலவு ரூ. 5 கோடியாகும்.

க்ஷயம், குஷ்டம், 'கான்ஸர்' என்ற புத்து நோய்,* சிற்றின்பம் காரணமான மேக நோய்கள், மூளைக் கோளாறுகள் முதலியவைகளின் சிகிச்சைக்காகத் தனி யாக விசேஷ வைத்தியசாலைகளைச் சர்க்கார் அமைப்ப தற்கு மேற்கொண்டு ரூ. 10-கோடி வேண்டும்.

நாட்டுப்புறங்களில் சுகாதாரம், குடி தண்ணீர் சப்ளை, குடியிருப்பு வசதிகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய் வதற்கு சர்க்கார் ரூ. 100-கோடி முதலீட்டுச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும். கிராமங்களில் சுத்தமான குடி தண்ணீர் கிடைப்பதற்காக அதிகக் கிணறுகள் தோண்ட வேண்டியது அவசியம். வீடுகளைக் காற்றோட் டத்துடன் சுகாதார முறையில் அமைப்பதில், மொத்தச் செலவுகளைக் கிராமவாசிகளே ஏற்றுக் கொள்வார்கள் ;

* Cancer.

எனினும் மாகாண சர்க்கார்கள் இந்த விஷயத்திற்காகச் செலவில் ஒரு பகுதி கொடுத்து உதவ வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் சுகாதாரம், தண்ணீர் சப்ளை, குடியிருப்பு வசதி ஆகியவைகளை அபிவிருத்தி செய்ய ரூ. 2,000 செலவிட்டால், மொத்தம் ரூ. 135-கோடி தேவைப்படும். நகரங்களில் குடி தண்ணீர் சப்ளையை அதிகப்படுத்த ரூ. 25-கோடி செலவழிக்கலாம். தண்ணீர் சப்ளை வசதிக்கான ஏற்பாடுகளை நிர்வகித்து வரும் செலவுகளை முக்கியமாய்க் கிராமப் பஞ்சாயத்துகளும் நகர சபைகளும் ஏற்றுக் கொள்ளும். எனினும் ஆரம்ப நிலையில் இந்த வகையில் வருஷாந்தர நடப்புச் செலவுக்காக ரூ. 5-கோடி கொடுத்து வரலாம்.

ஆகவே பொதுஜன ஆரோக்கியத்திற்கான மொத்தச் செலவு பின்கண்டபடி இருக்கும்:

(கோடிக் கணக்கான ரூபாய்).

| | முதலீட்டுச் செலவு | வருஷாந்தர நடப்புச் செலவு |
|---|---|---|
| கிராம மருந்துச்சாலைகள் ... | 75 | 35 |
| பெரிய வைத்தியசாலைகள் ... | 15 | 5 |
| விசேஷ வைத்தியசாலைகள் ... | 10 | — |
| சுகாதாரம், தண்ணீர் சப்ளை, குடியிருப்பு வசதிகள் ... | 160 | 5 |
| மொத்தம் | 260 | 45 |

3. கல்வி—

(i) அடிப்படைக் கல்வி—ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் அடிப்படைக் கல்விப் பள்ளிக்கூடம் இருக்க வேண்டும்; முடிந்தவரை இதில் ஏழு வகுப்பு வரையிலும் இருக்க வேண்டும். நாட்டுப்புறங்களில் அடிப்படைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் அமைக்க ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூ. 2,000 பிடிக்கும். எனவே, எல்லாப் பள்ளிகளுக்கும் மொத்த முதலீட்டுச் செலவு ரூ. 132-கோடியாகும். இந்தச் செலவில் பாதியை, அதாவது ரூ. 66 கோடியை மாகாண சர்க்கார்கள் ஏற்றுக் கொள்ள

வேண்டும். மறு பாதியைக் கிராமப் பஞ்சாயத்துகள் கொடுக்கும்; அதுவும் ஓரளவு சரீர உழைப்பாகக் கொடுக்கும். நகரப் பகுதிகளில் அடிப்படைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் அமைக்க, சுமார் ரூ. 14-கோடி செலவிடலாம். கிராமங்களிலும் நகரங்களிலும் அடிப்படைத் தொழில்களுக்கு வேண்டிய கருவிகள் முதலியவற்றிற்கு உத்தேசச் செலவு சுமார் ரூ. 20-கோடி என்று கொள்ளலாம். இவ்வாறு, அடிப்படைக் கல்விக்கு முதலீட்டுச் செலவு மொத்தம் ரூ. 100 கோடி யாகும்.

**(ii) நடுத்தரக் கல்வி**—இந்தத் திட்டப்படி நடத்தக் கருதும் நடுத்தரக் கல்விப் பள்ளிகளைப் பற்றி ஓரளவு முன்னால் கூறப்பட்டிருக்கிறது. அவைகள் அநேகமாகத் தொழிற் கல்வி புகட்டும் உயர்தரப் பள்ளிகளாக இருக்கும்; பொருளுற்பத்தி செய்யக்கூடிய தொழில்களின் மூலமே கல்வி போதிக்கப்படும். இத்தகைய பள்ளிகளுக்கு வேண்டிய அதிகக் கட்டடங்களுக்காக மாகாண சர்க்கார்கள் ரூ. 25 கோடி செலவழிக்க நேரும். இப்போதுள்ள பள்ளிக்கூடங்களில் வேண்டும் மாற்றங்கள் செய்து அவைகளும் உபயோகிக்கப்படும். அடிப்படைத் தொழில்களுக்கு வேண்டிய தளவாடங்களுக்கு ரூ. 25 கோடி மேற்கொண்டு செலவழிக்கலாம்.

அடிப்படைப் பள்ளிகளைப் போலவே நடுத்தரப் பள்ளிகளும், பள்ளிக்கூடங்களிலேயே உற்பத்தியாகும் பொருள்களின் மூலம் உபாத்தியாயர்களின் சம்பளங்கள் முதலிய செலவுகளில் மூன்றில் இரண்டு பங்கைச் சரிக்கட்டிக் கொள்ள முடியும். பாக்கியை மாகாண சர்க்கார்கள் கொடுத்துவர வேண்டும். ஸ்ரீ ஸார்ஜென்டின் திட்டப்படி,* இத்தகைய தொழிற்கல்விப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவ மாணவிகள் சுமார் ஒரு கோடிப் பேர் இருப்பர்: இவர்களில் தலைக்கு வருஷாந்தரச் செலவு ரூ. 55 வீதம்

* சர்க்காரால் ஸ்ரீ ஸார்ஜென்ட் தலைமையில் நியமிக்கப் பெற்ற ஒரு கமிட்டியார் இந்தியக் கல்வி அபிவிருத்தி பற்றி திட்டம் தயாரித்துள்ளனர்.

கணக்கிட்டால், மொத்தச் செலவில் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டிய மூன்றில் ஒரு பகுதி சுமார் ரூ. 20 கோடியாகும்.

அடிப்படைப் பள்ளிகளிலும், நடுத்தரப் பள்ளிகளிலும் உற்பத்தியாகும் பொருள்களின் விற்பனைக்கு ஏற்பாடு செய்யவேண்டிய பொறுப்பு சர்க்காரையே சேர்ந்தது என்ற விஷயத்தை இங்கே தெளிவாகக் குறிப்பிடுவது அவசியம்.

**(iii) முதியோர் கல்வி**—*1941*-ம் வருஷத்து ஜன சங்கிகையைக் கணக்குப்படி, கல்வி புகட்டவேண்டிய எழுத்து வாசனையற்ற முதியோர் சுமார் *17* கோடி *50* லட்சம் பேர் இருக்கின்றனர். சமீப வருஷங்களில் மாகாண சர்க்கார்கள் செய்து வந்த பரீட்சைகளின்படி தேசத்தில் கல்வியைப் பரப்புவதற்கு ஒரு நபருக்கு ரூ. *4* வீதம் செலவாகும் என்று தெரிகிறது. இந்த விகிதப்படி இந்தியா முழுதிலும் எழுத்து வாசனை இல்லாமலிருப்பதை ஒழிப்பதற்கு மொத்தம் ரூ. *70* கோடி தேவைப்படும். கட்டடங்கள் சம்பந்தமாகத் தனி இடங்கள் வேண்டியதில்லை, அடிப்படைப் பள்ளிகள் அல்லது நடுத்தரப் பள்ளிகளிலேயே இரவில் முதியோருக்காக வகுப்புகளை நடத்திவரலாம். அநேக இடங்களில் அடிப்படைப் பள்ளி உபாத்தியாயர்களே இந்த இரவு வகுப்புகளையும் நடத்திவரலாம்.

சீனாவில் நடந்துவரும் 'குட்டி உபாத்தியாயர்கள்' இயக்கத்தினால் விசேஷப் பயன் விளையக் கூடும். குழந்தைகளே தங்களுடைய பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் 'குட்டி உபாத்தியாயர்க'ளாக இருக்க முடியும். இந்தப் பரீட்சையை வெற்றிகரமாக நடத்தினால், முதியோர் கல்விக்காக ஏற்படும் செலவு மிகவும் அற்பமாகவேயிருக்கும்.

**(iv) சர்வகலாசாலைக் கல்வி**—இந்தியாவில் ஜனங்களே புதிதாக அதிகச் சர்வகலாசாலைகள் ஆரம்பிப்பதைச் சர்க்கார் ஆதரித்து உற்சாகப்படுத்தி வந்தாலும்,

இப்போதுள்ள கலாசாலைகள் - சர்வகலாசாலைகளுக்கு சர்க்கார் கொடுத்து வரும் உதவி நிதிகளைத் திடீரென்று நிறுத்திவிட முடியாது. உயர்தரக் கல்வியைச் சீர்திருத்தி அபிவிருத்தி செய்யவும் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணமாக, தாய்மொழி மூலம் கல்வி புகட்ட ஆரம்பித்தால், உபாத்தியாயர்கள் சம்பந்தமாகவும், தக்க பாடப் புத்தகங்கள் தயாரிப்பதிலும் கூடுதல் செலவு ஏற்படும். ஸ்ரீ. ஸார்ஜென்டினுடைய கணக்குப்படி, சர்வகலாசாலைக் கல்வியின் வருஷாந்தரச் செலவு சுமார் ரூ. 5 கோடி என்று வைத்துக் கொள்ளலாம்.

**(v) ஊழியர்களுக்குப் பயிற்சி** — இந்தத் திட்டத்தைக் கிரியாம்சையில் நிறைவேற்ற, பட்டாளம் பட்டாளமாக ஏராளமான ஊழியர்களைப் பயிற்சி செய்து தயாரிப்பதற்கு மிகப் பெரிய அளவில் பணம் தேவையிருக்கும். வைத்தியர்கள், தாதிகள், சிற்பிகள், எஞ்சினீர்கள், சமூக ஊழியர்கள், கிராம ஊழியர்கள், குடிசைத் தொழில் நிபுணர்கள் முதலியோர்களுக்குப் பயிற்சிக் கலாசாலைகளை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு முன்னதாக ஏற்படுத்த வேண்டும். இவ்விஷயத்தில் வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இந்தப் பயிற்சி-ஏற்பாட்டிற்காகும் முதலீட்டுச் செலவுகளையும் வருஷாந்தர நடப்புச் செலவுகளையும் துல்லியமாக உத்தேசித்துக் கூறுவது கஷ்டம். ஆயினும் இந்தத் திட்டம் அமலில் இருக்கும் காலத்தில், ரூ. 75 கோடி முதலீடாகவும், ரூ. 50 கோடி வருஷாந்தரச் செலவாகவும் வைத்துக் கொள்வது பொருந்தும்.

பணம் மட்டும் போதாது, தேச ஊழியத்தில் ஆர்வங் கொண்ட சரியான இளைஞரைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி செய்யவும் வேண்டும். வைத்தியர்களாயினும், எஞ்சினீர்களாயினும், உபாத்தியாயர்களாயினும் — எந்த ஊழியர்களாயினும் அவர்கள் நாட்டுப்புறங்களின் சேவைக்கு அருகராகும் நோக்கத்துடன் பயிற்சியளிக்கப்படும்; ஏனை

னில் இந்திய ஜனத்தொகையில் பத்தில் ஒன்பது பகுதியினர் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். பாமர ஜனங்களோடு இரண்டறக் கலந்தும், குறைந்த சம்பளங்களில் வேலை செய்தும் வரக்கூடிய ஆயிரக் கணக்கான இளைஞர்களே இந்தத் திட்டத்தை—அல்லது எந்தத் திட்டத்தையுமே—உண்மையில் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்க முடியும். உண்மையான ஒரு தேசீய அரசாங்கமே நம் வாலிபர்களுக்கு ஊக்கமளித்து உணர்ச்சியூட்ட முடியும் என்பது வெள்ளிடை மலை.

எல்லாப் பிரிவுகளையும் சேர்த்தால் கல்விச் செலவு கீழே குறித்துள்ள அளவுக்கு வரும்:

(கோடிக் கணக்கான ரூபாய்)

| | முதலீட்டுச் செலவு | வருஷாந்தர நடப்புச் செலவு |
|---|---|---|
| அடிப்படைக் கல்வி ... | 100 | 25 |
| நடுத்தரக் கல்வி ... | 50 | 20 |
| முதியோர் கல்வி ... | 70 | — |
| சர்வகலாசாலைக் கல்வி... | — | 5 |
| ஊழியர் பயிற்சி ... | 75 | 50 |
| மொத்தம் | 295 | 100 |

(உ) ஆராய்ச்சி — ஊழியர்களைத் தயாரிப்பதற்காகக் குறிப்பிட்ட விஷயங்களில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்வதிலேயே ஏராளமான ஆராய்ச்சியும் செய்ய வேண்டியிருக்கும். ஊழியர்களின் பயிற்சிக்கு ரூ. 75 கோடி திட்டம் செய்திருப்பதில், தேசீயப் புனருத்தாரண வேலையில் பலவேறு பிரிவுகள் சம்பந்தமான ஆராய்ச்சிக்கும் இயற்கையாகவே சில கோடி ரூபாய் செலவாகத்தான் செய்யும். எனினும், ஆராய்ச்சி வேலைக்காக மட்டும் தனியாக ரூ. 20 கோடி கூடுதலாக ஒதுக்கி வைக்கலாம்.

இந்தத் திட்டத்தின் கால அளவில், பல இனங்களிலும் ஏற்படக்கூடிய மொத்தச் செலவு வருமாறு:

| | (கோடிக்கணக்கான ரூபாய்) முதலீட்டுச் செலவு | வருஷாந்தர நடப்புச் செலவு |
|---|---|---|
| விவசாயம் ... | 1,175 | 40 |
| நாட்டுப்புறக் கைத்தொழில்கள் | 350 | — |
| மூலாதாரத் தொழில்கள் ... (பெருவாரியான உற்பத்தித் தொழில்களும் மூலாதாரத் தொழில்களும்) | 1,000 | — |
| பொது நன்மைக்கான சௌகரியங்கள்: | | |
| போக்கு—வரத்து ... | 400 | 15 |
| பொது ஜன ஆரோக்கியம் ... | 260 | 45 |
| கல்வி ... | 295 | 100 |
| ஆராய்ச்சி ... | 20 | — |
| மொத்தம் ... | 3,500 | 200 |

இந்த உத்தேசச் செலவுத் தொகைகள் மற்றத் திட்டங்களில் உள்ளவை போல் பெருவாரியாகச் சாதித்து விடுவதாகத் தோன்ற மாட்டா என்பது உண்மைதான். ஆயினும், இந்தியா ஏழை நாடு என்பதையும், நம் பொருளாதாரத் திட்டங்களை வகுத்துக் கொள்வதில் நாம் மேலை நாடுகளைப் பார்த்துக் காப்பியடித்தால் நமக்குக் கட்டுப்படியாகாது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது, மறக்கவும் கூடாது.

## வருமான இனங்கள்

மேலே குறிக்கப்பட்ட முதலீட்டுச் செலவுகளுக்கும் வருஷாந்தர நடப்புச் செலவுகளுக்கும் தேவையான தொகைகளைக் கீழ்க்கண்ட வருமான இனங்களின் மூலம் பெறவேண்டும்:

(1) உள்நாட்டில் பதுக்கி வைத்திருக்கும் செல்வத்திலிருந்தும் ஜனங்கள் சேமித்து வைத்திருக்கும் பணத்திலிருந்தும் கடன் வாங்குதல்.

(2) விசேஷ ஜாமீன் பத்திரங்களின் பின்பலத்தைக் கொண்டு 'சிருஷ்டிக்கப்படும் செலவாணி'. *

(3) கூடுதலாக வரி விதிப்பதிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(4) சர்க்காருக்குச் சொந்தமான தொழில்களிலிருந்தும், பொது நன்மைக்கான சௌகரியங்கள் புரியும் இலாகாக்களின் மூலமும் கிடைக்கும் வருமானம்.

நிதி வருமானங்களில் ஒவ்வொர் இனமாகக் கவனிப்போம்—

**உள்நாட்டில் கடன் வாங்கல்**—இந்தியாவில் (பயனில்லாமல்) பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் செல்வம் (தங்கம், வெள்ளி, நாணயங்கள் முதலியன) ஏராளமானது; அது ரூ. 1,000 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இந்நாட்டில் ஒரு தேசீய சர்க்கார் அமைக்கப்பட்டால், பதுக்கப்பட்ட இந்தச் செல்வத்திலிருந்து ஒரு பகுதியாவது வெளியே வருவதற்கு வேண்டிய கவர்ச்சி யளிக்கமுடியும். மேலும், ஜனங்களின் சேமிப்புகளிலிருந்தும் அரசாங்கக் கடன்களை எழுப்புவதன் மூலம் குறிப்பிடத்தக்க பெருந்தொகையைப் பெற முடியும். இந்த யுத்த காலத்தில், அமித லாப வரி இருந்தபோதிலும், பணம் படைத்த வகுப்பினர் பெருவாரியான லாபங்களைச் சம்பாதித்திருக்கின்றனர். இந்தத் திட்டத்தின்படி முதலாளிகளின் முதலீட்டுக்கு அதிக வசதி யொன்றும் இல்லாததால், நிறையக் குவிந்திருக்கும் செல்வத்திலிருந்து சர்க்கார் தன் நிதிக்குக் கடன் வாங்கிக்கொள்ள முடியும். இத்தகைய அரசாங்கக் கடன்கள் மூலம் குறைந்த பட்சம் ரூ. 2,000 கோடியாவது எழுப்ப முடியும் என்று மதிக்கப்படுகிறது.

---

* பின்னால் வரும் 'சிருஷ்டிக்கப்படும் செலாவணி' என்ற தலைப்புள்ள பாராவையும் அடிக் குறிப்பையும் பார்க்கவும்.

'சிருஷ்டிக்கப்படும் செலாவணி'*—யுத்தத்திற்குப் பின்னால் ஏற்படுத்தப்படும் ஜனப் பிரதிநிதிகளைக் கொண்ட சர்க்காரின் பொது நிதி பலப்பட்டு ஸ்திரமாயிருக்கும் என்ற விஷயத்தில் ஜனங்கள் நம்பிக்கை கொள்வார்கள். இந்த நம்பிக்கையை ஆதாரமாய்க் கொண்டு, தேசிய சர்க்கார் 'தாற்காலிகமான ஜாமீன் பத்திரங்கள் (செக்யூரிட்டிகள்)' மூலம் புது நாணயம் 'சிருஷ்டிக்க முடியும்'. செலாவணியின் மதிப்பை ஸ்திரப் படுத்துவது, செலாவணி வீக்கத்தைத் தடுப்பது போன்ற சிக்கல்களை உண்டாக்காமலே, இந்த முறையில் ரூ. 1,000 கோடி பெற முடியும்.†

வரி விதித்தல் — வருமான வரி, அமிதலாப வரி, கம்பெனி வரி ஆகிய வரிகளின் படிகளை அதிகமாக உயர்த்தல், மரண வரி அல்லது வாரிசு வரி, விவசாய வருமானத்தில் நியாயமான ஓரளவுக்கு மேற்பட்ட வருமானங்களுக்கு வரி விதித்தல், விற்பனை வரிகள் முதலியவை

* நாணயங்களையும் காகித-நாணயங்களான நோட்டுக்களையும் வெளியிடும் பொழுது, சர்க்கார் இவைகளுக்கு ஈடாகத் தன் பாங்கிகளில் போதுமான தங்கத்தை இருப்பு வைத்துக்கொள்ளும். போதுமான அளவு தங்க இருப்பில்லாமலே, சில சமயங்களில் அதிகமாகக் காகித-நாணயம் வெளியிடப்படலாம். இதன் மூலம் குறிப்பிட்ட காலத்திற்கு சர்க்காருக்குத் தேவையான தொகை கிடைக்கும். கடன் வாங்காமலும் வரி விதிக்காமலும் பணம் பெறுவதற்கு இந்த முறை கையாளப்படும். செலாவணி 'சிருஷ்டிக்கப்படுவதாக'ச் சொல்வதன் பொருள் இதுதான்.

† செலாவணி வீக்கம்—சில விதிகளைப் புறக்கணித்து, குறிப்பிட்ட ஓரளவுக்கு மேல் காகித-நாணயத்தை அதிகமாக வெளியிடுவது இந்தப் பெயரால் குறிக்கப்படுகிறது. தேசத்தில் உற்பத்தியும், பொருளாதார முயற்சியும், வர்த்தகமும் போதிய அளவு பெருகாமல், ஜனங்களிடையே பரவி வரும் செலாவணியின் அளவு மட்டும் பெருகுவதையே 'செலாவணி வீக்கம்' அல்லது 'பண வீக்கம்' என்று சொல்லுகிறோம். இவ்வாறு பண வீக்கம் ஏற்படும்போது, செலாவணியின் மதிப்பு குறைந்து பொருள்களின் விலைவாசிகள் உயருகின்றன.

களின் மூலம் இந்தத் திட்டத்தின் காலத்தில் ரூ. 500 கோடி எளிதாகச் சேர்ந்துவிடும்.

இனி, எல்லாவற்றையும் சேர்த்துப் பார்ப்போம்—முதலீட்டுச் செலவாகிய ரூ. 3,500 கோடிக்கும் கீழ்க்கண்ட இனங்களின் மூலம் வருமானம் வரும்:

| | (கோடிக்கணக்கில்) ரூபாய் |
|---|---|
| உள் நாட்டில் கடன் வாங்கல் | ... 2,000 |
| 'சிருஷ்டிக்கப்படும் செலாவணி' | ... 1,000 |
| வரி விதித்தல் | ... 500 |
| மொத்தம் | ... 3,500 |

இங்கிலாந்தில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய ஸ்டேர்லிங் நிதியை நாம் நம்பிக்கொண்டிருக்க முடியாது. ஏனென்றால், அரசியல் மூலம் இந்தியாவின் குரல்வளையை நெரித்துக் கொண்டிருக்கும் பிரிட்டன், அந்தப் பிடியிலிருந்து இந்தியாவை விடுவித்து விட்டாலும், தான் கொடுக்கவேண்டிய ஸ்டேர்லிங் நிதியை நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியான முறையில் கொடுக்கக்கூடிய பெருந்தன்மை அதனிடம் இராது.

வெளி நாட்டு வர்த்தகம் பற்றி இந்தத் திட்டத்தில் நிர்ணயப்படுத்தியுள்ள கொள்கைகளின்படி 'வர்த்தக மிச்சத்தின்' மூலம் அதிகமான சாதகங்கள் ஏற்பட்டு விடுமென்று நம்பிக்கொண்டிருப்பது உசிதமில்லை. (இந்நாடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மதிப்பு 200 கோடியாகவும் இறக்குமதியின் மதிப்பு ரூ. 170 கோடியாகவும் இருந்தால், இரண்டுக்குமுள்ள வித்தியாசமான ரூ. 30 கோடியை வர்த்தக மிச்சம் என்று சொல்வது வழக்கம்.)

வெளி நாடுகளில் கடன் வாங்கும் விஷயத்தில், உள் நாட்டில் சகல வருமான இனங்களிலும் முயற்சி செய்து பார்ப்பதற்கு முன்னால், அந்த வழியில் நிதி சேர்த்தல் நல்லதன்று.

## நடப்புச் செலவு

சர்க்காருக்குச் சொந்தமான மூலாதாரத் தொழில்களிலிருந்தும், பொது நன்மைக்கான சௌகரியங்கள் புரியும் போக்குவரத்து, தபால்-தந்தி, நீர்ப்பாசனம் போன்ற இலாக்காக்களிலிருந்தும் கிடைக்கும் கூடுதல் வருமானம் மட்டுமே வருஷா வருஷம் செலவழிக்க வேண்டிய ரூ. 200 கோடி நடப்புச் செலவுக்குப் போதுமானதா யிருக்கும். இத்திட்டத்தின் முதல் ஐந்து வருஷங்களுக்கு இந்த வருமானம் குறைவாகத்தான் இருக்கும். ஆனால் அடுத்த ஐந்து வருஷத்தில் இது பெருந்தொகையாக வளர்ந்து விடும்.

'தர்ம ஸ்தாபனங்களும் மத ஸ்தாபனங்களும் மாகாண அரசாங்கங்களுக்கு உட்பட்டவை. இந்த ஸ்தாபனங்களை வேண்டிக் கொள்வதன் மூலமும், சட்டமியற்றி வற்புறுத்துவதன் மூலமும், இவைகள் தங்கள் செல்வங்களைக் கல்வி வளர்ச்சி, ஆரோக்கிய அபிவிருத்தி முதலியவைகளுக்குச் செலவிடும்படி கேட்க முடியும். செல்வர்களும் ஏழைகளும் ஒன்றுபோலவே மத ஸ்தாபனங்களுக்குத் தாராள உதவி செய்வதற்கும், இந்த ஸ்தாபனங்கள் செழிப்பாக வளர்வதற்கும் உரிய காரணங்களில், இவை நன்கொடைகளையும் காணிக்கைகளையும் விலை பொருள்களாகவே ஏற்றுக் கொள்வது முக்கியமான காரணம். இந்த விஷயத்திலிருந்து தேசீய சர்க்கார் தக்க பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.' *

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கூடுதலான தேவைகள் இருப்பதால், ஆட்சி முறையின் ஸிவில் நிர்வாகத்திற்கு ஏற்படும் வருஷாந்தரச் செலவு கூடுவது இயற்கை. ஆனால் இப்பொழுதுள்ள சம்பள விகிதங்களைக் குறைப்பது இந்த அதிகச் செலவுக்குப் போதுமான அளவு ஈடு கொடுத்துவிடும்.

---

* 'ஹரிஜன்'; 14-8-1937.

## கிராமப் பஞ்சாயத்துகளின் நிதி

அமைப்பு முறை ஆட்சி முறை இரண்டும் பரவல் முறையில் இருக்கும்பொழுது, நிதி விஷயங்களும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பரவல் முறையிலேயே இருக்கவேண்டும். இதனால்தான், கல்வி, பொதுஜன ஆரோக்கியம், சுகாதாரம் போன்ற விஷயங்களின் நிதிப் பொறுப்புகள் இந்தத் திட்டத்தின்படி கிராமப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப் படுகின்றன. உண்மையில் கிராமப் பஞ்சாயத்தே முழுத் திட்டத்திற்கும் அச்சாணியாக உள்ளது. தேசம் முழுதுக்கும் பொதுவான கொள்கையை நிறைவேற்றுவதற்காகக் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வழிகாட்டி உதவி செய்வது மட்டுமே மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களின் வேலையாக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

கிராமப் பஞ்சாயத்துகளின் வருமான இனங்கள் கீழே குறிக்கப்பட் டிருக்கின்றன :

(அ) பசலிச் சந்தா *—ஒவ்வோர் அறுவடைக்கும் கிராமத்திலுள்ள ஒவ்வோர் ஏருக்கும் பசலிச் சந்தாவாக 5 சேர் தானியம் கட்டவேண்டும் என்று விதி செய்யலாம். இது உதாரணமாகவே சொல்லப்படுகிறது. இப்படித் தானியமாகச் செலுத்துவது விவசாயிகளுக்கு மிகவும் சௌகரியம் என்பதில் சந்தேகமில்லை.

(ஆ) சரீர உழைப்பு — கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திர'த்தில் கூட சரீரத்தால் உழைத்துக் கொடுப்பதைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. பொது ஜனங்கள் ஒத்துழைப்பதற்கு இது மிகவும் இயற்கையான வழி. புராதன இந்தியாவில், பொதுக் கட்டடங்கள், குளங்கள், கிணறுகள் முதலியவற்றைக் கிராம ஜனங்கள் பணமொன்றும் பெறுமல் தாமாக ஒன்று சேர்ந்து உழைத்தே

* ஒவ்வொரு மாசூலின்போதும் செலுத்தவேண்டிய கட்

அமைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டப்படி ஏற்படும் கிராமப் பஞ்சாயத்துகள், கிராமத்தில் ஒவ்வோர் ஏருடையவரும் பஞ்சாயத்துக்காக 5 நாள் சரீரத்தால் உழைக்க வேண்டும் என்று விதி செய்யலாம். இப்படிச் செய்வதால், பஞ்சாயத்துகளுக்குப் பணத்தைப் பற்றியும் காசைப் பற்றியும் அதிகத் தொந்தரவு இராது.

(இ) விவாகம், உபநயனம் போன்ற சடங்குகளில் சம்பாவனைகள் முதலியவை பெறலாம்.

(ஈ) வழக்கு விசாரணைகளுக்குக் கட்டணங்கள், அபராதங்கள்; மேய்ச்சல் கூலிகள், மற்றும் பல காரியங்களுக்கு விசேஷ வரிகள் முதலியவை மூலம் கிடைக்கும் வருமானங்கள். இத்தகைய வருமானங்கள் யாவும் தானியங்களாகவே வாங்கப்பட வேண்டும்.

இவ்வாறு இந்தியப் பொருளாதார அமைப்பு, கீழே அஸ்திவாரத்திலிருந்தே புனருத்தாரணம் செய்யப்படும்; எனவே இது செம்மையாக நிலைத்து நிற்கும்.



# XVIII

## முடிவுரை

இப்பொழுது தேசத்தில் உலவிவரும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து இந்தத் திட்டம் வேறுபட்டது. இது காந்தீய முறையிலுள்ள அபூர்வ லட்சியங்களை ஆதாரமாய்க் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தைப் பூரணமாக அமைத்து நிறைவேற்றுவதற்குத் திறமையுள்ள பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவை என்பதுடன், இந்தப் புது லட்சியங்களில் அசைக்க முடியாத உறுதியான நம்பிக்கையுள்ள இளைஞர்களும் தேவைப்படுவர். உண்மையான, உத்வேகமான நம்பிக்கை மலைகளையும் அசைத்துவிடும்; அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் அம்மிக் குழவியைக் கூட நகர்த்த முடியாது.

உண்மையான தேசீய அரசாங்கம் இந்தியா முழுதுக்கும் பொதுவாக அமைவது அத்தியாவசியகம் என்பது சொல்லத் தேவையில்லை; அது இல்லாவிட்டால், திட்டம் வகுப்பதெல்லாம் பெருஞ் செலவுக்குக் காரணமான வீண் படாடோப ஏமாற்றாகவும், கானல் நீராகவுமே யிருக்கும்.

'எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும்' என்ற வாழ்க்கைத் தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட இந்தத் திட்டம், இந்நாட்டில் சாந்தியும் சுபிட்சமும் பொருந்திய ஒரு புது சகாப்தத்தை ஆரம்பிப்பதோடு, உலகத்திலுள்ள மற்ற நாடுகளுக்கும் வழிகாட்டியாக விளங்கக்கூடும்.

இந்தியா